# சங்கப்புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவு நிலைகள்

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ் முனைவர் (பிஎச்.டி.)
பட்டப்பேற்றிற்காக அளிக்கப்பெறும் ஆய்வேடு


ஆய்வாளர் :

**கு. சக்திவேல்,** எம்.ஏ., எம்.ஃபில்.,

உதவிப் பேராசிரியர்

(Ref. No. 011144)

ஆய்வு நெறியாளர் :

முனைவர் **கி. பாண்டியன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,

இணைப் பேராசிரியர்

தமிழ்த்துறை.



**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**

**திருச்சிராப்பள்ளி 620 024**

**ஆகஸ்ட் - 2011**

# நெறியாளர் சான்றிதழ்

முனைவர் **கி. பாண்டியன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்,
தமிழ்த்துறை,
பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி),
மேலையூர் - 609 107.

'**சங்கப்புற இலக்கியங்களில் அரசு - மக்கள் உறவு நிலைகள்**' எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வேடு பாரதிதாசன் பல்கலைக் கழகம் வழங்கும் தமிழ் முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காக ஆய்வாளர் **கு. சக்திவேல்** என்பவரால் என் மேற்பார்வையில் பகுதி நேரமாக ஆய்வு நிகழ்த்தி உருவாக்கப்பெற்றது. இஃது இவரின் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இவ்வாய்வேடு இதற்குமுன் வேறு பட்டத்திற்கோ, ஆய்வரங்கிற்கோ அனுப்பப்பெறவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

துறைத் தலைவர் 29/8/2011

**தமிழ்த் துறைத் தலைவர்,**
**தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின்**
**பூம்புகார்க் கல்லூரி,**
**மேலையூர்-609 107**

ஆய்வு நெறியாளர் 29/8/2011

**முனைவர். கி. பாண்டியன்,**
**இணைப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி)**
**மேலையூர்-609 107.**

முதல்வர்
**PRINCIPAL**
**POOMPUHAR COLLEGE**
**MELAIYUR 609 107**

POOMPUHAR COLLEGE
of the Tamil Nadu
H.R.&C.E. Admn.
Department.
MELAIYUR - 609 107

இடம் : மேலையூர்
நாள் : 29-8-2011

# ஆய்வாளர் உறுதிமொழி

**கு. சக்திவேல்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
(Ref. No. 011144)
பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி),
மேலையூர் - 609 107.

**'சங்கப்புற இலக்கியங்களில் அரசு - மக்கள் உறவு நிலைகள்'** எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வேடு பாரதிதாசன் பல்கலைக் கழகம் வழங்கும் தமிழ் முனைவர் (பிஎச்.டி.,) பட்டத்திற்காகப் பூம்புகார்க் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் **கி. பாண்டியன்** அவர்களின் மேற்பார்வையில் பகுதிநேர ஆய்வாக நிகழ்த்தி உருவாக்கப்பெற்றது. இஃது என் சொந்த முயற்சியால் உருவானது என்றும், இவ்வாய்வேடு இதற்குமுன் வேறு எந்தப் பட்டத்திற்கும் அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கின்றேன்.

இடம் : மேலையூர்
நாள் : 29 - 08 - 2011

ஆய்வாளர்

# நன்றியுரை

"சங்கப்புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவு நிலைகள்" என்னும் தலைப்பிலான முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொள்ள அனுமதி வழங்கிய பாரதிதாசன் பல்கலைக் கழக மதிப்புயர் துணைவேந்தர், பதிவாளர், தேர்வு நெறியாளர் ஆகியோருக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

பூம்புகார்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் **க. கணேசன்,** எம்.காம்., எம்.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கும், ஆய்வுத் தொடர்பான அரிய இலக்கியச் சிந்தனைகளை வழங்கிய தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **கோ. ஜெயமணி** எம்.ஏ., எம்.ஃபில்., டி.ஜ.டி., அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆய்வேடு முழுமைபெறுவதற்கு நன்முறையில் என்னை நெறிப்படுத்தி ஆய்வேட்டினைப் பகுத்தும், தொகுத்தும் வழங்கி ஆய்வு செம்மையுறப் பல்லாற்றானும் வழிகாட்டிய ஆய்வு நெறியாளர் இணைப் பேராசிரியர் முனைவர் **சி. பாண்டியன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக் கட்டுரை செம்மையாக அமைவதற்கு துணைபுரிந்த முனைவர் **அர. செந்தமிழ்ச்செல்வி,** எம்.ஏ., எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., உள்ளிட்ட தமிழ்த்துறைப் பேராசிரியர்களுக்கும், பிற துறைப் பேராசிரியர்களுக்கும், எம் கல்லூரியின் அலுவலகத்தினர்க்கும் நன்றி.

ஆய்வுத் தொடர்பான பல தகவல்களை எனக்குத் தந்து ஆய்வு செழுமையுறப் பல வகையிலும் உதவிபுரிந்த திருவையாறு கல்லூரியின் முன்னை முதல்வர் பேராசிரியர் **க. கலியபெருமாள்** அவர்களுக்கும் என் மனம்நிறைந்த நன்றி.

இவ்வாய்வு மேற்கொள்ளத் தூண்டுகோலாக இருந்த பூம்புகார்க்கல்லூரியின் முன்னை முதல்வர் முனைவர் **சி. மகராசன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில், பிஎச்.டி., அவர்களுக்கும், தொடர்ந்து ஆய்வினைத்

தொடர பல்லாற்றானும் உதவிய பூம்புகார்க் கல்லூரியின் முன்னை முதல்வர் (பொ) பேராசிரியர் **அ. அன்பழகன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., அவர்களுக்கும் நன்றி கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

பணி ஓய்வு பெற்றாலும் என் நலன் விரும்பும் பூம்புகார்க் கல்லூரியின் முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **அ. திருநாவுக்கரசு,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கும், முன்னைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **த. தியாகராசன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

ஆய்விற்குத் தேவையான பல நூல்களை வழங்கி உதவிய மேலப்பாதி திரு.வி.க. நூலகர் திரு **சு. பாலகிருஷ்ணன்** அவர்களுக்கும், செம்பனார்கோயில் நூலகர் திரு. **கு. லோகநாதன்** அவர்களுக்கும் நன்றி கூறும் கடப்பாட்டினேன்.

எல்லா வகையிலும் எனக்கு உறுதுணையாக விளங்கும் என் பெற்றோர், **ச. குமாரசாமி – ராசம்** அவர்களுக்கும், சகோதரர் **கு. சிவராஜ், கு.ஜெயராஜ்** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வுறுகிறேன்.

ஆய்வுத் தொடர்பான பல தகவல்களைத் தந்து உதவிய நண்பர் நாங்கூர் முனைவர் **கோ. இளங்கோ,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி., அவர்களுக்கும், காத்திருப்பு **கோ. தெய்வீகன்,** எம்.ஏ., எம்.ஃபில்., (பிஎச்.டி.,) அவர்களுக்கும், கத்தரிமேடு **இரா. வெங்கட்ராமன்,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., அவர்களுக்கும் மற்றும் எனக்குத் துணைநின்ற அனைத்து நல்உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வெய்துகிறேன்.

ஆய்வேட்டினைச் செம்மையாகவும், சிறப்பாகவும் உரிய நேரத்தில் அச்சிட்டுக்கொடுத்த மயிலாடுதுறை பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. **சி. கந்தசாமி** அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். | - | அகத்திணையியல் |
| அகம். | - | அகநானூறு |
| அடி. | - | அடிகள் |
| அடியார். | - | அடியார்க்கு நல்லார் |
| இளம். | - | இளம்பூரணர் |
| இ.ப. | - | இரண்டாம் பதிப்பு |
| உரை. | - | உரையாசிரியர் |
| உ.வே.சா. | - | உ.வே. சாமிநாதையர் |
| குறள். | - | திருக்குறள் |
| குறிஞ்சி. | - | குறிஞ்சிப்பாட்டு |
| குறுந். | - | குறுந்தொகை |
| சிலம்பு. | - | சிலப்பதிகாரம் |
| சிறு. | - | சிறுபாணாற்றுப்படை |
| செய். | - | செய்யுள் |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நச்சி.உரை. | - | நச்சினார்க்கினியர் உரை |
| நெடுநல். | - | நெடுநல்வாடை |
| ப. | - | பக்கம் |
| பக். | - | பக்கங்கள் |
| பட்டின. | - | பட்டினப்பாலை |
| பதி. | - | பதிப்பாசிரியர் |
| பதிற். | - | பதிற்றுப்பத்து |
| புறத். | - | புறத்திணையியல் |
| புறம். | - | புறநானூறு |
| பெரும். | - | பெரும்பாணாற்றுப்படை |
| பொருந. | - | பொருநராற்றுப்படை |
| பொருள். | - | பொருளதிகாரம் |
| பேரா. | - | பேராசிரியர் |
| மதுரை. | - | மதுரைக்காஞ்சி |

| | | |
|---|---|---|
| மலை. | - | மலைபடுகடாம் |
| ம.ப. | - | மறுபதிப்பு |
| முருகு. | - | திருமுருகாற்றுப்படை |
| மு.ப. | - | முதல் பதிப்பு |
| முல்லை. | - | முல்லைப்பாட்டு |
| மூ.ப. | - | மூன்றாம் பதிப்பு |
| மேலது. | - | மேற்குறிப்பிட்டுள்ள நூல் |
| மொ.பெ. | - | மொழிபெயர்ப்பு |
| மொ.பெ.ஆ. | - | மொழிபெயர்ப்பு ஆசிரியர் |
| p. | - | Page |
| PP | - | Pages |
| Vol. | - | Volume |

# பொருளடக்கம்


| இயல் | தலைப்பு | பக்கம் |
| --- | --- | --- |
| | முன்னுரை | i - viii |
| ஒன்று | சங்கப்புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள் | 1 - 61 |
| இரண்டு | சங்கப்புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள் | 62 - 121 |
| மூன்று | சங்கப்புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள் | 122 - 197 |
| நான்கு | அரசு - மக்கள் உறவும், வாழ்வியல் நிலையும் | 198 - 265 |
| | முடிவுரை | i - vi |
| | துணைநூற் பட்டியல் | i - xxiii |
| | பின்னிணைப்புகள் | i - ix |

# முன்னுரை

# முன்னுரை

உலகின் தலைசிறந்த செம்மொழிகளில் தமிழ் மொழி ஒன்றாகும். தமிழ், செம்மொழி ஆவதற்குரிய தகுதிகளை வழங்கியதில் சங்க இலக்கியம் முதன்மை வாய்ந்தது. அத்தகைய செவ்வியல் தன்மைகளைக் கொண்ட சங்க இலக்கியத்தைப் பாட்டு–தொகை எனும் நிலைகளில் வழங்கி வருகின்றனர்.

இலக்கியம் வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி என்பர். வாழ்க்கையை என்றால் அது தனி மனிதனையும், சமூகத்தையும் திறம்படக் காட்டுகிறது என்பது பொருள். நமது வாழ்வு, வளம், நினைவுகள், அரசு, கொற்றம், மக்கள், கலாச்சாரம் அத்தனையையும் சிறப்புற வெளிப்படுத்துவதால்தான் இலக்கியம் காலக்கண்ணாடி, "வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடி" என்றெல்லாம் புகழப்படுகிறது. சங்கப் புற இலக்கியங்கள் தமிழர்களின் ஆட்சி முறைமையையும் மாட்சிமையையும் வெளிப்படுத்தும் சிறந்த இலக்கியங்கள் ஆகும். எனவே, அக்கூறுகளை வெளிக் கொணரும் வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சங்க காலம் என்பது கி.மு. 250 – கி.பி. 250 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அக்கால இடைவெளியில் சங்கப்புற இலக்கியம் காட்டும் தமிழகத்தின் எல்லைகள், பிரிவுகள், நிலப் பாகுபாடுகள், சமூகப் பொருளாதார வாழ்வியல் நிலைகள் எனச் சமூக அமைப்பும், அரசு, படை, பாதுகாப்பு, நீதிமுறை என ஆட்சியியல் முறையும், ஆட்சியாளர்கள், அவர்கள் மக்களோடு கொண்டிருந்த நல்லுறவுகள் பற்றிய பார்வைகளும் தேவைப்படுகின்றன. எனவே, இவற்றை ஆராய்வதற்கு இடம் தரும் சிறப்பினைக் கொண்டவை சங்கப் புற இலக்கியங்கள் ஆகும்.

## ஆய்வுத் தலைப்பு

இவ்வாய்வின் தலைப்பு, "சங்கப் புற இலக்கியங்களில் அரசு–மக்கள் உறவுநிலைகள்" என்பதாகும்.

சங்கப்புற இலக்கியம் என்பது, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறும் புறப்பாடல்களாகும். இப்புறப் பாடல்கள் வழி, தமிழர் கண்ட வாழ்வியல், தமிழர் கண்ட ஆட்சியியல், தமிழர் கண்ட பண்பாட்டியல், தமிழர் கண்ட அறவியல் என இவற்றை ஆராயும் வகையில் "சங்கப் புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவு நிலைகள்" என்னும் இத்தலைப்பு தேர்வு செய்யப்பெற்றுள்ளது.

## ஆய்வு எல்லை

இவ்வாய்விற்குப் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி ஆகிய ஆறு நூல்களுடன், எட்டுத் தொகை நூல்களில் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டையும் சேர்த்து எட்டு நூல்களும் முதன்மைச் சான்றுகளாகக் கையாளப்பட்டுள்ளன. கருத்து விளக்கம் கருதி சில அக இலக்கியப் பாடல்களும், திருக்குறளும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் துணைச் சான்றுகளாகக் கொள்ளப்பெற்றுள்ளன.

## ஆய்வு நோக்கம்

தமிழர்கள் தமது உயர்ந்த சிந்தனைகளால் மக்கள், அரசு, குடும்பம் ஆகிய ஒவ்வொன்றையும் அளந்து கண்டவர்கள்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

எனும் நோக்கில் அரசன் மதிக்கப் பெற்றான். தமது காலத்திற்கு முந்தைய ஆண்டுகளில் நிலவிய தமிழர் தம் அரசியல் கோட்பாடுகளைத் தெளிவாக உணர்ந்த திருவள்ளுவர் "இறைமாட்சி" என்று ஓர் அதிகாரமே கண்டார். அவரது பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், கூழ்இயல், படையியல், நட்பியல், குடியியல் எனும் ஏழ் இயல்களில் நடைபோடுகிறது. தமிழர் தம் ஆட்சிச் சிந்தனைகளின்

பெட்டகம்தான் அவரது பொருட்பால். இத்தனைத் தெளிவோடு வள்ளுவர் ஆட்சியியல் கோட்பாடுகளைக் கொள்வதற்குச் சங்க இலக்கியம் அவருக்கு நல்ல தரவுகளைத் தந்துள்ளது. அந்தச் சங்க இலக்கியத்தில் புறப்பாடல்களை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டு அது புலப்படுத்தும் அரசு – மக்கள் உறவு நிலைகள் பற்றிய கருத்துக்களை ஆராய்கிற அளவில் இந்த ஆய்வேடு அமைகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

"சங்கப்புற இலக்கியங்களில் அரசு, மக்கள் உறவு நிலைகள் " எனும் இவ்வாய்வுக்குப் பல ஆய்வேடுகளும், ஆய்வு நூல்களும் முன்னோடி ஆய்வுகளாய் அமைந்துள்ளன. அவை இவ்வாய்வுக்குரிய பார்வையைத் தெளிவுப்படுத்த உதவியுள்ளன.

## ஆய்வேடுகள்

1. **பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம்,**
   ர. பூங்குன்றன்,
   (முனைவர்பட்ட ஆய்வேடு)
   கல்வெட்டியல் துறை,
   தமிழ்ப்பல்கலைக் கழகம்,
   தஞ்சாவூர், 1999.

2. **சங்கப்புறப் பாடல்களில் வாழ்வியல்,**
   **சா. சுவாமிநாதன்,**
   (முனைவர்பட்ட ஆய்வேடு)
   தமிழியல்துறை,
   அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
   சிதம்பரம், 2003.

3. **பத்துப்பாட்டு காட்டும் ஆட்சியியல்,**
   கு. சக்திவேல்,
   (எம்.ஃபில்., பட்ட ஆய்வேடு),
   பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
   திருச்சி, 2005.

## முன்னோடி ஆய்வு நூல்கள்

4. சங்க கால வாழ்வியல்,
முனைவர் ந. சுப்ரமண்யன்,
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098
மு.ப. ஆகஸ்டு, 1986.

5. தமிழர் சால்பு (சங்க காலம்),
பேரா. சு. வித்தியானந்தன்,
பாரி புத்தகப் பண்ணை,
திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005,
மு.ப. மார்ச், 1985.

## கருதுகோள்

பண்டை இலக்கியங்கள் அக்காலத் தமிழரின் அக வாழ்வையும், புறவாழ்வையும் அழகுறப் பாடியுள்ளன. அவற்றில் புற இலக்கியங்கள் பெரும்பான்மை ஆட்சியாளர்களைப் பற்றிச் சித்திரித்துள்ளன. இவ்வாட்சியாளர்கள் குடிமக்களோடு கொண்டிருந்த உறவு நிலைகளை இந்த ஆய்வேட்டுக்குரிய கருதுகோளாகக் கொண்டு இவ்வாய்வு தொடர்ந்துள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வேட்டில் விளக்கமுறை, பகுப்பு முறை, வரலாற்று முறை, சமூக ஆய்வு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வு கோட்பாடுகளைச் சங்கப் புற இலக்கியத்தில் பயன்படுத்தி, அவை மூலம் பெறப்பட்ட கருத்துகளின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக பின்வரும் நான்கு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

இயல் 1 : சங்கப் புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்
இயல் 2 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள்
இயல் 3 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள்
இயல் 4 : அரசு – மக்கள் உறவும், வாழ்வியல் நிலையும்

## இயல் விளக்கங்கள்

### இயல் 1 : சங்கப் புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் தனிச்சிறப்புடையவை. சங்கப் புற இலக்கியங்கள் காட்டும் அரசு – மக்கள் உறவு நிலைகள் பற்றிய இந்த ஆய்வில் இவ்வியல் சமூக அமைப்பினை ஆராய்வதாக அமைகிறது. ஒரு நாட்டின் சமூக அமைப்பு எனும் நிலையில் அந்நாட்டின் எல்லையினையும், வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலைகளையும் அது வெளிக்கொணரவேண்டும். இதன் அடிப்படையில், தமிழகத்தின் எல்லையினையும், பிரிவுகளையும் சுட்டிக்காட்டி நிலப் பாகுபாட்டின் அடிப்படையில் வாழ்ந்த மக்களும், அவர்களது தொழில் நிலைகளையும் கண்டுள்ளது. மேலும், நானிலங்களுக்குப் பொதுவாகப் பரிசில் வாழ்க்கை நடத்தும் புலவர்கள் மற்றும் ஆற்றுப்படைக் கலைஞர்கள், அவர்தம் வாழ்வியல் நிலைகளை ஆராய்ந்துள்ளது.

மூவேந்தர்கள், வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர், வள்ளல்கள் என அக்கால ஆட்சியாளர்களைப் பற்றி விளம்புகிறது. வளமான ஆட்சி அமையப் பொருளாதாரம் திறம்படச் செயல்பட வேண்டும், எனவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் இவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளது. மற்றும் அக்கால மக்களின் சமய நிலைகளை அறியும் நோக்குடன் அவர்களது தெய்வங்களையும், சமயங்களையும் விளக்குவதாக இவ்வியல் அமைகிறது.

### இயல் 2 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள்

ஆய்வின் இந்த இரண்டாம் இயலில், சங்க கால ஆட்சியாளர்களின் ஆட்சி முறைமைகள் பின்வரும் நிலைகளில் எடுத்துக்கொள்ளப் பெற்று விரிவாக

ஆராயப்பெற்றுள்ளன. அரசுத் தோற்றம், அரச உரிமை, மன்னன், மன்னன் கடமைகள, தகுதிகள், சின்னங்கள், பட்டங்கள் எனவும், ஆட்சியாளர்களுக்கு அங்கமாய் விளங்கிய ஆட்சிக் குழுக்களையும் அலுவலர்களையும் சுட்டியுள்ளது. அரசின் வரவு செலவு பற்றிய செய்திகளாக நிலவரி, சுங்க வரி, பிற வருவாய்கள் என்று, அரசச் செலவினங்களைச் சங்கப் புற இலக்கியம் வழி கண்டு விளக்கியுள்ளது.

படையும் பாதுகாப்பும் எனும் பகுதியில் காலாட்படை, யானைப் படை, குதிரைப் படை, தேர்ப்படை, கடற்படை எனப் பலப் பிரிவுகளையும், உள்நாட்டுப் பாதுகாப்பில் நகர்க்காவல், ஊர்க்காவல், தெருக்காவல் எனவும், தலைநகர்ப் பாதுகாப்பில் மதிலரண், நீரரண், நிலவரண், காட்டரண், மலையரண் என நாட்டுப் பாதுகாப்பு பற்றிய செய்திகளையும் பகர்கின்றது. வீரத்திற்குச் சான்றாகத் திகழும் போர் பற்றிய செய்திகளாகப் போர், போர் நிகழ்வுகள், போருக்கான காரணங்கள், போர் அறம் எனக் கண்டுள்ளது. மன்னரின் செங்கோலுக்குப் பறை சாற்றும் நீதி முறையில் ஊரவை, அறங்கூறவையம், நாளவை என்று இவற்றை விரிவாக ஆராய்ந்துள்ளது. மேலும், குற்றங்களையும், அவற்றிற்கான தண்டனைகளையும் இவ்வியல் ஆராய்ந்துள்ளது.

## இயல் 3 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள்

சங்கப் புற இலக்கியங்களில் அரசு – மக்கள உறவு நிலைகள் என்று ஆராயும்போது, சங்கப் புற இலக்கியங்களில் தெளிவாகச் சுட்டப் பெற்றுள்ள ஆட்சியாளர்களை மட்டுமே கோடிட்டுச் செல்வதாக இவ்வியல் அமைந்துள்ளது. சங்க காலத்தை நோக்கத் தமிழகத்தைப் பல்வேறு ஆட்சியாளர்கள் காலந்தோறும் ஆண்டு வந்துள்ளனர். அவர்கள் ஆட்சி செய்த நிலத்தின் பரப்பளவு, அவர்களின் வீரம், கொடை, கீர்த்தி ஆகியவற்றைக் கொண்டு வேந்தர், வேளிர், மன்னர், வள்ளல் என்று அழைக்கப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள் அனைவரையும் குறிக்கும் பொதுச் சொல்லாக 'அரசர்' என்னும் சொல் அமைந்துள்ளது. எனவே, இவ்வியலில்

ஆட்சியாளர்களைப் பார்க்கும்போது அவர்களின் தோற்றம், மூவேந்தர் அவர்களின் தொன்மை சங்கப் புற இலக்கியங்கள் சுட்டிய வழி சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் இவர்களில் புலமையாளர்கள் என ஆய்ந்து இனம் கண்டு கூறியுள்ளது. வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர், வள்ளல் என அக்கால ஆட்சியாளர்களின் ஆட்சிச் சிறப்பினையும், அவர் தம் ஆளுமைப் பண்புகளையும் ஆராய்ந்துள்ளது.

## இயல் 4 : அரசு – மக்கள் உறவும், வாழ்வியல் நிலையும்

சங்க கால அரசர்கள் சமூக குறைபாடுகளைக் கண்டுணர்ந்து அவற்றை அகற்ற வேண்டும் என்பதிலும், நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வேண்டும் என்பதிலும் நாட்டம் மிகுந்தவர்களாக இருந்திருக்கின்றனர். தம் குடைக் கீழ் வாழும் மக்களின் நல் வாழ்வைக் கருதியே நல்லாட்சி நடத்தியுள்ளனர். இந்நிகழ்வுகளைச் சங்கப் புற இலக்கியங்கள் சுட்டிய வழி விளக்குவதாக இவ்வியல் அமைகிறது. ஆட்சியாளர்கள் அந்தணர், வணிகர், வேளாளர் மற்றும் அரசியல் வினைஞர்களோடு அவர்கள் கொண்டிருந்த உறவு நிலைகளைச் சிறப்பாக விளக்கியுள்ளது. புலவர்கள் – ஆட்சியாளர்களுக்கிடையே நிலவிய நட்புறவு நிலையினையும், புலவர்கள் ஆட்சியாளர்களின் பழிக்காத்தமையையும், அவர்களுக்காகத் தூது போதல், சந்து செய்வித்தல் போன்ற அவர்களின் பணிகளையும் கோடிட்டுச் செல்கிறது. மேலும், ஆற்றுப்படைக் கலைஞர்களான கூத்தர், பாணர், பொருநர், விறலியர்களை, ஆட்சியாளர்கள் நடத்திய திறம், விருந்தோம்பல் பண்பு மற்றும் இவ்விருவரிடையே விளங்கிய உறவு நிலைகளையும் தெளிவுப்படுத்தியுள்ளது.

மக்களின் வாழ்வியற் செய்திகளைச் சங்க இலக்கியம் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளது. அரசர்கள் முதல் ஏழைகள் வரை நிலவிய இவ்வாழ்க்கைச் செய்திகள், மனையறப் பண்புகள் ஆகியவற்றைப் புனைந்துள்ளது. வெறியாட்டு, நடுகல் வழிபாடு என அக்கால மக்களின் வழிபாட்டு முறைகளையும், நம்பிக்கைகளையும், அரசர்கள் எடுத்த விழாக்களையும் சங்கப்புற இலக்கியம் கண்ட வழி இந்த இயல் எடுத்துக்காட்டி நன்கு ஆராய்ந்துள்ளது.

## முடிவுரை

முன்னுரையினைத் தொடர்ந்து,

இயல் 1 : சங்கப் புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்

இயல் 2 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள்

இயல் 3 : சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள்

இயல் 4 : அரசு – மக்கள் உறவும், வாழ்வியல் நிலையும்

எனும் மேற்கண்ட நான்கு ஆய்வுத் தலைப்புகளில் ஆராய்ந்து கூறப்பெற்ற ஆய்வு முடிவுகளைத் தொகுத்துச் சுட்டுவதுடன், விரிவான ஆய்விற்குரிய இத்தலைப்பில் மேலும், ஆய்வதற்குரிய வாய்ப்புகள் இருப்பதையும் கூறி, இம் முடிவுரை இயல் ஆய்வேட்டின் நிறைவுப் பகுதியாய் நிறைவடைந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்

ஆய்வுக்குத் துணை செய்த நூல்கள் அனைத்தும் அகர வரிசையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. முதன்மை நூல்கள், துணைமை நூல்கள், பார்வை நூல்கள், ஆங்கில நூல்கள், அகராதிகள், களஞ்சியங்கள், இதழ்கள், ஆய்வேடுகள் முதலியன தனித்தனியே பட்டியலிடப்பட்டுள்ளன.

## பின்னிணைப்பு

அ. பத்துப்பாட்டில் ஆட்சியாளர்கள்
ஆ. பதிற்றுப்பத்து சுட்டும் சேர வேந்தர்கள்
இ. புறநானூறு குறிப்பிடும் ஆட்சியாளர்கள்
ஈ. புலவராக விளங்கிய வேந்தர்கள்

எனச் சங்கப்புற இலக்கியங்கள் சுட்டிய ஆட்சியாளர்களும் அவர்களில் புலவர்களாகத் திகழ்ந்த வேந்தர்களும் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளனர்.

# இயல் - 1

## சங்கப்புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்

# சங்கப் புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்

## முன்னுரை

சங்கப்புற இலக்கியம் என்பது இங்குச் சங்க இலக்கியங்களில் புறம் சார்ந்த திணைகளைப் பாடும் இலக்கியங்கள் என்று வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நோக்கில் சங்கப் புற இலக்கியங்களில் காணப்படும் சமூகப் பின்புலங்களை இவ்வியல், பகுப்பாய்வுக் களங்களில் நின்று, சங்கச் சமூகம், அரசு, மக்கள், தொழில், பொருளாதாரம், சமய நிலைகள் என்று ஆராய முற்படுகின்றது.

முதலில் பண்டைய தமிழகத்தின் நிலவெல்லைகளைச் சங்கப் புற இலக்கியங்கள் சுட்டிய விதத்தில் தேர்ந்து கொண்டு, திணைசார் நிலவியல் பாகுபாட்டு நோக்கில் அந்தந்தத் திணை சார்ந்த மக்களின் தொழில்களை ஆராய்கின்றது. பரிசில் வாழ்க்கை வாழ்ந்த புலவர், ஆற்றுப்படைக் கலைஞர்கள் ஆகியோரின் வாழ்வியல் நிலைகளையும் ஆராய்ந்துள்ளது.

சங்கச் சமூகம் திணைசார் இனக்குழு மக்கள் நிலையிலிருந்து வள்ளல்கள், குறுநில மன்னர்கள், அரசுகள் என்று வளர்ந்த சூழலில், உயர்நிலைச் சமூகம், உயர்நிலைக்கு எட்டாத பின் தங்கிய சமூகம் என்று பொருளியல் உறவுகளால் தரப்பட்டிருந்த போது அம்மக்களை உயர்நிலையினர், உயர்நிலை அல்லாத நிலையினர் என்று பகுத்துக் கொண்டு அந்தந்தப் பிரிவு மக்களின் சமூக நிலைப்பாடுகளை இவ்வியல் வரையறுத்துக் கூற முற்பட்டுள்ளது.

அரசுருவாக்கச் சூழலில் வளர்ந்துவந்த சமூகம், அது வளர்வதற்கு முன்னைய சூழலில் இருந்த சமூகம், வேளிர், சீறூர் மன்னர், குறுநில மன்னர், வள்ளல்கள், சேரர், சோழர், பாண்டியர் என்று வண்புகழ் மூவராய், அவர்கள் வளர்ந்து அரசு சமூகம் கண்ட நிலையில் ஆட்சியாளர்களாய் அவர்கள்

பரிணமித்ததை அரசியல், பொருளியல், வணிகவியல், மதம் சார்ந்த பண்பாட்டு இயல் நோக்குகளில் ஆராய முனைந்துள்ளது.

தெளிவாகச் சொன்னால் ஓர் அரசியல் – சமூகம் – பொருளியல் – வரலாற்றைக் குறிப்பிட்ட சங்க காலத்தில், குறிப்பிட்ட சங்கப்புற இலக்கியங்கள் சுட்டிய விதத்தில் மிகவும் அளவான நிலையில் நேரிதாக வரையறுத்துக் கூற முனைந்துள்ளது. ஆய்வு புலப்படுத்திய முக்கிய கருத்துக்கள், இவ்வியலின் தொகுப்புரைப் பகுதியில் அளவாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## தமிழகம்

இந்திய நாட்டின் தென்பகுதியில் உள்ள தமிழகம் இலக்கிய, புராதான சின்னங்களையும், புகழினையும் உடையது. இத்தமிழகத்தை, 'நாவலந்தண் பொழில்' என்று பெயரிட்டு வழங்கியுள்ளனர் சங்க இலக்கியச் சான்றோர். 'சம்பத் தீவு' என மணிமேகலையும், 'இமிழ் கடல் வரைப்பில் தமிழகம்' எனச் சிலப்பதிகாரமும் பகர்கின்றன. ஆனால், தமிழகம் தனித் தீவாக அமையவில்லை. முந்நீர் நிலமாக அமைந்துள்ளது. தமிழ்மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருதலால் இதனைத் 'தமிழ் கூறு நல்லுலகம்' என்கின்றது தமிழிலக்கண நூல்.

## எல்லைகள்

"சங்க காலத் தமிழகம் பற்றிய எல்லையைத் திட்டவட்டமாக அறிய முடியவில்லை"[1] என்றும், "தமிழகத்தின் எல்லைகள் அவ்வப்போது மாறுபட்டு வந்துள்ளன"[2] என்றும் கூறுவர். சங்க காலத்தில் தமிழகம் வடக்கே வேங்கட மலையினையும் தெற்கே குமரியாற்றையும் கிழக்கிலும் மேற்கிலும் கடல்களையும் எல்லையாகக் கொண்டிருந்தன என்று பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

இப்போது வழக்கில் உள்ள தமிழ் இலக்கணங்களில் மிகவும் பழமையானதாகக் கருதப்படுவதும், சங்க இலக்கியங்களுக்கு முழு முதல் இலக்கணமாகவும், இன்றுள்ள தமிழ் நூல்களுள் முதல் நூலாகவும் விளங்குவது

தொல்காப்பியம் ஆகும். மொழிக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் இலக்கணத்தை வகுத்திருப்பது இந்நூல். இதற்குச் சிறப்புப் பாயிரம் நல்கிய பனம்பாரனார் தமிழ் நாட்டின் எல்லையாக,

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்"[3]

என்று தமிழகம் வடக்கே வேங்கட மலையினையும் தெற்கே குமரிக் கடலினையும் கொண்டு விளங்கியதாகக் கூறியுள்ளார்.

தமிழகத்தின் கிழக்கிலும் மேற்கிலும் கடல் சூழ்ந்துள்ளது. எனவே, இவ்விரு திசைகளிலும் நாட்டின் எல்லையைப் பனம்பாரனார் எடுத்துக் கூறவில்லை. ஆனால், வடஎல்லையையும் தென் எல்லையையும் மட்டும் அவர் கூறுவதில் பொருள் உண்டு. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உள்ளமையின் தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின் கூறப்படாவாயின என்று தொல்காப்பிய உரையாசிரியரான இளம்பூரணர் தரும் விளக்கம் இங்கு நோக்கத்தக்கது.

பரந்துபட்ட நிலப்பரப்பினைத் தன்னகத்தே கொண்ட தமிழகத்தை ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களின் புகழையும், வீரத்தையும் பாடிய புலவர்கள், அவர்கள் ஆட்சி செய்த நிலப்பரப்பினைச் சுட்டிக் கூறியுள்ளதையும் காணமுடிகின்றது.

"தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை"[4]

என்று குறுங்கோழியூர் கிழாரும்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்"[5]

எனக் காரிகிழாரும்,

"ஒலி வெள் ளருவி வேங்கட நாடன்"[6]

என்று புறத்திணை நன்னாகனாரும்,

"கல்லிழி யருவி வேங்கடங் கிழவோன்"[7]

எனக் கள்ளில் ஆத்திரையனாரும்,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை"[8]

என்று மாங்குடி மருதனாரும் பாடியிருப்பதன் மூலம் தமிழகத்தின் எல்லையினை அறியமுடிகின்றது.

## தமிழகத்தின் பிரிவு நாடுகள்

"தலைச் சங்க காலத்தில் தமிழகம் தென்கடலுக்கப்பாலும் தொலைதூரம் பரவி இருந்தது என்று கூறும் குறிப்புகள் சில, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவ்வாறு பரவியிருந்த நிலப்பகுதி மட்டும் 49 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்துள்ளது."[9] அந்நாடுகள், ஏழ்தெங்க நாடு, ஏழ் மதுரை நாடு, ஏழ் முன்பாலைநாடு, ஏழ் பின்பாலை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குணகாரை நாடு, ஏழ் குறும் பனை நாடு எனப் பெயரிட்டு வழங்கப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழகம் பாண்டி, தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண்,பூழி, பன்றி, அருவா, அருவா வடதலை, சீதம், மலாடு, புனல்நாடு என்று 13 பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தது என்று வே. கனகசபை பிள்ளை குறிப்பிடுகின்றார்.[10]

ஒரே மொழி வழங்கப்பட்டு வந்த தமிழ் நிலம் சங்க காலத்தில் வலிமையும், ஒருமைப்பாடும் இணைந்த ஒரே நாடாகத் திகழாமல் பல்வேறு சிறு சிறு நாடுகளாகப் பிளவுண்டிருந்தமை தெரிகின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மேற்குறிப்பிட்ட தமிழகத்தின் உட்பிரிவு, நாடுகளின் இட அமைப்பு, எல்லை ஆகியவற்றைப் பற்றி எந்த ஒரு குறிப்பையும், புறச் சான்றையும் தரவில்லை. உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர்,[11] குணசாகரர்,[12] சங்கர நமச்சிவாயர்[13] போன்றோர்களது கூற்றுகளில் மேற்குறிப்பிட்ட நாடுகளைப் பற்றிய தகவல்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நிலப்பாகுபாடும் மக்களும்

சங்க கால மக்கள் எந்தெந்த இடங்களில், எவ்வாறு வாழ்ந்தார்கள் என்பதை அறிவதற்கும் சங்க இலக்கியங்கள் மிகவும் பயன்படுகின்றன. நிலத்தினுடைய இயற்கை அமைப்பிற்கு ஏற்ப அக்கால மக்கள் வாழ்க்கை ஐந்து விதமாக அமைந்திருந்துள்ளது. முல்லை நிலம், குறிஞ்சி நிலம், மருத நிலம், நெய்தல் நிலம், பாலை நிலம் என்னும் நிலப் பிரிவுப்படி அவர்களுடைய வாழ்க்கையும் ஐந்து வகையாக அமைந்திருந்ததையும் காணமுடிகின்றது. இதனைத் தொல்காப்பியர்,

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
> சொல்லிய முறையான் சொல்லவும் படுமே"[14]

என்னும் நூற்பாவால் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தொல்காப்பியர் நானிலங்களுக்கு மட்டுமே பெயர் குறிப்பிடுகின்றார். இவருக்குப் பின்னால் வந்த இளங்கோவடிகள் முல்லையும் குறிஞ்சியும் தம் இயல்பு திரியும் போது பாலையாகும் என்கின்றார்.[15] இவ்வாறு இயற்கையாக அமைந்த வெவ்வேறு சூழ்நிலைகளில் வசித்த அக்காலத்துத் தமிழ் மக்களுடைய வாழ்க்கை வெவ்வேறு வகையாக இருந்துள்ளன. மற்றும் அவர்களுடைய தொழிலும், உணவும், உடையும் பண்பாடும் மாறுபட்டிருந்ததையும் உணரமுடிகின்றது.

## குறிஞ்சி

மலைகளும் குன்றுகளும் அவற்றைச் சார்ந்த இடங்களும் குறிஞ்சி நிலமாகும். இப்பகுதியில் குறிஞ்சி என்னும் பெயர் கொண்ட மலர்களே சிறப்பானவை. கானவர் இவற்றை விரும்பி அணிந்துள்ளனர். இக்காரணங்களால் இப்பகுதி குறிஞ்சி எனப் பெயர் பெற்றதெனக் கூறுவர்.

இந்நிலப்பகுதி, அகில், சந்தனம், சிறுமூங்கில், பெருமூங்கில், பலா, சுரபுன்னை, வாழை, மா, கடம்பு, கருங்காலி முதலிய பலவகை மரங்கள் நிறைந்த காடுகள் கொண்டது. குரங்கினங்கள், யானை, புலி, கரடி, காட்டுப் பன்றி, காட்டுப் பசு, வரையாடு முதலிய விலங்குகள் உலாவும் இடமாகவும் இருந்துள்ளதை அறிய முடிகின்றது.

இப்பகுதியில் வாழ்ந்த மக்களைக் 'குறவர்' என்பர். குறவர் என்ற சொல் மலைவாழ்நர், காட்டிலே வாழ்பவர், பாம்பாட்டிகள், சாத்திரம் சொல்பவர் முதலியோரை இக்காலத்திற் குறிக்கும் என்கிறார். சு. வித்தியானந்தன்.[16] குறவருள் செல்வத்தாலும், குடியாலும் உயர்ந்தவர்கள் வெற்பன், பொருப்பன், சிலம்பன் என்னும் திணைப்பெயர் பெற்றுள்ளனர். பெண் 'கொடிச்சி' எனப்பட்டாள். குடிமக்களுள் ஆடவர், கானவர், குன்றுவர், வேட்டுவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் குன்றுவித்தியர், வேட்டுவித்தியர், குறத்தியர் எனப் பெயர் பெற்றமை தெரிகின்றது.

## தொழில்கள்

இந்நிலத்தவரின் தொழில், தினை பயிரிடுதல், வேட்டையாடல், தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், கிளியோட்டுதல் முதலியன ஆகும்.

தினையே குறிஞ்சி நிலத்தில் விளையும் முக்கிய தானியமாகும். பயிரிட நிலமில்லாத போது நறிய அகில் மரங்களையும் சந்தன மரங்களையும் வெட்டி, அவை இருந்த நிலத்தை உழுது, சீர்படுத்தி விளைநிலமாக்கியுள்ளனர். எள், தினை, வரகு, அவரை, மூங்கில், நெல், வெண்சிறுகடுகு, இஞ்சி, மஞ்சள், வாழை, கூவைக்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, ஆசினிப் பலா, கரும்பு, ஐவன நெல், வெண்ணெல் இவற்றை வளமுறப் பயிரிட்டதை மலைபடுகடாம் (அடி: 102 – 117) பகர்வதன் மூலம் அறியமுடிகின்றது.

தம் உழைப்பின் பயனாக விளைந்த தினைப் புனங்களைக் காவல் காத்துள்ளனர். யானையாலோ, புலியாலோ தாக்கப்படாத பெரிய மரக்கிளைகளினிடையே பரண் அமைத்துப் பயிர்களைத் தின்ன வரும் கிளி, கரடி, யானை, காட்டுப்பன்றி முதலியவற்றைக் கவண்கல் எறிந்தும், பறையடித்தும், எரி கொள்ளியைக் காட்டியும் விரட்டியுள்ளமை தெரிகின்றது.[17] யானைகள் மீது வீசிய கவணுமிழ் கற்கள், யானைகளின் பகைத்த நிலையைக் கெடுத்து, உயிரைப் போக்கும் முறைமையாலே கூற்றத்தை ஒப்பன என்று மலைபடுகடாம் (அடி: 209 – 210)கூறுகின்றது. அவ்வாறு வீசப்பட்ட கற்கள், அவரையினை உண்டு நிற்கும் காட்டுப் பசுவினையும் விரட்டியதை,

"மணிப்பூ அவரைக் குரூஉத்தளிர் மேயும்
ஆமாக் கடியும் கானவர் பூசல்"[18]

என்ற அடிகளால் உணர முடிகின்றது.

முற்றிய தினைப்புனத்தைக் காட்டுப் பன்றிகள் அழிப்பது இயல்பு. எனவே, அவைவரும் வழிகளில் கற்பொறிகளைப் பொருத்தி வருகையைத் தடுத்துள்ளனர். மேலும், அதனைப் பிடிக்கக் குழிகள் தோண்டித் தழையிட்டு நிரப்பியுள்ளனர். இதனை அறியாது வந்து குழியில் வீழ்ந்த பன்றியினைத் தாக்கிக் கொன்றதை மாங்குடிமருதனார்,

"சேணோ னகழ்ந்த மடிவாய்ப் பயம்பின்
வீழ்முகக் கேழ லட்ட பூசல்"[19]

என்று குறிப்பிடுகின்றார். இவற்றின் மூலம் கானவர்களின் வேட்டையாடும் திறத்தினை நன்கு அறியமுடிகின்றது. மூங்கிலால் செய்த ஏணியைக் கொண்டு மலை உச்சியில் உள்ள மரக்கிளைகளில் தேனெடுத்துக் களிப்புற்று வாழ்ந்தமையும் தெரிகின்றது.[20] இதன்வழி கானவர்களின் தொழில் திறத்தையும், விளைபொருள் உற்பத்தியையும் வேட்டையாடுதலையும் அறியலாகின்றது.

## முல்லை

மலைகளின் அடிவாரம் குன்றுகளும், காடுகளும், காட்டாறுகளும் நிறைந்த பகுதியாகும். காடும் காடு சார்ந்த பகுதியாதலால் இது முல்லை எனப்படுகிறது. இங்குக் காடு என்பது, குறிஞ்சி நிலக்காடு போன்ற மரச் செறிவுடைய காடன்று. 'இளங்காடு' என்று சொல்லத்தகும் முறையில் அமைந்த நிலப்பகுதியாகும் என்பர்.[21] கொன்றை, காயா, குருந்தம் முதலிய மரங்கள், மல்லிகை, முல்லை, பிடவு, தளவம் முதலிய செடி கொடிகளும் நிறைந்த பகுதிகளாகும். இப்பகுதியில் மலரும் மலர்களில் முல்லையே சிறப்பிடம் பெற்றதாலும், ஆயரும், ஆய்ச்சியரும் விரும்பி முல்லை மலர்களைக் சூடிக் கொண்டதாலும் இந்நிலம் முல்லை எனப் பெயர் பெற்றது என்பர்.

இந்நிலத் தலைவன் அண்ணல், தோன்றல், குறும்பொறை நாடன் எனவும், தலைவி, மனைவி, கிழத்தி எனவும் பெயர் பெற்றுள்ளனர். குடிமக்களுள் ஆடவர், ஆயர், கோவலர், இடையர், பொதுவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் ஆய்ச்சியர், கோவிச்சியர், இடைச்சியர், பொதுவிச்சியர் எனப்பட்டனர். இவர்களைப் புறநானூறு, 'அறம்புரியும் நெஞ்சை உடையவர்' (390:1) என்கின்றது.

## தொழில்கள்

முல்லை நிலமக்கள் ஆடு மாடுகளை மேய்த்துள்ளனர். வரகு, சாமை முதலியவற்றைப் பயிரிட்டும் தங்கள் வாழ்வைச் செம்மையாக்கியுள்ளனர். கால்நடையால் கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை வேற்று நிலங்களுக்குச் சென்று விற்றும், அந்நிலப் பொருள்களைப் பெற்றும் வாழ்ந்துள்ளமை தெரிகின்றது.

இச்சீறூர் மக்கள் உழவுத் தொழிலில் நன்கு பயின்ற பெரிய எருதுகளைக் கொண்டு நிலத்தை உழுதுள்ளனர். அகல உழாமல், உடும்பின் முகத்தை ஒத்த பெருங்கொழு, நிலத்தில் மறைய நன்கு ஆழ உழுதுள்ளனர். பின்பு தானியங்களை விதைத்தும், முறையே களை எடுத்தும் பயிர்களைக் காத்துள்ளனர். முற்றிய

பயிர்களை முறையே, அறுவடை செய்தும், தானியங்களைக் குதிர்களில் சேகரித்தும்[22] வாழ்ந்தமையினை அறிவதன் மூலம் இவர்களது தொழிலினையும் தானியங்கள் சேகரிக்கும் முறையினையும் சங்க இலக்கியங்களின் வழி அறியக் கிடக்கின்றது.

## மருதம்

நீர்வளம் மிக்க நிலப்பரப்பான வயலும், வயலைச் சார்ந்தப் பகுதியும் மருதம் எனப்படும். இந்நிலத்தில் மருத மரங்கள் மிகுதியாதலின் இது மருதம் எனப் பெயர்பெற்றுள்ளது. நெல், கரும்பு போன்ற உயரிய பயிர்கள் நன்கு பயிராகும் நிலம். உணவுப் பற்றாக்குறை இல்லாத நிலம். ஆதலின் ஐவகை நிலங்களில் மருதமே உயர்வாகக் கருதப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படை (அடி; 206 – 246), மதுரைக்காஞ்சி (அடி; 246 – 270), மலைபடுகடாம் (அடி; 100 – 185), போன்ற நூல்கள் மருதநில இயற்கை அழகையும், சிறப்பையும் அந்நில மக்களின் வாழ்க்கை முறை, தொழிற்பண்பு முதலியவற்றையும் விரிவாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலத்துத் தலைமகன் மகிழ்நன், ஊரன் எனவும், தலைமகள் மனைவி எனவும் பெயர் பெற்றுள்ளனர். குடிமக்கள் உழவர், களமர், கடையர் என்று அழைக்கப்பட்டுள்ளனர். அவர்தம் பெண்டிரை உழத்தியர், கடைசியர் என்றும் அழைத்துள்ளமை தெரிகின்றது.

## தொழில்கள்

வேளாண்மையே இம்மக்களுடைய முதன்மைத் தொழிலாகும். நெல்பயிரிடும் முறையினைப் பெரும்பாணாற்றுப்படை விரிவாகச் சித்தரிக்கின்றது. எருதுகளையும், எருமைகளையும் கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தியதை,

"பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்"[23]

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

"முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறு" (பெரும், அடி; 212) என்ற அடி, நாற்று நடுதலைக் குறிக்கின்றது. கரிகாலனைப் பாடிய முடத்தாமக் கண்ணியார் அவனது நாட்டு வளத்தினைப் பாடும் போது,

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆகக்
காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"[24]

என்று, ஒருவேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைந்ததைக் குறிப்பிட்டுள்ளார். சங்கப்புற இலக்கியம் தந்துள்ள மேற்கண்ட தரவுகளின் வழி அக்கால வேளாண்மை நிலையினையும் இத்தொழிலை மேற்கொண்ட மருதநில மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் அறிய முடிகின்றது.

## நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தலாகும். இங்கு நெய்தல் மலர் மிகுதியாதலின் இந்நிலம் இப்பெயர் பெற்றுள்ளது. கடற்கரை ஓரங்களில் வாழ்ந்த பரதவரே இந்நிலத்திற்குரிய குடிமக்களாவர். இவர்கள் பட்டினம் என்னும் பேரூர்களிலும், பாக்கம் என்னும் சிற்றூர்களிலும் வாழ்ந்துள்ளமை புலப்படுகின்றது. இதனை,

"பனி நீர்ப் படுவிற் பட்டினம்"[25]

எனச் சிறுபாணாற்றுப்படையும்,

"கட்கொண்டிக் குடிப்பாக்கத்து"[26]

என்று மதுரைக்காஞ்சியும் சுட்டுவதால் உணரமுடிகின்றது.

இந்நிலத்தவருள் தலைவன் சேர்ப்பன், கொண்கன், புலம்பன், துறைவன் எனப்பட்டனர். குடிமக்களுள் ஆடவர், பரதவர், நுளையர், திமிலர், வலையர், அளவர் எனப்பட்டனர். அவர்தம் பெண்டிர் பரத்தியர், நுளைச்சியர், அளத்தியர், வலைச்சியர் எனப் பெயர் பெற்றமை புலனாகின்றது.

## தொழில்கள்

நெய்தல் நிலமக்கள் கடலிற் மீன்களைப் பிடித்தல், அவற்றை உலர்த்துதல், உப்பு விளைத்தல், மீனையும் உப்பையும் விற்றல், கடலாடுதல் முதலிய தொழில்களை முறையே மேற்கொண்டிருந்தனர். இப்பரதவ மக்கள் முறுக்கேறிய தசையினையும் குன்றெனத் திரண்ட தோள்களையும் உடைய வலிமையான உடலமைப்புக் கொண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர். இதனை,

> "படலைக் கண்ணிப் பருஏர் எறுழ்த் திணிதோள்
> முடலை யாக்கை முழுவலி மாக்கள்"[27]

என்ற பாடல் வழி அறியமுடிகின்றது. தான் பிடித்த மீனை விற்கும் வலைஞனைப்பற்றி,

> "வள்ளை நீக்கி வயமீன் முகந்து
> கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்"[28]

என மதுரைக்காஞ்சி பாடியுள்ளதைக் காணமுடிகின்றது.

மேலும், பரதவர்கள் முத்துக் குளித்தலில் ஈடுபட்டுக் கடல் வணிக உரிமையும் பெற்று விளங்கியுள்ளனர். செல்வமும், செல்வாக்கும் மிக்க இவர்கள் பல் வகைப்பட்ட பண்டங்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்துள்ளனர் என்பதும் தெரிகின்றது. இதனை,

> "முழங்கு கடல்தந்த விளங்குகதிர் முத்தம்
> அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை
> பரதர் தந்த பல்வேறு கூலம்"[29]

என்ற மாங்குடி மருதனார் கூற்றினாலும்,

"நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணல்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெரு"[30]

என்ற கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூற்றாலும் உணரமுடிகின்றது.

## பாலை

தொல்காப்பியர் பாலை நிலத்தன்மை பற்றிக் குறிப்பிடவில்லை. குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் முதுவேனிற் காலத்து வெம்மையின் காரணமாக நீர் வளத்திற் குறைந்து மக்கள் நிலைத்து வாழ வசதியற்ற நிலை ஏற்படும். அந்நிலையே பாலை என்கிறார் இளங்கோவடிகள். இதனை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"[31]

என வரும் பாட்டடிகளால் அறியமுடிகின்றது. "பாலைத் தன்மையாவது காலையும் மாலையும் நண்பகலன்ன கடுமை கூரச், சோலை தேம்பிக், கூவல் மாறி, நீரும் நிழலும் இன்றி, நிலம் பயன் துறந்து, புள்ளும் மாவும் புலம்புற்று இன்பமின்றித் துன்பம் பெறுவது"[32] என்று பாலை நிலத்தன்மையினை நச்சினார்க்கினியர் விளம்புகின்றார்.

இப்பாலை நிலத்தில் வேட்டுவர்கள் வாழ்ந்துள்ளனர். இந்நிலத் தலைவனை விடலை, காளை, மீளி என்றழைத்துள்ளனர். தலைவி 'எயிற்றி' எனப்பட்டாள். குடிமக்களுள் ஆடவரை எயினர், மறவர், வேடர், ஆறலைக் கள்வர் என்றும், பெண்களை எயிற்றியர், மறத்தியர் என்றும் அழைத்தமை தெரிகின்றது.

## தொழில்கள்

எயினர்களுடைய தொழில் வழிப்பறி செய்வதும், பகைவருடைய கால்நடையினைக் கவர்வதும், ஊர்களுக்குச் சென்று கொள்ளையடிப்பதும் ஆகும். பாலை நில வழியே செல்லும் வணிகர் கூட்டங்களையும், தனியே செல்லும் வழிப்

போக்கர்களையும் மறைந்திருந்து தாக்கி வழிப்பறி செய்பவர்கள். குறிபார்த்து அம்பு விடும் ஆற்றலைப் பெற்ற இவர்கள் கூற்றுவனைப் போன்ற கொலைத் தொழில் புரிபவர்கள்.

> "அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
> கைப்பொருள் வெளவுங் களவேர் வாழ்க்கைக்
> கொடியோர்...."[33]

என்ற அடிகள் வழிப்போக்கரைக் கதறும்படி வெட்டி, அவர்கள் உடைமைகளைப் பறித்தமையைக் காட்டுகின்றன.

சங்கப் புற இலக்கியங்களின் வழி ஐவகை நிலப்பிரிவுகளாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவும் அங்கு வாழ்ந்த மக்களையும் அவர்களது தொழில்களாகத் தேன் எடுத்தல், ஆநிரை மேய்த்தல், வேளாண்மை செய்தல், மீன் பிடித்தல், வழிப்பறி செய்தல் என்பனப் பற்றியும் விரிவாகக் காண முடிகின்றது.

## நானிலங்களுக்குப் பொதுவானவர்கள்

தொல்காப்பியர் உரைத்த நானிலங்களுக்குரிய மக்கள், அந்நிலங்களுக்குரிய பெயர்களைப் பெற்றும், தத்தம் நில அமைப்பிற்கேற்றபடி தங்களது வாழ்க்கை முறையை அமைத்தும் திறம்பட வாழ்ந்தமையை அறிய முடிகின்றது. நானிலங்களில் ஒன்றில் மட்டுமே வாழாமல் அனைத்து நிலங்களிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி வாழ்ந்தவர்களும் உண்டு. அவர்களைப் புலவர்கள் என்றும், ஆற்றுப்படைக் கலைஞர்கள் என்றும், சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இவர்கள் தங்களது கலைத்திறனை மன்னர்களிடமும் வள்ளல்களிடமும் காண்பித்து அவர்கள் நல்கிய பொருள்களைப் பெற்றுப் பரிசில் வாழ்க்கை நடத்தியுள்ளனர். "புலவர்களும் கூத்தர்களும் இன்ன சாதியைச் சார்ந்தவர்கள் என்ற வரையறை இல்லை. அந்தந்தக் கலைகளில் வல்லுநர்கள் புலவர்களாகவும், கூத்தர்களாகவும் ஆயினர். என்பார் கி.வா. ஜகந்நாதன்."[34]

## பரிசில் வாழ்க்கை

"பாணர்கள் அல்லது புலவர்கள் வள்ளல்களை நாடிச் சென்று தங்கள் கலைத்திறமைகளைக் காட்டியும், பாடல்களைப் பாடியும் மகிழ்வுறுத்துவர். மன்னர்களும், வள்ளல்களும் அவற்றைக் கண்டு மனம் உவந்து அளிக்கும் பரிசில்களைப் பெற்று வாழ்வர். இந்நிலையினையே பரிசில் வாழ்க்கை"[35] என்பர். எனவே, அக்கால மன்னர்கள் புலவர்களின் வரிசையறிந்துப் பரிசில் நல்கி அவர்களை வாழ்வித்துக் கலைகளையும் வாழ வைத்துள்ளனர் என்பது புலனாகின்றது. புலவர்களைப் பேணிக் காப்பது ஆட்சியாளர்களின் கடமை என்பதை,

> "ஆண்கடன் உடைமையின் பாண்கடன் ஆற்றிய"[36]

எனும் புறநானூற்று அடி உணர்த்துகின்றது. மேலும்,

> "பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்
> பூண்கடன் எந்தை நீ இரவலர் புரவே"[37]

என்ற பாடலடிகளாலும் உணரமுடிகின்றது.

ஒரு நாட்டின் மனிதவளத்துக்கு மொழிவளம், கலைவளம் வேண்டப்படுகின்றன. இம்மொழி வளமும், கலைவளமும் புலவர்கள், கலைஞர்கள் வாழ்வுச் செழுமையில் தான் இருக்கிறது. கலைஞர் வாழ்ந்தால் கலைகள் வாழும் என்பதை உணர்ந்த மன்னர்களும், வள்ளல்களும் இவர்களை ஆதரித்தமையைச் சங்கப் புற இலக்கியங்களின் வழி உணரமுடிகின்றது.

## தொழில்களும் தொழில் சார்ந்த பிரிவினரும்

முதற்கண் நிலந்தொறும் தொழில் அடிப்படையில் வேட்டுவர், ஆயர், உழவர், நுளையர், எயினர் என ஒரு வகுப்பாக ஐந்திணைக் குலங்கள் தோன்றியுள்ளன. நாளடைவில் மருத நிலப் பேரூர்களில் உழவிற்குப் பக்கத்துணையாகப் பதினெண் கைத்தொழில்கள் படிப்படியாகத் தோன்றியுள்ளன. மேலும், திணை மயக்கம் ஏற்பட்ட

போதும் மக்களுடைய தேவைகள் அதிகரித்த போதும் அதற்கான தேவையினைப் பூர்த்தி செய்ய சில கைத் தொழில்கள் தோன்றியுள்ளன. "எல்லா குலங்களும் தொழில் அடிப்படையிலேயே தோன்றியிருக்கின்றன. ஒருவன் எத்தொழிலையும் மேற்கொள்ளலாம். செய்யும் தொழில் பற்றி ஒருவன் குலம் அமைந்தது."[38] என்பர். இவ்வாறு உண்டான ஒவ்வொரு குலமும் நாளடைவில் இரண்டும் பலவுமாகக் கிளைத்துப் பல்கிப் பெருகிற்று.

பண்டைத் தமிழ் மக்கள் தொழில் வழிப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்திருந்தனர். ஆனால், அவர்களிடம் எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளும் காணப்படவில்லை. தொழில் வழி உண்டான பகுப்புகள் மிகுந்து பல்வேறு சாதிகள் உருவாகியுள்ளன. இப்பிரிவினைகள் நாளடைவில் பிறப்பின் அடிப்படையில் மாற்றம் பெற்றுள்ளன. "சங்க காலச் சமுதாயம் ஒரு நிலவுடைமைச் சமுதாயம். எனவே, சாதிப் பிரிவினைகள் நிலவுடைமை அமைப்பில் பல்வேறு சாதிகளை நிலை நாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டன"[39] என்கின்றார் கே. முத்தையா.

சங்க கால சமுதாயத்தை ஆராய்ந்த நா. சுப்பிரமணியன், "சமுதாயம் என்பது ஓர் இனக்குழு அமைப்பு என்றும் சாதி அச்சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கினாலும் இனக்குழுப் பண்புகளும் நிலைத்திருப்பது உண்டெனக் குறிப்பிடுகின்றார்."[40] இனக்குழுப் பண்பென்பது அவரகள் மேற்கொண்ட தொழில் அடிப்படையிலேயே உண்டானது என்பது புலனாகின்றது.

## உயர்நிலையினர்

பழந்தமிழ்ச் சமுதாயத்தில் அமைந்த பிரிவுகளெல்லாம் தொழில் காரணமாகத்தான் அமைந்துள்ளன. இச்செய்தொழில் பிரிவுமுறை அச்சமுதாயத்தின் உயர்ந்த நிலையை நாகரிகத்தின் மேன்மையை வெளிப்படுத்துகின்றன. மக்கள் வாழ்ந்த இடம், மேற்கொண்ட தொழில் ஆகியவை பற்றி வெவ்வேறு வகுப்பினர்களாகப் பிரிவுப்பட்டிருந்தனர். இக்காலத்தில்

நிலவுவதுபோல் அக்காலத்தே எண்ணிலடங்காச் சாதி வேறுபாடுகள் நிலவிடவில்லை. அக்கால மக்களிடையே உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடும் அவ்வளவாகக் காணப்படவில்லை.

ஆரியர்கள் தமிழகத்திற்கு வருவதற்கு முன், தமிழகத்தில் வாழ்ந்திருந்த மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை மேற்கொண்டிருந்தவர்களாய்த், தாங்கள் மேற்கொண்ட தொழிலின் அடிப்படையில் பிரிவுபட்டிருந்தாலும் எவ்விதமான வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளுமின்றி அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். ஆரியர்கள் தமிழகத்தில் நிலைபெற்றப் பின்னர் தமிழக அரசியலிலும், சமூக வாழ்க்கையிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பிறகுதான் தமிழக மக்களிடம் சாதிகளும், வருண வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் தோன்றி வளரத் தொடங்கியுள்ளன. இதன் அடிப்படையில் தான்,

> "ஆயுங் காலை அந்தணர்க்குரிய" – எனவும்,
> "தெரிவு கொள் செங்கோல் அரசர்க்குரிய" – எனவும்,
> "வைசிகன் பெறுமே வாணிப வாழ்க்கை" – எனவும்,
> "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப" எனவும்,

தமிழகத்தின் சிறப்பியல்புகளைப் பெற்றுவிட்ட நான்கு சாதியினரை மட்டும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்."[41] இதனால், "அக்காலத்தில் உயர்ந்தோர் எனக் கருதப்பட்டவர் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகைப் பிரிவினரே"[42] என்பர்.

## அந்தணர்

தொல்காப்பியர் அக்காலச் சமூகத்தில் நாற்பெரும் பிரிவுகளைப் பற்றிக் குறிப்பிடும் போது அந்தணர்களையே முதலில் குறிப்பிடுகின்றார். இதன்மூலம் அக்காலச் சமூக அமைப்பில் மன்னரை விட அந்தணர்களே தலைமையிடம்

பெற்றிருந்தமையைக் காணமுடிகின்றது. "அந்தணர் என்பார் மன அமைதி பெற்றவர்களாயும், தந்நலம் துறந்தவர்களாகவும், பிறர் நலத்துக்கென்றே தாம் வாழ்பவர்களாகவும், மன்னன் முதல் மக்கள் வரையுள்ள எல்லோராலும் போற்றி மதிக்கப்படுபவர்களாகவும் உள்ளவர்"[43] என்பார் வி.சி. சசிவல்லி. அந்தணர்களுடைய பெருமையினையும் தோற்றத்தினையும் சிறப்பியல்புகளையும் திருமுருகாற்றுப்படை தெளிவாகக் கூறியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## பெயர் விளக்கம்

அந்தணர்கள், ஐயர், பார்ப்பார், பிராமணர் என்பதற்கு ஒவ்வொரு அறிஞர்களும் காலத்திற்கேற்ப பெயர் மாற்றி உரைக்கின்றனர். "தமிழ் மக்கள் ஆலயங்கள் அமைத்து அங்குக் கடவுளை வழிபட்டு வந்தார்கள். ஆலயங்களைக் கண்காணிப்பவர் பார்ப்பார் எனப்பட்டனர். ஆதியிலே அரசனே பார்ப்பானாக இருந்தான். பிற்காலங்களில் உயர்ந்த மரபிலுள்ளோர் பார்ப்பராக இருந்தனர்."[44] என்கிறார் ந.சி. கந்தையா. மயிலை சீனி. வேங்கடசாமியும் "தொல்காப்பியத்தில் கூறப்படுகின்ற 'ஐயர்' என்னும் பழைய சொல்லுக்குப் பார்ப்பனர், ரிஷிகள் என்னும் பொருள் அல்ல 'அரசர்' என்பதே அதன் பொருள்"[45] என்கிறார்.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் கூறுகையில், "அந்தணன், ஐயன் என்னும் பெயர்கள் முதன்முதலில் தமிழ்த்துறவியரையே குறித்தது போன்று, பார்ப்பான் என்னும் பெயரும் முதன் முதலில் தமிழ்ப் பூசாரியையே குறித்தது. அந்தணர், பார்ப்பார் என்னும் பெயர்கள் பிராமணர்களுக்கு வரையறுக்கப்பட்டது. தமிழருள் பார்ப்பார் என்பார் இல்லறத்தாரும் அந்தணர் என்பார் துறவறத்தாரும் ஆவர்"[46] என்பார். "கல்விச் சிறப்பும் ஒழுக்க உயர்வும் பற்றிப் பார்ப்பாரும் சிலவிடத்து அந்தணர் எனப் பெற்றனர்"[47] என்கிறார்.

"பார்ப்பார் என்னும் தமிழ்ச்சொல் இல்லறத்தாரான பிராமணர்க்கே வரையறுக்கப்பட்டது. சிறப்பாகத் துறவியரைக் குறிக்கும் அந்தணர் என்னும் தமிழ்ச் சொல்லும் முதற்கண் பிராமணப் போலித் துறவியர்க்கு வழங்கி, பின்னர் இல்வாழ்

பிராமணர்க்கும் வழங்கப்பட்டுவிட்டது"[48] என்கின்றார். மேலும், "புலவர், ஆசிரியர், பூசாரியார், கணியர், ஓதுவார், கணக்கர் எனப் பல்வேறு பெயர் பெற்றுக் கல்வித் தொழில் புரியும் இல்லற வகுப்பார் பார்ப்பார் ஆவார்."[49] என்று கூறுவதும் இங்கு நோக்கத்தக்கது."

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்" (குறள் – 30)

என்று வள்ளுவர், அந்தணர்களின் இயல்பைச் சுட்டுகின்றார். "சங்க கால பிராமணர்கள் வள்ளுவர் வழங்கிய செந்தண்மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தமையால் அந்தணர் எனும் சொல் பிராமணரையே குறித்தது"[50] என்பார் ந. சுப்ரமண்யன்.

## தொழில்கள்

அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என ஆறு தொழில்களை மேற்கொண்டுள்ளனர். இதனை,

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் என்று ஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுக"[51]

என்று பதிற்றுப்பத்து கூறுவதால் அறிய முடிகின்றது. இவ்வாறு ஆறு தொழிலையும் வழிவழியாக வருத்தமின்றிக் கற்றுப் பயின்று வருதலின் அந்தணரை ஆறு புரிந்தொழுகும் அந்தணர் என்றனர்.

அந்தணர்க்குரிய ஆறுதொழிலினும் ஓதல் தலை சிறந்தமையின் இவர்கள் ஓதல் அந்தணர் எனப்பட்டனர். வைகறைப் பொழுதில் அந்தணர் வேதம் ஓதியமையை,

"ஓதல் அந்தணர் வேதம்பாட"[52]

என்பதாலும்ள, இவர்கள் தீயை வழிபட்டதை,

"அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கும்"[53]

என்ற அடிகளாலும் உணரமுடிகின்றது.

அந்தணர்களின் இன்றியமையாத தொழில் உலக மக்களின் துன்பங்களைப் போக்கி அருள் சுரந்து ஓம்புவதாகும். இவற்றைத் தவிர புரோகிதராகவும் கவியாகவும் அறிவுரையாளராகவும் தூதுவராகவும் விளங்கியுள்ளனர். எப்பொழுதாகினும் மன்னனின் வேண்டுகோளுக்கு ஏற்ப, மன்னன் நாட்டை விட்டு வெளியே செல்லுங்கால் நாடாளும் தொழில் அந்தணர்களுக்கு உரியதாகும் எனத் தெரிகின்றது. இதனை, "அந்தணாளர்க் கரசுவரை வின்றே"[54] என்ற தொல்காப்பியர் கூற்றினால் அறியமுடிகின்றது.

## வேள்வியும் யாகங்களும்

அந்தணர்கள் நாட்டு நலம் கருதி, மக்கள் நலங்கருதி வேத நூல்களில் விதிக்கப்பட்ட முறைப்படி, வேள்வி செய்தலும் உண்டெனத் தெரிகின்றது. இவ்வந்தணர்கள் நல்ல பல நூல்களைக் கேட்டு அறிவு நிரம்பிய வேள்வி செய்தலை உடையவர் என்பது,

"கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்"[55] – என்பதாலும்,
"கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வி"[56]

என்பதாலும் அறியமுடிகின்றது.

## சமூக மதிப்பு

அக்கால சமூகத்தில் அந்தணர்கள் நன் மதிப்புப் பெற்றிருந்தனர் எனத் தெரிகின்றது. நான் மறையறிந்த துறவியர் முன்னிலையில் நீ கை கூப்பித் தொழ வேண்டும் என்று பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதிக்குக் காரிகிழார் அறிவுரை வழங்குவதிலிருந்தும் (புறம், 6), அவரே செல்வக்கடுங்கோ வாழியாதன்

பார்ப்பாரல்லாது பிறரை வணங்கான்[57] என்று கூறுவதிலிருந்தும் அரசவையில் அந்தணர்கள் மிகுந்த மதிப்புப் பெற்றிருந்தமை புலனாகின்றது.

## வணிகர்

> "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவுந் தமபோற் செயின் " (குறள் – 120)

என்னும் வள்ளுவரின் நெறியினைக் கடைபிடித்து வாழ்ந்தவர்கள் அக்காலத்து வணிகர்கள். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் என்னும் ஆறு தொழில்களைப் புரிந்தவர்கள். கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்து பொருள் ஈட்டல் இவர்களது வாழ்க்கை நெறி எனப் பட்டினப்பாலை (அடி; 210 – 211) இவர்களைச் சிறப்பாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேளாளர்

பண்டைத் தமிழர் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த வாழ்வியலைச் சித்தரிக்கும் இலக்கியங்கள் பயிர்த் தொழில் பற்றிய குறிப்புகளை விளக்கமாகத் தந்துள்ளன. இவற்றால் பயிர்த் தொழிலைப் பன்னெடுங்காலமாகத் தமிழர்கள் மேற்கொண்டிருந்தமை தெரிகின்றது. எனினும் இதற்கான முதல் சான்றினைத் தருவது பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமாகும்.

> "வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"[58]

என்பதன் மூலம் அக்காலத்தில் உழவர்கள் வேளாண் மாந்தர்கள் எனப்பட்டமை தெரிகின்றது.

வேளாளர் உழுதுண்பாரும், உழுவித்துண்பாரும் என இரு வகையினர் ஆவர். உழுதுண்பாரை உயர்நிலையில் மதிக்கப்படவில்லை. "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நிலமற்ற உழவர்கள் இருந்தனர். நிலமற்ற

வகுப்பினர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எனக் கருதப்பட்டனர். நிலமுள்ள உழவர்கள் வேளாளர்கள் என்னும் உயர்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டனர்"[59] என்ற சாமி. சிதம்பரனார் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

மறைமலையடிகளார் 'வேளாண்மை' என்னுஞ் சொல்லுக்கு, "ஈகைக்குப் பெயரான வேளாண்மை என்னுஞ் சொல், அவ்வீகைக்குக் கருவியான பயிர்த் தொழிலுக்குப் பெயராயிற்று. பின்னர் அவ்விரண்டு தொழில்களையும் ஆள்பவரான வேளாளர்க்குப் பெயராயிற்று"[60] என்பார். அக்கால வேளாளர் நாட்டின் உணவு உற்பத்தியிலும் பொருளாதார வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியமை தெரிகின்றது. மேலும், அவர்கள் பெற்ற சிறப்புப் பெயர்களும், பட்டங்களும் பதவிகளும், ஆட்சியாளர்களோடு கொண்டிருந்த மணஉறவு முறையும் சங்கப்புற இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

## தொழில் முனைவோர்

இவர்கள் தங்களது உடல் உழைப்பு ஒன்றை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். அக்கால மக்களுக்குத் தேவையான இன்றியமையாத் தொழில்களை மேற்கொண்டவர்கள். உழைக்கும் வர்க்கமாகத் திகழ்ந்தவர்கள்.

## உழவர்

மனித வாழ்விற்கு அடிப்படையானது உணவு. அத்தகைய உணவுப் பொருளின் தேவையினை உணர்ந்து அவற்றை உற்பத்தி செய்தவர்கள். "நிலையாகக் குடியிருப்பதனால் உழவன் 'குடியானவன்' எனப் பெற்றான். இல்வாழ்வான் என்று திருவள்ளுவராற் சிறப்பித்துச் சொல்லப்பெற்றவனும் உழவனே"[61] எனக் கூறுவதன் மூலம் உழவர்களின் குடிப்பெருமையினை நன்கு அறியமுடிகின்றது.

"நச்சினார்க்கினியர் மேல்நிலை வேளாளர், கீழ்நிலை வேளாளர் என்று இரு பிரிவினரைக் குறிப்பிடுகின்றார்."[62] இந்தக் கீழ் நிலை வேளாளரே உழவர்களாகக்

கருதப்பட்டமை தெரிகின்றது. மருத நில வளம் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறும்போது இவ்விரு வேறுபட்ட உழவர்களின் நிலையினைக் கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

"இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடில் முன்றில்
அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉம்
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனி"[63]

என வறுமையில் உழலும் உழவனின் குடிலைச் சித்தரித்துள்ளது. இந்த வறுமை நிலைக்கு மாறாக உழவித்துண்போரின் இல்லத்தை, "நீண்ட எட்டாத உயரத்தையும் மேற்பகுதியைத் திறந்து போடப்பட்ட பழையனவாகிய நெல்லினையும் உடைய நெற்கூடு கொண்ட நல்ல இல்லம். சிறுதேர் உருட்டிய புதல்வர்கள் விளையாடிய வருத்தம் நீங்கச் செவிலித்தாயார் ஊட்டிய பாலை அருந்தி படுக்கையிலே உறங்கும் அழகுடைய இல்லம்"[64] என்று செழிப்பு மிக்க வளமனையைக் கூறியுள்ளது. இதன்வழி உழுதுண்போர் உழவர்களாக வாழ்ந்தமை தெரிகின்றது.

## நெசவாளர்

மனித வாழ்விற்கு இன்றியமையாத மூன்று உணவு, உடை, உறைவிடம் ஆகும். உணவினை அடுத்து இன்றியமையாது வேண்டப்படுவது உடையாகும். நாகரீகம் வளராத மிகப்பழங்காலத்தே மக்கள் தழை, இலை, மரப்பட்டைகள், மான், புலித் தோல்கள் இவற்றை உடுத்தியுள்ளனர். நாளடைவில் மக்களின் நுண்ணறிவுத் திறத்தால் பருத்தி, பட்டு இவற்றை நூற்று ஆடையாக நெய்து அணிந்துள்ளனர். இது ஒரு புதிய திருப்பமாகும். இவற்றிற்கு வித்திட்டவர்கள் நெசவாளர் என்பது திண்ணமே.

நெசவுத் தொழிலுக்குப் பருத்தி மிகவும் முக்கியமானதொரு மூலப்பொருளாகும். இப்பருத்தியே அன்றி இலவமரம், கொங்குமரம் முதலிய மரங்களிலிருந்து வேண்டிய பஞ்சு சேகரித்து நெசவுத் தொழிலுக்குப் பயன்படுத்தினர். என்பார் அ. அப்துல் மஜித்"[65] சங்கப் புற இலக்கியங்கள் இந்நெசவாளரின் தொழில் திறனைக் கூறும்போது,

"பாம்புரி யன்ன வடிவின காம்பின்
கழைபடு சொலியி னிழையணி வாரா"[66] – எனவும்,

"நோக்கு நுழை கல்லா நுண்மையை"[67] – எனவும்

கூறியுள்ளன. இவற்றால் நுண்மையான நூலைக் கொண்டு நெய்யப்பட்ட ஆடையினுடைய இழைகளின் வரிசைகளைக் காண்பதற்கு இயலாத வகையில் நுட்பமாக நெய்யப்பட்டமை தெரிகின்றது. இங்ஙனம் மேன்மையாக நேர்த்தியுடன் நெய்யப்பட்ட ஆடைகளுக்கு மேலும் அழகூட்டும் வகையில் நேரிய கரைகள் அமைத்து அதில் அழகிய பூவேலைப்பாடுகளும் செய்துள்ளனர். இதனை,

"கொட்டைக் கரைய பட்டுடை"[68] – என்றும்,

"நீலக் கச்சை பூவார் ஆடை"[69] – என்றும்

வரும் பாட்டடிகள் உணர்த்துகின்றன. இவற்றின் வழி நெசவாளரின் தொழில் நேர்த்தியினையும் திறமையினையும் நன்கு அறியலாகின்றது.

## தச்சர்

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைப்பதாகும். இத்தச்சுத் தொழிலைச் செய்வோர் 'தச்சர்' எனப்பட்டனர். சங்க காலச் சமூக அமைப்பில் இவர்களின் பணி அளவிடற்கரியது. இவர்கள் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களையும் வசதிக்குத் தேவையான வண்டிகளையும் தேர்களையும், கப்பல்களையும் செய்து கொடுத்துள்ளனர். ஒரு நாளைக்கு எட்டு தேர்கள் செய்யும் தச்சர்கள் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பதை,

"எம்முளும் உளனொரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்"[70]

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் வழி உணரமுடிகின்றது. இவர்கள் செய்த வண்டியின் உறுதித் தன்மையையும் தோற்றத்தையும்,

"கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழுவி னன்ன முழுமர வுருளி
எழூஉப் புணர்ந்தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக்குன்றம் மழை சுமந் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம்"[71]

எனப் பாடியுள்ளார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

"ஆடியற் பெருநாவாய்
மழை முற்றிய மலைபுரைய"[72]

என்ற மாங்குடி மருதனார் கூற்றால், தச்சர்கள் கப்பல் கட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கியமை அறியமுடிகின்றது. மேற்கண்ட சில சான்றுகளே தச்சர்களின் கலை நுணுக்கத்தோடு கூடிய தொழில் திறனைக் காட்டுதல் நினைவிற் கொள்ளத்தக்கது.

## குயவர்

இவர்களின் கைவண்ணத்தால் விளைந்த மண்பாண்டங்கள் தண்ணீர், உணவுப் பொருள் முதலியன சேமிக்கவும், உணவு சமைக்கவும், உணவு அருந்தவும் பெரிதும் பயன்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே, மட்கலத் தொழிலும் அக்காலத் தொழில்களில் சிறந்த இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. சமைப்பதற்கு மண் பாண்டங்கள் பயன்படுத்தியதை,

"முரவுவாய்க் குழிசி முரியடுப்பேற்றி"[73] – எனவும்,
"மான்றடி புழுக்கிய புலவுநாறு குழிசி"[74] – எனவும்

வரும் புறப்பாடலடிகளால் உணரமுடிகின்றது. வீடுகளில் பயன்படும் சிறிய கலன்களோடு, பெரிய முதுமக்கள் தாழிகளும் இவர்கள் செய்துள்ளனர். இதனை,

"கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த"[75] – எனவும்,

"வியன் மலர் அகன்பொழில் ஈமத்தாழி

அகலிதாக வனைமோ"[76]

எனவும் வரும் புறநானூற்றுப் பாட்டடிகளால் அறியமுடிகின்றது. இவ்வாறு பல நிலைகளில் தேவைக்கேற்ப மண்பாத்திரங்கள் புழக்கத்திலிருந்தமையை அறிய வருதலால் குயவர்களின் கைவண்ணத்தையும் தொழில் நேர்த்தியையும் காணலாகின்றது.

## கொல்லன்

மக்களுக்குத் தேவையான இரும்புக் கருவிகளைச் செய்துள்ளனர். "இரும்பு மனிதனுக்குச் சேவை புரியத் தொடங்கியது வரலாற்றில் புரட்சிகரமான பாத்திரம் வகித்த கச்சாப்பொருட்களில் கடைசியாய் வந்தது அதிமுக்கியமானது. இதுவே எந்தக் கல்லும் அப்போது அறிந்துள்ள எந்த உலோகமும் எதிர் நிற்க முடியாத அளவுக்குக் கடினமும் கூர்மையும் பெற்ற கருவிகளை அது தொழில் செய்வோனுக்குத் தந்தது"[77] என இரும்புக் கருவியின் பயன்பாட்டை எங்கெல்ஸ் கூறுவதன் மூலம் இரும்புக் கருவியினைச் செய்த கொல்லனின் தேவையை உணர முடிகின்றது.

கொல்லன் ஒருவன் தன் உலைக் கூடத்தில் வைகறையில் எழுந்து வேலை செய்கிறான். அவன் இரும்படிக்கும் ஓசை கேட்டு மாடத்தில் உறங்கிய புறாவின் சேவல் உறக்கத்திலிருந்து விழித்ததாம். இத்தகைய காட்சி ஒன்று பெரும்பாணாற்றுப்படையில்,

"கருங்கைக் கொல்லன் இரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்து
இறையுறை புறவின் செங்காற் சேவல்
இன்துயில் இரியும்"[78]

எனச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மனிதப் பயன்பாட்டிற்குத் தேவையான இரும்புக்கருவிகளும், போருக்குத் தேவையான ஆயுதங்களும், வண்டி, தேர், கப்பல் முதலிய வாகனங்களுக்கு உண்டான இரும்புக் கருவிகளும் செய்துள்ளனர் என்பதும் உணர முடிகின்றது.

"கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசி னெனவே"[79]

என்று திருந்திய வேலை வடிப்பதும், அவ்வாறு திருத்தமாகச் செய்து கொடுத்தலும் இவர்களது கடன் (புறம், 312:3) எனப் பொன்முடியார் கூறுவதிலிருந்தும் அக்கால கொல்லர்களின் நிலையினை நன்கு அறியும் வாய்ப்பு எழுந்துள்ளது.

## பொற்கொல்லன்

பழங்காலச் சமுதாயத்தில் அரசாண்ட மன்னரும், தேவியரும், மக்களும், அணிந்திருந்த அணிகலன்களைப் பற்றிய குறிப்புகள் சங்கப் புற இலக்கியங்களில் நிரம்ப காணப்படுகின்றன.[80] இத்தரவுகளின் வழி பொற்கொல்லரின் பணியினை அறியமுடிகின்றது.

பொன், வெள்ளியால் அணிகலன்கள் செய்வதிலும், விலையுயர்ந்த கற்களையும் வைத்து இழைத்து அணிகள் செய்வதிலும் வல்லவர் என்பதை,

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்கும்"[81]

எனக் கண்ணகனார் பாடியிருப்பதால் அறியமுடிகின்றது. "பொன்னில் வயிரமணிகள் வைத்திழைத்துச் செய்யப்பட்ட கழுத்தணிகள் கட்டப்பட்ட திறமும்,"[82] திருமுருகாற்றுப்படையில் முருகப்பெருமான் அணிந்திருந்த மணிமுடியின் தொழிற்திறனின் கவினையும்"[83] காணும்போது பொற்கொல்லரின் வினைத்திறம், கலைநுட்பம் இவற்றை நன்கு உணரமுடிகின்றது.

## வண்ணான்

மக்கள் தூய்மையான ஆடையினை உடுத்த இவர்களின் பங்கு பெரிதும் பயன்பட்டுள்ளது. ஆடைவெளுக்கும் தொழிலில் பெண்கள் ஈடுபட்டமையை,

> "களர்ப்படு கூவல் தோண்டி நாளும்
> புலைத்தி கழீஇய தூவெள் அறுவை"[84]

எனப் புறநானூறு கூறுகின்றது. களர் நிலத்து ஊற்று உவர் மண்ஊறி ஆடையின் அழுக்கு நன்கு போகும் என்பதனை அறிந்தே இவ்வாறு செய்துள்ளனர். இவற்றால் இத்தொழிலாளரின் தொழிலறிவைக் கண்டுகொள்ளமுடிகின்றது.

திணைக்குழு சமுதாய அமைப்பில் அவர்களின் தொழிலின் அடிப்படையில் வேட்டுவர், ஆயர், உழவர், நுளையர், எயினர் என ஒரு வகுப்பாக ஐந்திணைக்குரிய நிலங்கள் தோன்றியுள்ளன. நாளடைவில் மக்களின் தேவைகள் அதிகரித்த போது சில கைத்தொழில்கள் தோன்றியுள்ளன. இந்நிலையில் திணைக்குழு சமுதாய அமைப்பு முறை சிதைந்து இனக்குழு சமுதாய அமைப்பு முறை உருவாக்கம் பெற்றுள்ளது. அக்கால மக்கள் தொழில் வழிப் பல்வேறு குழுக்களாகப் பிரிந்திருந்தனரே தவிர அவர்களிடம் வருண வேறுபாடுகள் காணப்படவில்லை. காலப்போக்கில் தொழில்வழி உண்டான சாதிப்பகுப்புகள் மிகுந்து பல்வேறு சாதிகள் உருவாகியிருக்கின்றன என்பது அறியக்கிடக்கின்றது.

## ஆட்சியாளர்கள்

"நாடு என்னும் சொல் ஆதியில் மனிதர் வாழும் நிலத்தைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டது. அந்த முறையில் தமிழர் வாழ்ந்த நாடு 'தமிழ்நாடு' என்று பெயர் பெற்றது"[85] என்பர். இத்தகைய தமிழகத்தினைப் பல்வேறு ஆட்சியார்கள் காலந்தோறும் ஆண்டு வந்துள்ளனர். அவர்கள் ஆட்சி செய்த நிலத்தின் பரப்பளவு, அவர்களின் வீரம், கொடை, கீர்த்தி, புகழ் ஆகியவற்றைக் கொண்டு வேந்தர், வேளிர், மன்னர், வள்ளல்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். பின்னர் இவர்கள்

அனைவரையும் குறிக்கும் பொது சொல்லாக 'அரசர்' என்னும் சொல் நிலைபெற்றுள்ளது.

## மூவேந்தர்

"வள்ளுவர் அரசுக்குப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பன இருக்க வேண்டுமென்று திட்டமாகக் கூறுகின்றார். மிகுந்த வளர்ச்சியடைந்த அரசின் தன்மை இது. இத்தகைய அரசு அங்கங்களை உடையோரே வேந்தர்களாகக் கருதப்பட்டனர்"[86] என்கிறார் சி. மௌனகுரு. இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சேர, சோழ, பாண்டிய வேந்தர்களையே சங்க இலக்கியங்கள் 'மூவேந்தர்கள்' என்கின்றன.

சேர சோழ பாண்டியர்களை மூவேந்தர்கள் என அழைக்கும் வழக்கம் எப்பொழுது தோன்றியது என்று கூற இயலவில்லை. இருந்தும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னே இவர்கள் ஆட்சி நிலைபெற்றுவிட்டதை, "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"[87] என்றும், இவர்களுடைய அடையாள மாலையைக் குறிப்பிடும் போது,

> "போந்தை வேம்பே ஆரென வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும்"[88]

என வரும் தொல்காப்பிய நூற்பாவால் அறியமுடிகின்றது. மேலும், "படைப்புக் காலந்தொட்டே தமிழகத்தை மூவேந்தர் ஆண்டு வந்திருக்கின்றனர்"[89] என்று பரிமேலழகர் கூறுதலும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

## சேரர்

தமிழகத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியை ஆட்சி செய்துள்ளனர். இன்றைய கேரளமே அன்றைய சேர நாடு என்பர். சங்க காலச் சோழர், பாண்டியர் வரலாறுகளை அறிவதற்கு வரலாற்று ஆதாரங்கள் பல உள்ளன. அவ்வளவிற்குச் சேரர் வரலாறுகளை அறிவதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை. சங்க

இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களைக் கொண்டே ஓரளவு அறியமுடிகின்றது. இவற்றில் பதிற்றுப்பத்து சேரர்களின் உறவு முறைகளையும் அவர்கள் ஆட்சி செய்த கால அளவினையும் விரிவாகக் கூறுகின்றது. சேர வேந்தர்கள் குடவர், சேரலர், குட்டுவர், கேரளர், ஆதர், உதியர், வானவர், பொறையர், பூழியர் என்று அழைக்கப்பெற்றுள்ளனர்.

## சோழர்

தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியை ஆட்சி செய்து வந்துள்ளனர். "சேரரும் பாண்டியரும் ஓர் அதிகாரம் படைத்த வேந்தராக இருந்தனரென்றும், சோழர் கூட்டுக் குடும்பங்கள் பல சேர்ந்த குடியாட்சி முறையைத் தொடக்கத்தில் கொண்டிருந்தனர் என்றும் கே. என். சிவராஜ் பிள்ளை கூறுகின்றார்."[90] சோழர் குடியினர் "ஞாயிறு குலத்தினர்" என்று மணிமேகலை கூறுகின்றது. இதனை,

> "செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
> கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட"[91]

எனவரும் அடிகளால் உணரமுடிகின்றது. சோழ வேந்தர்களை வளவன், செம்பியன், சென்னி, கிள்ளி, நேரியன், நேரிவெற்பன், பொன்னித்துறைவன், ஆரின் மாலையன், அபயன், கோழிவேந்தன், புலியுயர்ந்தோன், சூரியன், புனல்நாடன், பொன்னிநாடன், மால் எனவும் அழைத்துள்ளனர்.

## பாண்டியர்

சேர, சோழர்களைவிடத் தொன்மையான வரலாறுகளைக் கொண்டது பண்டியர் வரலாறு. இவர்கள் தென் தமிழகத்தில் பன்நெடுங்காலமாக ஆட்சி புரிந்துள்ளனர். நாட்டின் தென் பகுதியில் பாய்ந்த பஃறுளி என்னும் ஆறு கடல்கோளால் அழிவுற்றதை,

> "பஃறுளி ஆற்றுடன் பன்மலையடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள"[92]

என்று சிலம்பு பகர்கின்றது. இத்தகைய புகழ் ஓங்கிய நாட்டினை ஆட்சி புரிந்த பாண்டியர்களே, சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் என்று அறியும் போது சேரருக்கும், சோழருக்கும் இல்லாத பெருமை பாண்டியர்க்கு மட்டுமே உண்டு என்பதும் தெரியவருகின்றது. இவர்கள் செழியன், கூடற்கோமான், தென்னவன், மீனவன், வழுதி, மாறன் என்ற சிறப்புப் பெயர்களும் பெற்றிருந்தமை தெரிகின்றது.

## வேளிர்

"வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து"[93] – என்றும்,
"இருபெரு வேந்தரொடு வேளிர் சாய"[94] – என்றும்

சங்க இலக்கியங்கள் வேந்தர்களோடு இணைத்து வேளிர்களையும் பாடியுள்ளன. இதன்மூலம், வேந்தர்களுக்கு அடுத்த நிலையில் வேளிர் இருந்தமை தெரிகின்றது.

## குறுநில மன்னர்கள்

இனக்குழுச் சமுதாயம் சிதையும்போது சீறூர் மன்னர் சிலர் தம் நாடுகளை விரிவுபடுத்தினர். அவர்கள் சிறுநிலப் பரப்பில் வாழ்ந்த இனக்குழு தொகை மக்களின் குறுநில மன்னராயினர்"[95] என்கிறார் கா. சுப்ரமணியன். இவர்கள் வேளிர்களைப் போல் தத்தம் வேந்தரின் கீழ்ப்பணிந்து அரசு புரிந்துள்ளனர். வேந்தர்களுக்கு அரசியற் செயல்பாடுகளிலும் போர்ச் செயல்களிலும் குறுநில மன்னர்கள் துணை நின்று வினையாற்றியுள்ளனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் அவைக்களத்தில் அவனுக்குட்பட்ட குறுநில மன்னர்கள் நிறைந்திருந்ததை,

"மறம்மிகு சிறப்பின் குறுநில மன்னர்
அவரும் பிறரும் துவன்றிப்
பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த"[96]

என்று மதுரைக்காஞ்சி பாடுகின்றது. "குறுநில மன்னர்கள் ஒழுங்கான ஒரு முடியை அணிந்ததில்லை"[97] என்பார் ந. சுப்ரமண்யன்.

## சீறூர் மன்னர்கள்

இவர்கள் சிறிய ஊர்களுக்குத் தலைவர்களாக விளங்கியுள்ளனர். வேந்தர்களிடம் பல்வேறு சிறப்புகளைப் பெற்றுள்ளனர். புறநானூறு இவர்களைச் சீறூர் நெடுந்தொகை, சீறூர் வண்மையோன், சீறூர் மதவலி, சிறுகுடிக்கிழான் என்றெல்லாம் சிறப்பித்துப் பாடியுள்ளது."[98] சீறூர் மன்னர்கள் வேந்தர்களுக்கு இணையான வீரம் உடையவர்களாகவும், சிறந்த கொடையாளிகளாகவும், ஈகைக் குணம் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர்."[99] இவ்வாறான வெற்றி மேம்பாடுடைய இச்சீறூர் மன்னர்கள் சில சமயங்களில் வேந்தர்களுக்கு அடங்கி அவர்களுக்காகப் படை நடத்திச் சென்றமையை,

> "சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
> வேந்துவிடு தொழிலொடு சென்றனன்"[100]

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது.

## வள்ளல்கள்

சங்ககாலத் தமிழகத்தை வேந்தர்களைத் தவிர மலைப்பகுதிகளையும் சிலர் ஆண்டு வந்துள்ளனர். இவர்கள் தம்மை நாடிய இரவலர்களுக்கு இல்லை எனக் கூறாது வரையறை இல்லாது வாரி வழங்கியதால் 'வள்ளல்கள்' என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

நல்லியங்கோடனது கொடைச் சிறப்பைக் கூற வந்த நல்லூர் நத்தத்தனார் முடியுடை வேந்தர் மூவரது நாடு, நகர், கொடைச் சிறப்புகளையும் கூறிப் பின், பெருங்கல் நாடன் பேகன், பறம்பு மலையை ஆண்ட பாரி, காரி, ஆய், தகடூரை ஆண்ட அதியன், நெடிய சிகரங்களைக் கொண்ட மலை நாட்டையுடைய நள்ளி, வல்வில் ஓரி ஆகிய கடையேழு வள்ளல்களையும் பாடியுள்ளார். [101] இதன் மூலம் வள்ளல்களின் ஆட்சி சிறப்பினையும் கொடைப் பண்பினையும் அறியமுடிகின்றது.

பழந்தமிழரின் அகவாழ்வையும், புறவாழ்வையும் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. சங்கப்புற இலக்கியங்கள் மிகுதியும் ஆட்சியாளர்களைப் பற்றியே பாடியுள்ளன. அந்நிலையில் அக்கால சமுக அமைப்பில் ஆட்சியாளர்களாக விளங்கியோர், மூவேந்தர், வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர், வள்ளல்கள் என அறியவருகின்றனர். இவர்களைத் தமிழோடு இணைத்துப் பெருமைப்படுத்தியுள்ளனர் புலவர்கள். அவ்வாறு பெருமைப்படுத்தப் பெற்ற ஆட்சியாளர்களைச் சங்கப்புற இலக்கியங்கள் சுட்டிய வழி இயல் மூன்றில் தரப்பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## பொருளாதாரம்

இக்காலத்தை நோக்க சங்க காலப் பொருளாதாரம் எளிதாயும், பெரும்பாலும் தன்னிறைவுடையதாயும் இருந்துள்ளது. மக்கள் தொழில் முயற்சி உடையராயும் இயலுமாயின் செல்வம் ஈட்டி நல்வாழ்க்கை வாழ்தலில் நம்பிக்கை உடையராயும் இருந்துள்ளனர். அவர்கள், பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் செய்த திறத்தின் வழி அக்காலப் பொருளாதாரம் தன்னிறைவுடையதாய் இருந்தமை உணரப்படுகின்றது.

## பயிர்த்தொழில்

"உழவும் வாணிகமும் உலகத்துத் தொழில்களில் மிகுத்துச் சொல்லத் தகுவன. அவ்விரண்டால்தான் செல்வ வளத்தைத் திரட்ட முடியும்." என்பது மாங்குடி மருதனார் கூற்றாகும்."[102] இத்தகைய உழவுத் தொழில் சங்க காலத்தில் உயிர்காக்கும் தொழிலாகப் போற்றப்பட்டுள்ளது. வேளாண்மைக்கு அடித்தளமாய் இருப்பது நிலமும் நீரும். இவற்றை ஆதாரமாகக் கொண்டே உணவு உற்பத்தி நடைபெற்றுள்ளது. எனவே தான் "உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே" (புறம், 18:21) என்கிறார் குடபுலவியனார்.

## விளைநிலம்

பண்டைத் தமிழர் நிலத்தினை இயற்கை அமைப்பிற்கேற்ப நான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அந்நிலப் பிரிவில் குறிஞ்சி நிலத்தில் பயிர்த்தொழிலுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதியினை இயல்பு கருதி 'துடவை' 'முதைபுனம்' என வெவ்வேறு பெயர்களில் அழைத்துள்ளமை தெரிகின்றது.[103] முல்லைநிலப் பகுதியில் பயிரின்றி தரிசாய்க் கிடந்த இடத்தை 'கொல்லை' என்றும், மரங்கள் நிறைந்த பகுதியைப் 'புறவு, கானம்' என்றும் அழைத்துள்ளனர். "[104]

மருதநிலப் பகுதியைக் கழனி, பழனம், வயல், செறு என்ற சொற்களால் அழைத்துள்ளனர். இவற்றுள் கழனி என்பது சேற்று வயலையும் பழனம் என்பது நெல் வயலையும் குறித்துள்ளதை அறியமுடிகின்றது."[105]

மண்வளமும் நீர் வளமும் குறைந்த பகுதியை 'வன்புலம்' எனவும் மண் வளமும் நீர்வளமும் நிறைந்த பகுதியை 'மென்புலம்' எனவும் அழைத்துள்ளனர். இதனை,

"வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்
மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந"[106]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

## நீர் நிலைகள்

பயிர்த்தொழிலுக்கு நிலத்தை அடுத்து நீர் வளம் இன்றியமையாததாக உள்ளது. ஒரு நாட்டின் வளமும், நலமும் நீர் வளத்தைக் கொண்டே அமைகின்றது. இத்தகைய நீர் நிலைகளை அமைத்துக் கொடுத்தல் அக்கால ஆட்சியாளர்களின் கடமையாகக் கருதப்பட்டது. அதனால் அவனே உடம்பையும் உயிரையும் படைத்தவனாகக் கருதப்பட்டான் என்கிறது புறப்பாடல்."[107] பண்டைத்தமிழர் நீர் நிலைகளை அமைக்கும் இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் வல்லவராய் இருந்தனர் என்பது,

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண்ணாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம்"[108]

என்ற பாடலடிகளால் அறியலாகின்றது. இவ்வாறு அமைத்த குளங்களைச் சிறுகுளம், பெருங்குளம் என இரண்டு வகைப்படுத்தியுள்ளனர். "சிறு குளத்து நீர் குடிப்பதற்கும், பெருங்குளத்து நீர் பயிர்த் தொழிலுக்கும் பயன்பட்டது"[109] என்பர்.

## உழவு முறைகள்

பயிருக்கு ஏற்ப நிலத்தைப் பண்படுத்துதல் அவசியமாகின்றது. அதற்கு நிலத்தைப் பலமுறை உழுது சீர்படுத்த வேண்டும். இவ்வுழவு முறையினைப் பற்றி உருத்திரங்கண்ணனார் பாடியிருப்பது இங்கு நோக்கத்தக்கது.

"குடிநிறை வல்சிக் செஞ்சால் உழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவாயன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க ஊன்றித்
தொடுப்பெறிந்து உழுத துளர்படு துடவை"[110]

என வரும் பாடலடிகள் மூலம் உழவின் நேர்த்தியினை அறியமுடிகின்றது.

## நீர்ப்பாய்ச்சுதல்

நன்செய் நெல்வயல்களுக்கு ஆற்றிலிருந்து பரவலாக நீர் நிறைந்து இருக்குமாறு பாய்ச்சியுள்ளனர்."[111] மேட்டு நிலப் பகுதிகளுக்குக் குளத்திலிருந்தும் கிணற்றிலிருந்தும் நீர்ப் பாய்ச்சியுள்ளனர். இவ்வாறு நீர் இறைப்போர் களைப்பார பாடிக்கொண்டே இறைத்துள்ளனர். இதனை,

"நீர்த்தெவ்வு நிரைத் தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்
தோடுவழங்கும் அகலாம் பியிற்
கயன் அகைய வயல் நிறைக்கும்"[112]

என மதுரைக்காஞ்சி பாடுகின்றது.

## நடவு

உழுது பண்படுத்திய நிலத்தில் நாற்றுகளை அழுந்த நட்டுள்ளனர் என்பது, "முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவில்" (பெரும், அடி; 212) என்ற பாடலடியால் அறியமுடிகின்றது. இவ்வாறு நாற்று நடும் போது பயிருக்குத் தேவையான இடைவெளி விட்டு நடவு செய்தமையும் தெரிகின்றது.

> "பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளி போழ்பு
> வாலிதின் விளைந்தன ஐவனம் வெண்ணெல்"[113]

என்பதால், நாற்று இடைவெளி விட்டு நட்டதனால் பயிர்கள் கிளைத்துச் செழித்துப் பால்கட்டி வளர்ந்துள்ளமை தெரிகின்றது.

## பாதுகாப்பு

நடவு செய்த பயிரானது அறுவடைக்கு முன் எலிகளாலும் பறவைகளாலும் விலங்குகளாலும் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளது."[114] இவ்வாறு பயிர்களுக்குப் பலவகையாலும் வரும் அழிவினைத் தடுக்க உழவர்கள் பயிர்களைக் கண்ணெனக் காத்துள்ளனர்.

> "வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை" – என்றும்,
> "இடுமுள் வேலி எருப்படு வரைப்பு" –என்றும்

பெரும்பாணாற்றுப்படை"[115] பாட்டடிகள் பயிருக்கு வேலி அமைத்துப் பாதுகாத்தமையை உணர்த்துகின்றன.

## அறுவடை

விளைந்த நெற்கதிர்களை அறுவடை செய்யும் முன் அவ்வயல்களில் கூடுகட்டி வாழும் பறவைகளைத் 'தண்ணுமை' என்ற இசைக் கருவி கொண்டு விரட்டியுள்ளனர். இதனை,

> "கழிசுற்றிய விளைகழனி
> அரிப்பறையாற் புள்ளோப் புந்து"[116] என்கிறது புறநானூறு.

கதிர் அறுவடை செய்யும் அரிவாள் குயம் (பொருநர், அடி; 242) எனப்பட்டது. இதனைப் புதையுண்டு கிடந்த ஆமை ஓட்டின் மீது தீட்டிக் கூர்மையாக்கியுள்ளனர்."[117] அறுவடை செய்த கதிர்களைக் களத்து மேட்டிற்குக் கொண்டு சென்று, எருதுகளைக் கொண்டுப் போரடித்துள்ளனர். பின் வைக்கோலையும் நெல்லையும் பிரித்து நெல்லை தனியே தூற்றிக் குவித்து வைத்துள்ளனர். இந்நெல் குவியல் "வடதிசையிலுள்ள மேருமலையினும் உயரியது"[118] என்கிறது பெரும்பாணாற்றுப்படை. இவ்வாறு முறையே செய்த வளமான பயிர்த்தொழில் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு மையத் தூணாக இருந்தமை புலனாகின்றது.

## வரிவருவாய்

வேளாண்மையில் வரி வருவாய் இரண்டு நிலைகளில் கிடைக்கப் பெற்றுள்ளது. நிலத்தாலும், நிலத்தில் விளையும் பொருளாலும் பொருளாதாரம் மேம்பட்டுள்ளது. பயிர்த்தொழிலால் நிலத்தில் விளையும் விளைபொருள்களின் உற்பத்திப் பெருக்கமே நாட்டின் உணவுத் தேவையினை நிறைவு செய்தமை உணரப்படுகின்றது. தேவைக்கு அதிகமாக விளையும் போது அது வாணியத்திற்கு வித்திட்டுள்ளது. இது பண்டமாற்று முறையிலும், ஏற்றுமதியின் மூலமாகவும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளதும் அறியக்கிடக்கின்றது.

"மிகவும் சாதாரணமான மிகுதியான ஒருவரி இனம் நிலவரியே" என்கிறார் ந.சுப்ரமண்யன்.[119] நிலவரிகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம்பெறுவதலால், அக்கால அரசின் நிருவாகத்திற்கு நிலம் அடிப்படை ஆதாரமாக இருந்தமை தெரிகின்றது.

> "படுவதுண்டு பகலாற்றி
> இனி துருண்ட சுடர் நேமி
> முழுதாண்டோர் வழிகாவல்"[120]

எனும் புறநானூற்றுப் பாடலில் 'படுவது' என்பதற்குப் பழைய உரையாசிரியர் 'ஆறிலொன்றாகிய இறை' எனப் பொருள் கூறியுள்ளார். மேலும், புறநானூற்றின்

35 ஆம் பாடலின் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ள 'பழஞ்செய் கடன் வீடு கொண்டது' எனும் தொடர் நிலவரித் தள்ளுபடியைக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு நிலம் அரசுக்கான வருவாய்ப் பெருக்கத்திற்குப் பயன்பட்டமையைச் சங்கப்புற இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

## கைத்தொழில்கள்

பெரும்பாலானோரின் தொழில் விவசாயமாக இருந்தாலும் பிறதொழில்கள் புறக்கணிக்கப்பட்டன அல்லது மிகக் குறைவாய் இருந்தன என்பதல்ல. அக்காலத்தில் கைத்தொழில் திறன்களும் பல்கிப் பெருகி இருந்தமை தெரிகின்றது. சங்கப் புற இலக்கியங்களை நோக்கும் போது பல தொழில்களுக்குரிய கருவியின் பெயர்களும் தொழிற் பெயர்களும் சில இடங்களில் தொழில் செய்வோரது பெயர்களும், அவர்கள் தயார் செய்த பொருள்களின் பெயர்களும் இடம்பெற்றமையை அறியமுடிகின்றது. இவைகளை ஒன்று சேர்ப்பின் அந்நூலிற் குறிப்பிட்டுள்ள தொழில்கள் இன்னவை என்பது புலனாகும்.

"புகை விரித்தன்ன பொருங்கு துகில்" (புறம், 398 : 20), "ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்" (பெரும், அடி; 469) எனத் துகில், கலிங்கம் என்ற பெயர்கள் இடம் பெறுதல் மூலம் நெசவுத் தொழில் நடைபெற்றமை தெரிகின்றது. ஆடை நெய்வதில் சிறந்த வல்லுநர்கள் இருந்தது போல், ஆடை தைப்பதற்கும் தையற்கலைஞர்கள் இருந்தமையை,

> "-------- -------- ---------- படம்புக்குப்
> பொருகணை தொலைச்சிய புண்தீர் மார்பின்
> விரவுவரிக் கச்சின்"[121]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

உப்பின் விளைச்சல் வணிக நடவடிக்கைகளைத் தூண்டிப் பல்வேறு பொருள்களும் பரிமாறிக் கொள்ள வாய்ப்பளித்துள்ளது என்பது வெளிப்படுகின்றது. "அரசிற்கு உப்பு வருவாய் தந்ததால் அரசதிகாரிகளும் உப்பளப்பகுதியில் பணி

அமர்த்தப்பட்டனர்"[122] என்பர். இவ்வாறு அரசுக்கு வருவாய் அளித்துள்ள உப்பு, கடலோரப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளமை தெரிகின்றது. உற்பத்தி செய்த இடங்களிலேயே உப்பு விற்கப்பட்டதை மதுரைக்காஞ்சி (அடி; 117) கூறுகின்றது. இதன்வழி உப்பளத் தொழில் நடைபெற்றமை புலனாகின்றது.

'குழிசி', 'தசும்பு', 'மண்டை', 'சாடி', 'கலன்' போன்ற மட்பாண்டங்களின் பெயர்கள் இடம்பெறுதலால்"[123] மட்கலத் தொழில் நடைபெற்றமை அறியலாகின்றது. படைக்கருவிகளும், பயிர்த்தொழிலுக்கும் பிற தொழிலுக்கும் தேவையான இரும்புப் பொருள்களும் இடம் பெறுதலால் கொல்லுத் தொழில் நடைபெற்றமை விளங்குகின்றது. "விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி" (சிறு, அடி; 244) என்பதன் வழி பல்வேறு உலோகங்களைக் கொண்டு பாத்திரம் செய்யும் தொழில் நடைபெற்றமை தெரிகின்றது.

பொன்னை அடித்துக் காப்பு முதலியவற்றைச் செய்யும் தட்டாரத் தொழிலும், கல்லுப் பதித்த நகைகளைச் செய்யும் இரத்தினப் பணித் தட்டாரத் தொழிலும் சிறப்பாக நடைபெற்றமை, அக்கால அணிகலன்கள் பெயர்கள் மூலம் அறிய இயலுகின்றது. "திண்பிணி எஃகம் புலியுறை கழிப்ப" (பதிற். 19:4) என்பதால் தோல் தொழில் நடைபெற்றமையை அறியமுடிகின்றது. நெய்தல் நிலப்பகுதி மக்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டாலும் முத்துக்குளிக்கும் தொழிலினும் சங்கெடுக்கும் தொழிலிலும் ஈடுபட்டமையால் முத்துக்குளித்தல் நடைபெற்றமை புலனாகின்றது. "சங்க இலக்கியங்களில் முத்தெடுத்தல் குறித்த செய்திகள் அதிகம்காணப்பட்டாலும் முத்து வணிகம் செய்தோரைப் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை"[124] என்பர்.

"உறைப்புழி ஓலைபோல" (புறம், 290:7), 'அவல் வகுத்த பசுங்குடையால்' (புறம், 352:3) என்ற புறநானூற்றுப் பாடலடிகள் ஓலைகொண்டு குடை, கூடை, பாய், முறம் பின்னும் தொழில் நடைபெற்றமையை உணர்த்துகின்றது. "கிளர் பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்" (சிறு, அடி; 61) என்பதால் குழந்தையின் அழுகையினைப் போக்க கிலுகிலுப்பைச் செய்துள்ளமையும்,

"—— —— ——— மடமங்கையர்
வரிமணற் புனைபாவை"[125]

என்பதால் குழந்தைகள் விளையாட பாவை செய்தமையும் விளங்குகின்றது.

மகளிர் விளையாடும் கழங்கு, பந்து போன்றவை தயார் செய்தமையை, "வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇ" (அடி; 333), "முத்த வார் மணற் பொற்கழங் காடும்" (அடி; 335) எனவரும் பெரும்பாணாற்றுப்படை அடிகள் உணர்த்துகின்றன. நெட்டியைக் கொண்டு மலர் மாலைகள், பொம்மைகள் முதலியன செய்யும் தொழிலும் நடைபெற்றிருக்கின்றது."[126] உடலுக்கு அழகைக் கொடுக்கும் கருங்காலியைச் சீவிக் காய்ச்சி அதனைப் பாக்குடன் கலந்து சாயப்பாக்குத் தயாரிக்கும் தொழில் நடைபெற்றதை மதுரைக்காஞ்சி (அடி; 400 – 401) விளம்புகின்றது. "கயிறுபிணிக் கொண்ட ... பெருங்கை யானை" (புறம், 3: 10 – 11) என்ற அடிகள் கயிறு திரிக்கும் தொழில் நடைபெற்றதைக் கூறுகின்றது. "வேய்ப்பெயல் விளையுள் தேக்கள் தேறல்" (மலை, அடி; 171) என்பது கள் இறக்கும் தொழிலையும் "விறகு ஓய் மாக்கள் பொன்பெற் றன்னதோர்" (புறம், 70:17) என்பது விறகு வெட்டும் தொழில் நடைபெற்றதையும் உணர்த்துகின்றது.

இவை போன்ற இன்னபிற தொழில்களும் அக்காலத்தில் நிரம்ப இடம்பெற்றமையைச் சங்கப்புற இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றன. இருந்தும் நெசவர், தச்சர், கொல்லர், பொற்கொல்லர் போன்றோர் தொழில்களே அக்கால பொருளாதாரத்தை மேம்படுத்த பெரிதும் உதவியமை புலாகின்றது.

## வாணிபம்

ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமும் தலைசிறந்தன என்பது அறிஞர்களின் கருத்து. ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கு இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் வேண்டும். தமிழகம் இவ்விரு தொழில்களையும் குறைவறப் பெற்றிருந்தது என்பதை,

"வியன் மேவல் விழுச் செல்வத்து
இருவகை யான் இசை சான்ற
சிறுகுடிப் பெருந் தொழுவர்"[127]

என்ற மதுரைக்காஞ்சி அடிகளால் உணரமுடிகின்றது.

## உள்நாட்டு வாணிபம்

### பண்டமாற்று முறை

அக்காலத்தில் பெரும்பகுதி வாணிபம் பண்டமாற்று முறையாகவே நடந்துள்ளது. மக்கள் தமது அன்றாட தேவையானப் பொருள்களைப் பண்டமாற்று முறையாகவே பெற்று வாழ்ந்துள்ளனர். மக்கள் தம் நிலங்களில் கிடைத்த பொருள்களைப் பிறநில மக்களிடம் கொடுத்து, அதற்கு ஈடாக அந்நிலப் பொருள்களைப் பெற்றுள்ளனர். இதுவே 'பண்டமாற்று முறை' எனப்பட்டது. "அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினார்கள்" என்பார் மயிலை சீனி. வேங்கடசாமி.[128]

வேடன் தான் வேட்டையாடிக் கொணர்ந்த மான் இறைச்சியினை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக்கொண்டதையும், இடைச்சியர் உழவனுக்குத் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டதையும் கோவூர் கிழார் பாடியுள்ளார்.[129] மேலும்,

"தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும்"[130]

என்ற பாட்டடிகள், வேடர் தேனையும் கிழங்கையும் மதுக் கடையில் கொடுத்து அதற்கு மாறாக மதுவையும் வறுத்த மீனையும் பெற்றுக்கொண்டதையும் உழவர் கரும்பையும் அவலையும் கொடுத்து மதுவையும் மான் இறைச்சியையும் பெற்று மகிழ்ந்ததைக் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

## போக்குவரத்துச் சாதனங்கள்

மக்கள் உற்பத்தி செய்த பொருள்கள் எல்லாம் ஒரே இடத்தில் உற்பத்தியாகவில்லை. பல பொருள்களும் பல இடங்களில் உற்பத்தியானபடியால் அவற்றை ஓர் இடத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்குக் கால்நடைகளையும், வண்டிகளையும் பயன்படுத்தியுள்ளனர். உள்நாட்டு வாணிபத்தில் நீர் நிலைகளில் பொருள்களை எடுத்துச்செல்ல தோணி, அம்பி, பஃறி எனப்பட்ட படகுகள் பயன்படுத்தப்பட்டமை தெரிகின்றது.

## தரைவழிச் சாதனங்கள்

தரைவழி வாணிபத்திற்குப் பொருள்களை ஏற்றிச் செல்ல வண்டிகளும், எருதுகளும், கழுதைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நெய்தல் நிலத்திலிருந்து உப்பு மூட்டைகளை எடுத்துச்செல்ல எருது பூட்டிய வண்டிகள் பயன்பட்டதை, "நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த" (சிறு, அடி; 55) என்ற பாட்டடி உணர்த்துகின்றது. உமணப்பெண்கள் வண்டி ஓட்டிச் செல்லும் போது அவ்வண்டிகளின் அச்சு முறியாமல் இருக்க உப்பு வணிகர் இருபுறமும் பார்த்துச் சென்றதைப் பெரும்பாணாற்றுப்படை[131] விளக்கியுள்ளது.

"தடவு நிலைப்பலவின் முழுமுதற் கொண்ட
சிறுசுளைப் பெரும்பழுங் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழுங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டியவு"[132]

என்பதன் மூலம் பலாப்பழம் அளவு சிறுசிறு பொதிகளாகக் கட்டப்பட்ட மிளகு மூட்டையினைக் கழுதைகளின் மேலேற்றிச் சென்றமையும் இடையில் சுங்கச் சாவடியில் சுங்கம் செலுத்தியமையும் தெரிகின்றது.

## நீர்வழிச் சாதனங்கள்

உள்நாட்டு வாணிபத்திற்கு நீர் நிலைகளில் செல்ல படகுகளைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

> "வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
> நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"[133]

என்பதாலும்,

> "மீன் நொடுத்து நெல்குவைஇ
> மிசை அம்பியின் மனைமறுக் குந்து"[134]

என்ற புறநானூற்றுப் பாடலடியாலும் அறியமுடிகின்றது.

## வெளிநாட்டு வாணிபம்

தமிழகம் மிகப் பழங்காலந்தொட்டே பிற நாடுகளோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தமை தெரிகின்றது. வெளிநாடுகளில் எப்போதும் விரும்பப்பட்ட பல அரிய பொருள்கள் தமிழகத்தில் கிடைத்தமையே இதற்குக் காரணமாகும். அவ்வாறே தமிழகத்தில் இல்லாப் பொருள்கள் மேலை நாடுகளில் கிடைத்தமையும் முக்கிய காரணமாகும்.

## தமிழ்நாட்டு வாணிகர்

"தமிழ் நாட்டின் மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால் தமிழர் இயற்கையாகவே கடற்பிரயாணஞ்செய்வதிலும் கப்பல் வாணிகம் செய்வதிலும் தொன்றுதொட்டு ஈடுபட்டிருந்தார்கள்" என்பார் மயிலை சீனி. வேங்கடசாமி.[135] தமிழர் மரக்கலங்களில் உள்நாட்டுச் சரக்குகளை ஏற்றிச் சென்று அயல்நாடுகளில் விற்றும், அந்நாடுகளிலிருந்து பெறப்பட்ட பொருள்களை ஏற்றி வந்து நம்நாடுகளில் வியாபாரம் செய்து வந்தமையும் தெரிகின்றது.

பாண்டிய நாட்டிலிருந்த தமிழக வாணிகர் சாவக நாட்டிற்குச் சென்று வாணிபஞ் செய்து திரும்பியதை மணிமேகலை கூறுகின்றது.[136] கடலில் போகிற மரக்கலங்கள் காற்றின் வேகத்தினால் திசை தப்பி ஓடுவதும், நிலை தடுமாறி

பாறைகளில் மோதியும், நீர்ச் சுழலில் சிக்கியும், சேதம் ஆவதும் உண்டு.[137] என்பதனைச் சங்கப்புற இலக்கியங்களின் வழி காணமுடிகின்றது.

"தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
ஏமுறு நாவாய் வரவெதிர் கொள்வார் போல்"[138]

என்ற பாடலடிகள் நாவாய் துறைமுகத்தை அடைந்த போது மக்கள் மகிழ்வோடு எதிர் கொண்டதைக் கூறுகின்றது. இவ்விலக்கியச் சான்றுகளின் வழி நம்நாட்டு வாணிகர்கள் உள்நாடுகளிலும் வெளிநாடுகளிலும் வாணிபத் தொடர்பு கொண்டிருந்மை புலனாகின்றது. மேலும், வணிகரில் சிறந்தோர்க்கு 'எட்டி' பட்டம் வழங்கியுள்ளதையும் காணமுடிகின்றது.

## பிறநாட்டு வாணிகர்

தமிழக வாணிகர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிபம் செய்தது போல், அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்திற்கு வந்து வாணிகஞ் செய்துள்ளனர். வாணிபத்தின் பொருட்டுப் பல நாட்டு மக்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் குடியேறி இருந்தமை தெரிகின்றது. இதனை,

"மொழிபெயர் தேஎத்தோர் ஒழியா விளக்கம்"[139]

எனச் சிலம்பும்,

"மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்"[140]

எனப் பட்டினப்பாலையும் பாடியுள்ளது.

## ஏற்றுமதி

உணவுப் பொருள்களும், வாசனைத் திரவியங்களும், சிறந்த வேலைப்பாடுடைய ஆடை, அணிகலன்களும் பிறநாட்டுச் சந்தைகளில் மிகுதியாக விரும்பப்பட்டமையே ஏற்றுமதிக்கு வித்திட்டது எனலாம்.

"தமிழகத்திற்கு வந்த யவனர்கள் ஏற்றுமதி செய்து கொண்டு போன பொருள்களில் முக்கியமானது மிளகு,[141] இன்னொரு பொருள் யானைத் தந்தம்[142] என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி. தமிழகத்திலிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியான பல்வேறு பொருள்களைப் பற்றி விரிவாக மதுரைக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. இதனை,

"முழங்கு கடல் தந்த விளங்கு கதிர் முத்தம்
அரம்போழ்ந் தறுத்த கண்ணேர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்
இருங்கழிச் செறுவின் தீம்புளி வெள்ளுப் புப்
பரந்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கண் துணியல்
விழுமிய நாவாய் பெருநீர் ஓச்சுநர்
நனந்தலைத் தேயத்து நன்கலன் உய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்
வைகல் தோறும் வழிவழிச் சிறப்ப"[143]

என்ற பாடலடியால் அறியமுடிகின்றது.

## இறக்குமதி

அயல் நாடுகளிலிருந்து மதுவகைகள், சில அரிய கலைத் திறன் வாய்ந்த பொருள்கள், உயர்சாதிக் குதிரைகள் என இங்குள்ளோரால் விரும்பப்பட்ட பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தெரிகின்றது. அக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து இறங்கிய பொருள்களைப் பற்றி கடியலூர் உருத்திரங்கண்ணனார் பட்டினப்பாலையில் விரிவாகப் பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது."[144]

"------ ------ ----- அசைஇ யவனர்
ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட"[145]

என்ற அடிகளின் மூலம் யவன நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அன்னப் பறவையின் உருவமாக உள்ள 'ஓதிம விளக்கின்' சுவாலைகக் காற்றினால் ஆடாமல் நிலையாக ஒளி விட்டமையை அறியமுடிகின்றது.

## துறைமுகங்கள்

கடல்வழியாகக் கப்பல்களில் வாணிபம் நடந்ததன் மூலம் கப்பல் கட்டும் தொழிலும் ஒவ்வொரு நாட்டிலும் நடைபெற்றிருத்தல் அறியக்கிடக்கின்றது. கப்பல்களில் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்குத் துறைமுகங்கள் இருந்திருக்க வேண்டும். "பெரும்பாலும் துறைமுகப்பட்டினங்கள், ஆறுகள் கடலில் சேர்கின்ற புகர் முகங்களில் இருந்தன"[146] என்பர்.

## காவிரிப்பூம்பட்டினம்

சோழநாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடம் காவிரிப்பூம்பட்டினம் ஆகும். அக்காலத்தில் இவ்வூர் உலகப்புகழ்பெற்ற இடமாகவும் கடல் வாணிபத்தில் சிறந்த துறை முகமாகவும் விளங்கியுள்ளது.

"―――― ―――― ―――― கூம்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
இடைப் புலப் பெருவழிச் சொரியுங்
கடற்பல தாரத்த நாடுகிழ வோயே"[147]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள், இத்துறைமுகம் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்ப ஆழமாகவும், அகலமாகவும் இருந்ததை விளக்குகின்றது. வாணிகக் கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமல் பாரத்தைக் குறைக்காமல் நேரே ஆற்றினில் புகுந்து துறைமுகத்தை வந்தடைந்தன என்பது உணரக்கிடக்கின்றது.

## முசிறி

மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேர நாட்டின் துறைமுகமாக விளங்கியுள்ளது. முசிறித்துறைமுகத்தில் முக்கியமாக மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முசிறித்துறைமுகம் ஆழம் இல்லாமல் இருந்தபடியால் யவனரின் கப்பல்கள் கடலில் தூரத்திலேயே நின்றுள்ளன. தோணிகளில் மிளகை ஏற்றிக் கொண்டு போய்க் கப்பல்களில் சேர்த்துள்ளனர். அதற்கு விலையாகப் பொன்னை வாங்கி வந்துள்ளனர். இந்நிகழ்வினைப் பரணர்,

"மனைக் குவைஇய கறிமூடையால்
கலிச் சும்மைய கரைகலக் குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித் தோணியாற் கரை சேர்க்குந்து
------ -------- ------- ------
முழுங்கு கடன் முழவின் முசிறி"[148]

எனப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தொண்டி

சேரன் செங்குட்டுவனுடைய தம்பி (மாற்றாந்தாயின் மகன்) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், வடக்கே தண்டாரணியத்திலிருந்து (மராட்டிய மாநிலம் – நாசிக்) வந்த வருடைப் பசுக்களைத் தொண்டிக்குக் கொண்டுவந்து தானங்கொடுத்துள்ளான். இதனை,

"தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்து"[149]

என்ற பாடலடியால் உணரமுடிகின்றது. இதன்வழி தொண்டித் துறைமுகம் பற்றி அறியலாகின்றது.

## எயிற்பட்டினம்

தொண்டை நாட்டில் முக்கிய துறைமுகமாக இது விளங்கியுள்ளதை அறிய முடிகின்றது. இத்துறைமுகத்தைச் சுற்றிலும் மதில் சூழ்ந்திருந்தபடியால் இப்பெயர் பெற்றுள்ளது. இத்துறைமுகம் பற்றி,

"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம்"[150]

எனச் சிறுபாணாற்றுப்படை பாடுகின்றது. மேலும்,

"ஓங்கு நிலை யொட்டகம் துயில் மடிந்தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகு"[151]

என்று கூறுவதன் மூலம் இங்கு இறக்குமதியான பொருள்களில் விரை மரம் ஒன்றெனத் தெரிகின்றது. இத்துறைமுகத்தில் குதிரைகள் வந்து இறங்கியதையும் கலங்கரை விளக்கு இரவு நேரங்களில் எரிந்ததையும் பெரும்பாணாற்றுப்படை"[152] சுட்டியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழரின் சமூக வாழ்வியலில் வாணிபத்தின் பங்களிப்பிற்கு இத்துறைமுகங்கள் தொண்டாற்றியமையினைச் சங்கப்புற இலக்கியங்கள் கொண்டு அறியக் கிடக்கின்றன.

## அங்காடிகள்

பல பொருள்களும் வாணிகஞ் செய்யும் கடைத் தெரு 'அங்காடி' எனப்பட்டது. புகார், மதுரை போன்ற பெருநகரங்களில் பகல், இரவு பாராது எப்பொழுதும் கடைகள் திறந்திருந்ததை அறியும் போது, அக்கால வியாபார பெருக்கத்தினை உணர முடிகின்றது.

## நாளங்காடி

பகல் நேரங்களில் பொருட்களை விற்பனை செய்யும் அங்காடி 'நாளங்காடி' எனப்பட்டது. முகில் கொள்ளுதலால் குறையாதும், ஆறுபுகுதலால் மிகாமலும் கிடக்கும் கடல் போன்ற மதுரை மாநகரத்து நாளங்காடியில் உள்ள பொருள்கள் மக்கள் பெறப்பெற குறையாமலும் வணிகர்கள் மேன்மேலும் கொண்டுவர நிரம்பாமலும் இருந்ததை,

> "மழைக்கொளக் குறையாது புனல்புக மிகாது
> கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
> கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது
> ------- ------- ------- -------
> நாளங்காடி நனந்தலைக் கம்பலை"[153]

என வருணிக்கிறது மதுரைக்காஞ்சி.

## அல்லங்காடி

மதுரை மாநகரில் நாளங்காடியைப் போன்றே இரவு நேரக் கடைகளும் இருந்துள்ளன. இதனை, 'அல்லங்காடி' என்றனர். இங்கு விற்பனையாகும் பொருள்களைக் கூறி, அப்பொருள்களை விலைபேசி வாங்குவோரின் ஓசையினைக் கூறும் மாங்குடிமருதனார்,

"பல்வேறு புள்ளின் இசையெழுந் தற்றே
அல்லங்காடி அழிதரு கம்பலை"[154]

எனப் பல பறவைகள் எழுப்பிய ஓசைக்கு உவமையாகக் கூறியிருப்பதை அறிய முடிகின்றது.

## அடையாளக் கொடி

பல பொருள்கள் விற்பனையாகும் அங்காடிகளில் ஒவ்வொரு விற்பனைப் பொருளுக்கும் ஓர் அடையாளக் கொடி நடப்பட்டிருந்ததைத் காணமுடிகின்றது. இதனை,

"நறவு நொடைக் கொடியோடு
பிற பிறவும் நனிவிரை இப்
பல்வேறு உருவிற் பதாகை"[155]

எனப் பட்டினப்பாலையும்,

"கள்ளின் களிநவில் கொடியொடு நன்பல
பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇ"[156]

என மதுரைக்காஞ்சியும் கூறுவதன் வழி அறியமுடிகின்றது.

## வணிகத் தொழிலின் பண்பு

அக்கால வணிகத் தொழில் கொள்ளை இலாபத்தைப் பெறும் நோக்கோடு நடைபெறவில்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்டு அனைவரும் அனைத்தும் பெறும் நல்நோக்கோடு நடைபெற்றுள்ளது.

"அறநெறி பிழையா தாற்றி னொழுகி"[157] – எனவும்,

"நடுவு நின்ற நல் நெஞ்சினோர்"[158] – எனவும்

வரும் அடிகள் இதனை உணர்த்துகின்றன. மேலும், "வணிகர்கள் தாங்கள் விற்கும் பொருளின் அடக்க விலையினையும் இலாபத்தினையும் கூறி விற்றுள்ளனர்"[159] என்பது கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூற்றால் புலனாகின்றது.

மேற்கண்ட இலக்கிய தரவுகளின்வழி ஒரு நாட்டின் பொருளாதாரத்தை நிருவகிக்கக் கூடியதாகப் பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் ஆகிய இம்மூன்றும் சிறந்து விளங்கியமையைக் காணமுடிகின்றது.

## மதமும் சமய நிலைகளும்

தமழ் மக்களது பண்டைய சமய வாழ்க்கையினை அறிய சங்க இலக்கியங்கள் பெரிதும் துணை புரிகின்றன. இவர்கள் தெய்வ நம்பிக்கையும் சமய உணர்வும் பெற்று வாழ்ந்துள்ளனர். இவர்களது சமயம் இன்னது எனத் துணிந்து கூற இயலவில்லை. இருந்தும் சமயக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் தென்னகத்தே வரும் வரை இவர்களது சமய நிலைகள் ஒரு தனிமையான பண்போடு இருந்ததாகத் தெரிகின்றது.

'சமயம்' என்பது பக்தியின் பொருட்டு உண்டானது, மனிதனுக்கும் தெய்வத்திற்கும் ஆன்மீக உறவை விளக்குவது சமயம் எனலாம். இதைத்தான் "கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள ஆன்மீக உறவாகிய பக்தியை மனிதனின் உள்ளத்தில் ஊட்டுவது சமயம்"[160] என்கிறார் வ. பெருமாள். "சமயமானது Religion என்ற ஆங்கிலச் சொல்லைத் தோற்றுவித்து இத்தாலிய வேர்ச் சொல்லுக்குக் (Religave) கட்டுதல், கூடுதல், மீளவும் எண்ணுதல் ஆகிய பொருள் தரப்படுகின்றன."[161] நன்னூல் சமயம், மதம் என்னும் சொற்களைக் கொள்கை என்ற பொருளில் வழங்குகின்றது."[162]

கலைக் களஞ்சியம் சமயத்தைப் பற்றிக் கூறுகையில், "மனித இனம் அறிவுத்திறம் பெறத் தொடங்கிய காலத்திலிருந்தே சமயம் இருந்து வருகிறது என்றும், சமய உணர்வு என்பது பல்வேறு வகைகளில் உலகெங்கும் எக்காலத்தும் காணப்படுவதொன்று"[163] என்றும் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனவே, கடவுள் நம்பிக்கையே சமயத்திற்கு அடிப்படையாக இருந்தது எனக் கூற இயலாது. சமயம் பகையைப் போக்கி ஒற்றுமையை வளரச் செய்துள்ளது. எனவே தான் 'எம்மதமும் சம்மதம்' என்பதும் ஏற்புடையதாகின்றது.

## நிலமும் தெய்வமும்

ஆதிகால மனிதர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். தம்மைமீறிய சக்திக்குக் கட்டுப்பட்டு அவற்றிற்கு அஞ்சி வாழ்ந்து வந்துள்ளனர். எனவே, அவற்றையே வணங்கவும் செய்தனர். இவ்வாறு இடி, மின்னல், மழை, சூரியன், சந்திரன் என இயற்கையை வணங்கியுள்ளனர். அக்காலக் கட்டங்களில் உருவ வழிபாடுகளோ தனியான தெய்வ வழிபாடுகளோ இருந்ததாகத் தெரியவில்லை. நாகரீக வளர்ச்சியடையும் நிலையிலேயே இவர்களது இறைவழிபாடு உருவ வழிபாடாக மாறியுள்ளது எனலாம். இந்நிலையிலே இவர்கள் வாழ்ந்த நிலப்பிரிவைக் கொண்டு, நால்வகை நிலத்திற்கும் உரிய தெய்வங்களாக, முல்லைக்குத் திருமாலும் குறிஞ்சிக்கு முருகனும் மருதத்திற்கு இந்திரனும் நெய்தலுக்கு வருணனுமாகத் தெய்வங்களை வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர்.

இதில் வருணன் என்ற தெய்வத்திற்கு மட்டுமே பெயர் குறிப்பிட்டுள்ளார். மற்ற தெய்வத்திற்கு அவற்றிற்குரிய பண்புகளையே சுட்டுகின்றார். தொல்காப்பியத்திற்கு உரைகண்ட உரையாசிரியர்களே மாயோன் என்பது விஷ்ணுவையும் சேயோன் என்பது முருகனையும் வேந்தன் என்பது இந்திரனையும் குறிக்கும் என்கின்றனர்.

## முருகன்

குறிஞ்சி நில மக்களின் வழிபடு கடவுளாக முருகன் கருதப்படுகின்றான். போரில் சிறந்த திராவிடத் தெய்வம் ஆதலால் 'சேயோன்' எனப்பட்டான். முருகனைச் சங்கப் புற இலக்கியங்கள் சேய், நெடுவேள், முருகு என்ற பெயர்களில் சிறப்பித்துள்ளன. இதனை,

"வெல் போர்ச் சேஎய்"[164] – எனவும்,

"கடம்பமர் நெடுவேள்"[165] – எனவும்,

"முருகு உறழுப் பகை"[166] – எனவும்

வரும் அடிகள் மூலம் உணரமுடிகின்றது. முருகு என்பதற்குத் 'தெய்வத்தன்மை' என்றும் அது முருகக் கடவுளுக்கு ஆகுபெயராக அமைந்ததென்றும் நச்சினார்க்கினியர் கூறுகின்றார்.[167] "வெல்போர்க் கொற்றவை சிறுவ" (முருகு, அடி; 258) என வெற்றித் தெய்வமான கொற்றவையின் மகன் என்கிறது திருமுருகாற்றுப்படை. போருக்குச் செல்லும் அரசனின் சீற்றம் முருகனின் கோபத்திற்குப் பல இடங்களில் ஒப்பிடப்படுகின்றது. இதனை,

"முருகற் சீற்றத் துருகெழு குருசில்"[168] – என்றும்,
"முருகு டன்று கறுத்த"[169] – என்றும்

கூறுவதால் அறியமுடிகின்றது. வருத்துதலையுடைய முருகன் கோயில் ஒன்றைப் புறநானூறு (299:6) குறிப்பிடுகின்றது. பருவப் பெண்களுக்குக் காதல் நோய் கொடுப்பவன் முருகன் எனக் கருதப்பட்டான். காதல் நோய் கொண்ட பெண்களுக்கு 'வேலன் வெறியாட்டு' நிகழ்த்தியமையும் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

திருமுருகாற்றுப்படை முருகனின் ஆறுபடை வீடுகளைச் சிறப்பாக வருணித்துள்ளது. இந்நூல் சங்க நூல்களுக்குப் பின்னர் தோன்றியது. எனினும் இதில் பல இடங்களில் திராவிடத் தெய்வமான முருகனின் இயல்புகள்

கூறப்படுகின்றன. "அறுவர் பயந்த ஆறமர் செல்வன்", "ஆல்கெழு கடவுட் புதல்வன்", "இழையணி சிறப்பிற் பழையோள் குழவி", "வானோர் தானைத் தலைவன்", "குறிஞ்சிக் கிழவன் " எனப் பல பெயர்களால் அழைக்கப் பெறுகின்றான்.[170]

திருப்பரங்குன்றம் எனும் பகுதியில் தமிழ்க் கடவுளாகிய முருகனுக்குத் தமிழ் முறையிலே பேய்மகள் ஒருத்தி ஆடிய "துணங்கைக் கூத்து" சித்தரிக்கப்பட்டுள்ளது.[171] குன்றுதோடல் எனும் பகுதியில் முருக வழிபாட்டுடன் கூடிய 'குரவைக்குத்து' கூறப்பட்டுள்ளது.[172] திருச்சீரலைவாய் எனும் பகுதியில் ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் உடைய முருகனின் திருவுருவம் கூறப்பட்டுள்ளது.[173] இவனே சிவனின் மகனும் போர்க் கடவுளுமான ஆரியக் கற்பனையில் எழுந்த கார்த்திக்கேயன் என்கிறார் சு. வித்தியானந்தன்.[174]

பண்டைக் காலத் தமிழ் மக்கள் முருகனை மலைத் தெய்வமாக வழிபட்டமை தெரிகின்றது. இவனே அணங்குடைத் தெய்வமாகவும் பருவப் பெண்களுக்குக் காதல் நோய் உண்டாக்கும் தெய்வமாகவும் இருந்துள்ளான். முருக வழிபாடாக குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வெறியாட்டு போன்ற நிகழ்வுகள் நடைபெற்றமை இலக்கியங்கள் வழி அறியக்கிடக்கின்றது.

## திருமால்

தென்னாட்டிற்குரிய முல்லை நிலத் தெய்வமான மாயோன் விஷ்ணுவாகவும், கண்ணனாகவும் காட்சியளிக்கின்றார். இலக்கியங்கள் மால், மாயோன் என்ற பெயர்களில் திருமாலை அழைக்கின்றன. இதனை,

> "நீர்செல நிமிர்ந்த மாஅல்"[175] – என்றும்,
> "மாயோன் மேய ஓண நன்னாள்"[176] – என்றும்

பாடியுள்ளமையால் அறியமுடிகின்றது. "தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றி இருந்திருக்கிறது"[177] என்பர்.

சங்க காலத்தில் திருமால் நான்முகனாகவும் சிவனாகவும், திங்களாகவும். ஞாயிறாகவும் திகழ்ந்தான் என்கிறது பரிபாடல்.[178] திருமகள் மார்பிலே தங்கியிருக்கும் திருமாலின் திருவடியை அனைவரும் வணங்கியதை,

"வண்டுது வொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்வொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅய்
அலங்கற் செல்வன்"[179]

என்று பாடுகின்றது பதிற்றுப்பத்து. மாயோன் என்பதற்குக் 'கரியவன்' எனப்பொருள் கொண்டு போற்றியுள்ளனர். காட்டில் மலர்ந்த காயாம் பூ திருமாலின் நிறத்திற்கு ஏற்ப உள்ளதால் அதனைத் தூவி வழிபட்டுள்ளனர். இதனை,

"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"[180]

எனத் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது. திருமால், கழுவப்பட்ட அழகிய நீலமணி போன்ற திருமேனியையும் வானுறவோங்கிய கருடக்கொடியையும் உடையவன் என்பதை,

"மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோன்"[181]

என்கிறது புறநானூறு. திருமால் பள்ளி கொண்ட கோலத்தைப் பற்றிக் கூறும் பெரும்பாணாற்றுப்படை,

"------ ------ ------ நீடு குலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன்"[182]

எனப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும், திருமால், மலரவனைப் பெற்றவன் என்கிறது.[183] இவ்வாறு முல்லை நிலத் தெய்வமான திருமாலின் தோற்றத்தையும் அவதாரச் சிறப்பினையும் மக்கள் வழிபட்டதையும் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. நில அடிப்படையில் வணங்கப்பட்ட திருமால் பின்னாளில் வைணவ மதக் கடவுளாகப் போற்றப்பட்டான் என்பது நோக்கத்தக்கது.

## இந்திரன்

தொல்காப்பியர் கூற்றின்படி இந்திரன் மருதநிலக் கடவுளாவான். சங்க இலக்கியங்களை ஆராயும் போது இந்திரனைப் பற்றிய குறிப்புகள் சில இடங்களிலேயே காணப்படுகின்றது. ஒள்ளிய கொடியினையும் வச்சிராயுதத்தினையும் உடைய இந்திரனுக்குக் கோயில் எழுப்பியதை,

"------ ------ ------ ஒண்டொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்"[184]

என ஏணிச்சேரி முடமோசியார் பாடியுள்ளதன் மூலம் அறியமுடிகின்றது. ஆயிரம் கண்களை உடையவனும் நூறுவேள்விகளை நடத்தியவனுமாகிய இந்திரன் பகைவரை வெற்றி கொண்டு யானையின் பிடரியில் அமர்ந்து வருவதை,

"நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வன்"[185]

எனத் திருமுருகாற்றுப்படை வருணிக்கின்றது.

மேற்கண்ட தரவுகள் வழி சங்க காலத்தில் இந்திர வழிபாடு அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை எனத் தெரிகின்றது. சிலம்பு மற்றும் மணிமேகலை காப்பியம் எழுந்த காலங்களில் இந்திர வழிபாடு சிறப்புற்றிருந்திருக்கிறது. அந்நூல்கள் இந்திர வழிபாட்டைப் பற்றியும், அவனுக்காக எடுத்த இந்திரவிழாவைப் பற்றியும் விரிவாகப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கொற்றவை

பாலை நிலக் கடவுள் கொற்றவை இவள் வெற்றித் தெய்வம் முருகனின் தாய் என்பதை, "வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" (முருகு, அடி; 258) என்ற திருமுருகாற்றுப்படை பாடலடியால் அறியமுடிகின்றது. நெடுநல்வாடையில்

போருக்குச் சென்ற தலைவன் வெற்றியுடன் மீளத் தலைவியின் தோழியர் வெற்றித் தெய்வத்தை வணங்குகிறார்கள். இதனை,

"இன்னா அரும் படர்தீர விறல் தந்து
இன்னே முடிகதில் அம்ம மின் அவிர்"[186]

எனவரும் பாடலடிகளால் உணரலாம். இவ்வெற்றித் தெய்வம் கொற்றவையே என்கிறார் நச்சினார்க்கினியர். இக்கொற்றவைக்குப் பலி கொடுத்து வாழ்த்துவது 'கொற்றவை நிலை' என்பதை,

"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே"[187]

என்கிறது தொல்காப்பியம், இதனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கொற்றவை வழிபாடு இருந்ததை அறியலாகின்றது. 'அருந்திறன் மரபிற் கடவுட் பேணியர்' (பதிற், 30:34) எனப் பதிற்றுப்பத்துப் போருக்குப் புறப்படும் சேர மன்னன் முரசுறை கடவுளுக்குப் பலியூட்டும் செய்தியினைக் கூறுகின்றது. "முரசுறை கடவுள் என்பது வீரர்களுக்கு வெற்றியைத் தரும் கொற்றவைத் தெய்வம்" என்கிறார் கே.ஜி.எஸ். ஐயர்."[188]

அயிரை மலையிலுள்ள அச்சத்தைத் தரும் கொற்றவையை,

"——— —— ——— அஞ்சுவரு மரபிற்
கடவு ளயிரையி னிலைஇ"[189]

எனவும், இக்கொற்றவையைச் சேரர்கள் வழிபட்டதை, "உருகெழு மரபி னயிரை பரவியும்" (பதிற், 90:19) எனவும் பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது. எனவே அக்கால மக்கள் வெற்றியைத் தரும் தெய்வமாகக் கொற்றவையை வழிபட்டமை சங்கப்புற இலக்கியங்களின் வழி உணரக்கிடக்கின்றது. பிற்காலங்களில் இக்கொற்றவை வழிபாடே 'துர்க்கை' வழிபாடாக மாறியது எனலாம்.

## சைவம் - சிவன்

சிவன் ஒரு நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதப்படவில்லை. எனவே இவன் எல்லா நிலத்தெய்வமாகப் போற்றப்பட்டுள்ளான். இல்லாமை தெரிகின்றது. இலக்கியங்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் உள்ளனவே தவிர, பெயர்கள் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

"நீரு நிலனுந் தீயும் வளியு
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணொடியோன்"[190]

என்றும்,

"பேரிசை நவிர மேஎ யுறையுங்
காரி யுண்டிக் கடவுள்"[191]

என்றும் மதுரைக்காஞ்சியும் மலைபடுகடாமும் பாடுகின்றன. திருமுருகாற்றுப்படை வெற்றிக்களத்திலே உயர்த்திய இடபக் கொடியைக் கொண்டவனும் உடம்பில் பாதியை உமையாளுக்குத் தந்தவனும், முக்கண்ணை உடையவனும் எனச் சித்தரிக்கின்றது."[192] சிவனுக்குக் கோயில் இருந்ததை, 'முக்கட் செல்வர் நகர்' (புறம், 6:18) என்கிறது புறநானூறு. தமக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமானை வாழ்த்தும் ஔவையார்,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே"[193]

என வாழ்த்துதல் கவனிக்கத்தக்கது. மேலும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைச் சிறப்பிக்கும் வகையில் மதுரை இளநாகனார்,

"கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார்"[194]

எனப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை நோக்கும் போது இக்காலத்தில் உள்ளது போல அக்காலத்தில் சிவ வழிபாடு அவ்வளவு சிறப்புற்று இருந்ததாக

விளங்கவில்லை. நாயன்மார்களின் வருகைக்குப் பின்னரே சிவ வழிபாடு புத்துயிர் பெற்று விளங்கியமை தெரிகின்றது.

## இலக்குமி

வைணவர்கள் வணங்கும் திருமாலின் துணைவியாக இலக்குமி கருதப்படுகின்றாள். செல்வத்தின் அதிபதியாகத் திருமகளைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மார்பிலே திருமகளைத் தாங்கும் திருமாலைப் பற்றிப் பதிற்றுப்பத்தும் (31:7 – 9), முல்லைப் பாட்டும் (அடி; 2 – 3) குறிப்பிடுகின்றன. வீட்டு வாயில் நிலையில் திருமகளின் உருவம் செதுக்கப்பட்டிருந்ததை,

> "——— ——— ஓங்குநிலை வாயிற்
> றிருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பு"[195]

என நெடுநல்வாடையும், திருமகளின் திருவுருவம் தீட்டப்பட்ட மதிற்கதவுகளைப் பற்றி, "தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை" (மதுரை, அடி; 353) என மதுரைக்காஞ்சியும் நகரத்தின் காவல் தெய்வமாகத் திருமகள் விளங்கியதை, 'திருநிலைஇய பெருமன் எயில்' (பட்டின, அடி; 291) என்று பட்டினப்பாலையும் பாடியுள்ளமையால் திருவாகிய இலக்குமியைப் பற்றி அறியமுடிகின்றது.

## வைதீகம்

சங்க காலத் தமிழ் மக்கள் திராவிடக் கடவுளைத் தாம் விரும்பியவாறு வழிபட்டு வந்தனரெனினும், யாகம் செய்தல்,பலியிடுதல் போன்ற நிகழ்வினைக் கொண்டு வைதீக வழிபாட்டு முறைகளும் அக்காலங்களில் இருந்தமை அறிய வருகின்றது.

அந்தணர்களின் வாழ்க்கை முறை, பண்பு, கடமை முதலியன பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களில் நிரம்பக் காணப்படுகின்றது. இவர்கள் வேதங்களில் கூறப்படும் சடங்கு முறைகளைத் தவறாது செய்தமையை,

"மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர் வேள்வி யோர்க் கும்மே"[196]

என்கிறது திருமுருகாற்றுப்படை. மதுரைக்காஞ்சியும் இவர்கள் வேதம் ஓதுவதையும் சடங்குகள் செய்து வந்தமையும் பற்றி விரிவாகச் சித்தரித்துள்ளதைக் காணமுடிகின்றது."[197]

நல்ல நூல்களைக் கற்று வேள்விகள் பல செய்ததால் அந்தணர்களுக்குப் பெறற்கரிய பொன்னும் பொருளும் அரசர்கள் கொடுத்தமை தெரிகின்றது. "அந்தணர்களே வேள்வி முதலியன புரிதற்கும் அரசர்க்கும் பிறர்க்கும் அறிவுரை கூறுதற்கும் தகுதி படைத்தவர். இவர்கள் ஓரளவு முற்றுந் துறந்த முனிவர்க்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றத்தக்கவர்களாக உள்ளனர்" என மு. சண்முகம் பிள்ளை கூறுவது குறிப்பிடத்தக்கது.[198] தீயை வளர்த்து அவி வழங்கும் முனிவரைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன.

"செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிதரு விறகின் வேட்கும்"[199]

என யானைகள் கொணர்ந்த விறகினால் வேள்விச் சடங்குகள் செய்தமையைப் பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. வேள்விப் புகையினால் பறவைகள் சோலையை விட்டுப் பறந்த நிகழ்வினைப் பட்டினப்பாலை (அடி; 53 – 56) பகர்கின்றது. இத்தகைய இலக்கியப் பதிவின் வழி முனிவர்கள் நடத்திய வேள்விகளை அறிய முடிகின்றது.

"மரவுரித் தரித்த முனிவரின் நரைமுடி வலம்புரிச் சங்கை ஒத்திருந்தன என்றும், இவர்கள் அடிக்கடி உண்ணா நோன்பு இருப்பவர் என்றும், யார் மீதும் விருப்பு வெறுப்புக் காட்டாத நல்லறிவு படைத்தவர்கள் என்றும், கற்றோரும் அறிய முடியாத உண்மைகளை உணரும் ஆற்றல் கொண்டவர்கள் என்றும், முனிவர்களைப் பற்றித் திருமுருகாற்றுப்படை சித்தரிக்கின்றது."[200] இத்தகைய இலக்கிய தரவுகளின் மூலம் வைதீக மதம் பற்றிய நிலையினை ஓரளவு உணர முடிகின்றது.

## சமணமும் பௌத்தமும்

நாள், கோள் என்னும் இயற்கைத் தோற்றங்களை வழிபடல், முருகன், மால், சிவன் முதலிய தெய்வங்களை வழிபடுதல், வேத முறைப்படி வேள்வி செய்து கடவுளை வணங்குதல் ஆகிய வழிபாட்டு முறைகள் இருந்தமையைச் சங்க இலக்கிய பாடல்களின் வழி அறியமுடிகின்றது. ஆயினும் அந்நாளில் மாறுபட்ட வேற்றுச் சமயங்களாகிய சமணமும், பௌத்தமும் பரவி இருந்தன என்பதைத் தெரிவிக்கும் ஒரு சில குறிப்புகளும் சங்க இலக்கியப் பாடல்களில் உள்ளன.

"சமணமும் பௌத்தமும் பயிர்த்தொழில் செய்யும் வேளாளரும் வாணிபம் செய்யும் வணிகரும் ஏனைய தொழிலாளருமே இந்த மதத்தை மேற்கொண்டிருந்தனர்" என்கிறார் மயிலை சீனி. வேங்கடசாமி.[201] காஞ்சி நகரில் எல்லாச் சமயத்தவரும் தொழுது விழா எடுத்துள்ளனர். இதனை,

"---------- ---------- பலர் தொழ
விழவுமேம் பட்ட பழவிறல் மூதூர்"[202]

என்கிறது பெரும்பாணாற்றுப்படை. இச்சமயத்தாருள் சமணரும் பௌத்தரும் இருந்திருத்தல் கூடும் என்பதில் ஐயம் இல்லை.

"பகட்டெருத்தின் பலசாலை
தவப்பள்ளித் தாழ்காவின்"[203]

எனவரும் பாடலடி குறிக்கும் 'பள்ளி' தவம் செய்யும் சமண பௌத்த முனிவர்களின் இருப்பிடமே எனலாம். இப்பள்ளிகளை மக்கள் சென்று வழிபட்டதை மதுரைக்காஞ்சி (அடி; 461 – 467) விரிவாகக் கூறுவது குறிப்பிடத்தக்கது.

இந்த அளவிற்கு மட்டும் சமணர், பௌத்தர் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என ஒருவாறு அறியமுடிகின்றது. பதினெண்கீழ்க்கணக்கு நூலான நாலடியார், காப்பியங்களான சிலம்பும், மேகலையும் கூறும் அளவிற்குச் சங்க இலக்கியங்களில் சமண பௌத்த செல்வாக்குகளைக் காண இயலவில்லை.

சங்க காலச் சமூக அமைப்பினைக் காணும்போது, திணைக்குழு சமுதாய அமைப்பு முறை சிதைந்து இனக்குழு சமுதாய அமைப்புமுறை தோன்றிய நிலையினில், நில அடிப்படையில் நிகழ்ந்த தெய்வ வழிபாட்டோடு பிற தெய்வ வழிபாடும் இணைந்திருக்கின்றது. அவ்வழிபாட்டு முறையே வளர்ச்சியடைந்த நிலையினில் பல சமயநிலைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. பல சமயங்கள் நிலவியபோதும் மக்கள் சமயப் பூசல் இல்லாமல் 'எம்மதமும் சம்மதம்' எனும் நோக்கோடு வாழ்ந்தமையைச் சங்கப்புற இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

## தொகுப்புரை

'சங்கப் புற இலக்கியம் காட்டும் சமூக அமைப்புகள்' எனும் இந்த ஆய்வேட்டின் முதல் இயல், சங்க காலச் சமூகத்தில் நிலவிய நிலப் பாகுபாடுகள் பற்றியும், மக்கட் பாகுபாடுகள் பற்றியும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் உள்ள புற இலக்கியங்கள் வழி ஆய்ந்துள்ளது.

இலக்கியச் சான்றுகள் மூலம் தமிழகத்தின் எல்லைகள், பிரிவுகள் ஆகியன கூறப்பட்டுள்ளன. இத்தமிழகம் நில அமைப்பிற்கேற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணையாக நிலவியதைக் கண்டு கூறியுள்ளது. திணைக்கேற்ப குறவர், ஆயர், உழவர், பரதவர், வேட்டுவர் என அந்நிலமக்களையும் அவர்கள் புரிந்து வந்த தொழிலையும் சுட்டியுள்ளது.

நில அடிப்படையில் திணைநில மக்களாய் வாழ்ந்தவர்களிடம் தொழில் அமைப்புகள் பெருகிய பிறகு தொழில் சார்ந்த மக்கட் பிரிவினர் சாதிப்பிரிவுகளாய் மாறிய சமூக அமைப்பை எடுத்துக்காட்டியுள்ளது.

நானிலங்களுக்கும் பொதுவானவர்களாகப் புலவர்கள், ஆற்றுப்படைக் கலைஞர்கள் என இவர்களின் பரிசில் வாழ்க்கையினையும் கோடிட்டுச் சென்றுள்ளது. இச்சமூக அமைப்புடைய நாட்டின் ஆட்சியாளர்களாக அவர்கள் ஆட்சிபுரிந்த நிலத்தின் பரப்பளவினையும் கீர்த்தியையும் கொண்டு வேந்தர், வேளிர்,

குறுநில மன்னர், சீறூர் மன்னர், வள்ளல் என அழைக்கப்பட்ட நிலை புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் நிலையான ஆட்சிக்குத் தேவை பொருளாதாரம் ஆகும். அத்தகைய பொருளாதாரத்தை அரசுக்கு ஈட்டித்தந்த பயிர்த்தொழில், கைத்தொழில், வாணியம் ஆகிய மூன்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இயற்கையை வழிபட்டவர்கள் நாளடைவில் திணைக்கேற்ப தெய்வங்களை வணங்கியமை தெரிகின்றது. ஆரியர்கள் வருகைக்குப்பின் வேள்விகள், சடங்குகள் எனச் சமய வழிபாட்டு முறைகள் மாறியதன் மூலம் பிற சமய நிலைகளும், தமிழகத்தில் நிலைகொள்ளத் தொடங்கியமையும் தெரியப்படுத்தியுள்ளது.

# இயல் 1

## சான்றெண் விளக்கம்

1. சுவாமிநாதன். டாக்டர். ஏ. தமிழக வரலாறு, (1987 –வரை), ப.9
2. டாக்டர். கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப.21
3. தொல், சிறப்புப்பாயிரம், 1 – 3
4. புறம், 17 : 1 – 2
5. மேலது, 6 : 1 – 2
6. மேலது, 381 : 22
7. மேலது, 389 : 11
8. மதுரை, அடி; 70 – 71
9. இறையனார் அகப்பொருள் பாயிரம் உரை,
10. வே. கனகசபை பிள்ளை, 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம், ப. 23
11. தொல்; சொல்; 400, நச்சி, உரை
12. யாப்பெருங்கலம், ஒழிபியல்.8, குணசாகரர் உரை.
13. நன்னூல்: சொல்: பெயரியல், 14 – 16, சங்கர நமச்சிவாயர் உரை.
14. தொல்; பொருள், 5
15. சிலம்பு, 11:64 – 66
16. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.206
17. மதுரை, அடி; 286 – 293
18. மேலது, அடி; 292 – 293
19. மேலது, அடி; 294 – 295
20. மலை, அடி; 315 – 317
21. டாக்டர் மா. இராசமாணிக்கனார், பத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 85
22. பெரும், அடி; 147 – 205
23. மேலது, அடி; 209 – 211
24. பொருந, அடி; 246 – 248
25. சிறு, அடி; 153
26. மதுரை, அடி; 137
27. பெரும், அடி; 60 – 61
28. மதுரை, அடி; 255 – 256
29. மேலது, அடி; 315 – 317
30. பெரும், அடி; 321 – 323
31. சிலம்பு, 11 : 64 – 66

32. தொல்; பொருள்; அகத்திணையியல் – 9 நச்சி, உரை.

33. பெரும், அடி; 39 – 41

34. கி.வா. ஜகந்நாதன், பத்துப்பாட்டில் பைந்தமிழ் வளம், தொடக்க உரை – IV

35. தமிழண்ணல், பரிசில் வாழ்க்கை, ப. 18

36. புறம், 201 : 14

37. மேலது, 203 : 11 – 12

38. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 16

39. கே. முத்தையா, தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம், பக். 52 – 53

40. Dr. N. Subramaniyan, Sangam Polity, p.247

41.தொல்; பொருள்; மரபியல்: 71, 72, 78, 81.

42. ஞா. சா. துரைசாமிப் பிள்ளை, தமிழ் இலக்கியம் (சங்க காலம்), ப. 35

43. டாக்டர், வி.சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப.165

44. ந.சி. கந்தையா, சிந்து வெளித்தமிழர், ப. 23

45. மயிலை சீனி. வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், ப.66

46. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழர் திருமணம், ப.7

47. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழ் இலக்கிய வரலாறு, ப.45

48. ஞா. தேவநேயப்பாவாணர், தமிழர் வரலாறு, ப. 269

49. ஞா. தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப. 157

50. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 321

51. பதிற், 24: 6 – 8

52. மதுரை, அடி; 656

53. புறம், 397 : 20 – 21

54. தொல்; பொருள்; மரபியல் : 83

55. புறம், 361:4

56. பெரும். அடி; 315 – 316

57. பதிற், 63:1

58. தொல்; பொருள்; மரபியல்: 81

59. சாமி. சிதம்பரனார், பத்துப்பாட்டும் பண்டைத் தமிழர் வாழ்வும், ப.86

60. மறைமலை அடிகளார், வேளாளர் நாகரிகம், ப.3

61. ஞா. தேவநேயப்பாவாணர், பண்டைத் தமிழக நாகரிகமும் பண்பாடும், ப.1

62. தொல்; பொருள்; 632, நச்சி உரை.

63. பெரும், அடி; 222 – 228

64. மேலது, அடி; 245 – 252

65. அ. அப்துல் மஜீத், ஆய்வுக் கொத்து, ப. 140

66. புறம், 383 : 10 – 11
67. பொருநர், அடி; 82
68. மேலது, அடி; 155
69. புறம், 274 : 1
70. மேலது, 87 : 3 – 4
71. பெரும், அடி; 46 – 50
72. மதுரை, அடி; 83 – 84
73. பெரும், அடி; 99
74. புறம், 168 : 9
75. மேலது, 238:1
76. மேலது, 256 : 5 – 6
77. எங்கெல்ஸ், குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம், பக். 251 – 252
78. பெரும், அடி; 437 – 440
79. புறம், 180:12 –13
80. மதுரை, அடி; 316, 417, 704,719,720, பெரும், அடி; 181,311,
பெருநர், அடி; 159–162
81. புறம், 218 : 1 – 4
82. பதிற், 311: 1 – 2
83. முருகு, அடி; 83 – 85
84. புறம், அடி; 311 : 1 – 2
85. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழகம் ஊரும் பேரும், ப. 51
86. சி. மௌனகுரு, பண்டைத் தமிழர் வரலாறு, இலக்கியமும், ப.61
87. தொல்; பொருள்; 384 : 3
88. மேலது, 63 : 4 – 5
89. குறள், 955, பரிமேலழகர் உரை
90. K.N. Sivarajapillai, The Chronology of the Tamils, P.192
91. மணிமேகலை, பதிகம், 9 – 10
92. சிலம்பு, 11 : 19 – 20
93. பதிற், 49 :7
94. மதுரை, அடி; 55
95. கா. சுப்ரமணியன், சங்க காலச் சமுதாயம் (ஆய்வுக் கட்டுரை), ப. 58
96. மதுரை, அடி; 776 – 778
97. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 52

98. புறம், 324, 330, 331, 388

99. மேலது, 308, 327, 328, 388

100. மேலது, 319: 12 – 13

101. சிறு, அடி; 84 – 111

102. மதுரை, அடி; 120 – 123

103. குறுந். 105:1; அகம், 394 : 3

104. அகம், 89: 17; சிறு, அடி; 169; குறுந், 21 : 4

105. தமிழ்ப்பேரகராதி, தொகுதி 2, ப.799, தொகுதி 4, ப. 2547

106. புறம், 42 : 17 – 18

107. மேலது, 18 : 22 – 30

108. மேலது, 118 : 1 – 3

109. டாக்டர், வி.சி. சசிவல்லி, பண்டைத்தமிழர் தொழில்கள், ப. 45

110. பெரும், அடி; 197 – 201

111. புறம், 338 : 2

112. மதுரை, அடி; 89 – 92

113. மலை, அடி; 114 – 115

114. புறம், 190 : 1 – 3; 344: 1 – 2

115. பெரும், அடி; 126, 154

116. புறம், 396: 3 – 4

117. மேலது, 379 : 3 – 5

118. பெரும், அடி; 232 – 242

119. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 244

120. புறம், 17 : 6 – 8

121. பெரும், அடி; 69 – 71

122. ந. அதியமான், பா. ஜெயக்குமார், தமிழகக் கடல்சார் வரலாறு, அண்மைக் கால ஆய்வுகள், ப. 139

123. பெரும், அடி; 99 ; புறம்., 88 : 3, 103 : 3, 297 : 6, 322 : 5

124. ந. அதியமான், பா. ஜெயக்குமார், தமிழகக் கடல்சார் வரலாறு, அண்மைக் கால ஆய்வுகள், ப. 96

125. புறம், 11 : 2 – 3,

126. சிறு, அடி; 54

127. மதுரை, அடி; 120 – 122

128. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், ப.52

129. புறம், 33 : 1 – 8

130. பொருநர், அடி; 214 – 217

131. பெரும், அடி; 64 – 65

132. மேலது, அடி; 77 – 82

133. பட்டின, அடி; 29 –30

134. புறம், 343 : 1 – 2

135. மயிலை சீனி. வேங்கடசாமி, தொகுப்பு நூல்கள், 3, ப. 159

136. மணிமேகலை. 14 : 73 – 82

137. பதிற், 8 : 6, மதுரை, அடி; 375 – 379

138. பரி, 10 : 38 – 39

139. சிலம்பு, 6 : 143

140. பட்டின, அடி; 216 – 218

141. மயிலை சீனி. வேங்கடசாமி, கொங்கு நாடும் துளு நாடும், ப. 161

142. மயிலை சீனி. வேங்கடசாமி, தொகுப்பு நூல்கள், 3, ப. 333

143. மதுரை, அடி; 315 – 324

144. பட்டின, அடி; 185 – 193

145. பெரும், அடி; 316 – 317

146. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், 3, ப. 109

147. புறம், 30 : 11 – 15

148. மேலது, 343 : 3 – 10

149. பதிற், பதி, 6:3–4

150. சிறு, அடி; 152 – 155

151. மேலது, அடி; 154 – 155

152. பெரும், அடி; 320 323, 346 – 350

153. மதுரை, அடி; 424 – 430

154. மேலது, அடி; 543 – 544

155. பட்டின, அடி; 180 – 182

156. மதுரை, அடி; 372– 373

157. மேலது, அடி; 500

158. பட்டின, அடி; 207

159. மேலது, அடி; 208 – 211

160. வ. பெருமாள், இலக்கியமும் வாழ்க்கையும், ப. 25

161. The Encyclopaedia brittanica, P. 452

162. நன்னூல், நூற்பா, 11

163. தமிழ்க் கலைக்களஞ்சியம், தொகுதி – 4, ப. 452

164. மலை, அடி; 493

165. பெரும், அடி; 75

166. மதுரை, அடி; 181

167. மேலது, அடி; 181, நச்சி. உரை

168. பொருநர், அடி; 131

169. பதிற், 26 : 12

170. முருகு, அடி; 255, 256, 259, 260, 267

171. மேலது, அடி; 47 – 56

172. மேலது, அடி; 190 – 217

173. மேலது, அடி; 227 – 239

174. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 135

175. முல்லை, அடி; 3

176. மதுரை, அடி; 591

177. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப. 54

178. பரி. 41 – 51

179. பதிற், 31 : 7 – 9

180. தொல்; பொருள்; புறத். 5 : 9 – 10

181. புறம், 56 : 5 – 6

182. பெரும், அடி; 371 – 373

183. மேலது, அடி; 402 – 403

184. புறம், 241 : 2 – 3

185. முருகு, அடி; 155 – 159

186. நெடுநல், அடி; 167 – 168

187. தொல்; பொருள்; புறத், 4

188. K. G. S. Aiyar, cera kings, P. 16

189. பதிற்., 79 : 17 – 18

190. மதுரை, அடி; 453 – 455

191. மலை, அடி; 82 – 83

192. முருகு, அடி; 151 – 154

193. புறம், 91 : 5 – 7

194. புறம், 55 : 4 – 6

195. நெடுநல், அடி; 88 – 89

196. முருகு, அடி; 95 – 96

197. மதுரை, அடி; 468 – 474

198. பேரா. மு. சண்முகம் பிள்ளை, சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும், ப. 14

199. பெரும், அடி; 498– 499

200. முருகு, அடி; 126 – 137

201. மயிலை சீனி. வேங்கடசாமி, சமணமும் பௌத்தமும், ப. 50

202. பெரும், அடி; 410 – 411

203. பட்டின, அடி; 52 – 53

# இயல் - 2

## சங்கப்புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள்

# சங்கப் புற இலக்கியம் காட்டும் ஆட்சி முறைமைகள்

## முன்னுரை

சங்கப் புற இலக்கியங்கள் விரிவான ஆட்சி முறைமைகளைக் கூறியுள்ளன. "சென்ற காலத்தின் பழுதிலாத" அரசியல் – சமூக – மனிதப் புலங்களில், சங்கப் புற இலக்கியம் கண்டு, கண்டு – தெளிந்த ஆட்சிக் கூறுகளைப் – பொருளியல் நிலைகளில் அது வளர்ந்துகொண்டே கடைப்பிடித்த நெறிகளைப் பல இடங்களில் சுட்டியுள்ளன. அரசு, அரசுரிமை, மன்னன் – அவன் தகுதிகள் – சிறப்புகள் என்று அரசனைப் பற்றிய அச்சாணிச் செய்திகளை விளக்கியுள்ளன. அவற்றைத் தேர்ந்து, ஆட்சியாளன், ஆட்சிக்குழு – அலுவலர் நிலை மற்றும் அரசுக்கு வேண்டிய அடிப்படைப் பொருள்கள், அதன் வரவு – செலவுச் செய்திகளை ஆராய்ந்துள்ளன.

"படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்" என்று பிறகு வள்ளுவர் விரிவாகக் கூறும் அரசு சார் அமைப்பு நிலைகளைச் சங்கப் புற இலக்கியங்கள் முன்பே விரித்துரைத்துள்ளன. படை – பாதுகாப்பு, பல்வேறு நாட்டரண் பற்றிய செய்திகள், ஊர்ப் பாதுகாப்பு – தலைநகர்ப் பாதுகாப்பு – உள்நாட்டுப் பாதுகாப்பு, புரிந்த போர்கள், போர் அறங்கள், நீதி முறைகள், குற்றங்கள், தண்டனைகள் என்று சங்கப் புற இலக்கியங்கள் தெளிவுறுத்திய அரசு சார் கட்டமைப்புகளை இந்த இரண்டாம் இயல் ஆராய்ந்து புலப்படுத்தியுள்ளது. "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்று அச்சமூகங் கொண்டிருந்த அரசியல் சூத்திரத்தின் பல நிலைகளை இவ்வியல் ஆராய்ந்து, ஆய்வு முடிவுகளை இயலின் இறுதியில் தொகுப்புரையாகத் தந்துள்ளது.

## ஆட்சியமைப்புத் தோற்றம்

பண்டைக் காலத்தில் தமிழகம் பல வகைப்பட்ட தட்பவெப்ப நிலைகளும் புவி நிலைகளும் கொண்ட பரந்த நிலப்பரப்பாக விளங்கியுள்ளது. இந்நிலங்களில் வாழ்ந்த மக்களின் ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஐவகை நிலங்களாகப் பிரித்துள்ளனர். ஒவ்வொரு நிலத்திலும் வாழ்ந்த மக்கள் பொருள், நிலவிரிவு, பகை போன்ற பற்பல காரணங்களால் பிற நில மக்களோடு அடிக்கடி போரிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவ்வவ்நிலத்து மக்கள் தம்முள் அறிவாலும் ஆற்றலாலும் சிறந்தவனைத் தம் தலைவனாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவன் சொற்படி நடக்கலாயினர். இத்தகைய தலைமையே பின்னாளில் அரசாக வளர்ந்தது என்பர் சமூக வரலாற்று அறிஞர்கள்.

குறிஞ்சி நிலத்தில் விளைச்சல் மிகுதி இல்லை. இதனால் வளமை குறைவே. பிற நிலத்தார் இங்கு எளிதில் வருதல் இயலாது. பாலை நிலத்தில் வளங்களே இல்லை. நெய்தல் நில மக்கள் நாளும் மீன் பிடித்துப் பிழைப்பவர்கள். எனவே, இங்கும் செல்வம் மிகுதி குறைவே. ஆதலால் இம்மூவகை நிலங்களில் உடைமைகள் பறி போகுமே என்ற கவலை அந்நில மக்களுக்கு இல்லை. அதனால் இம்மூன்று இடங்களிலும் தலைமை தோன்றி இருக்கலாமே தவிர நிலையான அரசு தேவைப்படவில்லை[1] என்னும் கருத்து எண்ணப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழ் மக்களுடைய பண்பாட்டு வளர்ச்சியில் முல்லை நிலமும் அந்நில மக்களின் வாழ்க்கையும் ஒரு சிறந்த நிலையை அடைந்திருந்தது. 'வாலாட்டி இருந்தால் காலாட்டி வாழலாம்' என்பது கிராம வழக்கு. இது கால்நடை வளர்த்து அவை அளிக்கும் பால், தயிர், வெண்ணெய் இவற்றை விற்றுப் பொருள் ஈட்டி வளமாக வாழலாம் என்பதாகும். கால்நடைகளைப் பாதுகாக்கவும் அவற்றால் வரும் நன்மைகளைப் பெறவும் பகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முல்லை நில மக்களுக்குத் தலைமை தேவைப்பட்டது. எனவே, தம்மில் வலிமையும் வளமையும் கொண்ட ஒருவனைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

எண்ணிறந்த ஆடு மாடுகளை வைத்திருந்த குடும்பத் தலைவனின் தந்தை செல்வ மிகுதியால் முதன்மை பெற்றுள்ளான். அத்தலைவனைக் 'கோன்' என்று அழைத்துள்ளனர். கோன் என்று இடையரைக் குறித்த சொல்லே அரசனையும் குறித்துள்ளதை மதுரைக்காஞ்சி (அடி; 74) வழி அறியமுடிகின்றது. எனவே, "நாட்டிற்குத் தலைவனாய் இருக்கும் அரசனின் தலைமை முல்லை நிலத் தலைவனிடமே தோன்றியிருத்தல் வேண்டும்"[2] என்பார் கூற்று இங்கு ஏற்கத்தக்கதே.

முல்லைக்கு அடுத்த நிலையில் மருதநிலம் செல்வம் கொழிக்கும் நிலமாக விளங்கியுள்ளது. கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் மருத நிலம் வித்திட்டுள்ளது. நாகரிகத்தின் பிறப்பிடமாய், பண்பாட்டின் தோற்றுவாயாய் அமைந்துள்ளது. "மருத நில நாகரீகம் வளர்ச்சியுற்ற போது நிலக்கிழார்கள் தோற்றம் பெறுகிறார்கள். நிலக்கிழார்களிடமிருந்து அரசர்கள் உருவாகிறார்கள்"[3] என்ற சி. மௌனகுருவின் கூற்று நினைக்கத்தக்கது. மருத நிமக்களின் நிலையான குடியேற்ற வாழ்க்கையினால் வேளாண் விளைச்சல் அதிகரித்துள்ளது. தங்களது பயிர்களையும், தானியங்களையும் விலங்குகளிடம் இருந்தும் பிற நிலமக்களிடம் இருந்தும் பாதுகாக்கும் நிலைக்கு ஆளாயினர். இதனால் தம்மில் பெருநில உடைமையாளர்களைத் தலைவனாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். அத்தலைவர்களை "வேள்" என அழைத்தமை தெரிகின்றது. "முல்லை நிலத்தை விட மருத நிலத்திற்குப் பாதுகாப்பு மிகுதியாகத் தேவைப்பட்டது. எனவே, மருதநிலத்தில் நிலையான அரசு ஏற்பட்டது என்கிறார் மா. இராசமாணிக்கனார்."[4]

இவ்வாறு திணை அடிப்படையில் வாழ்ந்த மக்கள் தங்களையும் தங்களுடைய உடைமைகளையும் பாதுகாப்பதற்காகத் தலைவனைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இத்தகைய தலைவர்களே பின்னாளில் தங்களது நிருவாகத் திறமையாலும், வலிமையாலும், கீர்த்தியாலும் மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்து மன்னர்களாக ஆட்சி செய்துள்ளனர் என்பது புலனாகின்றது.

## ஆட்சியாளரின் அரசுரிமை

சங்க காலத்தில் அரச உரிமை வழிவழியாக வந்துள்ளது. தேர்தல் இருந்ததாகத் தெரியவில்லை. பொதுவாக ஆட்சியில் இருக்கும் அரசனுடைய மூத்த மகன் தந்தையைத் தொடர்ந்து மன்னன் ஆகியுள்ளான். இதனை,

> "மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப்
> பாறரவந்த பழவிறல் தாயம்"[5]

எனப் பாடியுள்ளது புறநானூறு. இவ்வரசு கட்டில் உரிமையை, 'முறைமுதல் கட்டில்' (27 : 134) என்கின்றது சிலப்பதிகாரம்.

அக்கால ஆட்சியாளர்களிடையே வழிவழியே தொடர்ந்து வந்த அரசு கட்டில் உரிமை 'தாயம்' எனப்பட்டது. 'உருகெழு தாயம் ஊழின் எய்தி' (அடி; 227) எனப் பட்டினப்பாலை விளம்புகின்றது. கரிகாலன் தாய் வயிற்றிலிருந்து அரசுரிமை பெற்றான் என்பதைத் 'தாய் வயிற்று இருந்து தாயம் எய்தி' (அடி; 132) என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது.

தமிழரின் பழக்கவழக்கங்களைப் பற்றிப் பொதுவாகக் கூறும் தொல்காப்பியர், 'தாயத்தினடையா' என்று குறிப்பிடுகின்றார். தாயம் என்பதைத் 'தந்தையுடைய பொருள்களாய் மக்கள் எய்துதற்குரிய பொருள்கள்' என்று உரை தருகின்றார் நச்சினார்க்கினியர்.[6] இதனையே பதிற்றுப்பத்தும்,

> "சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்
> காவற்கமைந்த அரசு துறை போகிய
> வீறுசால் புதற்வற் பெற்றனை"[7]

எனப்பாடுகின்றது. மேலும், "வாழ்த்தல் ஈயா வளனறு பைதிரம்" (பதிற். 19: 18) என்னும் அடியில் 'பைதிரம்' என்பது பித்ருவிடமிருந்து மகன் பெறும் நிலம் என்கிறார் ரா. இராகவையங்கார்[8] ஆகவே, மேற்கூறியபடி தாயம் என்பது தந்தையின் பொருளை மகன் உரிமை கொள்வது எனத் தெரிகின்றது.

அரசு கட்டில் காலியாக இருந்தால் வாரிசுக்கு அரசு கட்டிலேற உரிமை இருந்தால் எந்த வயதிலும் ஒருவன் மன்னன் ஆகலாம் எனத் தெரிகின்றது. கரிகாலன் இளம் வயதில் அரசு கட்டில் ஏறினான் எனப் பல குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.[9] தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் தன் பகைவரோடு போரிடச் சென்ற போது மிக இளவயதினன் என்று புறநானூறு (72) வருணித்துள்ளது.

"அரியணையை அபகரித்தல் அதற்காகச் சதி செய்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகத் தெரியவில்லை"[10] என்பார் பி. கோமதிநாயகம். ஆனால், இலக்கியங்களை நோக்கும் போது ஒருவன் அரசப் பட்டத்திற்கு வருவது எப்போதும் அமைதியாக நிகழ்ந்தது என்று கூற இயலாது. கரிகாலன் சிறையிலிருந்து தப்பித் தன் உரிமையைப் பெற்றதை,

> "பிறர் பிணியகத்து இருந்து பீடுகாழ் முற்றி
> அருங்கரை கவியக் குத்திக் குழி கொன்று
> பெருங்கை யானை பிடி புக்காங்கு
> நுண்ணிதின் உணர நாடி நண்ணார்
> செறிவுடைத் திண்காப்பு ஏறிவாள்கழித்து
> உருகெழு தாயம் ஊழின் எய்தி"[11]

என வரும் பட்டினப்பாலை அடிகளால் உணரமுடிகின்றது.

நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பகைமை கொண்டு பலகாலம் போர் புரிந்துள்ளனர். இவர்கள் பகைமையைப் போக்க, "உன்னுடைய பகைவன் பனை மாலை சூடிய சேரனுமல்லன், வேம்பினது தாரையுடைய பாண்டியனுமல்லன்; உன்னைப் போல் அத்தியாற் கட்டப்பட்ட கண்ணியினை உடைய சோழனே. எனவே, இவ்வுள் நாட்டுக் கலகம் சோழ மரபுக்கே தீமை விளைவிக்க வல்லது" என்று கோவூர்கிழார் (புறம், 45:1 – 7) பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எக்காரணத்தினாலும் அரசுகட்டில் மன்னனை இழந்துவிட்டால் அதற்குரிய முறையான வாரிசு இல்லாதபோது அமைச்சரும் உயர் அலுவலரும்

சான்றோர்களும் மன்னனைத் தேர்ந்தெடுக்க விநோதமான ஒரு முறையைக் கையாண்டுள்ளனர். "ஒரு யானையின் துதிக்கையில் மாலையைக் கொடுத்து ஏவி விடுதல் வழக்கம். அது எவர் கழுத்தில் மாலையை இட்டுத்தன் மீது ஏற்றிக் கொண்டு வருகிறதோ அவரே கடவுள் விருப்பப்படி மன்னன் என ஏற்றுக் கொள்வது வழக்கமாக இருந்துள்ளது."[12] சோழ வேந்தருள் கரிகாலன் இம்முறையிலேயே அரசு கட்டில் ஏறினான் எனக் கூறுவாரும் உளர். இதற்குரிய குறிப்புகள் சங்கப்புற இலக்கியங்களில் இல்லை. ஆனால் இந்நூலுக்குப் பின்னர் தோன்றிய பழமொழி நானூற்றில் (62) இந்நிகழ்வு கூறப்படுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தம் உரிமையாகப் பெண்கள் அரசு கட்டில் ஏறினர் என்பதற்கான சான்றுகள் சங்கப்புற இலக்கியங்களில் ஏதும் இல்லாமை காணத்தக்கது. மேற்கண்ட இலக்கிய தரவுகளின்வழி அரசுரிமை 'தாயம்' என்ற சொல்லால் வழங்கப்பட்டதை அறிய முடிகின்றது. ஒருவன் அரசு கட்டில் ஏறுதல் எந்த வயதிலும் நிகழலாம் என்பது தெரிகின்றது. சிலர் தம் அரசுரிமையைப் போர் புரிந்து பெற்றுள்ளதையும் காணக்கிடக்கின்றது.

## மன்னன்

சங்க காலத் தமிழர்கள் வலுப்பெற்ற மன்னர்களால் ஆளப் பெற்றுள்ளனர். மன்னர்கள் அறிவிலும் கல்வியிலும் சிறந்த அறிஞர்களின் அறிவுரைகளையும் புலவரின் பொன்னுரைகளையும் கேட்டு நல்லாட்சி செய்துள்ளனர். மன்னரின் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி எழுந்ததாகத் தெரியவில்லை. மன்னர் யாவரும் மக்கள் வாழ்க்கையில் அமைதி நிலவ வேண்டும் என்பதை உணர்ந்து அதை போற்றிப் பாதுகாத்துள்ளமை தெரிகின்றது. இதனால் மன்னன் மக்களின் தந்தையாகவும் உயிராகவும் இறைவனாகவும் கருதப்பட்டுள்ளான். இதனை,

"------- ------- -------- காவல்
குழவி கொள்பவரி னோம்பு மதி"[13] – என்றும்,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே!
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"[14] – என்றும்,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"[15]

என்று வரும் பாடலடிகளால் உணரமுடிகின்றது.

## மன்னன் கடமைகள்

மக்கள் நலன் கருதியே மன்னர்கள் ஆட்சிபுரிந்துள்ளனர். இருந்தும் காலப்போக்கில் மன்னனுக்கு என்று இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. கல்வி கற்றல், கற்றோரை ஆதரித்தல், குடிகளைப் பாதுகாத்தல், தீயவரை ஒறுத்தல், வேள்வி செய்தல் என்பன மன்னன் கடமைகளாகத் தொல்காப்பியம் (நூற்பா, 1562) பகர்கின்றது. மன்னன் வேள்விகளைச் செய்யும் பொழுதும், தன் பிறந்த நாள் விழாவிலும், பிற சிறப்பு நாட்களிலும் பலவகைத் தானங்களைச் செய்வது வழக்கமாக இருந்துள்ளது. நாட்டு நலத்திற்கும் குடிகள் நலத்திற்கும் இவ்வாறு தானம் செய்தல் மன்னனது கடமை என நம்பப்பட்டது. "அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்" (அடி; 200) என்று கரிகாலன், வேள்விகள் செய்ததைப் பட்டினப்பாலை இயம்புகின்றது.

குடிகளது பொருளாதார வளர்ச்சியில் பங்கெடுத்தல் அரசனது கடமையாகும். பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் என்ற மூன்றையும் மன்னன் ஆதரித்துள்ளான். கரிகாலன் காடுகளை அழித்து நாடுகளைப் பெருக்கியும், நீர் நிலைகள் ஏற்படுத்தியும் நாட்டின் வளத்தை உயர்த்தியதை,

"காடு கொன்று நாடுஆக்கிக்
குளம் தொட்டு வளம் பெருக்கி"[16]

எனப் புலவர் உருத்திரங்கண்ணனார் பாடியிப்பது குறிப்பிடத்தக்கது. அரசன் தம்மை நாடிய கற்றறிந்த புலவரை ஆதரித்தமை தெரிகின்றது.

"——— ——— ——— பழுதின்
றீற்றா விருப்பிற் போற்றுபு நோக்கி"[17]

என்று கன்றினைப் பார்த்து இரங்கும் பசுபோல் அரசன் புலவரைப் பார்த்து அவர்களின் துன்பங்களைப் போக்கியமையைப் பொருநராற்றுப்படைக் குறிப்பிட்டுள்ளது.

நுண்கலைகளை வளர்த்து ஊக்குவதும் மன்னரது கடமையாகும். ஆற்றுப்படை நூல்களின் வழி ஆட்சியாளர்கள் கலைஞர்களைப் போற்றிய திறத்தால் அவர்கள் கலைகளுக்கு அளித்த ஆதரவு தெளிவாகின்றது.

## மன்னன் தகுதிகள்

"ஓர் அரசனுக்குப் பின் அரியணை ஏறத் தகுதி உடையவன் அவ்வரசனுடைய கோப்பெருந்தேவியின் மூத்த மகனாவான். மூத்த மகன் இறந்து விடின் இளைய மகனும் ஆண்மக்களே இல்லாதபோது மகள் வழிப் பேரன்மாருள் மூப்புடையவனும், பேரன்மாரும் இல்லாத போது கோப்பெருந்தேவிக்கு அடுத்த தேவியின் புதல்வருள் மூப்புடையவனும் அவனும் இல்லாத போது பிற நெருங்கிய உறவினருள் தகுதிமிக்கவனும் அரியணை ஏறத் தகுதியுடையோர்"[18] என்கிறார் ஞா. தேவநேயப்பாவாணர்.

அரசனாவதற்குரியவன் இளமையிலேயே பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பல வகை படைப்பயிற்சியும், போர்ப் பயிற்சியும், வேட்டையாடுவதில் தேர்ச்சியும் உடையோனாய் விளங்க வேண்டும். அறிவு, ஆற்றல், அன்பு, அறம், மறம் முதலிய நற்குணங்கள் ஒருங்கே உடையோனாய்; பல அருஞ்செயல்களும், அறச் செயல்களும் ஆற்றிக் குடிகளின் உள்ளத்தைக் கவர்ந்தவனாய் இருத்தல் வேண்டும்.

## அரசச் சின்னங்கள்

அரசர்க்கு அவர்கள் தகுதிக்கேற்ப பல அடையாளங்கள் உள்ளன. அவை அரசச் சின்னங்கள் எனப்பெறும். படை, கொடி, குடை, முரசு, குதிரை, யானை, தேர், மாலை, முடி என்பன இன்றியமையாத அரசச் சின்னங்களாகத் தொல்காப்பியர்

கூறியுள்ளார்."[19] இவையின்றி குலம், பெயர், கோல், கட்டில், முத்திரை, கடி மரம், மனை எனச் சேர்த்துக் கூறுகின்றார் தேவநேயப்பாவாணர்.[20]

புலிக்கொடியும், ஆத்திமாலையும் சோழர்களுக்கு உரியதாக விளங்குகின்றது. மீன்கொடி, வேப்பம்பூமாலை பாண்டியர்களுக்கும், விற்கொடி, பனம்பூ மாலை சேரர்க்கும் உரிய அடையாளச் சின்னங்களாக விளங்குகின்றன. இம்மூவேந்தர்க்கும் உரிய கொடியின் சின்னங்களே முத்திரைகளாக உள்ளன. மூவேந்தர் அல்லாத அரசர்களுக்குத் தனித்தனியான அடையாளச் சின்னங்கள் இருந்தமையை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

## பெயர்களும் பட்டங்களும்

அரசர்களின் பெயர்களைக் குடிப்பெயர், இயற்பெயர், பட்டப்பெயர், விருதுப்பெயர், சிறப்புப்பெயர், உயர்வுப் பெயர், வரிசைப் பெயர், திணைநிலைப் பெயர், இயனிலைப் பெயர் என வகைப்படுத்துவர்.

மூவேந்தர் குடிப் பெயர்களில் முதன்மையானவை சேரன், சோழன், பாண்டியன் என்பனவாகும். பிற குடிப் பெயர்கள், சேரனுக்கு மலையன், வானவன், வில்லவன் எனவும்; சோழனுக்குச் சென்னி, கிள்ளி, செம்பியன் எனவும்; பாண்டியர்க்குச் செழியன், மாறன், வழுதி எனவும் இருந்தமை தெரிகின்றது.

இயற்பெயர் என்பது பெற்றோர் இட்ட பிள்ளைப் பெயராகும். பட்டப் பெயராவது அரசன் முடி சூடும் போது புனைந்து கொள்ளும் பெயர். விருதுப் பெயராவது அரசன் தன் பகைவரை வென்ற போது சூடிக்கொள்ளும் கொற்றப் பெயராகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் என்பது போரின் வெற்றியால் விளைந்த விருதுப் பெயரே. சிறப்புப் பெயர் என்பது நல்ல வகையிலோ, தீய வகையிலோ ஏதேனும் ஒரு சிறப்புப் பற்றி மக்கள் அரசர்க்கு இட்டு வழங்கும் பெயராகும். முதற் குலோத்துங்கச் சோழனுக்கு வழங்கிய 'சுங்கந்தவிர்த்த சோழன்' என்பது சிறப்புப் பெயரே.

இறைவன், அடிகள், தேவர் என மக்கள் அரசரைக் கண்ணியமாக அழைப்பது உயர்வுப் பெயராகும். வரிசைப் பெயர் என்பது அரசனின் தரத்தைக் குறிக்கும் வேள், மன்னன், வேந்தன் என்பனவாகும். வெற்பன், கானக நாடன், ஊரன், துறைவன், விடலை முதலிய ஐந்திணைப் பற்றி அழைப்பது திணைநிலை பெயராகும். செம்மல், வள்ளல் என ஏதேனும் ஓர் இயல்பு பற்றி வழங்குவது இயனிலைப் பெயர் எனப்படும்.

மேற்கண்ட பெயர்கள் மக்கள் மன்னர்களுக்கு இட்டு அழைத்தவையாகும். அரசர்கள் தம் கீழ்ப் பணியாற்றும் அலுவலர்களுக்கும் நாட்டில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்தவர்களுக்குச் செய்யும் கவுரவமும் பட்டங்கள் ஆகும். இப்பட்டங்களைத் தொல்காப்பியம் 'மாராயம்' (தொல், பொருள், புறத், 7:5) என்கின்றது. இத்தகைய மாராயம் எட்டி, காவிதி, ஏனாதி எனப்படுகின்றது. எட்டியும், காவிதியும் சாதாரணமான கவுரவப்பட்டங்கள் என்கின்றார் நச்சினார்க்கினியர்.[21]

எட்டிப்பட்டம் வணிகரில் தலைசிறந்தவர்களுக்கு அளிக்கப்பெற்றுள்ளது. காவிதிப் பட்டம் மன்னர்களுக்கு அறிவுரை வழங்கும் நல் அமைச்சர்களுக்கு வழங்கியதை மதுரைக்காஞ்சி (அடி; 494 – 499) விளம்பியுள்ளது. எட்டிப்பட்டமும், காவிதிப்பட்டமும் மலரால் செய்யப்பட்டவை என்கின்றது மணிமேகலை.[22] ஏனாதிப்பட்டம் சிறந்த போர் வீரர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. "ஏனாதிப்பட்டம் பெற்ற ஒருவன் ரத்தினம் பதித்த தங்க மோதிரத்தைக் கவுரவ அடையாளமாக அணிந்திருந்ததை மதுரைக்காஞ்சி (அடி; 719) கூறியுள்ளது. இந்நிலையினில் ஆட்சியாளர்களுக்கு மக்கள் இட்டு வழங்கிய பெயர்களும், ஆட்சியாளர்கள் மக்களுக்குச் சூட்டிய பட்டங்களும் இலக்கியங்கள் வழி அறியவருகின்றன.

## ஆட்சிக் குழுக்களும் அலுவலரும்

நாட்டில் அமைதியும் நல்லாட்சியும் நிலவுவதற்கு மன்னனுக்குத் துணையாகச் சில அறிஞர்கள் கொண்ட குழுவும் இருந்துள்ளன. இக்குழுவினரின் அறிவுரையை ஏற்றே மன்னனும் நல்லதொரு முறையினை வழங்கியுள்ளமை

தெரிகின்றது. சங்கப் புற இலக்கியங்கள் இக்குழுவினரைச் 'சுற்றம்' என்று பாடியுள்ளமை காணத்தக்கது. இதனை,

"பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு"[23]

என்று புறநானூறும்,

"செய்த மேவ லமர்ந்த சுற்றமொடு"[24]

எனப் பதிற்றுப்பத்தும்,

"முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி"[25]

என மதுரைக்காஞ்சியும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

தேவநேயப்பாவாணர் இச்சுற்றத்தினரைப் பற்றிக் கூறும்போது, அரசனுடைய நன்மையையும், உடல் நலத்தையும் உண்மையாகக் கவனித்துப் பேணுவோரை, 'உறுதிச் சுற்றம்' என்றும் அரசனில்லாத அல்லது அவன் கடுநோய்ப்பட்ட சமயத்தில் அரசியலைக் கவனிப்போரை 'அரசியற் பொறுப்புச் சுற்றம்' என்றும் விளம்புகின்றார்.[26]

## ஐம்பெருங்குழு, எண்பேராயம்

மன்னன் நாட்டின் தலைவனாக விளங்கியுள்ளான். அவனுக்கு அறிவுரைகளும், அறவுரைகளும் கூற அரசியற் சான்றோரும், நாட்டுப் பிரதிநிதிகளும் இருந்துள்ளனர். இவர்கள் குழுமிய அவையினை, 'ஐம்பெருங்குழு', 'எண்பேராயம்' என்று அழைத்துள்ளனர். மன்னன் நல்லாட்சியில் இருந்து நெறி தவறும் போது அவனது தவற்றினைச் சுட்டிக் காட்டித் திருத்துவதாக இவர்கள் பணி இருந்தமையை,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்" (குறள்: 448)

என்ற திருக்குறள் உணர்த்துகின்றது.

அரசனுக்கு அறிவுரைகள் சொல்லவல்ல அறிஞரைக் கொண்ட நாற்பெருங்குழு ஒன்றினைப் பற்றி மதுரைக்காஞ்சி, "தாம் மேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும்" (அடி; 510) என்று கூறுகின்றது. இக்குழுவில் புரோகிதர், தானைத் தலைவர், தூதுவர், ஒற்றர் இடம் பெற்றுள்ளனர் என்று உரை கூறும் நச்சினார்க்கினியர், "செம்மை சான்ற காவிதி மாக்களும்" என்று 499 ஆம் அடியில் அமைச்சரைப் பற்றிய குறிப்பு உள்ளது. எனவே, எஞ்சிய நால்வரையே பின் கூறப்பட்டது என்பார். மேலும், "பொலம் பூண் ஐவர் உட்பட" (அடி; 775) என்று மதுரைக்காஞ்சி கூறியிருப்பதன் மூலம் ஆட்சிக் குழுக்கள் இருந்தமையை அறியமுடிகின்றது.

இவ்வாட்சிக் குழுக்களில் இடம் பெற்றவர்களின் பதவியின் பெயர், பணிகள், கடமைகள் என்பன பற்றிய செய்திகள் சங்கப் புற இலக்கியங்களில் எங்கும் காணப்படவில்லை. ஆனால், காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையினைக் கொண்டும், உரையாசிரியர்களின் உரையினைக் கொண்டும், வரலாற்று அறிஞர்களின் கூற்றினாலும் ஒருவாறு அறியமுடிகின்றது. வே. கனகசபை கூறும் போது, "ஆட்சிமுறை வல்லாட்சியினின்றும் மிக வேறுபட்டது. அரசனுடைய அதிகாரம் ஐந்து மன்றங்களால் மிகவும் கட்டுப்படுத்தப்பெற்றது என்பார்.[27] இக்கூற்றையே வி.ஏ. ஸ்மித், "தமிழ் மன்னர்களுடைய வரம்பிலா ஆட்சியைக் கட்டுப்படுத்த மக்கள், புரோகிதர், கணி, மருத்துவர், அமைச்சர் என்போர் கூடிய ஐந்து பெரிய மன்றங்கள் இருந்தன"[28] என்கின்றார். இங்கு இவர்கள் உரைப்பது ஐம்பெருங்குழுவை நினைவில் கொண்டே என்பது புலனாகின்றது.

கரணத்தலைவர், கருமக்காரர், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்ற எண்மரே

எண்பேராயத்தினர் என்று நச்சினார்க்கினியரும் அடியார்க்கு நல்லாரும் கூறுகின்றனர்.[29] இந்த எண்மரின் துணையோடு ஆட்சியாளர்கள் அரசுபுரிந்தமை தெரிகின்றது.

"ஐம்பெருங்குழு என்பது 'சிறிய சபை' என்றும் எண்பேராயம் 'பொது மக்கள் சபை' என்றும், நாட்டின் முன்னேற்றத்தில் அக்கரையுள்ள அனைத்துப் பிரதிநிதிகளும் எண்பேராயம் என்னும் சபையில் உறுப்பினராயிருந்தனர் என்கிறார் சாமி. சிதம்பரனார்.[30] இவ்விரு குழுக்களைப் பற்றித் தொல்காப்பியம் ஒன்றும் கூறவில்லை. திருக்குறளும் இயம்பவில்லை. ஆனால் திருக்குறள் இக்குழுக்களில் இடம்பெறும் அமைச்சர், ஒற்றர், தூதர், ஆகியோரை விரிவாகக் கூறியுள்ளது. சங்கப் புற இலக்கியங்களைப் பார்க்கும் போது மதுரைக்காஞ்சியைத் தவிர பிற நூல்களில் இக்குழுக்களைப் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லாமை காணத்தக்கது. எனினும் நிலவரி, சுங்கவரி, படைப்பிரிவு, பாதுகாப்பு முதலிய செய்திகள் பேசப்படுதலால் நாட்டின் நிருவாகத் திறமையினைத் திறம்படச் செயல்படுத்த இக்குழுக்கள் இருந்தன என்பது தெளிவாகின்றது.

## அமைச்சர்

மன்னர்கள் எவ்வளவு திறமை உள்ளவராய் இருப்பினும் கற்றறிந்த அறிஞர்களின் துணை கொண்டு, கூறும் அறிவுரைகளை ஏற்று நல்லாட்சி செய்துள்ளனர். மன்னனைச் சுற்றியோ அல்லது அவன் அருகிலோ இருந்து நீதியெனக் கண்டவற்றை எடுத்துக் கூறியதால் சங்க இலக்கியங்கள் இவர்களைச் 'சுற்றம்' என்கின்றது. "உரும்பில் சுற்றம்" (அடி; 447) எனக் கொடுமையிலாச் சுற்றத்தினரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது. பதிற்றுப்பத்து,

> "பன்மீ னாப்பட் டிங்கள் போலப்
> பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை"[31]

எனப் பல விண்மீன்களுக்கு நடுவே இருக்கும் திங்களைப் போல பல அறிஞர்களுக்கு நடுவே வீற்றிருந்த சேர மன்னனைப் பாடியுள்ளது.

இக்குழுவினருள் அமைச்சர், குழுவும் ஒன்று என்பார் நச்சினார்க்கினியர்."[32] சங்க இலக்கியங்களில் அமைச்சர் என்றச் சொல் எங்கும் காணப்படவில்லை. வள்ளுவர் அமைச்சு என்ற அதிகாரம் அமைத்து அவர்களின் தகுதி, திறமை, பண்பு ஆகியனவற்றை விரிவாகத் தந்துள்ளார். அதில் அமைச்சரை 'உழை இருந்தார்' (குறள்–638) என்றே கூறுகின்றார்.

பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தின் பதிகம், 'மையூர் கிழான்' என்னும் அமைச்சர் இளஞ்சேரல் இரும்பொறையின் அரசவையில் இருந்ததைக் கூறிப்பிட்டுள்ளது. சேரன் செங்குட்டுவனிடம் வில்லவன் கோதை, அழும்பில் வேள் என இரு அமைச்சர்கள் இருந்ததைச் சிலப்பதிகாரம் பகர்கின்றது.

மன்னனிடத்தில் உள்ள நன்மைகளையும் தீமைகளையும் ஆராய்ந்து கண்டுணர்ந்து, மன்னன் தீயவழியில் ஒழுகாமல் காத்துத் தம் மேல் பழி வராமல், நீக்கி, எங்கும் புகழ் பரந்து நிறைந்த தலைமை வாய்ந்த அமைச்சரை, "செம்மை சான்ற காவிதி மாக்கள்" (மதுரை, அடி; 499) என்கின்றார் மாங்குடி மருதனார். இதன்வழி அரசுறுப்பில் அமைச்சர் குழு இடம்பெற்று அரசியற் செயற்பாடுகளைத் தொடர்ந்து ஆற்றியமை தெரிகின்றது.

## தூதர்

நாடாளும் இரு மன்னர்களின் உறவு நிலைகளை வலுப்படுத்துவதற்கு இவர்களின் பணி முக்கியமானதாக இருந்துள்ளது. நல்ல அரசியல் நுட்பமும், சொல் வன்மையும் கொண்டவர்களாக இருந்துள்ளனர். தொல்காப்பியம்,

"ஓதல் பகையே தூது இவை பிரிவே" (தொல், பொருள், அகத், 27)

என்று தூது பற்றிக் குறிப்பிடுகின்றது. மேலும்,

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன" (தொல், பொருள், அகத், 28)

என்றும் கூறுவதன் மூலம் சமூகத்தில் உயர் நிலையில் இருந்தவர்களே தூது செல்ல முடியும் எனத் தெரிகின்றது.

வடநாட்டு மன்னன் நூற்றுவர் கன்னரிடமிருந்து சஞ்சயன் தலைமையில் தூதுவர்கள் சேரன் செங்குட்டுவனின் அரசவைக்கு வந்ததைச் சிலம்பு கூறுகின்றது. இதனை,

"சஞ்சயன் முதலாத் தலைகீடு பெற்ற
கஞ்சுக முதல்வர் ஈர் ஐந்நூற்றுவரும்
------ -------- -------- --------
செங்கோல் வேந்தன் திருவிளங்கு அவையத்துச்
சஞ்சயன் புகுந்து"[33]

என்ற பாடலடியால் உணரமுடிகின்றது.

சங்க காலத்தில் மிகவும் புகழ்பெற்ற தூதாக அதியமானிடமிருந்து தொண்டைமானிடம் ஔவையார் (புறம், 95) சென்றதையே கூறுவர். கோவூர்கிழார் அரசர்களின் கோபத்தைத் தணித்துச் சந்து செய்வித்ததைப் புறநானூறு (44 – 47) பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் புலவர்களும் மன்னர்களுக்காகத் தூது சென்றமையை அறியமுடிகின்றது.

## ஒற்றர்

சங்க கால ஆட்சியாளர்கள் ஒற்றர்களை அதிக அளவில் பயன்படுத்தியுள்ளனர். தொல்காப்பியம் இத்தொழிலை 'வேய்' (தொல்/ பொருள், புறத், 3:3) என்கின்றது. ஒற்றர்களின் பணி உள்நாட்டில் குழப்பம் விளையாமலும், பகை மன்னர்களின் தாக்குதலை முன்பே முறியடிக்கவும், நாட்டில் அமைதியான நல்லாட்சி நடைபெறவும் உதவியுள்ளது. அக்கால ஒற்றர்களின் இலக்கணம், சிறப்பு, தொழில் என்பன பற்றி வள்ளுவர் ஓர் அதிகாரமே (59) படைத்துள்ளார்.

பகை மன்னர்களின் மறைவான சதிச் செயல்களை அறிதல் மட்டும் ஒற்று அன்று. தம் சுற்றத்தாரையும் தன் கீழ்ப்பணியாற்றுவோரையும் கண்காணிப்பதும் ஒற்றாகும். இதனை,

"வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று" (குறள்: 584)

என்ற குறள் வழி அறியலாகின்றது. பகைபுலத்திலிருந்து செய்தி கொணர்ந்த ஒற்றர்களுக்கு மிகுந்த வெகுமதியளித்தனர் என்றும் தூதர்களைப் போல ஒற்றர்களும் ஐம்பெருங்குழுவில் ஒருவர் என்றும் கூறுகின்றார் நச்சினார்க்கினியர்.[34]

ஒற்றர்க்கும் தூதர்க்கும் இடையே உள்ள வேறுபாட்டினை வி.ஆர். ஆர். தீட்சிதர் கூறுவதன் வழி அறியமுடிகின்றது.[35] எனினும் ஒற்றர் என்போர் தூதரினின்றும் வேறுபட்டவராயினும் இவ்விரு வகை அலுவலர்க்கும் அளிக்கப்பட்ட பணிகள் ஒன்றையொன்று ஒத்திருந்தனவாகச் சிலம்பின் (26 : 145) வழி காணமுடிகின்றது. ஏனெனில் ஒரே வகை அதிகாரிகள் தூது, ஒற்று என்ற இரு பணிகளையும் மேற்கொண்டுள்ளனர். சாதாரணமாக அவர்கள் ஒற்றரே ஆனாலும் பிற அரசர்களோடு இணக்கமான உறவு ஏற்படத் தூதாகவும் மாறியுள்ளனர். இதுவும் ஒரு மறைமுகமான ஒற்றே எனலாம்.

தூதர்களுக்கு அளிக்கப்படும் உரிமைகள் ஒற்றர்களுக்குத் தரப்படவில்லை. ஒற்றர்கள் பகை நாட்டிற்குள் அகப்பட்டால் கொலைத் தண்டனை பெற்றுள்ளனர் எனத் தெரிகின்றது. "உறையூரில் அரசாண்ட நெடுங்கிள்ளி, இளந்தத்தன் என்னும் புலவன் ஒருவனை ஒற்றன் எனக் கருதி கொல்ல முற்பட்டுள்ளான். கோவூர்கிழார் உண்மையைக் கூறி அப்புலவனைக் காத்ததாகப் புறநானூறு (47) கூறியுள்ளது. இதனால் ஒற்றர்களின் பணி ஆபத்தானது என்பதை உணரமுடிகின்றது.

ஆட்சியாளர்கள் பிற நாட்டு நடப்புகளையும் உள்நாட்டு நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளவும் தனக்கும் தன் நாட்டிற்கும் பழி நேராமல் காப்பதற்கும் ஒற்றர்களைப் பயன்படுத்தியமை தெளிவாகின்றது.

## அரசின் வரவு – செலவு

அரசின் நிருவாகத் தேவைக்குப் பணம் முக்கிய பங்காக இருந்துள்ளது. அப்பணத்தினை மன்னன் மக்களிடம் இருந்து சில வகை வரிகள் மூலம் பெற்று வந்துள்ளான். அவ்வருவாயினைக் கொண்டு தன் சொந்த செலவிற்கும், பொதுச் செலவாக நிருவாகத்திற்கும் தேவைக்கேற்ப செலவு செய்தமை தெரிகின்றது.

## வரிகள்

மக்களைக் காத்தற்பொருட்டுப் படை முதலியவற்றை நிருவகிக்கவும் உணவுத் தேவையினை நிவர்த்தி செய்யவும், நீர்நிலைகளைப் பராமரிக்கவும் என நிருவாகத்திற்குத் தேவையான பணம் மக்களிடம் வரியாகப் பெறப்பட்டுள்ளமை தெரிகின்றது. அது குடிமக்களைப் புரத்தல் காரணமாய் இறுக்கப்பட்டமையின் சங்க காலத்திற் 'புரவு' எனப்பட்டது[36] என்கின்றார் சு. வித்தியானந்தன்.

வரிவாங்குவதற்கு என மன்னர்களால் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருந்தனர். வரி பெறுதல் நியாயமாகவும் நெறி பிறழாமலும் இருக்க வேண்டும் எனக் கருதப்பட்டது. "தவறான முறையில் ஈட்டப்பெற்ற செல்வமும் வரிகளும் தாம் கெடுவதேயன்றித் தம்மை ஈட்டுவானையும் கெடுக்கும் என்கிறார் வள்ளுவர்."[37] போரிலே நான் வெற்றி பெறவில்லை எனில் எம் அரசன் கொடிய வரி பெறும் அரசனென்று குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோல் மன்னனாவேன் என்று பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறியதை,

> "கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக"[38]

என்றும், அளவுக்கு அதிகமாக வரிபெறும் அரசனை,

> "குடிபுர விரக்குங் கூரி லாண்மைச்
> சிறியோன்"[39]

என்றும் புறநானூறு பாடுகின்றது. மேலும், மக்களிடம் இருந்து மன்னன் வரிபெறும் முறையினையும் (புறம், 184) திறம்படப் பாடியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## நிலவரி

நிலத்திலும், வாணிபத்திலும் இருந்து மன்னன் தன் வருவாயின் பெரும் பகுதியைப் பெற்று வந்துள்ளான். நிலவரிகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் இடம் பெறுதலால் அக்கால அரசு நிலவரி பெற்றமைத் தெரிகின்றது. "மிகவும் சாதாரணமான மிகுதியான ஒரு வரி இனம் நிலவரியே"[40] என்பார் ந.சுப்ரமண்யன். இந்நிலவரியைக் 'கறை' எனச் சிலம்பும் (23 : 127), 'படுவது' எனப் புறநானூறும் (17 : 6) சுட்டியுள்ளதைக் காணமுடிகின்றது.

வரி திரட்டப்படும் நிலப்பகுதி 'வாரியம்' எனப்பட்டது. நிலவரி என்பது மொத்த மகசூலில் ஆறில் ஒரு பங்காகும் என்பர். ஆனால், பரிமேலழகர் " ஆறில் ஒன்று என்பது நில மகசூலில் அன்று. ஒரு குடித்தனக் காரனின் மொத்த வரும்படியில் என்கிறார்."[41] சில நேரங்களில் வரிச் சுமையினைத் தள்ளுபடிச் செய்ய மன்னனை வேண்டியுள்ளனர். வெள்ளைக்குடி நாகனார் சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளி வளவனிடம் தன் நிலையினைக் கூறி நிலவரி நீக்கம் பெற்றதைப் புறநானூறு (35) கூறுகின்றது.

அந்தணர், புலவர் போன்றோருக்கு வரி நீக்கப்பட்ட நிலங்களைத் தானமாக அளித்தமை அறியமுடிகின்றது. அந்நிலங்கள் 'புரவு' அல்லது 'இறையிலி' நிலம் எனப்பட்டுள்ளது.[42] அவ்வாறு "வரி நீக்கம் செய்யப்பட்ட நிலம் கொடுக்கப்பட்டவர்களிடம் இருந்து ஒரு குறிப்பிட்ட தொகை மன்னன் பெறுதல் மரபு" என்கிறார் நச்சினார்க்கினியர்.[43] மன்னர்கள் நிலவரியைக் காசாகப் பெற்றனரா அல்லது தானியமாகப் பெற்றனரா என்பதனைச் சங்கப் புற இலக்கியங்களில் அறியமுடியவில்லை. "தென்னாட்டு நடை முறைகள் யாவற்றையும் வடநாட்டு நடை முறைகளோடு பொருத்திக்கூறும் இராமச்சந்திர தீட்சிதர், வடமொழி நூல்களில் கண்ட ஆறிலொரு பகுதியையே தமிழ் மன்னர்களும் இறையாகப் பெற்றனர்" என்கிறார்.[44]

## சுங்கவரி

வாணிபத்திலிருந்தும் மன்னனுக்கு மிகுதியான வருவாய் கிடைத்துள்ளது. சங்க காலத் தமிழகம் மேற்கே உள்ள நாடுகளோடு நல்ல வாணிகத்தொடர்பு கொண்டிருந்தமை அறியமுடிகின்றது. இவ்வாணிபத்தில் ஈடுபட்ட வணிகர்களிடம் இருந்து மன்னர் வரி பெற்றுள்ளனர். இவ்வணிக வரியே 'சுங்கவரி' எனப்பட்டுள்ளது. சுங்க வரி வாங்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் எனத் தெரிகின்றது.

"நல் இறைவன் பொருள் காக்கும்
தொல் இசைத் தொழில் மாக்கள்
காய் சினத்த கதிர்ச் செல்வன்
தேர் பூண்ட மாஅ போல
வைகல் தொறும் அசைவு இன்றி
உல்கு செய"[45]

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியிருப்பதன் மூலம் வரி வாங்குவோர் சோர்வடையாமல் ஓய்வின்றி வரிபெற்றமையை அறியமுடிகின்றது. உள்நாட்டில் மிளகுப் பொதிகளை ஏற்றிச் சென்ற வணிகர்கள் வரி செலுத்தியதைப் பெரும்பாணாற்றுப்படை (அடி; 80 – 87) கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

## பிற வருவாய்கள்

அரச கருவூலம் நிலவரி, சுங்க வரியே இன்றி, நச்சினார்க்கினியர் கூறும் இவ்வழிகள் மூலமும் நிரம்பியுள்ளமை புலனாகின்றது. 1. சொத்திற்கு உடையார் யாரென்று தெரியாத நிலையில் கள்வர்களிடம் இருந்து கவர்ந்த பொருள்கள், 2. இறையிலி நிலங்களை அந்தணர்கட்களிக்கும் போது மன்னர்கள் ஏற்றுக் கொள்ளும் சிறு வரிப்பணம். 3. போர்க்கள வெற்றியில் பகைப்புலம் பற்றல், 4. சொத்திற்குடையார் வாரிசின்றி இறந்தாலும், தானமாகக் கொள்ள அந்தணர் இல்லாத போதும், அச்சொத்துக்கள், 5. பிற வருவாய்கள் போதாவிடின் வாணிபத்தை மேற்கொள்ளல், 6. சட்டத்தை மீறினோர்க்கு விதிக்கப்படும் அபராதத் தொகைகள் என்பனவாகும்.[46]

"உறுபொருளும் உல்குபொருளும் தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்:756)

என்கின்றார் திருவள்ளுவர். உறுபொருள் என்பதற்குப் 'புதையல்' அல்லது 'வாரிசிலிப்பொருள்' என்று உரை நவில்கின்றார் பரிமேலழகர். சில அறிஞர்கள் இதனை நிலவரி என்றே பொருள் கூறுகின்றனர்.[47] மேற்கண்ட இவ்வழி முறைகளால் அரசக் கருவூலம் நிரம்பியதை அறியமுடிகின்றது.

## அரசச் செலவினங்கள்

அரசின் செலவினங்கள் அரசனாலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன. மக்களின் நலன் கருதி படையும், பாதுகாப்பையும் பெருக்கியுள்ளான். தேவை ஏற்படின் போரிட்டும் வந்தமை தெரிகின்றது. கரிகாலன், வெண்ணி என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் சேரனையும் பாண்டியனையும் இறக்கச் செய்தான் எனப் பொருநராற்றுப்படை விளக்குகின்றது. இதனை,

"இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"[48]

என்ற அடிகளால் உணரமுடிகின்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் செய்த போரினை மதுரைக்காஞ்சி,

"இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது அவரைச் செருவென்று"[49]

எனப் பாடுகின்றது. இவ்வாறான போர்ச் செய்திகள் சங்கப்புற இலக்கியங்களில் நிரம்ப இடம் பெற்றுள்ளதன் வழி அக்கால அரசு தனது வருவாயின் பெரும் பகுதியைப் படைப் பெருக்கத்திற்காகச் செலவிட்டு வந்தமை புலனாகின்றது.

அறச்சாலைகள், தவப்பள்ளிகள், மருத்துவமனைகள் என இவற்றிற்காகவும் செலவிடப்பட்டுள்ளது. வேளாண்மைக்கு முக்கியத்துவம்

அளித்து நீர் நிலைகளை ஏற்படுத்தியுள்ளனர். "குளம் தொட்டு வளம் பெருக்கி" (பட்டின, அடி; 284) எனப் பட்டினப்பாலை கரிகாலனைப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. நாட்டில் பல கோயில்கள் எழுப்பிள்ளனர். அக்கோயில்களுக்குத் திருவிழாக்கள் எடுத்தமையை,

> "கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
> ஆடுதுவன்று விழுவின் நாடு"[50] – என்றும்,
>
> "அந்தி விழுவின் தூரியம் கறங்க"[51]

என்றும் இடம்பெறும் பாட்டடிகள் உணர்த்துகின்றன. சுப தினங்களில் மன்னர்கள் மக்களுக்குப் பல பரிசில்களை வழங்கியுள்ளனர். ஆற்றுப்படை நூல்களின் வழி கலைகளுக்கும், ஆற்றுப்படைக் கலைஞர்களுக்கும் மன்னர்கள் அளித்த ஆதரவினை அறியமுடிகின்றது.

இவ்வாறு நாட்டின் பாதுகாப்பிற்கும், இறைவழிபாட்டிற்கும், நிலவளத்திற்கும், நீர் வளத்திற்கும் நுண்கலைகளின் பெருக்கத்திற்கும், அறச் சாலைகளுக்கும் என வருவாயின் சில பகுதிகளைச் செலவு செய்தமையை உணர முடிகின்றது.

## படையும் பாதுகாப்பும்

ஒரு நாட்டு அரசியலுக்குப் படையே அடிப்படை. படை இருந்தால் நாடில்லாதவனும் நாட்டைப் பெறலாம். படை இல்லையெனில் நாடுடையவனும் அதை இழப்பான். ஆதலின் படையானது அரசனுக்கு இன்றியமையாத உறுப்பாகும். இதனாலேயே அரசர்க்குரிய மரபுகளைக் கூறும் தொல்காப்பிய நூற்பாவிலும் (மரபியல், 72), அரசுறுப்புக்களைக் கூறும் குறளிலும் (381) படை முதலில் கூறப்படுகின்றது. மன்னர் தொழிலாகிய காவல், போர் என்ற இரண்டிற்கும் படையே இன்றியமையாதலின்,

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை"[52]

என்கின்றது திருக்குறள்.

## படை வகைகள்

சேனையைப் படை என்றனர். அச்சொல் போர்க்கருவி என்று பொருள்படும். அதற்கேற்ப படை அழிப்பதற்காகப் பயிற்றப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய கடல் போன்றதென்பதை "அரவக்கடல் தானை அதிகனும் கரவாது" (அடி; 103) என்கின்றது சிறுபாணாற்றுப்படை. இப்படையின் அழித்தல் திறனைக் கருதி இதனை நெருப்பிற்குச் சமமாக "எரி நிமிர்ந்தன்ன தானை நாப்பண்" (அடி; 734) என்கின்றது மதுரைக்காஞ்சி.

இத்தகைய படையினை இடத்தால்,

1. நிலப்படை
2. கடற்படை

என இருவகைப்படுத்துவர். இவற்றுள் நிலப்படை ஊர்தி பற்றி,

1. காலாட் படை
2. குதிரைப்படை
3. யானைப் படை
4. தேர்ப்படை

என நால்வகைப்படுத்துவர். இவற்றுள் காலாட்படை கருவியால்,

1. விற்படை
2. வாட்படை
3. வேற்படை

என மூவகைப்படுத்துவர். எப்படையராயினும் போர் மறவரைப் பொருநர், படையாட்கள், படைஞர் என அழைத்துள்ளனர். "தொடக்கத்தில் மறவர் என்போர் கொள்ளைக் கூட்டத் தலைவர்களே, அவர்களது கொடுமையும் சீற்றமும் போர்ப்படையில் சேர்த்துக் கொள்ளத்தக்கத் தகுதிகளாயின"[53] என்கின்றார் ந. சுப்ரமண்யன்.

## காலாட்படை

படைமுறையில் முன்செல்வது காலாட்படை. படையின் முன்பகுதியினைத் 'தூசி' அல்லது 'தார்' எனவும், பிற்பகுதியினைக் 'கூழை' (புறம், 88:1) எனவும் அழைத்துள்ளனர். "தாரொடு பொலிந்த வினை நவில்" (அடி; 227) என்று மலைபடுகடாம் இக்காலாட்படையினைக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இப்படை வீரர்கள் போருக்குச் செல்வதற்கு முன் கள் பருகினர் என்பதை மதுரைக்காஞ்சி, "கள் ஆர் களமர் இருஞ்செரு மயக்கமும்" (அடி; 393) என்கின்றது. மேலும், இவ்வீரர்களின் வலிமையினையும் (அடி; 725 – 736) கூறியுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. உண்மையான போர் வீரன் என்பவன் போரிலே, "ஊழிக்கால மழைபோல் அம்பு மழை பொழிந்தாலும், பளிச்சிடும் வேல் மின்னினும், யானைகள் தந்தத்தால் குத்தினும் அஞ்சாத தறுகண்மை உடையவர்களாயும் புறமுதுகிட்டு ஓடாமலும் இருந்தமையை அறியக்கிடக்கின்றது."[54] இவ்வீரர்கள் போர் முரசொலி கேட்டவுடன் போர்க்களம் நோக்கி விரைந்துள்ளனர் (புறம், 279) என்பதைக் காணும்போது, இப்படை வீரர்களின் மறப்பண்பினையும் உணரமுடிகின்றது.

## யானைப் படை

முத்தமிழரசர்கள் யானைப்படையைக் கொண்டு போர்கள் மேற்கொண்டமையைக் காணமுடிகின்றது. யானை மறவர்க்கு ஆனையாட்கள், ஆனைப்பாகர்கள், குஞ்சரமல்லர், அத்திமல்லர் என்னும் பெயர்கள் வழக்கில் இருந்தமையை அறியமுடிகின்றது. யானைப் படையானது படைகளுக்கு நடுவே நின்ற காட்சியினை,

> "களிறே முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
> பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்"[55]

எனப் பாடியுள்ளார் முடமோசியார். போர்க்களத்திலே தாராளமாகத் தரப்பட்ட கள்ளைக் குடித்த யானைகள் மயங்கி பகைவரைச் சூறையாடிக் கொன்று

குவித்ததைப் பதிற்றுப்பத்து (3, 1 : 17) பாடியுள்ளது. யானைப்படையின் பலத்திற்கு எதுவும் நிகர் இல்லை என்று மதுரைக்காஞ்சி (அடி; 43 – 52) கூறுவதால் இப்படையின் வலிமையினை உணரமுடிகின்றது. இப்படை போரிலே சீற்றத்துடன் சென்று பகை வீரர்களைத் துவம்சம் செய்ததை,

"வினை நவின்ற போர் யானை
சினம் சிறந்து களன் உழக்கவும்"[56]

என மதுரைக்காஞ்சி சித்தரித்துள்ளது. பாசறையில் உணவு உண்ணாமல் நிற்கும் யனைக்கு யானைப்பாகன் வடமொழியில் பேசி உணவு அளித்தமையை முல்லைப்பாட்டு,

"கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா இளைஞர் கவளங் கைப்பக்"[57]

எனக் குறிப்பிட்டுள்ளது. இத்தகைய இலக்கிய சான்றுகளின் மூலம் யானைப்படையின் வலிமையினையும் மன்னர்களது போர் வெற்றிக்கு இப்படையின் பெரும் பங்களிப்பினையும் அறியக்கிடக்கின்றது.

## குதிரைப்படை

யானைக்கு அடுத்தபடியாக முக்கியமாகக் குதிரைப்படை கருதப்படுகின்றது. குதிரையினை அதன் வேகம், இயக்கம் என்பனவற்றைப் பார்த்துப் படைக்குத் தேர்வு செய்தமையை, மதுரைக்காஞ்சி (அடி; 48 – 52) கூறியுள்ளது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட குதிரைகளுக்குப் பிடரிமயிர் அழகாக வெட்டப்பட்டும், கழுத்தில் மணிகள் கட்டப்பட்டதையும் அறியமுடிகின்றது."[58]

குதிரைப் படை பகைவர் மீது செல்வதால் உண்டான துகள்கள் வானில் சூரிய ஒளியை மறைத்தனவாம். இதனை,

"மா எடுத்த மலி குரூஉத் துகள்
அகல் வானத்து வெயில் கரப்பவும்"[59]

என மதுரைக்காஞ்சி வருணித்துள்ளது.

"சோறு வாய்த் தொழிந்தோர் உள்ளியும் தோல் துமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவி சாய்த்து
உண்ணாது உயங்கும் மா"[60]

என்ற பாடலடிகளால், போரிலே ஈடுபட்டு அம்பு தைத்த வலியால் புல்லுண்ணாமல் நிற்கும் குதிரையைப் பற்றி அறியமுடிகின்றது. இதன்வழி மன்னர்களின் நாற்படைத்திறத்தில் குதிரைப்படையும் ஒன்றாக விளங்கியமையை உணரலாகின்றது.

## தேர்ப்படை

தேர் உள்ளமைப்புச் சிறியதாகவும் அதில் வீரனும் பாகனும் இருக்கத்தக்க அளவில் செய்யப்பட்டுள்ளது. இத்தேர்கள் குதிரைப்பூட்டி இழுக்கப்பட்டதையும், தேரின் உச்சியில் கொடிகள் பறந்துள்ளதையும் அறியமுடிகின்றது.[61] தாவும் குதிரைகளைப் பூட்டிய இத்தேர்ப்படை காற்றுச் சுற்றி அடித்தாற்போல் சுழன்றதை,

"வாம் பரிய கடுந்திண்தேர்
காற்று என்னக் கடிது கொட் பவும்"[62]

என மதுரைக்காஞ்சி பாடியுள்ளது. மேலும், சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி பல தேர்களை வைத்திருந்ததையும், அதனால் அவன் புகழ் பெற்றதையும் பொருநாற்றுப்படை (அடி; 129-130) கூறியுள்ளது. இங்கு எண்ணத்தக்கது. இத்தரவுகளின் வழி நால்வகைப்படைகளுள் தேர்ப்படையும் போரிலே ஈடுபட்டு மன்னர்களுக்கு வெற்றியை ஈட்டித்தந்தமை புலனாகின்றது.

## கடற்படை

மூவேந்தர்களிடம் தொன்றுதொட்டுக் கடற்படை இருந்துவந்தமை தெரிகின்றது.

"வானியைந்த இருமுந்நீர்ப்
பேஎம் நிலைஇய இரும்பௌவத்துக்
கொடும்புணரி விலங்குபோழக்
கடுங்கலொடு கரைசேர
நெடுங்கொடி மிசை யிதையெடுத்

தின்னிசைய முரசு முழங்கப்
பொன்மலிந்த விழுப்பண்டம்
நாடார நன்கிழிதரும்
ஆடியற் பெருநாவாய்
மழை முற்றிய மலைபுரையத்
துறைமுற்றிய துளங்கிருக்கைத்
தெண்கடல் குண்டகழிச்
சீர்சான்ற உயர்நெல்லின்
ஊர்கொண்ட உயர்கொற்றவ"[63]

என வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வடிவம்பலம்ப நின்ற பாண்டியன் கடற்படை கொண்டு சாலி என்னும் சாவகத் தீவை வென்ற செய்தியை, அவன் வழியினனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் மேலேற்றி மாங்குடி மருதனார் கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், கடம்பமரத்தைக் காவல் மரமாகக் கொண்டு தீவுகளில் வசித்த கடம்பர்களை அழித்து அக்கடம்பினை வெட்டிப் போர்முரசு செய்தான் என்பதை,

"-------- -------- மாக்கடல் நீக்கிக்
கடம்பறுத்து இயற்றிய வலம்படு வியன்பனை"[64]

எனப் பதிற்றுப்பத்துப் பாடியுள்ளது. சங்கப் புற இலக்கியங்கள் கூறும் இக்கடல் போர் நிகழ்வுகளின் மூலம் அக்கால ஆட்சியாளர்கள் கடற்படையிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி இருந்தமையை அறியமுடிகின்றது.

படைகள் மேற்கூறிய முறையிலன்றிப் போர்க்கால நிலையில், மூலப்படை, கூலிப்படை என்றும் தொகுக்கும் இடத்தால் நாட்டுப்படை, காட்டுப்படை என்றும் சேர்ந்துள்ள பக்கத்தால் துணைப்படை, பகைப் படை என்றும் ஆறு வகையினதாகக் கூறுவர்.[65] இவற்றுள் மரபு வழி வந்த மூலப்படையே மன்னன் ஆபத்தில் இருக்கும்போது விரைந்து வந்து காப்பதாலும் எந்நேரமும் துணிவுடன் செயல்படுவதாலும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இம்மூலப்படையினை வள்ளுவர், 'தொல்படை' (குறள், 762) என்கின்றார்.

இம்மூலப்படை வீரர்கள் வழிவழியாய் மன்னர்களுக்குப் பணியாற்றியும் எத்தகைய எதிர்ப்பையும் கண்டு அஞ்சாமலும் இருந்துள்ளனர். இவர்கள் போரையே விரும்பியும், மன்னருக்காக உயிரினைத் தந்தும் வினையாற்றியமை தெரிகின்றது. இவர்களை,

> "உட்பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகைக்
> கேவா னாகலிற் சாவேம் யாமென
> நீங்க மறவர் வீங்குதோள் புடைப்ப"[66]

என்று கோவூர்கிழார் கூறியிருப்பதால், நீண்ட நாட்களாகப் போர் புரியாத தொல்படை வீரர்கள் தன் மறமிகுதியால் தானே போருக்கு முனைவதும், மன்னன் தடுப்பினும் மீறுவது உண்டு என்பதும் அறியமுடிகின்றது.

கூலிப்படையாவது போர்க்காலத்தில் புதிதாகக் கூலி கொடுத்து அமர்த்தப்படுவது. நாட்டுப்படை என்பது மருதநில மக்கள் சேர்ந்தது ஆகும். காட்டுப்படை பாலைநிலவாசிகளும் குறிஞ்சிநிலவாசிகளும் சேர்ந்தது. இப்படை பிரிவுகள் பற்றி அறியவருதலால் மறக்குடி வீரனான தமிழன் என்றும் போரை விரும்பி புரிந்தமை புலனாகின்றது. இவ்வாறான படைகளை அக்கால ஆட்சியாளர்கள் நிருவகித்த திறனைச் சங்கப்புற இலக்கியங்கள் வழி கண்டு கொள்ளமுடிகின்றது.

## பாதுகாப்பு

உள்நாட்டில் குழப்பம் விளையாமலும் மக்கள் பயமின்றி வாழவும், வெளிநாட்டவர் தம் நாட்டை எளிதில் கைப்பற்றாமலும் இருக்கச் செய்யும் செயலே பாதுகாப்பு எனப்பட்டது.

## உள்நாட்டுப் பாதுகாப்பு

தன் மக்களைப் பலவகைத் தீங்குகளினின்றும் காத்தல் மன்னன் கடமையாகின்றது. திருட்டு, கொலை, கொள்ளை போன்றவை நிகழாமல் நாட்டைப்

பாதுகாக்க வேண்டியிருந்தது. இதனால் ஆட்சியாளர்கள் தம் உள்நாட்டுப் பாதுகாப்பிற்காக நகர்க்காவல், தெருக்காவல், ஊர்க்காவல்களை நியமித்துள்ளனர்.

## நகர்க்காவல்

நகரைக் காவல் காப்பதும், ஒற்றறிந்து உரைப்பதும் நகர்க்காவலரின் கடமையாகக் கருதப்பட்டுள்ளது. இரவு நேரங்களில் கொள்ளைக்காரர்கள் நகர வீதியிலே திரிந்தமையையும் அக்கொள்ளையர்களின் தோற்றத்தையும் தொழிலையும் மதுரைக்காஞ்சி (அடி; 634 – 642) விரிவாகப் பாடுகின்றது.

> "மென்னூல் லேணிப் பன்மான் சுற்றினர்
> நிலைக முளியர் கலனசைஇக் கொட்குங்
> கண்மாறு ஆடவர்"[67]

என்ற பாடலடியால், கள்வர்கள் பேரணிகலன்களைக் களவாடும் நோக்கோடு இடுப்பில் நூலேணியினைச் சுற்றிக் கொண்டு திரிந்துள்ளதையும், யாரேனும் பார்ப்பின், கண் இமைக்கும் நேரத்தில் மறைந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களாகவும் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. இத்தகைய கொள்ளைக்காரர்களை அடக்குவதற்காக மன்னர் காவலர்களை நியமித்தமை தெரிகின்றது.

மாங்குடி மருதனார், நகர்க் காவலரின் பண்புகளையும் செயல்களையும் கூறுமிடத்து, எளிதாகக் கள்வரைக் கண்டுபிடிப்பவர்கள், களவுத் தொழிலின் நுண்மையினை அறிந்தவர்கள், கள்வரைக் தேடும் போது வேட்டைப்புலி எனப் பார்வையும் துயிலாத கண்களையும் உடையவர்கள் எனவும், களவு நூலைக் கற்றுத்துறை போகியவர்கள் எனவும், சிறந்த விற்பயிற்சி பெற்றவர்கள்[68] என்றும் கூறுகின்றார். மேலும்,

"தேர்வழங்கு தெருவில் நீர்திரண்டு ஒழுக
மழையமைந் துற்ற வரைநா ளமயமும்
அசைவில ரெழுந்து நயம்வந்து வழங்கலின்"[69]

எனக் கூறுவதால், இவர்கள் மழைக்காலங்களிலும் சோம்பலின்றி நகரைக் காவல் காத்தமை தெரிகின்றது.

## ஊர்க்காவல்

இக்காவலர்கள் இரவு நேரங்களிலும் ஊரைக் காவல் காத்துள்ளமையை அறியமுடிகின்றது. நடு இரவில் சூலமேந்திய கையுடன் காவலர் திரிந்ததை, "யாமங் கொள்பவர் சுடர்நிழல்" (புறம், 37 : 9) எனப் புறநானூறு பாடியுள்ளது. காவலர்கள் மக்களை எச்சரிக்கும் பொருட்டும் தம் பணியைக் குறிக்கும் விதமாகவும் மணிகளை ஒலித்துள்ளனர். இதனை, "நெடுநா ஒண்மணி நிழத்திய நடுநாள்" (முல்லை, அடி; 50) என்ற பாடலடி உணர்த்துகின்றது.

## தெருக்காவல்

வழிப்போக்கரை வழிப்பறிக் கொள்ளைக்காரரிடமிருந்து காப்பதைக் கடமையாகக் கொண்டவர்கள் எனத் தெரிகின்றது. இளந்திரையன் நாட்டிலே வழிப்பறி கொள்ளையர் இல்லை எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகின்றார்.

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவும் களவுஏர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று"[70]

பெரும்பாணாற்றுப்படையின் இவ்வடிகளின் மூலம் இளந்திரையனின் காவலர் படையின் சிறப்பினை உணரமுடிகின்றது. மற்றும் "உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்" (பெரும், அடி; 81) என்பதனால் வணிகர் சென்ற வீதிகளும் காவல் காக்கப்பட்டமைப் புலனாகின்றது.

"இலைவேய் குரம்பை புழையதட் பள்ளி
உவலைக் கண்ணி வன்சொல் இளைஞர்
சிலையுடைக் கையர் கவலை காப்ப"[71]

என மதுரைக்காஞ்சிக் கூறுவதால் கையிலே வில்லேந்தி காவல் புரிந்த இளைஞர்களைப் பற்றி அறியமுடிகின்றது.

மேற்காணும் இலக்கியச் செய்திகளால் ஆட்சியாளர்கள் தம் மக்கள் பயமின்றி மன நிம்மதியோடு வாழ நகர்க்காவல், ஊர்க்காவல், தெருக்காவல் எனக் காவல்களை நியமித்துத் திறம்பட உள்நாட்டைப் பாதுகாத்து வந்தமை அறியலாகின்றது.

## தலைநகர்ப் பாதுகாப்பு

நாட்டின் தலைநகரைப் பகை மன்னர்களிடமிருந்து காக்க மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் என்ற ஐவகை அரண்களை அமைத்துப் பாதுகாத்து வந்தமையை அறியமுடிகின்றது.

## மதிலரண்

மதிலரண் 'மதில்', 'எயில்', 'இஞ்சி', 'சோ' என நால்வகைப்படும். புரிசை என்பது இவற்றின் பொதுப்பெயராக விளங்கியுள்ளது. நால்வகை மதிலரண்களுள் நல்ல உயரம் உடையது மதில். உயரத்தோடு அகலமுடையது எயில்; இவற்றோடு திண்மையும் உடையது இஞ்சி. இம்மூன்றோடு அருமையும் உடையது சோ. எனவே, சோவரணே தலைசிறந்ததாகக் கொள்ளப்பட்டமையை,

"உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்" (குறள். 743)

என்ற குறள்வழி உணரமுடிகின்றது.

நல்லியக்கோடனது நாட்டிலே பெரிய மதில் சூழ்ந்த அரண் இருந்தமையால் அப்பட்டினம் எயிற்பட்டினம் எனப்பட்டுள்ளது. இதனை,

"——— ——— மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவின் பட்டினம்"[72]

என்கின்றது சிறுபாணாற்றுப்படை.

செம்பையுருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கற்களால் கட்டப்படுவது இஞ்சியாகும். இதனை,

"செம்பு புனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு"[73]

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன. "நெடுமதில் நிரை ஞாயில்" (அடி; 66) என்கின்றது மதுரைக்காஞ்சி. உறுதியுடன் நின்று வெல்வதற்குக் காரணமான வீரத்திருமகள் என்றும் நிலைபெற்ற தன்மையுடைய மதிலானது மின்போல் ஒளி வீசியமையைத்,

"திருநிலை இய பெருமன் எயில்
மின்ஒளி எறிப்ப"[74]

எனப் பாடுகின்றது பட்டினப்பாலை.

பகைவர் வரவைத் தொலைவிலேயே காணும்படி புறமதிலின் மேல் பலதிசைகளிலும் பார்வை இருக்கை அமைந்திருந்ததைப் "பருந்து பறக்கல்லாப் பார்வற் பாசறை" (அடி; 231) என்று மதுரைக்காஞ்சி கூறுகின்றது. "மதிலுள்ள நகர்கள் பெரும்பாலும் கோட்டை, புரி, புரிசை, எயில், கடகம் என்னும் சொற்களுள் ஒன்றைப் பெயராகவோ, பெயரீடாகவோ கொண்டே அமையும்"[75] என்பார் ஞா. தேவநேயப்பாவாணர். இதன்வழி தலைநகர்ப் பாதுகாப்பிற்கு ஆட்சியாளர்கள் மதிலரண் அமைத்துக் காத்தமையை அறியமுடிகின்றது.

## நீரரண்

நீரரண் புறமதிற் புறத்து ஆறுங்கடலுமாகிய இயற்கை நீர் நிலையாகவும் அகழி அல்லது கிடங்கு என்னும் செயற்கை நீர் நிலையாகவும் இருக்கும் அரண்.

இதனை, "அருங்குழு மிளைக்குண்டு கிடங்கின்" (அடி; 64) என மதுரைக்காஞ்சி விளம்புகின்றது. இவற்றில் முதலைகள் நிரம்பக் கிடந்தன என்பதை,

> "இரைதேர்ந் திருவருங் கொடுந்தாள் முதலையொடு
> திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
> வரைபுரை நிவப்பின்"[76]

என மலைபடுகடாம் பாடியுள்ளது.

மண்ணுள்ள அளவிற்கு மிக ஆழமான நீலமணிபோன்ற நீர் உடைய கிடங்கினை, "மண்உற ஆழ்ந்த மணி நீர்க்கிடங்கின்" (அடி; 351) என்றும், கல்தரையைப் பொறிந்து செய்யப்பட்ட ஒடுங்கிய நீர் வரும் வாயையுடைய கிடங்கினைக் "கல்லிடித் தியற்றிய விட்டுவாய்க் கிடங்கு" (அடி; 730) என்றும் மதுரைக்காஞ்சி விளம்புவதால் நீரரணைப் பற்றி அறியமுடிகின்றது.

## நிலவரண்

நிலவரண் என்பது, பகைவர் அகழியைக் கடந்தவுடன் புறமதிலைப் பற்றாமைப் பொருட்டு அதன் புறத்தே விடப்பட்டுள்ள 'வெள்ளிடை' நிலமும், பகைவர் முற்றுகை நீடித்திருக்கும் போது அகத்தார்க்கு வேண்டும் உணவுப் பொருள்களை விளைத்துக் கோடற் பொருட்டும் புறமதிலின் உட்புறமாக விடப்படும் 'தண்ணடை' நிலமும் என இருவகைப்படும்.

> "மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
> காடு முடைய தரண்" (குறள். 742)

என்ற இக்குறளில் மண் என்பது வெள்ளிடை நிலமென்றும் அது பகைவர் பற்றாமைப் பொருட்டு நீரும் நிழலும் இல்லா மதிற்புறத்து மருதநிலம் என்றும் பரிமேலழகர் விளக்கம் தருதல் இங்கு கவனிக்கத்தக்கது.

"நாடுகண்டன்ன கணைதுஞ்சு விலங்கல்" (பதிற், 16 : 2) என்னும் பதிற்றுப்பத்துத் தொடரும் "நெடுநாட்பட அடைமதிற் பட்ட காலத்தே விளைத்துக்

கோடற்கு வயலும் குளமும் உளவாகச் சமைத்து வைத்தமையாற் கண்டார்க்கு நாடு கண்டாற் போன்ற இடைமதில்" என்று அந்நூலின் பழைய உரையாசிரியர் விளக்கம் தந்திருப்பதையும் காணமுடிகின்றது.

## காட்டரண்

படை மறவர் பகைவர்க்குத் தெரியாமல் மறைந்திருக்கக் கூடியதும், கூட்டமாகவும் வேகமாகவும் போர் வீரர்கள் புகமுடியாததுமான முள் மரங்கள் நிறைந்த காடாகும். இத்தகைய காவற்காடு இருந்தமையை மதுரைக்காஞ்சி "நரை உருமின் ஏறு அனையை" (அடி; 63) எனப் பாடியிருப்பதால் தலைநகர்ப் பாதுகாப்பிற்குக் காட்டரணின் பங்களிப்பை அறியலாகின்றது.

## மலையரண்

மக்கள் மலைமீது மேல்நோக்கி எளிதில் ஏற முடியாத நிலையில் அமைந்திருப்பது மலையரணாகும். பகைவர் யாரேனும் முயற்சிக்கும் நிலையில் சறுக்கிக் கீழே விழக்கூடியதாகவும் மேலிருந்து பெருங்கற்களைக் கீழ் நோக்கி உருட்டி விடக்கூடிய நிலையிலும் ஆபத்தானதாக அமைத்திருப்பது மலையரணின் சிறப்பாகும். மலைப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு ஆட்சிபுரிந்த ஆட்சியாளர்கள் மட்டுமே இத்தகைய மலையரண்களைக் கொண்டிருந்தல் வேண்டும் என்பதில் ஐயம் இல்லை. இக்கருத்தினை வலியுறுத்துவதாகவே, "இது குறுநில மன்னர்க்கு அவருள்ளம் குறும்பரசர்க்கு இன்றியமையாதது[77] என்கின்றார் ஞா. தேவநேயப்பாவாணர்.

ஆட்சியாளர்கள் தன் கடமைகளில் ஒன்றாக நாட்டுப் பாதுகாப்பையும் கருதி அதற்கான செயலிலும் ஈடுபட்டுள்ளனர். அப்பாதுகாப்பு உள்நாட்டுப் பாதுகாப்பு, தலைநகர்ப் பாதுகாப்பு எனப் பிரித்து அறிவதன் வழி அவர்களின் ஆட்சித் திறனைச் சங்கப் புற இலக்கியங்கள் வழி காணமுடிகின்றது.

## போர்

மன்னர்களின் நாடுகாவல், நன்மை செய்தல், போர் என்ற மூன்று செயல்களில் போரே சிறந்ததாகக் கருதப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் புறத்துறை என்றவுடன் போரே நினைவுக்கு வருமாறு போர் பற்றிய நிகழ்வுகள் நிறைந்துள்ளமை காணத்தக்கது. "பகையும் போரும் எக்காலத்தும் உண்டு"[78] என்பதால் போர்த்தொழில் அக்காலத்தில் ஒரு கலையாகவே இருந்திருக்கின்றது என்பதை உணரமுடிகின்றது. இதனை, "இருசாராரின் ஆண்மையை, மறத்தை அதாவது திறமைவாய்ந்த வீரத்தை உறுதி செய்யும் போட்டிப் பந்தயமாகவே வேடிக்கை விளையாட்டாகவே (Sports and Tournament) அக்காலத்தில் நடைபெற்று வந்திருக்கின்றது என்பார் தண். கி. வேங்கடாசலம்."[79]

போர் பற்றிய அறிஞர்களின் கூற்றினைக் காணும் போது, "பொதுவாக அரசர்கள் போர் வேட்கையுடையவராகவே இருந்தனர். போர்களும் அடிக்கடி நடைபெற்றன. போர்வீரத்தைப் பேரறம் என மதித்தனர். ஏழு அரசர் மீது வெற்றி பெறுவது சிறந்த மன்னருக்கு உரிய பெருமை எனக் கருதப்பட்டது"[80] என்பதாலும், "தமிழ்நாட்டு மூவேந்தர் அடிக்கடி ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டதாலும் மக்கள் அப்போர் ஆரவாரங்களுக்கிடையே வாழ்ந்தனர்"[81] என்பதாலும், "போராவது அரசியலோடு தொடர்புடைய ஒரு நிகழ்ச்சியாகும்"[82] என்று கூறுவதாலும், போரின் நிகழ்வுகளை ஒருவாறு உணரமுடிகின்றது. போர் இன்றியமையாத மற்றும் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்ததைக், "குழுக்குழுவாக மக்கள் வாழ்கின்ற வாய்ப்புடைய இடங்களில் எல்லாம் போர் என்பது தவிர்க்க முடியாததாகவே இருந்திருக்கின்றது"[83] என்றும், "போர் என்பது அக்காலத்தில் வாழ்வின் ஒரு பகுதியாகவும் சிலருக்குப் போரே வாழ்வாகவும் அமைந்திருந்தன"[84] என்றும் வரும் மேற்கோள்களால் அறியலாம்.

முடியுடை மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் நாளோயாது போர் மேற்கொண்டிருந்துள்ளனர். போரச்சம் தமிழினத்துக்கு ஓர் அரிய பொருளாயிற்று.

வீர மறவர்கள் போர் என்றவுடன் நன்றெனப் புறப்பட்டுள்ளனர் என்பது "பகையகத்துச் சாவார் எளியர்" (குறள், 723) என்ற வள்ளுவரின் கூற்றால் உணர முடிகின்றது.

"பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்று மென்னையு முளனே"[85]

என்ற புறநானூறு பாடலடி, மன்றில் தொங்கும் முழவினது கண்ணில் காற்றினால் உண்டாக்கப்பட்ட ஓசைக் கேட்பின், அதனைப் போர்ப்பறை ஒலி என்று மகிழ்ந்து கிளம்பும் வீரரைக் கூறுகின்றது. இதன்வழி தமிழர்களின் போர் உணர்ச்சியினை அறிந்துகொள்ளமுடிகின்றது.

## போருக்கான காரணங்கள்

போர் என்பது ஆசை, பாதுகாப்பு, பகை, தண்டனை, மறம், அருள் என்னும் ஆறுவகைக் காரணங்களால் நிகழ்த்தப்பெற்றிருக்கின்றன. ஆசையானது, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை, விண்ணாசை என ஐவகைப்படும். தற்காப்பு, நாட்டுக்காப்பு, மதக்காப்பு எனப் பாதுகாப்பு மூவகைப்படும். பகை என்பது பழி தீர்ப்பு, பழம்பகை, பொறாமை என மூவகைப்படும். பிறவரசனின் இகழ்ச்சிப் பற்றியதும், திறையிறாமைப் பற்றியதும், படையெடுப்புப் பற்றியதும் எனத் தண்டனை மூவகைப்படும். மறம் ஒன்றே. அருள் தன் குடிகள் மீது கொண்டதும், பிறர் குடிகள் மீது கொண்டதும் என இருவகைப்படும்.

சங்க காலப் போரைப் பற்றிக் கூறும் போது, "கால்நடைக்கான போர் என்பது மாறி, நிலம் பெரிதும் உற்பத்திச் சாதனமான பின்னாலே, முன்னது பின்னுக்குத் தள்ளப்பட்டு நிலத்துக்கான நாடுபிடி சண்டையாக மாறியது"[86] என்கிறார். கோ. கேசவன். இக்கூற்றினை ஏற்கும் விதமாகவே அக்கால ஆட்சியாளர்கள் தன் நாட்டின் நிலப்பரப்பினை விரிவுபடுத்த வேண்டும் என்ற ஆர்வ மேலீட்டால் போர் புரிந்துள்ளனர் எனத் தெரிகின்றது. இதனை,

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சு தகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே"[87]

என்ற தொல்காப்பிய நூற்பாவாலும்,

"வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ
திடஞ்சிறி தென்று மூக்கந் துரப்ப"[88]

என்ற புறநானூற்றுப் பாடலடியாலும் அறியமுடிகின்றது.

புகழ் வேண்டிப் போர் புரிந்த மன்னர்களும் பண்டைத் தமிழகத்தில் இருந்துள்ளதைச்,

"சிறப்புடை மரபில் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க
நல்இசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை அல்லது நீ ஒல்லாயே"[89]

என்ற புறநானூறு பாடலடியால் உணரமுடிகின்றது.

கரிகாற் சோழன் பகைவரின் காவலிலிருந்து தப்பிச் சென்று ஆட்சியுரிமையைப் பெறுவதற்காகப் போர் புரிந்ததிலிருந்து முறையே வரும் தன் அரசுரிமைக்குத் தடை ஏற்படும் போது போர் நிகழ்த்தப் பெற்றமை புலனாகின்றது.

கோப்பெருஞ்சோழனின் புதல்வர்கள் அரசுரிமைக்காக தன் தந்தையையே எதிர்த்துப் போரிட முனைந்ததிலிருந்து (புறம், 213) இளவரசன் தமக்கு முறையே வரும் அரசுரிமையை மன்னன் பதவியைத் துறந்து அளிப்பதற்கு முன்னே பெறுவதற்காகப் போர் புரிந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

தன்னுடைய ஆற்றலையும் வலிமையையும் உணராது இகழ்ந்துரைத்ததால் சோழன் நலங்கிள்ளியும் (புறம், 73), தன்னை இளையவன் என்று வெறுப்பச்

சொல்லியதால் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் (புறம், 72) பகைவர் மேல் போர் புரிந்ததிலிருந்து மாற்றரசர் தம் ஆற்றலை இகழ்தலைக் கேட்டு அதனால் வெகுண்டு போருக்கெழுந்தமை அறியலாகின்றது.

மூவேந்தரினும் புகழால் மேம்பட்ட பாரியை எதிர்த்து மூவேந்தர்கள் ஒன்று சேர்ந்து போரிட்டதிலிருந்து (புறம், 109 – 110) பொறாமை காரணமாகவும் போர்கள் மூண்டமை தெரிகின்றது. புறநானூற்றில் இடம் பெறும் மகட்பாற் காஞ்சித் துறைப் பாடல்களிலிருந்து பெண்கோடல் காரணமாகவும் போர்கள் நடைபெற்றமையை அறியமுடிகின்றது.

வெண்ணிப் பறந்தலை, வாகைப் பறந்தலை, கூடற் பறந்தலை, தலையாலங்கானம், நெய்தலங்கானம், கருவூர், கானப்பேர், கழுமலம், தகடூர் என்னுமிடங்களில் நடைபெற்ற போர்களைப் பற்றிச் சங்கப்புற இலக்கியங்கள் கூறுவதிலிருந்து ஏனைய வேந்தரை விடத் தாமே தலைமை பெற வேண்டும் என்ற வேட்கையின் காரணமாகவும் போர்கள் நிகழ்ந்தமை புலனாகின்றது.

"உட்பகை ஒருதிறம் பட்டெனப் புட்பகைக்கு
ஏவான் ஆகலின் சாவேம் யாம்என
நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப"[90]

என்ற கோவூர்கிழாரின் கூற்றால் போர் இல்லாவிடின் வீரர்கள் தங்களுக்குள்ளாகவே போரிட்டு மடிந்து விடுவர் எனத் தெரிகின்றது. எனவே, மறவர்களிடம் கணப்பட்ட மிகைப்பட்ட மறப்பண்பும் போருக்கு வித்திட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

வீரமரணம் பற்றிய நம்பிக்கைகளும் போர், மறம் ஆகியன பற்றிய கருத்துகளும் போருக்கு வித்திட்டுள்ளன. "சிறு சிறு நிலப்பரப்புகளை ஆண்ட மன்னர்களுக்கு உலகம் முழுவதும் தன் ஆணையைச் செலுத்த வேண்டும் என்ற ஆசை மட்டும் மித மிஞ்சி இருந்திருக்கின்றன. அதனாலேயே அக்காலத் தமிழகமெங்கும் போர்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன"[91] எனப் பண்டைக்

காலத் தமிழகத்தில் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருந்த போருக்கான காரணம் பற்றி ஆ. வேலுப்பிள்ளை கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

## போர் நிகழ்வுகள்

தமிழர்கள் பூக்கள் அணிந்து கொள்ளும் தமது பெருவிருப்பத்தைத் தாங்கள் மேற்கொண்ட போர்த் தொழிலிலும் கைக்கொண்டுள்ளனர். போரின் ஒவ்வொரு படிநிலையிலும் வேறுபாடு விளங்க ஒவ்வொரு பூவைச் சூடிச் சென்றுள்ளனர். அப்பூக்கள் மரப்பூக்களாகவும், பொற்பூக்களாகவும் இருந்துள்ளன. ஆநிரைகளைக் கவர்வோர், ஆநிரைகளை மீட்போர், படையெடுத்துச் செல்வோர் என முறையே வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி ஆகிய பூக்களை அணிந்துள்ளதைக் காணமுடிகின்றது. இருபடையும் கைகலந்து போர்புரியும் போது தும்பைப்பூவையும் வெற்றி பெற்றோர் வாகைப் பூவையும் சூடியுள்ளனர்.

போர் செய்வதற்கு முன் அரசன் பெருங்கணியரை அழைத்து நல்ல நாட்குறிப்பது மரபு. அதில் படையொடு போருக்குப் புறப்பட வசதியில்லாவிடின், அவன் தன் குடையையும் வாளையும் கோட்டைக்கு வெளியே போக்கி வைத்தல் வழக்கம். இதனை,

> "------- ------- திருமா வளவன்
> வாளும், குடையும் மயிர்க்கண் முரசும்
> நாளொடு பெயர்த்து"[92]

என்று திருமாவளவன் நல்லநாளில் வாளையும் குடையையும் முரசையும் அனுப்பியதைச் சிலப்பதிகாரம் கூறுவதால் அறியமுடிகின்றது.

போர் தொடங்குவதற்கு முன் மறவர்கள் குறியார்த்தல் உண்டு. இந்நிகழ்வு வாய்ப்புள், உன்னம், புள், விரிச்சி என நால்வகைப்படும்.

> "நென்னீ ரெறிந்து விரிச்சி யோர்க்கும்
> செம்முது பெண்டின்"[93] – என்றும்,

"——— ——— ——— புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்சே யாடவர்"[94]

என்று இடம்பெறும் சங்க இலக்கிய அடிகளால் போர் மறவர்கள் நல் நிமித்தம் பார்த்துச் சென்றமை விளங்குகின்றது.

போருக்குச் செல்வதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன் வள்ளுவன் யானை மீதேறி முரசறைந்து அறிவித்துள்ளான். அரசன் படை மறவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விருந்தளிப்பது வழக்கமாக இருந்துள்ளது. அந்நிகழ்வு 'பெருஞ்சோற்று நிலை' எனப்பட்டது. அதன் பின் போர் மறவர்களுக்கு அடையாளப்பூவும் போர்ப்பூவும் படைக்கலங்களும் அரசனால் வழங்கப்பெற்றுள்ளது. மன்னனும் போர் கோலங்கொண்டு போருக்குச் செல்வதுண்டு. இதனை,

"மூதூர் வாயிற் பனிக்கயம் மண்ணி
மன்ற வேம்பி னொண்குழை மிலைந்து
தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி
வெம்போர்ச் செழியனும் வந்தனன்"[95]

என்று தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் போர்க் கோலங்கொண்டதும்,

"இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
யரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
——— ——— ——— ———
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"[96]

என்று சேரனும், பாண்டியனும், சோழனும் அடையாளப் பூச்சூடிச் சென்றதைப் பாடும் அடிகளால் அறியமுடிகின்றது.

போருக்குச் செல்லுமுன் வேந்தர் குறுநில மன்னர் முதலியோரைத் துணையாக்கிக் கொள்ளுதலும் உண்டெனத் தெரிகின்றது. மலையமான் திருமுடிக் காரியின் துணையினை மூவேந்தரும் தனித்தனியே வேண்டியதையும் அவர்களின் தூதுவர் இவனைப் புகழ்ந்து பரிசில் நல்கியதையும்,

"மூவருள் ஒருவன் துப்பா கியர்என
ஏத்தினர் தரூஉங் கூழே"[97]

எனக் கபிலர் பாடியுள்ளதால் காணலாகின்றது.

அரசன் தனக்கு வெற்றி முழுவுறுதியாயிருப்பின் பகைவர் நாட்டைக் கைப்பற்றும் முன்னரே, அதைத்தன் இரவலர்க்கும், படைத் தலைவர்க்கும் பங்கிட்டு அளிப்பதும் உண்டு. அதனைக் "கொள்ளார் தேஎங் குறித்த கொற்றம்" (தொல், பொருள், புறத், 10:1) எனத் தொல்காப்பியம் பகர்கின்றது. படைகள் போருக்குச் செல்லும் போது பொதுவாகக் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்ற முறையினில் செல்வது வழக்கம். போர்க்களத்திற்கு அரசனுடன் புலவர், பாணர், கூத்தர் முதலியோரும் சென்றுள்ளனர்.

போருக்குப் புறப்படும் நாளன்று போர் முரசுகள் முழங்கப்பெற்றுள்ளன. போர் மறவர் வட்டுடையணிந்து, படைக்கலந்தாங்கிப் பூச்சூடி அணிவகுத்து, கொற்றவைக்குப் பலியிட்டு, நெடுமொழியும், வஞ்சினமும் கூறி ஆராவராத்துடன் புறப்பட்டுச் சென்றுள்ளனர். அவ்வாறு போர்க்களம் நோக்கிச் செல்லும் பொழுது வழியிலுள்ள பகைவர்களது ஊர்களைத் தீயிட்டுக் கொளுத்தி, அகப்பட்ட பொருளை வாரிக்கொண்டு சென்றதை,

"எல்லையு மிரவு மெண்ணாய் பகைவர்
ஊர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலைக்
கொள்ளை மேவலை யாகலின்"[98] – எனவும்,

"எல்லுப்பட விட்டசுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றோன்ற"[99]

எனவும் இடம்பெறும் புறநானூற்றுப் பாடலடிகளால் உணரமுடிகின்றது

பகைவர்களின் ஊர்களைப் பாழாக்கிச் சென்ற போர்வீரர்கள் பகை நாட்டை அடைந்து கோட்டையை முற்றுகையிட்டுள்ளனர். பகை மன்னரின் பாதுகாப்பு அரண்களான மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண் போன்ற பாதுகாப்பு

அரண்களை அழித்து முன்னேறியமை தெரிகின்றது. அவ்வாறு முன்னேறும் போது காவலாக அமைந்திருந்த கோட்டைக் கதவுகளைத் தகர்த்தெறிந்துள்ளனர். இக்கதவுகளில் அரசரின் அடையாளச் சின்னம் பொறிக்கப்பட்டிருந்ததை,

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயில் கதவம் எறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வாய் உழுவை பொறிக்கும் ஆற்றலை"[100]

என்று கோவூர்கிழார் பாடியுள்ளமையால் அறியலாம். இக்கதவுகளில் நெய்யூற்றி விளக்கு எரிந்ததால் கருமையாகக் காணப்பெற்றதை, "நெய்படக் கரிந்த திண்போர்க் கதவு" (மதுரை, அடி; 354) என்ற அடியால் உணரலாகின்றது.

தலைநகருக்குத் தொலைவான இடத்தில் நடக்கும் போருக்கெல்லாம் பாசறை அமைத்து முள்வேலி கோலப் பெற்றுள்ளது. இது வேனிற் காலத்தில் அமைக்கப்பெறின் 'வேனிற்பாசறை'யென்றும், குளிர்காலத்தில் அமைக்கப்பெறின் 'கூதிர்ப்பாசறை' எனவும் பெயர் பெற்றமை புலனாகின்றது. இப்பாசறையின் அமைப்பினையும் பாதுகாவலையும் அங்கு பணிபுரிவோரின் நிலையினையும் மன்னனின் மன ஓட்டத்தையும் முல்லைப்பாட்டு (அடி; 24 – 76) விரிவாகச் சித்தரித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

போர் தொடங்குமுன் போர்க்களத்தையடுத்த ஊர்களில் உள்ள ஆநிரைகள், பார்ப்பனர்கள், பெண்டிர், மகப்பேறு இல்லாதோர், பிணியுடையோர், குழந்தைகள், முதியோர் என அனைவரையும் அவ்விடத்திலிருந்து அகன்று பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல எச்சரிக்கப் பெற்றுள்ளனர்.

போர் தொடுத்து வந்த அரசன் பகை அரசனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்துவது போர் மரபாக இருந்துள்ளது. இம்மரம் நாட்டையும் மக்களையும் காக்கும் என நம்பியதால் 'காவல் மரம்' என்றும், அம்மரத்தினை வீரர்கள் இரவு பகலாகக் காவல் காத்து நிற்பதால் 'கடிமரம்' என்றும் அழைத்துள்ளமையைக் காண முடிகின்றது. இம்மரத்தைப் பகைவர் கைக்கொண்டு வெட்டாதவாறு

போற்றுதல் மானமுடைய அரசனின் மறப்பண்பாகும். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவரின் காவல் மரத்தை வெட்டி அழித்ததை, "கடிகாவினிலை தொலைச்சி" (அடி; 153) என்று மதுரைக்காஞ்சியும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் பகைவரின் காவல் மரமாகிய கடம்பினை வெட்டியதை,

"பலர்மொசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்"[101]

என்று பதிற்றுப்பத்தும் பாடியுள்ளதால் அறியமுடிகின்றது. மேலும், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன் மாறனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், "காவல் மரத்தை வெட்டுதலை ஓம்புவாயாக" (புறம், 57:10) என்று அறிவுறுத்துவதாலும் பகை மன்னர்களின் காவல்மரத்தை வெட்டுதல் படைமேற்கொண்ட மன்னனின் முதல் வெற்றியாகக் கருதப்பட்டமை புலனாகின்றது.

போர் தொடங்கும் பொழுது மழைக்குன்றென மருளத்தகும் களிற்றினைப் பகைவரிடையே செல்லவிட்டுக் குழப்பத்தை உண்டாக்கி, அப்பெரும் பிளவுகளிடையே வேலேந்திய வீரர்கள் விரைந்து நுழைந்து அப்படையினை அழித்துள்ளனர். பகைவரின் செறிந்த படை நடுவே களிறுகள் செல்வதை நீரைக் கிழித்துச் செல்லும் மரக்கலங்களுக்கு உவமையாக மாங்குடி மருதனார் பாடியுள்ளார். மேலும்,

"நளிகடல் இருங் குட்டத்து
வளிபுடைத்த கலம் போலக்
களிறு சென்று களன் அகற்றவும்
களன் அகற்றிய வியல் ஆங்கண்
ஒளிறு இலைய எஃகு ஏந்தி
அரைசுபட அமர் உழக்கி"[102]

என்ற புறநானூற்றுப் பாடலடியால் உணரமுடிகின்றது. யானையினது துணையைக் கொண்டு மாற்றார் படையினுள் புகும் காலாட்படை பெற்ற வெற்றியினையும் புறநானூறு (225:1-3) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போர்ப்படை வியூகம் சமயத்திற்கேற்ப சதுரம், நீள்சதுரம், வில், வளையம், வட்டம், அரை வட்டம், சக்கரம், சிறை, விரி பறவை, முதலிய வடிவில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதை உணரலாகின்றது. பகையரசனின் தலையேனும், பகைப் படைத்தலைவனின் தலையேனும் கொண்டு வந்து காட்டிய வீரனுக்கு அரசன் பெருங்கொடையளித்துள்ளான். அந்நிலை, 'தலை மாராயம்' எனப்பட்டுள்ளது.

பொதுவாகக் கரி, பரி, தேர், கால் என்னும் நாற்படைகள் ஒவ்வொன்றும் தம் இனத்துடனேயே பொரும். அங்ஙனமே படை மறவர், படைத் தலைவர், அரசர் ஆகிய முத்தரத்தாரும் தத்தம் தரத்தினருடனேயே பொருவர்.

'களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பறந்தலை' (புறம், 64:3) என்ற பாடலடி யானைப்படை போரிட்ட இடத்தைச் சுட்டுகின்றது. இருபக்கத்து வீரரும், படைத்தலைவரும் போரிட்டு உயிர் நீப்பின் இரு திறத்து அரசரும் போர்க்களம் புகுந்து போர் புரிவது இயல்பு. இது 'அறத்தின் மண்டல்' எனப்பட்டது. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேல்பல் தடக்கைப் பெருவிற் கிள்ளியும் இவ்வாறு போரிட்டதை,

> "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
> தாம் மாய்ந் தனரே"[103]

எனக் கழாத்தலையார் பாடியதால் அறியமுடிகின்றது.

போரினிடையே தோற்கும் நிலையிலிருக்கும் அரசன் போர்க்களத்தினின்றும் பாசறையினின்றும் தூது விடுப்பதும் உண்டு. மாற்றரசன் அதை மதித்து உடன்படிக்கைக்கு இணங்குவதும், மதியாது தூதரைச் சிறையிடுதலும், பெண் கோலம் பூணுவித்து அனுப்புதலும் உண்டு என்பதை உணரமுடிகின்றது.

போர் நடைபெறும் பொழுது ஆடையிழந்தவன், குடுமி கலைந்தவன், ஆயுதமிழந்தவன், பாசறை புகுந்தவன், தோற்றோடுபவன் முதலியோரிடம் போரிடுதலும், புண்பட்டு விழுந்தவனைக் கொல்லுதலும் படைமடமாகக் கருதப்பட்டுள்ளது.

போர் முடிவானது, அரசனுட்பட்ட அனைவரும் போரிட்டு மடிதல், இரண்டு அரசனும் உடன்படிக்கை செய்து கொள்ளுதல், சிறை பிடிக்கப்பட்ட அரசன் திறை கொடுத்தல், தோற்ற அரசன் ஓடிப் போகுதல் ஆகிய இந்நால்வகை நிலைகளுள் ஒன்றாய் இருந்துள்ளது. வென்ற அரசன் வெல்லப்பட்ட அரசனை நட்பரசனாக்கி மணவுறவு பூணல், சிற்றரசனாக்கித் திறையிடுவித்தல், பெருந்தண்டம் இறுவித்தல், காட்டிற்குத் துரத்திப் பதிலாளியமர்த்தல், மானக்கேடு செய்தும், செய்யாதும் சிறையிடல், கொல்லுதல் ஆகிய அறுவகைச் செயல்களுள் ஏதேனும் ஒன்றைச் செய்துள்ளான். சில நேரங்களில் தோற்ற அரசனின் தேவிமார் வென்ற அரசனின் தலைநகரிலுள்ள 'வேளம்' என்னும் சிறைக் கோட்டகத்தில் சிறையிடப்படுதலும் உண்டெனத் தெரிகின்றது.

சோழ மன்னன் செங்கணான் தன்னிடம் தோல்வியுற்ற சேரமான் கணைக்கால் இரும்பொறையைக் குணவாயிற் கோட்டம் என்ற இடத்தில் சிறை வைத்தமையைப் புறநானூறு (74) கூறியுள்ளது. கரிகால் வளவன் போல் சிறையினின்று தப்பித் தம் உரிமையையும் நாட்டையும் மீளப் பெற்றாருமுளர்.

போரில் வெற்றி பெற்ற அரசர் பகைவரின் முடியாகச் செய்யப்பட்ட பசும்பொன்னால் அடிபொலிய வீரக்கழல் செய்து புனைந்து கொண்டதை,

"முடிபுனைந்த பசும்பொன்னின்
அடிபொலியக் கழல்தைஇய"[104]

என்ற புறப் பாடலடி உணர்த்துகின்றது. பகைவரின் முரசைக் கவர்ந்து கொண்டதை,

"பிணியுறு முரசங் கொண்ட காலை"[105] – என்றும்,

"விசிபிணி முரசமொடு மண்பல தந்த"[106] – என்றும்,

"சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயின்"[107]

என்றும் வரும் புறநானூற்றுப் பாடலடியால் உணரலாகின்றது. இதனால் பகைத்தெழுந்த மன்னரை முரசத்தொடு கைக்கொள்ளுதல் அக்கால அரசரின் வீரத்தின் அறிகுறியாக இருந்தமை தெரிகின்றது.

போர் முடிந்தபின் அரசன் தன் மறவருள் காயப்பட்டவரைத் தேற்றலும், போற்றலும், பொருதுபட்டவரின் மக்கட்கு நன்கொடை அளிப்பதும் புலவர் ஆற்றுப்படைக் கலைஞர் போன்றோர்க்குப் பரிசளிப்பதும் வழக்கமாக இருந்துள்ளது.

"ஒன்னார் யானை யோடைப் பொன் கொண்டு
பாணர் சென்னி பொலியத் தைஇ
வாடாத் தாமரை சூட்டிய"[108]

என்பதினால், பகைவருடைய யானைப் பட்டத்திலுள்ள பொன்னைக் கொண்டு பாணரது தலை பொலியும்படி செய்து, வாடாத பொற்றாமரையை அரசர் சூட்டியதை அறியமுடிகின்றது. மேலும், போர் வீரரை ஒன்று கூட்டிப் போர் விருந்து அளிப்பதும் அதில் அரசனும் கலந்து கொள்வதும் வழக்கமாக இருந்துள்ளதையும் புறநானூறுப் (292 : 1 – 4) பாடலில் காணமுடிகின்றது.

வெற்றிபெற்ற அரசன் தோற்ற அரசனொடு நட்புறவு பூணாவிடத்து அவன் தலைநகரைக் கொள்ளையடித்தல், அதனை எரியூட்டுதல், அங்குள்ள பயிரிடப்பட்ட வயல்களை அழித்தல் முதலிய நாசச் செயல்களையும் செய்துள்ளனர். கட்டடங்களையும் மதில்களையும் இடித்தல், காவற்பொய்கையை யானைகளை விட்டுக் கலக்குதல், கழுதை ஏர் பூட்டி உழுது வெள்ளை வரகும், கொள்ளும் விதைத்தல் முதலான அவமானச் செயல்களிலும் ஈடுபட்டுள்ளமை அறியலாகின்றது.

"காலென்னக் கடிதுரா அய்
நாடுகெட எரிபரப்பி
யாலங்கானத் தஞ்சுவரவிறுத்
தரசுபட அமருழக்கி"[109]

என்ற மதுரைக்காஞ்சி அடிகள், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் காற்றெனப் பரந்து சென்று பகைவர் நாடு கெடும்படி தீயிட்டதைக் கூறியுள்ளது. போரில் எரியூட்டுதலைப் பற்றிய நிகழ்வுகளைப் பதிற்றுப்பத்துப் (25:7, 71:10) பல இடங்களில் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

நாட்டைத் தீயிட்டதால் எழும் பலவகை மணம் கமழும் புகை உறைதலாற் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் கண்ணி வாடிற்றாம். இதனை,

"வாடுக விறைவநின் கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை யெறித்த லானே"[110]

என்று பாடுகின்றார் புலவர் காரிகிழார். இவ்வாறு பகை நாடுகளைத் தீயிட்டு அழித்ததை மதுரைக்காஞ்சியும் புறநானூறும் பல இடங்களில் சுட்டியுள்ளது காணத்தக்கது.[111]

"வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
வெள்ளை வரகுங் கொள்ளும் வித்தும்"[112]

என்பதால், பகைவர் நாடுகளை அழித்து கழுதை ஏரால் உழுது வரகு, கொள் விதைத்தமைத் தெரிகின்றது. பகைவரின் காவலையுடைய பொய்கையில் யானையினை விட்டுச் சேதப்படுத்தியதை,

"துளங்கியலாற் பணை யெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறு மருப்பிற் களிறு அவர
காப்புடைய கயம்படியினை"[113] – என்றும்,
"கடிதுறை நீர்க் களிறுபடீஇ"[114]

என்றும் வரும் புறநானூற்றுப் பாடலடிகளால் அறியமுடிகின்றது.

சேரன் செங்குட்டுவன் பகைவர் ஊரை அழித்து அவ்வூர்ப் பெண்களின் கூந்தலைக் கயிறாகத் திரித்து அதனால் யானையைப் பூட்டிச் செலுத்தியதை,

"பல்லிருங் கூந்தன் முரற்சியாற்
குஞ்சர வொழுகை பூட்டி"[115]

என்று பதிற்றுப்பத்துக் கூறுவதன் வழி உணரலாகின்றது.

போரில் வெற்றிபெற்ற அரசன் வென்ற இடத்தில் கல்வெட்டல், வெற்றித்தூண் நாட்டல், பெருமலையிருப்பின் அதில் தன் இலச்சினையைப் பொறித்தல், தன் ஆணைக்கு அடிபணியும் வரை அங்கே தங்கியிருத்தல் முதலிய செயல்களும் செய்துள்ளனர்.

போரில் விழுப்புண்பட்டு இறந்த படைத்தலைவர்க்கும், சிறந்த மறவர்க்கும் அவருடைய ஊரும் பேரும் சீரும் பொறிக்கப்பட்ட கல் நடப்பெறும். அது 'நடுகல்' என்றும், 'பட்டவன் குறி' என்றும் அழைக்கப்பெற்றமை தெரிகின்றது. நடுகல்லை நீர்ப்படை செய்து அதற்கு மாலை சூட்டிப் படைப்பதும், கோயில் கட்டி விழா எடுப்பதும் உண்டு.

இப்போர் நிகழ்வுகளின் வழி அக்கால ஆட்சியாளர்களின் போர் வேட்கையினையும், படை மறவர்களின் வீரச்செருக்கினையும், நாற்படைத்திறத்தினையும் அறியமுடிகின்றது. பகைவரே ஆயினும் போர், நேர் முறையில் நடைபெற்றமை தெரிகின்றது. வெற்றி பெற்ற அரசர் தோற்ற அரசர்களை நடத்திய விதமும், நாடுகளை எரியூட்டி அழித்துப் பாழாக்கிய நிலையினையும் சங்கப்புற இலக்கியங்களின் வழி அறியக்கிடக்கின்றது. இப்போருக்குத் துணைநின்ற படை மறவர்க்குப் பரிசும், விருந்தும் அளித்து மகிழ்வித்தலையும் காணமுடிகின்றது. எவ்வாறாயினும் போரென்னும்போது பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பது மறுக்க முடியாததாகும்.

## போர் அறம்

அக்காலச் சமூக அரசியல் நிகழ்வுகளைக் காணும் போது போர் இன்றியமையாத ஒன்றாக இருந்தமை புலனாகின்றது. போரினால் நாட்டுக்குப் பெரும் இழப்பு உண்டானது என்பதில் ஐயம் இல்லை. இருந்தும் பொதுமக்களின் உடைமைகள் மட்டுமே பறிபோயிருக்கின்றன. உயிர் இழப்பு ஏற்பட்டதாக அறிய முடியவில்லை. போர் முனையில் நின்றவர் மட்டுமே உயிர் இழந்துள்ளனர். போர்

முனைக்குத் தகுதியற்றவர்கள், போரினை விரும்பாத மக்கள் பாதுகாப்பான வேறு இடத்திற்குச் சென்றுள்ளனர். இதனால் பொருள் சேதம் மட்டுமே ஏற்பட்டிருக்கின்றன. உயிர்ச் சேதம் இல்லாமை காணத்தக்கது.

அக்கால மன்னர்களின் போர் நிகழ்ச்சிகளைக் கூறும் இலக்கியங்கள் சமூக வளங்களையும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நுண்கலை வளர்ச்சியினையும், தொழில் உற்பத்தியையும் காணும்போது இவைகள் போரினால் பாதிப்பு ஏற்படாமல் இருந்தமை புலனாகின்றது. இக்கருத்தை வலியுறுத்துவதாகவே, "பொதுமக்களின் இயல்பான வாழ்க்கை எப்பொழுதுமே பாதிக்கப்படவில்லை. கலையும் தொழிலும் போராயினும் அமைதியாயினும் தொடர்ந்து நடைபெற்றன"[116] "போர்க் கொடுமைகளிலிருந்து முற்றிலும் தப்பி வாழ்ந்தவர்கள் நாட்டின் நுண்கலைகளை வளர்த்துள்ளனர். நகரத்தில் வாழ்ந்த மக்கள் செல்வம் தரக்கூடிய எல்லா இன்றியமையாமைகளையும் பொருள்களையும் நுகர்ந்து வாழ்ந்தனர்"[117] எனக் கூறும் வரலாற்று அறிஞர்களின் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்நிலைக்குக் காரணம் ஆட்சியாளர்கள் போர் அறங்களை மீறாமல் இருந்தமையே என்பது தெரிகின்றது.

கருத்து வேறுபட்ட இருமன்னர்களும் உடனே படையெடுத்துப் போர் புரியவில்லை. முறையே தங்களது பகைமையைக் காட்ட ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என்ற நிலையே போரின் தொடக்கமாக அமைந்துள்ளது. பின்னர் முறையே போர்ப்பறை அறிவித்துப் போர்க்களத்தில் போர் புரிந்துள்ளனர். இவ்வாறு போர் புரிவதற்கு முன் அங்கு வாழும் பொதுமக்களுக்கு அறிவித்து அவர்கள் வெளியேறிய பின்னரே போர் தொடுத்துள்ளனர். இதுதான் சிறந்த யுத்த தருமமாகக் கருதப்பட்டுள்ளது. இதனை,

> "ஆவும் ஆன்இயல் பார்ப்பன மாக்களும்
> பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
> தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
> பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
> எம்அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்"[118]

என்ற நெட்டிமையார் பாடல்வழி உணரமுடிகின்றது.

முன்னறிவிப்புக் கொடுத்துப் போர் நடைபெறும் பொழுது காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை என்ற நாற்படைகளும் தன்தன் இனத்துடனேயே போர் நிகழ்த்தியுள்ளன. மறவர்கள் தனக்குச் சரிநிகர் பலமுள்ள எதிரியிடம் மட்டுமே போர் புரிந்துள்ளனர். தன்னினும் மெலியாரை அவர்கள் தாக்கவில்லை என்பது புலனாகின்றது.

போர் நடைபெறும் பொழுது ஆடை இழந்தவன், குடுமி களைந்தவன், ஆயுதமிழந்தவன், பாசறைப் புகுந்தவன், தோற்றோடுபவன், நீர் எடுத்துச் செல்வோன், காயம்பட்ட வீரர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பவன் போன்றோரிடம் போர் புரியாமை தெரிகின்றது. தமக்கு எதிரியாயினும் இந்நிலையில் உள்ளோரைத் தவிர்த்துப் போர் புரிந்தமை அக்காலத்தில் போர் அறம் கடைபிடிக்கப்பட்டதனாலேயே எனத் தெரிகின்றது.

வென்ற அரசன் பகை நாட்டைத் தன் நாடு போலவே பாதுகாத்து, போரினால் சேதம் அடைந்த பகுதிகளைச் சீர்படுத்தி வளமாக்கியுள்ளான். இதனை,

> "அகநாடு புக்கு அவர் அருப்பம் வெளவி
> யாண்டு பல கழிய வேண்டு புலத்து இறுத்து
> மேம்பட மரீஇய வெல்போர்க் குருசில்"[119]

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் வாழ்த்துதலால் அறியமுடிகின்றது.

நன்றி பாராட்டல் என்பது தமிழர்களுடைய பண்பாடுகளில் ஒன்று. மன்னன் போரிலே தனக்கு வெற்றியை ஈட்டித் தந்த படை மறவர்க்கு நன்றி பாராட்டும் நிலையில் அவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கி மகிழ்வித்தமை தெரிகின்றது.

> "பெரிய வாயினும் அமர்கடந்து பெற்ற
> அரிய என்னாது ஓம்பாது வீசி"[120]

என்ற பதிற்றுப்பத்து அடிகளால், மன்னர் போரிலே கவர்ந்த பொருள்கள் விலை

உயர்ந்தவையாய் இருந்தாலும் தமக்கென என்னாது இரவலர்க்கும், வீரர்களுக்கும் அள்ளி வழங்கியமை அறியக்கிடக்கின்றது.

போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரர்களுக்கு அவருடைய ஊரும் பேரும் சீரும் பொறிக்கப்பட்ட கல் நடப்பட்டது. இவ்வழக்கம் பெருமளவு இருந்தமையால் தொல்காப்பியம் நடுகல் அமைக்கும் முறையைக் கூறுதல் குறிப்பிடத்தக்கது.[121] இந்நடுகல்லுக்கு விழா எடுத்து வழிபாடு செய்யப்பட்டதை,

"------ ------- பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவுள்"[122]

என்ற மலைபடுகடாம் அடிகளால் உணரமுடிகின்றது.

சங்கப்புற இலக்கியங்களில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளின்வழி அக்கால அரசியலில் போர் தவிர்க்க முடியாத நிலையில் இருந்துள்ளதும், எனினும் போர் அறம் மீறப்படாமல் போர் நிகழ்ந்தமையையும் காணமுடிகின்றது.

## நீதி முறை

நீதி முறை என்னும் இப்பகுதியில் முடியாட்சி நடைபெற்ற காலத்தில் இருந்த நீதி முறையினைப் புற இலக்கியங்கள் வழி காணலாம்.

## வேந்தரும் சட்டமும்

சட்டம் என்பதை மா. சண்முக சுப்பிரமணியம் வரையறை செய்கையில், "சட்டம் என்பது குடிமக்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தும் நெறி"[123] என்றும், "ஒரு நாட்டின் அரசு செயல் முறைப்படுத்தும் கொள்கைகளையும் நெறிமுறைகளையும் கொண்டதே அந்நாட்டின் சட்டம்"[124] என்றும் கூறுவார்.

"சங்க காலத்தில் சட்டம் நீதிமன்றங்கள், நீதி வழங்குதல் என்பன பற்றிய கருத்துக்கள் தற்காலத்தில் நாம் அவற்றைப் பற்றிக் கொண்டுள்ள

கருத்துகளினின்று இயல்பாகவும் மிகுதியாகவும் வேறுபட்டிருந்தன என்ற கருத்தினை மனதில் கொள்ள வேண்டும்"[125] என ந. சுப்ரமண்யன் கூறுவது எண்ணத்தக்கது.

முடியாட்சி நிலவிய சங்க காலத்தில் இக்காலக் குடியாட்சி அமைப்பின் உறுப்புகளாகக் கருதப்படும் சட்டம் இயற்றல், நிருவகித்தல், நீதி வழங்குதல் என்னும் மூன்று துறைகளுக்கும் மன்னனே தலைவனாக விளங்கினான் எனத் தெரிகின்றது. நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலை நிறுத்துவதற்குத் தேவை எழும் நேரங்களில் மன்னன் ஆணைகளைப் பிறப்பித்துள்ளான் என்பது புலனாகின்றதே தவிரச் சட்டமாக இயற்றி நடைமுறைப்படுத்தியமை இலக்கியங்கள் வழி அறிய இயலவில்லை.

உலக உயிர்களிடம் வேற்றுமை பாராமல் அனைவரும் ஒன்றெனக் கதிரவன் காய்வது போலக் காவலன் தன் குடிமக்களை ஒன்றெனக் கருதி முறை செய்தமையைக்,

"குணகடல் வரைப்பில் முந்நீர் நாப்பண்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறை வேண்டு நர்க்கும் குறை வேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டுநர்க்கு அருளி"[126]

எனப் பெரும்பாணற்றுப்படை விளக்குகின்றது. இதன்வழி மன்னர் நாட்டுமக்களுக்கு முறை செய்த திறத்தினை உணரமுடிகின்றது.

"முறை செய்தவர்க்குக் கருவியாய் அமைவன இரண்டு. அவை, அறநூலும் நீதி நூலும் ஆவன. அற நூல்களின் அடிப்படையைக் கொண்டே அரசன் நீதி வழங்கியதாக அறியக்கிடக்கின்றது"[127] என்று ந. சுப்பு ரெட்டியார் கூறுதல் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**ஊரவை**

மன்றம், பொதியில், அம்பலம் என்னும் சொற்களால் ஊரவைகளைக் குறித்துள்ளனர். ஊரவையில் வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்த பெரியவர்கள் ஒன்றாகக் கூடி ஊருக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துள்ளனர். இவர்கள் தங்களிடம் வரும் சிறுசிறு வழக்குகளை விசாரித்துத் தீர்வு கண்டமையை உணர முடிகின்றது.

இவ்வூரவையை மதுரைக்காஞ்சி, "அவையிருந்த பெரும் பொதியில்" (அடி; 161) என்று குறிக்கின்றது. ஊரின் முற்பகுதியில் அவை இருந்ததை, "முன்னூர்ப் பொதியில்" (புறம், 390:19) என்பதால் அறியமுடிகின்றது. பெரும்பாலும் இலந்தை, பலா, விளா, வேம்பு போன்ற மரங்களுக்கடியில் ஊரவைக் கூடியுள்ளதைக் காணமுடிகின்றது."[128] இத்தகைய மரங்கள் ஊர் நடுவே இருந்தன என்கின்றார் நச்சினார்க்கினியர்.[129] இவ்வவைகளுக்குக் கைம்பெண்கள் வருவதில்லை என்பது புறநானூற்றுப் (373: 11–12) பாடலடியால் உணரமுடிகின்றது.

ஊரவைகளுக்கு உறுப்பினர்கள் தேவை ஏற்படும் போது தேர்ந்தெடுத்துள்ளனர். இம்முறையினைப் பற்றிச் சங்கப் புறப் பாடல்களில் குறிப்புகள் ஏதும் இல்லை. அகநானூற்றுச் செய்யுள் ஒன்று இம்முறையினைத் தெளிவாகக் கூறியுள்ளது. "பனை ஓலை வாக்குச் சீட்டுகளாகவும், பானை, வாக்குச் சீட்டுப் போடும் பெட்டியாகவும் இருந்துள்ளது." வாக்குப்பதிவு முடிந்து வாக்குச் சீட்டுப் போட்ட பானையைக் கயிற்றால் கட்டி முத்திரை வைத்துள்ளனர்.

"கயிறுபிணிக் குழிசி ஓலை கொண்மார்
பொறிகண் டழிக்கும் ஆவண மாக்கள்"[130]

என்பதால், முத்திரை வைக்கப்பட்ட பானையின், முத்திரையினைச் சரிபார்க்கும் அதிகாரிகள் இருந்தமை பற்றி அறியமுடிகின்றது.

இவ்வூரவையின் நோக்கம் செயற்பாடுகள் பற்றியும், இவ்வவை அரசாட்சி நடைபெற மன்னனுக்கு எவ்வகையில் உதவியது என்பது பற்றியும் சங்கப்புற இலக்கியங்கள் வழி அறிய இயலவில்லை. எனினும் ஊரில் ஏற்பட்ட சிறுசிறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதால் கிராமங்களின் வளமான வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளதை உணரலாம்.

## அறங்கூறவையம்

நாட்டில் நீதி வழங்குவதற்காக ஊர்ப்புறங்களில் இயங்கிய அமைப்பாக ஊரவையும் நகர்ப்புறங்களில் அறங்கூறவையமும் செயல்பட்டிருக்கின்றது. ஊரவையில் விசாரிக்கப்படாத, விசாரிக்கப்பட்டு முறையான நீதி கிடைக்காத வழக்குகள் அறங்கூறவையத்திற்குச் சென்றுள்ளன. ஊரவை என்பது பஞ்சாயத்து அமைப்புப் போல இயங்கியுள்ளது. அறங்கூறவையம் நீதி மன்றம் போலவும் அங்கே கற்றறிந்த அறிஞர்கள் நீதிபதிகளாகவும் இருந்து செயல்பட்டமைத் தெரிகின்றது. மாங்குடி மருதனார் இந்நீதிமன்றம் பற்றியும், அங்கே செயலாற்றிய நீதிபதிகளின் நேர்மையைப் பற்றியும் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

> "அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
> செற்றமும் உவகையும் செய்யாது காத்து
> ஞெமன்கோல் அன்ன செம்மைத்து ஆகிச்
> சிறந்த கொள்கை அறங்கூறு அவையமும்"[131]

என்ற பாடலடியால் உணரலாகின்றது.

"இவ்வவையத்துக்குச் சான்றோரைத் தேர்ந்தெடுப்பது வேந்தன் கடமை"[132] என்கின்றார் நா. பழனிவேலு. அறங்கூறவையத்தார்கள் நீதியினின்று பிறழின் அப்பழி வேந்தரையே சாரும் என்றும், நெறிபிறழ்ந்து முறை செய்த செயலால் வேந்தன் செங்கோல் கொடுங்கோலாகும் என்றும் புறநானூறு (71 : 7 – 9) கூறுவதன் மூலம் அக்கால அறங்கூறவையம் பற்றியும் அங்கு வழங்கிய நீதிமுறையினைப் பற்றியும் நன்கு அறியமுடிகின்றது.

## நாளவை

பழந்தமிழ் மன்னர்கள் அலங்கரித்த அவைகள் ஓலக்கம், நாளோலக்கம், பெருநாளவை எனப் பல பெயர்களால் வழங்கப்பெறுகின்றன. இவ்வவையில் அரசர்கள், அமைச்சர்கள், ஐம்பெருங்குழு, எண்பேராயத்தில் சுட்டப்பெற்றுள்ள உறுப்பினர்கள், பிற நாட்டுத் தூதுவர், நாட்டின் முக்கிய பிரதிநிதிகள் எனப் பலர் சூழப்பட்டிருந்தனர். இங்கே, மன்னன் தன் குடிமக்களின் குறைகளைக் கேட்டறிந்து முறை செய்தும், தம்மை நாடிய புலவர்க்கும், கலைஞர்க்கும் இரவலவர்க்கும் பரிசினை நல்கியும் சிறப்பித்துள்ளான். சங்க இலக்கியங்கள் இவ்வவையினை, 'நாண்மகிழ் இருக்கை', 'நாளவை', 'பொற்பு விளங்கு புகழவை' எனச் சுட்டுகின்றன.[133] இவ்வவைகளில் பரிசில் இனம் மட்டும் ஆணையின்றி நுழைந்ததை,

"நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்"[134] –என்றும்,
"பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க்கு ஆயினும்
கடவுள் மால்வரை கண் விடுத்தன்ன
அடையா வாயில் அவன் அருங்கடை குறுகி"[135] –என்றும்,

"செம்மல் நாளவை அண்ணாந்து புகுதல்
எம்அன வாழ்க்கை இரவலர்க்கு எளிதே"[136] – என்றும்

இடம்பெறும் சங்கப்புற இலக்கிய அடிகளால் உணரலாகின்றது.

இந்நாளவைக்கு வரும் வழக்குகளை மன்னனே விசாரித்து நீதி வழங்கியுள்ளமையைச் சங்க இலக்கியங்கள் வழி காணமுடிகின்றது. நேர்மையாக நீதி வழங்கிய வேந்தர்களிலே கரிகாற் சோழன் சிறப்பாகப் பாராட்டப்பெறுகின்றான். கரிகாற்சோழன் அரசாட்சி செய்த காலத்தில் இரண்டு முதியவர்கள் நாளவைக்கு ஏதோ ஒரு வழக்கினைக் கொண்டுவந்திருக்கின்றனர். கரிகாலனின் இளமை தோற்றத்தைக் கண்டு நமது வழக்கை இந்த இளைஞனால் ஆராய்ந்து உண்மையைக் கண்டறிய முடியுமோ? என ஐயப்பட்டுள்ளனர். இதனை உணர்ந்த

கரிகாலன் அவர்களுடைய வழக்கை அறநூல் அறிந்த முதிர்ந்த நீதிபதி ஒருவரிடம் மாற்றுவதாகக் கூறி தாமே நரை முடியும் தாடியும் தரித்தவனாய் அவையில் அமர்ந்து முதியவர்கள் உரைத்த வழக்கைக் கேட்டு இருவரும் ஏற்கும்படி நீதி வழங்கியுள்ளான். இதனை,

"------- ------- -------- முதியோர்
அவைபுகு பொழுதில் தம் பகைமுரண் செலவும்"[137]

என்ற பொருநராற்றுப்படை அடியால் உணரமுடிகின்றது. இந்த வரலாற்றுச் செய்தியினைப் பழமொழி நானூறும் (21) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அக்காலச் சமூக நிகழ்வுகளில் நீதி வழங்கும் முறையினைக் காணும்போது, "ஊரவையில் பெரியோர்களால் விசாரிக்கப்பட்ட வழக்குத் தீர்வு ஏற்படாத போது, அறங்கூறவையத்தில் நீதிபதி போன்ற கற்றறிந்த அறிஞர்களால் விசாரிக்கப்பட்டுள்ளது. அங்கும் முறையான தீர்வு ஏற்படாத நிலையினில் நாளவைக்கு மன்னன் முன் கொண்டு செல்லப்பட்டு நல்லதொரு முறையினை மன்னன் வழங்கியிருத்தல் வேண்டும் என்பது ஆய்வாளர் கருத்தாகும்."

## குற்றமும் தண்டனையும்

பண்டைக் காலத்தில் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து தண்டனை வழங்கியுள்ளனர். குற்றமற்றவர்களுக்குத் துன்பம் விளையாமல் பாதுகாத்துள்ளனர். ஒரு வழக்கில் சாட்சியளிப்போரைக் கொண்டு மட்டுமே தீர்வு வழங்காமல், நீதிபதிகளும் தங்கள் நுண்ணறிவைக் கொண்டு குற்றம் யார் பக்கத்தில் என்பதைக் கண்டறிந்துள்ளனர். தேவையெனில் மாறுவேடம் புனைந்து குற்றவாளிகள் யார்? குற்றமற்றவர்கள் யார்? எனத் தெரிந்து நீதி வழங்கியுள்ளனர். பொய் சாட்சிக் கூறுவோர் ஒரு மரத்தடியில் நின்றால் அம்மரம் பட்டுப் போகும். அவன் குடும்பம் பாழாகும், அவன் செல்வம் பாழாகும், அவன் மீளா நரகுக்கு ஆளாவான் என்றெல்லாம் பொய்சாட்சிக் கூறுவோரைப் பற்றி இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறு பொய்சாட்சிக் கூறுவோர் அடையும்

நிலையினைக் கூறியிருப்பதால் அத்தகையோரும் இருந்தனர் என்பது புலனாகின்றது. எனவே, நீதிபதிகள் முழுவதும் சாட்சிகளை மட்டுமே நம்பித் தீர்ப்பு வழங்காமல் உண்மையைக் கண்டறிந்து கூறியுள்ளனர். அவ்வாறு வழங்கும் தீர்ப்பில் அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக்கேற்ப தண்டனை அளித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

## குற்றவகை

குற்றங்களை அறநூலுக்கு மாறானவை, அரசியலுக்கு மாறானவை, தெய்வத்திற்கு மாறானவை என மூவகைப்படுத்துவர்.

குடி, பொய், களவு, காமம், கொலை என்பன அறநூலுக்கு மாறான குற்றங்களாகும். இவற்றை ஐம்பெருங்குற்றங்கள் என்பர். இறையிறுக்காமை, உறுபொருள் கவர்தல், பகையொற்று, அறைபோதல், அரசனது பொருள் கவர்தல், அரசனது இன்பப் பொருள் நுகர்தல், ஊருக்கு அல்லது நாட்டிற்கு இரண்டகஞ் செய்தல், அரசாணை மீறல் என்பன அரசியலுக்கு மாறான குற்றங்களாகும். கோயில்பணி செய்ய ஒப்பி பணி செய்யாமை, கோயிற் பொருள் கவர்வு என்பன தெய்வத்திற்கு மாறான குற்றங்கள் ஆகும்.

## தண்டனை வகை

தண்டனையானது தண்டம், மானக்கேடு, வேதனைப்பாடு, சிறைப்பு, வேலை நீக்கம், கொலை என அறுவகைப்பட்டிருந்தது.

தண்டம் தொகையிறுப்பு, தண்டத்தீர்வை, கோயில் விளக்கெரிப்பு என மூவகைப்படும். மானக்கேடு என்பது முகத்திற் கரும்புள்ளி செம்புள்ளி குத்திக் கழுதை மேலேற்றி ஊர்வலம் வருவித்தலும், குலத்தினின்று விலக்கலும், தூணிற் கட்டிவைத்து 10 முதல் 50 எண்ணிக்கை வரை சவுக்கால் அடித்தல், கல்லேற்றல், வெயிலில் நிற்க வைத்தல், கிட்டிப் பூட்டல், நடை விளக்கெரித்தல் என்பன

வேதனைப்பாடாகும். சிறைப்பு என்பது சிறையில் அடைத்தல், கொலையானது வெட்டல், கழுவேற்றல், விலங்காற் கொல்வித்தல், சித்திரவதை செய்தல் என நால் வகைப்படும்.

## குற்றத் தண்டனை

பொதுவாக மூவகைக் குற்றவாளிகளுக்கும் குடவோலையிடம் பெறாமை பொதுத் தண்டனையாகும் என்பார் ஞா. தேவநேயப்பாவாணர்.[138] பொய்க்குத் தண்டமும், களவிற்குப் பொருள் மீட்போடு மானக்கேடும், பொருள் மீட்கப் பெறாவிடத்துத் தண்டமும், தண்டம் இறுக்கப்படா விடத்துச் சிறையும், காமத்திற்கு மானக்கேடும், கொலைக்குக் கொலையும் தண்டனையாக அளிக்கப்பட்டமைத் தெரிகின்றது.

"சோழன் மகன், பசுவின் கன்றைப் பாராமல் தேர்ச் சக்கரத்தை ஏற்றிக் கொன்று விட்டான். கன்றை இழந்த தாய்ப்பசு அரண்மனையில் இருந்த ஆராய்ச்சி மணியை அடித்துள்ளது. கண்ணீரோடு நின்ற பசுவின் நிலையினைக் கண்ட வேந்தன் நடந்த நிகழ்ச்சியினைக் கேட்டறிந்து தன் மகனைத் தேராழியால் கொன்று அப்பசுவைப் போல் தானும் கண்ணீர் சிந்தினான்" என்கிறது சிலப்பதிகாரம். இதனை,

> "வாயில் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
> அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்"[139]

என்ற பாடலடியால் அறியமுடிகின்றது. இதனால் கொலைக்குக் கொலை தண்டனை அளித்தமையைக் காணமுடிகின்றது.

அரசியலுக்கு மாறான குற்றங்களுக்கு, இறையிருக்காமைக்குச் சொத்துப் பறிமுதலும், உறுபொருள் கவர்ந்தலுக்குச் சிறையும் பிறவற்றிற்குக் கொலையும் பொதுவான தண்டனையாக விதிக்கப்பட்டுள்ளது. சங்கப்புற இலக்கியங்களில் இதற்குரிய சான்றுகள் இல்லையாயினும் அக இலக்கிய நூலான

குறுந்தொகையில் அரச பொருள் கவர்ந்ததற்காக விதிக்கப்பட்ட தண்டனையினைக் காணமுடிகின்றது.

"மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனல்தரு பசுங்காய் தின்றதன் தப்பற்கு
ஒன்பதிற்று ஒன்பது களிற்றொடு அவள் நிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளாது
பெண்கொலை புரிந்த நன்னன்"[140]

என்பதால் குற்றம் செய்தவர்கள் தண்டனை பெறாமல் தம் நிறையளவு பொன்னை மன்னனுக்குத் தண்டமாக அளித்து விடுதலை பெறலாம் எனத் தெரிகின்றது. இருந்தும் மன்னன் அதனை ஏற்காமல் கொலை தண்டனை விதித்துள்ளமையைக் காணமுடிகின்றது. மேலும், அக்காலத்தில் குற்றங்களுக்கு நடுநிலைமையாக முறை வழங்கப்பட்டதை, சிபிச் சக்கரவர்த்தி[141],பொற்கைப் பாண்டியன் [142] போன்றோரது நீதி முறையினைக் கொண்டு அறிதல் குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழ் மன்னர்கள் ஊரவை, அறங்கூறவையம் வாயிலாக மக்கள் வழக்குகளைத் தீர்த்துள்ளனர். தாமேயும் நேரே வழக்குகளைக் கேட்டறிந்து முறை செய்தமையும் அறியமுடிகின்றது. இத்தகைய வழக்கில் குற்றவாளிகளுக்கு அவர்களின் குற்றங்களுக்கு ஏற்ப அளிக்கப்பட்டுள்ள தண்டனை முறைகளை இலக்கியங்கள் வாயிலாக உணரமுடிகின்றது. இதன்வழி அக்கால நீதி முறையின் அமைப்பினையும் குற்றங்களையும் தண்டனை முறைகளையும் நன்கு அறியலாகின்றது.

## தொகுப்புரை

அரசு மக்கள் உறவுநிலைகள் என்னும் இந்த ஆய்வேட்டின் இரண்டாம் இயல், பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் அரசு தோற்றம் பற்றி நிலவிய கருத்துகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்களுக்கான அரசு உரிமைகள் வழிவழியாகத் தொடர்ந்ததைப் புலப்படுத்தியுள்ளது. ஆட்சியாளர்களிடம் முடியரசு தன்மை காணப்படினும் அவர்கள் தமது விருப்பப்படி ஆளாமல் செங்கோல் நிலவிட, அமைச்சர்கள், ஐம்பெருங்குழு போன்ற அலுவல் குழுவினரோடு ஆட்சி புரிந்த அரசியல் வரலாற்றுச் செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.

மதுரைக்காஞ்சி அரசனுக்கு உரிய நாற்பெருங்குழு பற்றிக் குறிப்பிடுகின்றது. புரோகிதர், படைத் தலைவர், ஒற்றர், தூதுவன் ஆகிய இந்நாற்பெருங்குழுக்களோடு அமைச்சரையும் சேர்த்து ஐம்பெருங்குழு உருவான வரலாற்று வளர்ச்சியைச் சங்க இலக்கியங்கள் போக்கில் ஆய்ந்து விளக்கியுள்ளது.

பாண்டியன் நெடுஞ்செழியன், நட்சத்திரக் கூட்டங்களோடு நிலவு இருப்பது போல இந்தக் குழுக்களின் மத்தியில் வீற்றிருந்தான் என்பது சுட்டப்பட்டுள்ளது.

ஓர் அரசமைப்பின் செயற்பாட்டுக்கு அது கொண்டுள்ள பொருளாதார நிலை முக்கியமானது. அந்த வகையில் அதன் வரவு செலவு பற்றிய செய்திகள், நாட்டுப் பாதுகாப்பில் படைப்பிரிவுகள் ஆற்றிய பங்கு பணிகள், நீதிகள் குறித்த செய்திகள் இந்த இயல் தெளிவுபட ஆய்ந்துள்ளது.

குடிமக்களைக் காப்பதற்காக விதிக்கப்பட்ட வரி 'புரவு வரி' எனப்பட்டது. அரசனின் இயற்றல், ஈட்டல், காத்தல் காத்த வகுத்தல் பற்றிய ஆட்சியியல் கோட்பாட்டுக்குப் புரவுவரி – வரிக்கு வரியாகவும் அரசுக்கான வரவு நிதியாகவும் பயன்பட்டதைச் சுட்டியுள்ளது. வாணிபத்தின் மூலம் சுங்க வரி பெறப்பட்டதைப் பட்டினப்பாலை வழி எடுத்துக் காட்டியுள்ளது.

போரானது அரசனின் மண் முதலிய ஆசை, பாதுகாப்பு, பகை, தண்டனை, மறம், அருள் என்னும் ஆறுவகை காரணங்களால் நிகழ்த்தப் பெற்றமையை அறிய முடிகிறது. இவ்வாறு புரிந்த போரில் போர் அறம் கட்டாயமாகக் கடைபிடிக்கப்பட்டதை விளக்கியுள்ளது.

மன்னரின் நீதி வழங்கும் முறையினைப் பெரும்பாணாற்றுப்படை,

"முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டுநர்க்கு அருளி" (பெரும், அடி; 443– 444)

என்று பாடி இருப்பதன் மூலம் தெளிவாக்கியுள்ளது. செவ்விய நீதிமுறை பண்டு இருந்தமையை இது புலப்படுத்துகின்றது. ஊரவையும், அறங்கூறவையாங்களும், நாளவையும் நீதி காத்துள்ளன. இவ்வவைகளுக்கு வரும் வழக்குகளை ஆய்ந்து குற்றங்களுக்கு ஏற்ற தண்டனைகளும் வழங்கியுள்ளமையையும் அறிய முடிகின்றது.

# இயல் 2

## சான்றெண் விளக்கம்


1. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப.16
2. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப.44
   & P.T. Srinivasa Iyengar, History of the Tamils, P.10
3. சி. மௌனகுரு, பண்டைத்தமிழர் வரலாறு இலக்கியமும், ப. 39
4. மா. இராசமாணிக்கனார், தமிழக ஆட்சி, ப.17
5. புறம், 75 : 1 – 2
6. தொல், பொருள், 221, நச்சி உரை
7. பதிற், 74 : 19–21
8. ரா. ராகவ ஐயங்கார், தமிழ் வரலாறு, பக்:151 – 152
9. பொருந, அடி; 187 – 188, பழமொழி, 21; மணிமேகலை, 4 : 107
10. பி. கோமதி நாயகம், தென்னிந்திய வரலாறு, ப. 26
11. பட்டின, அடி; 222 – 227
12. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப.56
13. புறம், 5 : 6 – 7
14. மேலது, 186 : 1 – 2
15. திருக்குறள், 388
16. பட்டின. அடி., 283 – 284
17. பொருநர்.அடி, 150 – 151
18. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 22
19. தொல்; பொருள்; 14, நச்சி உரை
20. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 23
21. தொல்; பொருள்; 14, நச்சி உரை
22. மணிமேகலை, 22:113, 24:144
23. புறம், 2 : 17 – 19
24. பதிற், 15 : 28
25. மதுரை, அடி; 768 – 770
26. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 31
27. V. Kanakasabhai, The Tamils Eighteen Hundred Years ago, P - 109
28. V.A. Smith, Early History of India, P. 442
29. தொல்; சொல்; 57, நச்சி உரை
   சிலம்பு. 5 : 157, அடியார்க்குநல்லார் உரை

30. சாமி. சிதம்பரனார், பழந்தமிழர் அரசியல், ப. 21

31. பதிற், 90 : 17 – 18,

32. மதுரை, அடி; 510, நச்சி உரை

33. சிலம்பு, 26: 137 –145

34. தொல்; பொருள்; 58, நச்சி உரை, மதுரை, அடி; 510 நச்சி உரை

35. V.R.R. Dikshitar, War in Ancient India, P. 352

36. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 72

37. திருக்குறள், 660

38. புறம், 72 : 11 – 12

39. மேலது, 75 : 4 – 5

40. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 244

41. திருக்குறள், 43, பரிமேலழகர் உரை

42. புறம், 293, 33.

43. பதிற், 2

44. V. R. Ramachindra Dikshither, Studies in Tamil Literatire and History, P. 209

45. பட்டின, அடி; 120 – 125

46. தொல்; பொருள்; 73, நச்சி உரை

47. K.A. Nilakanta Sastri, The Colas, P. 96

48. பொருந, அடி; 146 – 148

49. மதுரை, அடி; 55 – 56

50. மேலது, அடி; 427 – 428

51. மேலது, அடி; 460

52. திருக்குறள், 761

53. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 173

54. புறம், 287

55. மேலது, 13: 5 – 6

56. மதுரை, அடி; 47 – 48

57. முல்லை, அடி., 35 – 36

58. புறம், 387, பட்டின, அடி; 232

59. மதுரை, அடி; 49 – 50

60. முல்லை, அடி; 72 – 74

61. K.A. Nilakanta Sastri, History of South India, P. 128

62. மதுரை, அடி; 51 – 52

63. மேலது, அடி; 75 – 88

64. பதிற், 17: 4–5

65. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப.47

66. புறம், 68 : 11 – 13

67. மதுரை, அடி; 640 – 642

68. மேலது, அடி; 643 – 647

69. மேலது, அடி; 648 – 650

70. பெரும், அடி; 39 – 41

71. மதுரை, அடி; 310 – 312

72. சிறு, அடி; 152 – 153

73. புறம், 201 : 9 – 10

74. பட்டின, அடி; 291 – 292

75. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 55

76. மலை, அடி; 90 – 92

77. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 56

78. ரா.பி. சேதுப்பிள்ளை, தமிழின்பம், ப. 9

79. தண். கி. வேங்கடாசலம், பாட்டுக்கொரு புலவன், ப. 33

80. கே. கே. பிள்ளை, தென்னிந்திய வரலாறு, I, ப. 52

81. ந.சி. கந்தையா, தமிழர் சரித்திரம், ப. 48

82. வ.சுப. மாணிக்கம், சங்க நெறி, ப. 76

83. Many Douglas and others man in Society, P. 196

84. தமிழண்ணல், இந்திய இலக்கியச் சிற்பிகள், ஔவையார், ப. 30

85. புறம், 89 : 7 – 9

86. கோ. கேசவன், மண்ணும் மனித உறவுகளும், ப. 29

87. தொல்; பொருள்; புறத், 6 : 2 – 3

88. புறம், 8 : 1 – 3

89. மேலது, 31: 1 – 6

90. மேலது, 68 : 11 – 13

91. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 25

92. சிலம்பு, 5 : 90 – 92

93. புறம், 280 : 6 – 7

94. அகம், 207 : 3 – 4

95. புறம். 79 : 1 – 4

96. பொருந, அடி; 143 – 148

97. புறம், 122 : 5 – 6

98. மேலது, 7 : 7 – 9

99. மேலது, 16 : 7 – 8

100. மேலது, 33 : 7 – 9

101. பதிற், 11 : 12 – 13

102. புறம், 26 : 1 – 6

103. மேலது, 62 : 7 – 8

104. மேலது, 40 : 3 – 4

105. மேலது, 25 : 7

106. மேலது, 179 : 4

107. மேலது, 72 : 7 – 9

108. மேலது, 126 : 1 – 3

109. மதுரை, அடி; 125 – 128

110. புறம், 6 : 21 – 22

111. மதுரை, அடி; 154 – 176, புறம், 15, 16, 23

112. புறம், 392 : 9 – 10

113. மேலது, 15 : 7 – 10

114. மேலது, 16 : 6

115. பதிற், பதி, 5 : 16 – 17

116. V. R. Ramachandra Dikshiter, War in Ancient India, P. 72

117. V.A. Smith, Eartly History of India, P. 442

118. புறம், 9 : 1 – 5

119. மதுரை, அடி; 149 – 151

120. பதிற், 44 : 3–4

121. தொல்; பொருள்; 60 : 19 – 21

122. மலை. அடி., 394 – 396

123. மா. சண்முகசுப்ரமணியம், குறள் கூறும் சட்டநெறி, ப. 37

124. மேலது, ப. 27

125. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப.64

126. பெரும், அடி; 441 – 444

127. ந. சுப்புரெட்டியார், தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறைமை, ப. 245

128. புறம், 34 : 12, 128 : 1, 181 : 1, 371 : 7

129. பத்துப்பாட்டு, நச்சி உரை, உ.வே. சாமிநாதையர் பதிப்பு, (மூ.பதி.), ப. 67

130. அகம், 77 : 7 – 8

131. மதுரை, அடி; 489 – 492

132. நா. பழனிவேலு, சங்க இலக்கியங்களில் சமூகச் சித்தரிப்புகள், எம்ஃபில் ஆய்வேடு, ப. 39

133. புறம், 29 : 5, 54 : 3, மதுரை, அடி; 778

134. பொருந, அடி; 66

135. சிறு, அடி; 203 – 206

136. புறம், 54 : 3 – 4

137. பொருந, அடி; 187 – 188

138. ஞா. தேவநேயப்பாவாணர், பழந்தமிழாட்சி, ப. 99

139. சிலம்பு, 20: 52 – 54

140. குறுந், 292 : 1 – 5

141. புறம், 37, 39, 43, 46

142. சிலம்பு, 23 : 43 – 53, பழமொழி – 10

# இயல் - 3

## சங்கப்புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள்

# சங்கப்புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்கள்

## முன்னுரை

சங்கப் புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவுநிலைகள் எனும் இவ்வாய்வில் புற இலக்கியம் காட்டும் ஆட்சியாளர்களை மட்டும் வெளிக்கொணர்வதாக இவ்வியல் அமைகின்றது. சங்க இலக்கியங்கள் பொதுவாக ஆட்சியாளர்களை வேந்தன், மன்னன், அரசன், இறைவன், காவலன் என்றெல்லாம் விளம்புகின்றன. இச்சொற்கள் ஆட்சியாளர்களின் பொதுப்பண்பை சுட்டுவதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இப்பண்புப் பெயர்களை உற்று நோக்கினால் ஆட்சியாளர்களின் பல்வேறு படிநிலைகள் நன்கு புலப்படும். அவ்வகையில் சங்க காலத்தை நோக்க தமிழகத்தைப் பல்வேறு ஆட்சியாளர்கள் காலந்தோறும் ஆண்டு வந்துள்ளமை தெரிகின்றது. இவர்கள் ஆட்சி செய்த நிலத்தின் பரப்பளவு இவர்களின் வீரம், கொடை, கீர்த்தி ஆகியவற்றைக் கொண்டு வேந்தர், வேளிர், மன்னர், வள்ளல் என்று அழைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான ஆட்சியாளர்களைச் சங்கப்புற இலக்கியங்களில் சுட்டியவழி கோடிட்டுச் செல்வதாக இவ்வியல் அமைகின்றது.

## முத்தமிழ் நாட்டு எல்லைகள்

சங்க காலத் தமிழகத்தை மூன்று பெரும் பகுதிகளாகக் கொண்டு, அவற்றைச் சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவேந்தரும் முறையே ஆட்சி செய்து வந்தமை புலனாகின்றது. இதனால் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு எனத் தமிழகம் முத்தமிழ் நாடாக வழங்கப்பெற்றதை அறிய முடிகின்றது. இந்த மூன்று நாடுகளின் எல்லைகள் குறித்துப் பின்னாளில் சில தனிப்பாடல்கள் எழுந்துள்ளன. அவைகள்,

"வடக்குத் திசைபழநி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம் கடற்கரையின்
ஓரமே தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு"

எனச் சேர நாட்டின் எல்லையினையும்,

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபுரளவெள் ளாறு
குடதிசையில் கோட்டைக் கரையாம் வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாறு இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்"

என்று சோழநாட்டு எல்லையினையும்,

"வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"

எனப் பாண்டிய நாட்டின் எல்லையினையும் குறித்துள்ளதைக் காணமுடிகின்றது."[1] "இவ்வெல்லைகளைச் சங்ககால முத்தமிழ் நாட்டு எல்லைகளாகக் கருதலாகாது என்பார் வ. குருநாதன்."[2]

சங்க கால மூவேந்தருள் ஒவ்வொருவர் ஆட்சியிலும் அவரவர்களின் ஆளுமைத் திறனுக்கேற்ப அவரவருடைய நாடுகள் பரந்து விரிந்தும், குறுகியும் இருந்தமை தெரிகின்றது. இதனை,

"நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்தும் நின்
வெண்டலைப் புணரிக் குடகடல் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந"[3]

எனச் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகனார் பாடியதாலும்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
------- -------- ------- --------
உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரிகோல் ஞமன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ நின்திறம் சிறக்க"[4]

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் பாடியுள்ளமையாலும் அறியமுடிகின்றது. இவ்வாறு மூவேந்தருள் அவ்வவ்காலத்து ஆற்றல் மிக்கவருடைய நாட்டெல்லை அகன்று விளங்கியதை உணரமுடிகின்றது.

## ஆட்சியாளர்கள் – தோற்றம்

### சீறூர்த் தலைவர்

பண்டைக் காலத் தமிழகத்தில் வளமான நிலப்பகுதியை வாழ்விடமாகக் கொண்டு பல ஆயிரம் குடும்பங்கள் குழுக்கள், குழுக்களாக வாழ்ந்து வந்துள்ளன. இவற்றில் சில குழுக்களைக் கொண்ட ஊர் சீறூர் எனப்பட்டது. இச்சீறூரில் உள்ள மிக வலிமையானவர்களே அவ்வூரின் தலைவராயினர் எனத் தெரிகின்றது. "அக்காலத் தமிழர் சமுதாயத்தில் சீறூர்த் தலைவர்களைத் தலைமையாகக் கொண்ட இனக் குழுக்கள் நிலவின. சீறூர் சில குடிகளைக் கொண்டதாகும்"[5] என்று கா. சுப்ரமண்யன் குறிப்பிடுதல் இங்கு நோக்கத்தக்கது.

சங்க காலத் தமிழ்ச் சமுதாயம் காலப் போக்கில் பரிணாமம் அடையத் தொடங்கிய போது இனக் குழுச் சமுதாய அமைப்பு முறை சிதையத் தொடங்கியது. இனக்குழுத் தலைவர்களுக்கு அவர்கள் குழுவின் தேவைகளை நிவர்த்தி செய்திட போதுமான ஆற்றலும், வலிமையும், வாய்ப்பும் அமையாமையும் மாற்று இனக்குழுவின் தாக்குதலிலிருந்து தங்களது இனக்குழுவைப் பாதுகாத்திடத் தேவையான வலிமையும், படைகள் போன்றவையும் இல்லாமையுமே இனக்குழுச்

சமுதாயத்தின் அழிவுக்குக் காரணங்களாகின்றன. அந்நிலையினில் போர்காலத் தலைவராயிருந்த வீரர்கள் தங்களது வலிமையால் இச்சீறூர்களுக்குத் தலைவராய் விளங்கியுள்ளனர். காலப்போக்கில் இப்பதவி பரம்பரை உரிமையைப் பெற்று வந்துள்ளமை தெரிகின்றது.

## குறுநில மன்னர்

இனக்குழு சமுதாயம் சிதையத் தொடங்கியபோது, வலிமையுள்ள சீறூர் மன்னர் சிலர் தம் ஊர்ப் பகுதியையும் ஆட்சியையும் விரிவுபடுத்திட வேண்டி போரிட்டுப் பலஇனக்குழுத் தலைவர்களை வீழ்த்தி தமது ஆட்சிக்குட்பட்ட ஊரை விரிவுபடுத்தியுள்ளனர். தமது ஆதிக்கம் சில பரந்துபட்ட ஊர்களுக்கும் பரவும்படிச் செய்துள்ளனர். இவர்களே 'குறுநில மன்னர்கள்' என்று அழைக்கப்பட்டமை புலனாகின்றது. "இனக்குழு சமுதாயம் சிதையும் போது சீறூர் மன்னர் சிலர் தம் நாட்டை விரிவுபடுத்தினர். அவர்கள் சிறு நிலப்பரப்புகளில் வாழ்ந்த இனக்குழு தொகை மக்களின் குறுநில மன்னராயினர்"[6] என்னும் கருத்து இங்கு எண்ணத்தக்கது. "இவர்கள் ஒழுங்கான ஒரு முடியை அணிந்ததில்லை என்பார் ந. சுப்ரமண்யன்."[7]

## வேளிர்

இனக்குழு சமுதாய அமைப்பு அழியத் தொடங்கும் போது வாழ்ந்திருந்த மிகவும் வலிமையான சீறூர் தலைவர் சிலர், தமது ஊரையும் ஆதிக்கத்தையும் விரிவுபடுத்த எண்ணினர். அவர்கள் வலிமை குன்றிய நிலையிலிருந்த பல சீறூர்த் தலைவர்களைப் போரில் வென்று தமது நிலப்பரப்பையும் ஆதிக்கத்தையும் விரிவுபடுத்தியுள்ளனர். இவர்கள் சிறு நிலப்பரப்புகளில் வாழ்ந்திருந்த ஒன்றுக்கு மேற்பட்ட இனக்குழுவின் மக்கள் கூட்டத்திற்கு மன்னராயினர். இவர்களே, 'வேளிர்' என அழைக்கப்பட்டமை தெரிகின்றது. க. சண்முகசுந்தரம் கூறும்போது, 'குறுநில மன்னரே வேளிர் என அழைக்கப்பட்டுள்ளனர்'[8] என்பார்.

## வேந்தர்

குறுநில மன்னர்களில் வலிமையானவர்கள் வலிமை குன்றிய நிலையிலிருந்த குறுநில மன்னர்களைப் போரில் வென்று, அவர்களது ஆளுகைக்குட்பட்டிருந்த பகுதிகளைக் கையப்படுத்திக் கொண்டு, அப்பகுதிகளிலுள்ள சமுதாய அமைப்பை மாற்றி புதிய சமுதாய அமைப்பை நிறுவி, முடிபுனைந்து மன்னராக விளங்கியுள்ளனர். இவர்களே 'வேந்தர்' என அழைக்கப்பட்டமை தெரிய வருகின்றது. "பல இனக்குழுக்களை வென்று, அவர்கள் சமுதாய அமைப்புகளை அழித்து முடியரசர்கள் தோன்றினர். அவர்கள் வேந்தர் எனப்பட்டனர்"[9] என்ற கூற்று இங்குக் கவனிக்கத்தக்கது.

இவ்வமைப்பு முறையிலேயே பண்டைக் காலத் தமிழகத்தில் ஆட்சியாளர்கள் தோன்றியுள்ளனர் என்பது உணரக்கிடக்கின்றது.

## ஆட்சியாளர்களைக் குறிக்கும் சங்க இலக்கியச் சொற்கள்

சங்க இலக்கியங்கள் ஆட்சியாளர்களை வேந்தன், மன்னன், அரசன், இறைவன், காவலன் எனப் பல பெயர்களால் சுட்டியுள்ளன. இச்சொற்களை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது ஒரு பொருள் பன்மொழி போலத் தோன்றலாம். ஆனால் உற்றுநோக்கின் ஒவ்வொரு சொல்லும் தம்மளவில் பொருள் வேறுபாடு உடையதாகவும் ஒவ்வொரு காரணம் பற்றி உருவானதாகவும் உள்ளதை அறிய முடிகின்றது. இத்தகைய சொற்களைச் சங்க இலக்கியம் கையாண்டுள்ள பாங்கினை இனி காணலாம்.

## அரசன்

சங்க இலக்கியம் முதல் இக்கால இலக்கியம் வரை ஆட்சியாளர்களை அரசன் எனக் கூறும் வழக்கம் உள்ளதைக் காணமுடிகின்றது. 'ராஜா' என்னும் வடமொழிச் சொல்லிலிருந்து 'அரசன்' என்னும் தமிழ்ச்சொல் தோன்றியது என்பார் ரா.பி.சேதுப்பிள்ளை."[10] சங்க இலக்கியங்களில் வேந்தர், மன்னர் என்ற தமிழ்ச்

சொற்களின் பங்களிப்பினை நோக்க அரசன், அரசர் ஆகிய சொற்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுகின்றது. மணிமேகலை "அத்திபதி எனும் அரசன்" (9 : 42) எனப் பெயரிட்டுக் கூறியுள்ளது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இவ்விரு காப்பியங்களில் மட்டுமே அரசன், அரசர் என்னும் சொற்கள் மிகுதியாக ஆட்சியாளர்களைக் குறித்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. இச்சொற்கள் எவ்விடத்திலும் நேரடியாக ஆட்சியாளர்களைக் குறிக்காமல் பொதுப் பெயராகவே வந்துள்ளன. சிலப்பதிகாரம் பல இடங்களில் எதுகை, மோனை கருதி வேந்தன், மன்னன், அரசன், காவலன் எனப் பல சொற்களைக் கையாண்டுள்ளதை அறியக் கிடக்கின்றது."[11]

## இறைவன்

சங்க இலக்கியத்தில் 'இறைவன்' என்னும் சொற்கள் பெரும்பான்மை ஆட்சியாளர்களின் பொதுப்பண்பைச் சுட்டியும், சிறுபான்மை நேரடியாக அவர்களைக் குறித்தும் இடம்பெற்றுள்ளன. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறும்போது,

> "கொடி யனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
> குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"[12]

எனத் தன்னை இறை எனக் கூறிக் கொள்வதை அறியலாகின்றது. முறையாக ஆட்சி புரிந்து, குடிகளைக் காப்பாற்றும் திறத்தாலே மன்னர்கள் இறை, இறைவன் எனக் கடவுளுக்கு நிகராகக் கருதப்பட்டமை வள்ளுவரின் குறள் (388) வழி உணர கிடக்கின்றது.

## காவலன்

ஆட்சியாளர்கள் தம் குடிகளைப் பல்வேறு துன்பங்களில் இருந்து காக்கும் பண்பாலே 'காவலன்' எனப்பட்டுள்ளனர். "குடிமக்களை உள்நாட்டு, வெளிநாட்டுத் தீமைகளிலிருந்து அல்லது பகைவர்களிடமிருந்து காப்பவன் காவலன்"[13]

என்கின்றார் சி. பாலசுப்பிரமணியன். சங்க இலக்கியங்கள் ஆட்சியாளர்களின் பண்புகளைச் சுட்டும் நிலையினில், காவல் மன்னர் (புறம், 331 : 11), காவல் வேந்தர் (சிலம்பு. 26 : 170), என அடையாக இச்சொற்களைக் கையாண்டுள்ளன. ஆட்சியாளர்கள் குடிமக்களைக் காக்காவிடின் என்னென்ன நிகழும் என்பதனை,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்" (குறள். 560)

எனக் குறிப்பிடுகின்றார் திருவள்ளுவர். இவற்றால் காவலனின் காத்தல் தொழிலின் இன்றியமையாமை புலப்படுகின்றது.

## மன்னன்

'மன்' என்ற சொல்லின் அடியாகத் தோன்றியது 'மன்னன்' என்ற சொல் ஆகும். இதனை,

"மன்னுயிர்ப் பன்மையுங் கூற்றத் தொருமையும்" –எனவும்,

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்" – எனவும்

வரும் புறப்பாடலடிகள்[14] வலு சேர்க்கின்றன. "மன்" என்னும் சொல்லுக்கு நிலைபேறு என்பது பொருள். மன்னன் என்பதற்கு 'நிலைபேறுடையவன்' எனப் புறநானூற்று பாடலடியினை மேற்கோள் இட்டு விளக்கம் தந்துள்ளார் அரங்க. இராமலிங்கம்.[15] சங்க இக்கியங்களில் அரசன், இறைவன், காவலன் எனும் சொறகளைவிட மன்னன் என்ற சொல்லே மிகுதியாக வந்துள்ளதைக் காணமுடிகின்றது. மற்றும் குறுநில மன்னர்களைக் குறிப்பதற்கே பெரும்பான்மை இடம்பெற்றுள்ளது. இதனை,

"சீறூர் மன்னன்"
"ஓவரயில் மன்னன்"
"தொல்குடி மன்னன்"
"தண்ணடை மன்னர்"
"குறுநில மன்னர்"

என்னும் பாடலடிகள்[16] மெய்ப்பிக்கின்றன. ஓரிடத்தில் மட்டும் சேரமான் பெருஞ்சேரலாதன் மன்னன் எனக் குறிக்கப்படுகின்றான். முன் அடிகளில் கரிகாற்சோழனை வேந்தன் எனக் கூறிப் பின்னர் மோனை கருதி 'மறத்தகை மன்னன்' (புறம், 65 : 10) எனக் கழாத்தலையார் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வேந்தன்

"வெம்மை அல்லது நெருப்பிலிருந்து 'வேந்தன்' என்ற சொல் உருவாகியிருக்கலாம். தீமைகளை அகற்றுவதற்கு வேந்தன் தன் கோலை உயர்த்திக் கடுமையான முகத்தோடு தண்டிக்க வேண்டும்" என்னும் அடிப்படையில் வேந்தன் வந்திருக்கலாம் என்கிறார் ரா.பி. சேதுப்பிள்ளை.[17] மன்னன், அரசன், காவலன், இறைவன் ஆகிய சொற்களை விட வேந்தன் எனும் சொல் சங்க இலக்கியங்களில் நிரம்ப இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும், சேர, சோழ, பாண்டியர்களாகிய இம்மூவரையே வேந்தர் எனச் சுட்டுகின்றன. இந்திரனையும் சூரியனையும் வேந்தன் என்னும் பெயரால் தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும் கூறியுள்ளன. இதனை,

> "வேந்தன் மேய தீம்புனல் உலகம்"[18] –எனவும்,
>
> "மலைச் சிறகரிந்த வச்சிர வேந்தர்"[19] –எனவும்

வரலாகும் அடிகள் உணர்த்துகின்றன. அரசன், இறைவன், காவலன், வேந்தன், மன்னன் எனச் சங்க இலக்கியத்தில் ஆட்சியாளர்களைக் குறிக்க இடம்பெறும் சொற்கள் அரசர்களின் பொதுப் பண்பைச் சுட்டுவதற்கே பயன்படுத்தப்பட்டமை தெரிகின்றது.

## சங்கப் புற இலக்கியம் சுட்டும் ஆட்சியாளர்கள்

### மூவேந்தர்

"கடைச்சங்க இலக்கியங்கள் நிலமாள்பவனை வேந்தன் என்றே மிகுதியாகக் குறிப்பிடுகின்றன"[20] என்பர். அந்நிலையில் சங்க காலத் தமிழகத்தின்

முப்பெரும் நாடுகளையும் ஆண்ட பெருநில மன்னர்களான சேரர், சோழர், பாண்டியரே மூவேந்தர் ஆவர். வேந்தர் என்ற சொல் சிறப்பாக இம்மூவர்க்கே உரியதாக விளங்குகின்றது. மற்ற குறுநிலத் தலைவர்களை, 'மன்னர்' என்றே சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வேளிர், குறுநில மன்னர், சீறூர் மன்னர் ஆகியோர் பெரும்பான்மை இவ்வேந்தர்களின் கீழ்ப்பணிந்து ஆண்டுள்ளமை புலனாகின்றது.

மூவேந்தரைச் சேர, சோழ, பாண்டியர் என்றழைக்கும் வழக்கம் எப்பொழுது தோன்றியது என்பதை வரையறுத்துக் கூற இயலாது. "குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு என அழைக்கப்பெறும் நிலப்பரப்பில் பாண்டியர்கள் ஆட்சி மேற்கொண்டிருந்ததை அறியமுடிகின்றது."[21] தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே மூவேந்தர் ஆட்சி நிலைபெற்றுவிட்டதை "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு" (பொருள், 384:3) என்னும் கூற்றால் உணரமுடிகின்றது. தொல்காப்பியம் சேரர், சோழர், பாண்டியர் எனப் பெயரிட்டு ஓரிடத்திலும் கூறவில்லை. சங்க இலக்கியங்கள் மூவேந்தர்களை,

"மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்"[22] – என்றும்,

"மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவர்"[23] – என்றும்

குறிப்பிட்டுப் பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

இம்மூவேந்தர்களுள் சேர வேந்தரையே முதலில் கூறுவர். இவர்களின் அடையாளப் பூக்களைக் கூறும் தொல்காப்பியம்,

"போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"[24]

எனச் சேரரின் பனம்பூ மாலையினை முதலிலும், பாண்டியரின் வேப்பம்பூ மாலையினை இடையிலும் சோழரின் ஆத்திப்பூவினை இறுதியுமாகக் கூறியுள்ளது.

புறநானூற்றில் கடவுள் வாழ்த்துப் பாடலையடுத்துப் பதினைந்து பாடல்கள் முறையே சேர பாண்டிய சோழ வேந்தர்களைப் பற்றியனவாக மும்மூன்றாய் ஐந்து சுற்றுகளில் அமைந்துள்ளன. இவற்றைக் காணும்போது இப்புறநானூற்றைத் தொகுத்தப் புலவர் முதலில் மூவேந்தரின் தொன்மையை உணர்ந்தே தொகுத்துள்ளார் எனத் தெரிகின்றது. "இவ்வமைப்பு முறை இறுதி வரை பின்பற்றப்படவில்லை என்பார்"[25] அரங்க. இராமலிங்கம்.

சிறுபாணாற்றுப்படையில் மூவேந்தரும்,

> "குடபுலங் காவலர் மருமான்" – என்றும்,
> "தென்புலங் காவலர் மருமான்" – என்றும்,
> "குணபுலங் காவலர் மருமான்" – என்றும்

முறையே குறிக்கப் பெற்றுள்ளனர்.[26] இவற்றால் மூவேந்தருள் முதல்வர் சேரரென்பது புலனாகின்றது. இரண்டாமவராகப் பாண்டியரும், சோழர் மூன்றாமவராகவும் அமைந்துள்ளதை உணரமுடிகின்றது. "சேர சோழ பாண்டியரென்னும் மரபு மாறிய வழக்குப் பிற்காலத்தே எழுத்தடைவு கருதி ஏற்பட்டதாகலாம்"[27] என்பர்.

## மூவேந்தர் – தொன்மை

மூவேந்தர் குடிகள் மிகப்பழங்குடிகள் எனத் தெரிகின்றது.

> "வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் றலைப்பிரிதல் இன்று" (குறள். 955)

என்ற இக்குறளுக்கு உரை நல்கிய பரிமேலழகர், "பழங்குடி தொன்றுதொட்டு வருகின்ற குடி; தொன்றுதொட்டு வருதலால் சேர, சோழ, பாண்டியரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்" எனக் கூறியுள்ளார். நினைவுக்கு எட்டாத மிகப் பழைய காலத்திலிருந்தே மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர் தமிழகத்தில் ஆட்சி செலுத்தி வந்தனர் என அறிஞர் பலர்[28] கருத்துக் கூறுதல்

இங்குக் கவனிக்கத்தக்கது. எனவே, பழந்தமிழ் மக்கள் தோன்றிய காலம் முதற்கொண்டே மூவேந்தர்கள் சிறப்புற்று வருதலால் இவர்கள் தொன்மையினை அறியலாகின்றது.

## சேர வேந்தர்கள்

மூவேந்தருள் சேர வேந்தரே தொன்மையானவராகவும் சிறப்புமிக்கவராகவும் விளங்குகின்றனர் என்பார் சி. பாலசுப்பிரமணியன்.[29] சோழரைச் சூரிய மரபினர் (மேகலை, பதி, 9) என்றும், பாண்டியரைச் சந்திர மரபினர் (சிலம்பு, 11:23) என்றும் இலக்கியங்கள் சுட்டியுள்ளன. அந்நிலையினில் சேரரின் தோற்றம் பற்றி சங்க இலக்கியங்களில் ஏதும் தெளிவாக அறிய இயலவில்லை. புறநானூறு மலைநாட்டு மன்னர்களின் பெயர்கள், அவர்கள் ஆண்ட பெரும் நிலப்பகுதிகளின் பெயர்கள், ஆளுமைத்திறன் என இருபத்தைந்து பாடல்கள் வரை சேர வேந்தர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. சேரர் வரலாற்றைப் பதிற்றுப்பத்து விரிவாகக் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

"சோழ, பாண்டியர் வமிசங்கள் இன்ன என்பதைக் குறித்துப் போந்த பண்டை நூல்கள், சேர வமிசத்தின் மூலத்தை மட்டும் அறியாதொழிந்ததை நோக்குமிடத்து, இம்மரபு ஏனையவற்றிலும் புராதனமானதென்றே புலப்படுகின்றது என்னும் மு. இராகவையங்கார்"[30] கருத்து இங்கு எண்ணத்தக்கது. சேரரைப் பழந்தமிழ் இலக்கியங்கள், வானவர், கோதை என்று குறிப்பிடுகின்றன. இவற்றை நோக்கும் பொழுது, சேரர், பண்டு தொட்டு தெய்வ ஈடுபாடு பெற்று விளங்கியவர்[31] எனச் சேரரைத் தெய்வ நிலையோடு தொடர்புபடுத்தி உரைப்பர்.

அயிரை, கொல்லி, பாயல், நன்றா, நேரி ஆகிய மலைகளும், ஆன் பொருநை, காஞ்சியாறு, குடவனாறு, காரியாறு, பேரியாறு போன்ற ஆறுகளும் சேர நாட்டில் குறிப்பிடத்தக்கவையாக இருந்துள்ளன. கருவூர், தொண்டி, நறவு, மாந்தை, வஞ்சி ஆகிய பேரூர்கள் சேரநாட்டில் சிறப்புற்று விளங்கியமை தெரிகின்றது. இயற்கை வளம் நிறைந்த வேழக்காடு, உம்பற்காடு என்னும் பகுதிகள் சேரநாட்டின் வளத்தைப்

பெருக்கியுள்ளமை அறியவருகின்றது. "இங்குள்ள காடுகளில் யானைகள் அதிகம் இருந்தமை பற்றி யானை மலைக்காடு (உம்பற்காடு) என்று பெயர் பெற்றது"[32] என்பர். சங்க நூல்கள் வானவரம்பன், பொறையன், வானவன், இரும்பொறை, குட்டுவன், கடுங்கோ, குடக்கோ, கோதை ஆகிய சிறப்புப் பெயர்களைச் சேரர்களுக்கு வழங்கியுள்ளமையைக் காணமுடிகின்றது.

"சோழ அரசர்கள் ஒன்பது தாயாதிகளாகப் பிரிந்திருந்து தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தனர்; அதுபோல் சேர அரசர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டதற்கான குறிப்பு ஏதும் சங்க இலக்கியங்களில் காணமுடியவில்லை"[33] என்பார் மயிலை சீனி. வேங்கடசாமி. இச்சேர வேந்தர்கள் இரு கிளையினர் எனத் தெரிகின்றது. ஒரு கிளை 'உதியன்' கால் வழி கிளையும், மற்றொன்று 'அந்துவன்' கால் வழி கிளையும் எனப் பதிற்றுப்பத்தின் பதிகக் குறிப்பு வாயிலாக அறியமுடிகின்றது. மேலும், பதிற்றுப்பத்து இந்த இருவழிக் கிளையினரையும் சிறப்பித்துப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இச்சிறப்புப் பெற்ற சேரர்களைச் சங்கப்புற இலக்கியங்கள் சுட்டியவழி இனிக் காண்போம்.

## சேரமான் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதன்

இன்று அறியப்படும் சேரர் குடியின் முன்னோனாக இவனே கருதப்படுகின்றான். உதியஞ்சேரலாதன் என்னும் இயற்பெயர் கொண்ட இவன் பாரதப்போர் நடைபெற்ற பொழுது இருதிறத்துப் படைகளுக்கும் பெருஞ்சோறு வழங்கியதால் அச்சிறப்புப் பற்றி பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனப் பெயர் பெற்றுள்ளான். இந்நிகழ்வினை,

> "அலங் குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"[34]

என முரஞ்சியூர் முடிநாகனார் பாடியிருப்பதால் அறியமுடிகின்றது.

சேர வேந்தரில், உதியஞ்சேரல் செங்குட்டுவனுடைய பாட்டன் எனப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் குறிப்பிட்டுள்ளது. முதல்பத்து இவனைப் பாட்டுடைத் தலைவனாகப் பாடியிருத்தல் வேண்டும். முதலாம் பத்து கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் உதியஞ்சேரலைப் பற்றி முழுமையாக அறியமுடியவில்லை. "நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்" (அகம், 65 : 5) என்று இவனைக் குறிப்பிடுவதால், நாட்டின் பரப்பை விரிவாக்கும் செயலில் இவன் ஈடுபட்டிருந்தமை புலனாகின்றது. 'முதியர்' என்னும் குடியினர் பாண்டியருக்குப் பகைவர்; சேரருக்கு நண்பர் எனப் பதிற்றுப்பத்தின் மூன்றாம் பதிகம் பாடியுள்ளது. இக்குடியினரைப் பகைவர்கள் தாக்க பலர் மாண்டுள்ளனர். செய்தி அறிந்த உதியஞ்சேரல் முதியவர்களுக்குத் துணை நின்று பகைவர்களை வென்றுள்ளமை தெரிகின்றது. அப்பகைவர்களின் உடல்கள் பலபேய்கள் கூட்டத்திற்குப் பெருஞ்சோறாய் அமைந்தனவாம். இதனை, "தொய்யா நல்லிசை முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்" (அகம், 233 : 7 – 8) என மாமூலனார் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

பதிற்றுப் பத்து, கூறும் உதியஞ்சேரலும் புறநானூறு குறிப்பிடும் பெருஞ்சோற்று உதியஞ் சேரலாதனும் ஒருவரே[35] எனவும், வெவ்வேறானவர்[36] எனவும் அறிஞர்கள் உரைக்கின்றனர்.

## இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

முதியர்ப் பேணிய உதியஞ் சேரலுக்கு வெளியன் வேண்மாள் நல்லினி யென்பாள் வயிற்றில் பிறந்த மகனாவான். இவனுக்கு வேளாவிக் கோமான் பதுமனென்பான் மகளொருத்தியும், சோழன் மணக்கிள்ளி மகள் ஒருத்தியுமாக மனைவியர் இருவர் எனத் தெரிகின்றது. அவ்விருவருள் பதுமன் மகள் பெற்ற மக்கள் களங்காய்க்கண்ணி நார் முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமாவர். மணக்கிள்ளி ஈன்ற மக்கள் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனும், சிலப்பதிகாரம் படைத்த இளங்கோவுமாவர். இவ்வுறவு முறையினைப் பதிற்றுப்பத்திலே இவர்களைக் குறித்து அமைந்த பதிகங்களால் அறியமுடிகின்றது.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குமட்டூர்க் கண்ணனாரால் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்திலே சிறப்பித்துப் பாடப் பெற்றுள்ளான். அவற்றால் இவனுடைய வெற்றி முதலான சிறப்புகள் விளங்குகின்றன. இவன் செய்த போர் நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை மூன்று. அவை; சிறப்பிற்குரிய முதல் வெற்றியான வடநாட்டு ஆரிய அரசனை வென்றதும்; இமயத்தில் விற்கொடி பொறித்ததும் ஆகும். இதனை,

"பேரிசை மரபின் ஆரியர் வணக்கி" – எனவும்,

"அமைவரல் அருவி இமையம் விற்பொறித்து" – எனவும்

இடம்பெறும் பாடலடிகளால்[37] உணரமுடிகின்றது. வடநாட்டு வெற்றியைத் தொடர்ந்து கடற்கொள்ளையர்களான கடம்பர்களை அழித்து, அவர்கள் காவல்மரமான கடம்பின் அடி மரத்தினால் தனக்கு வெற்றி முரசு செய்தமை[38] அறியவருகின்றது.

இமயவரம்பனின் வெற்றிகளுள் மூன்றாவதாகக் குறிக்கத்தக்கது யவனரை வென்று பிணித்த நிகழ்வாகும். "நயனின் வன்சொல் யவனர்ப் பிணித்து" (பதிற், பதி, 2:8) என இவ்வெற்றியைப் பதிற்றுப்பத்தின் இரண்டாம் பதிகம் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது. "நெடுஞ்சேரலாதன் யவனனை வென்ற செய்தி பதிகத்தில் மட்டும் கூறப்படுகின்றபடியால், குமட்டூர்க் கண்ணனார் இவன் மீது 2 ஆம் பத்துப் பாடிய பிறகு அந்த யவனப் போர் நிகழ்ந்திருக்க வேண்டும்"[39] என்கின்றார் மயிலை சீனி. வேங்கடசாமி.

## பல்யானைச் செல்கெழு குட்டுவன்

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் எனப் பதிற்றுப்பத்தின் மூன்றாம் பத்துப் பதிகம் விளம்புகின்றது. இவன் 'வெல்போர்க்குட்டுவன்', 'பொலந்தார்க்குட்டுவன்', 'பெரும்பல்யானைக்குட்டுவன்', என்னும் அடை மொழிகளால் சிறப்பிக்கப் பெறுகின்றான்.[40] இவனிடம் பல யானைப் படைகள் இருந்துள்ளன. அதனால் இவன் பல கோட்டைகளை எளிதில் வென்றுள்ளமை தெரிகின்றது. இவனிடம் பல யானைகள் இருந்தமையை,

"அமர்கோண் நேரிகந்து ஆரெயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்"[41]

என்ற பாட்டடிகள் உணர்த்துகின்றன.

பூழி நாட்டை ஆண்ட இவன் உம்பற்காட்டின் மீது படையெடுத்துச் சென்று வென்று தன் கீழ்க் கொண்டு வந்தான் என்பது, "உம்பற்காட்டைத் தன் கோன் நிறீஇ" (பதிற், பதி; 3:2) என்னும் பதிக அடிகளால் அறியலாகின்றது. இதனை உறுதிப்படுத்துவதாகவே, "உம்பற்காட்டைத் தன் கோலில் வென்று இவன் தன்னாட்சியின் கீழ் அடிப்படுத்திச் சேர முடியரசிற் சேர்ந்தான்"[42] என்பர். "அது பொருந்தாது; உம்பற்காடென்பது இக்காலத்து ஆனை மலைப் பகுதியாகும்,"[43] அது முன்னமே சேரராட்சியிற் சேர்ந்திருந்ததேயன்றிப் பிறராட்சியில் இருந்ததன்று"[44] என்கின்றார் வ. குருநாதன்.

"தண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ"[45]

என்பதால், 'அகப்பா' வென்னும் பகைவரது அரணையழித்துப் பகலிலேயே அதனைத் தீயிட்டுக் கொளுத்தியமை தெரிகின்றது. இவ்வெற்றிக்கு, "குட்டுவனால் தழுவிக் கொள்ளப்பட்ட முதியரை உம்பற்காட்டுப் பகுதியில் வாழ்ந்த ஓர் இனத்தவரென்றும் அவர்களின் துணையோடுதான் இவன் உம்பற்காட்டின் வடபகுதியில் அமைந்த அகப்பா வென்னும் பகைவரது அரணையழித்து, அப்பகுதியை அம் முதியர் காவலில் வைத்தானென்றும் கூறுவர்"[46] பேரா சி. பாலசுப்பிரமணியன்.

இவ்வாறு பல போர் வெற்றிகளைப் பெற்ற இவனது போர் முறை, தோற்றப் பொலிவு, பண்புநலம், கொடைத் தன்மை எனப் பாலை கௌதமனார் பதிற்றுப்பத்திலே சிறப்பித்துப் பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது. இறுதியில் இவன் தன் ஆசான் தனக்கு முன்பே துறவு மேற்கொண்டு காடு செல்லத் தானும் துறவுள்ளங்கொண்டு காட்டிற்குச் சென்றான் எனத் தெரிகின்றது.

## களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

இமயவரம்பனின் இளைய மனைவி வேளாவிக் கோமான்பதுமன் மகள் வயிற்றில் பிறந்தவன். செங்குட்டுவனுக்கு மூத்தவன். களங்காயினால் கண்ணியும், நாரினால் முடியும் புனைந்து அரசுப்பட்டம் ஏற்றமையால் களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் எனப் பெயர் பெற்றுள்ளான். பதிற்றுப் பத்தின் நான்காம் பத்து இவனது புகழினைப் பாடியுள்ளது.

> "பொன்னங் கண்ணிப் பொலந்தேர் நன்னன்
> சுடர்வீ வாகைக் கடிமுதல் தடிந்த
> தார்மிகு மைந்தின் நார்முடிச் சேரல்"[47]

என்ற பாடலடியால், வாகை மரத்தைக் காவல் மரமாகக் கொண்ட நன்னனைப் போரிலே வீழ்த்தினான் எனத் தெரிகின்றது. மேலும், நெடுமிடல், கொடுமிடல் போன்றோரையும் போரிலே வென்றமையைப் பதிற்றுப்பத்தின் நான்காம்பத்துப் புலப்படுத்துகின்றது.

இவனது பெரும்படை, போராற்றல், தோற்றப்பொலிவு, கொடைத்தன்மை, பண்புநலம், ஆட்சி சிறப்பு போன்றவைகளைக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடியுள்ளமை அறியக்கிடக்கின்றது. தன்னைப் புகழ்ந்து பாடிய இப்புலவருக்கு 40 இலட்சம் பொற்காசுகளை வழங்கியுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடல்பிற கோட்டிய செங்குட்டுவன்

சங்க காலச் சேரர்களில் தலை சிறந்தவனாய் விளங்குகின்றான். பதிற்றுப்பத்தில் குறிப்பிடப்பெறும் கடல்பிறகோட்டிய செங்குட்டுவனும் சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் சேரன் செங்குட்டுவனும் ஒருவனே ஆவான். செங்குட்டுவனென்னும் இயற்பெயரையுடைய இவன் கடல் பின்னிடுமாறு அதன் அலைப்பரப்பினூடே குதிரையூர்ந்து நீர்ப்பரப்பினுள்ளே வேலெறிந்த சிறப்பினால் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனென்று அடையடுத்து அழைக்கப்பெற்றமை உணரலாகின்றது.

பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்துப் பாடல்களால் இவனைப் பல்வகையினும் சிறப்பித்தப் பரணர், பின்னும் இவனது போர்க்கால வெற்றியை ஏர்க்கள உருவகமாகப் புறநானூற்றில் (369) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பரணரின் சங்கப் பாடல்களால் விளங்குகின்ற இவனுடைய வெற்றிகள், "கடல்பிறகோட்டி வேலெறிந்த வெற்றி", "மோகூர் வெற்றி", "தென்னாட்டு வடநாட்டு வெற்றிகள்" எனப் பல தொடர்கின்றன.[48]

> "உறுபுலி யன்ன வயவர் வீழச்
> சிறுகுர னெய்தல் வியலூர் நூறி
> அக்கரை நண்ணிக் கொடுகூர் எறிந்து"[49]

என்ற இப்பதிக அடிகளால் வியலூர், கொடுகூர் போர் வெற்றியை அறிய முடிகின்றது.

> "ஆராச் செருவின் சோழர்குடிக் குரியோர்
> ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத்து இறுத்து
> நிலைச் செருவின் ஆற்றலை அறுத்து"[50]

என்பதால், நேரிவாயில் போரில் தன் மைத்துனர் கிள்ளி வளவன், சோழநாட்டுப் பெருவேந்தனாவதை எதிர்த்த சோழர்க் குடியைச் சேர்ந்த ஒன்பது மன்னர்களுடன் போர் புரிந்து அவர்களை அழித்துக் கிள்ளிவளவனை அரசனாக்கியதை அறிய முடிகின்றது. "இச்செங்குட்டுவனுக்கு மைத்துனன், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியென்றும்,[51] கிள்ளி வளவனென்றும் [52] வேறுபடக் கூறுவர்."

இவ்வேந்தனின் கொங்கர் செங்களப் போர், வண்டமிழ்ப் போர், கங்கைப் போர், இமயப்படையெடுப்பு எனச் சிலப்பதிகாரம்[53] விரிவாகப் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது.

### ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

இவன் தந்தை நெடுஞ்சேரலாதன். தாய் வேளாவிக் கோமான் பதுமன் மகள். அண்ணன் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல். இவ்வுறவுமுறையினைப் பதிற்றுப்பத்து வாயிலாக அறியமுடிகின்றது.

இவன் "போர்க்களத்திலே வாளை உயர்த்தி ஆடினான் என்றும் ஆடுவதை மேற்கொண்ட சேரலாதன் ஆதலால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் பெயர் பெற்றான்"[54] என்பார் ந.க. மங்களமுருகேசன். இச்சேரலாதனுடைய நாட்டிலிருந்து ஆட்டுநிரையைத் தண்டகாரணியத்துப் பகைவர் கவர்ந்து போனதை இவன் மீட்டுக் கொண்டுவந்தான் என்ற பதிகச் செய்தியே, இவனுடைய குறிப்பிடத்தக்க சிறப்புடைய வெற்றிச் செயலாக வருகின்றது. அதுபற்றியே இவனுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற சிறப்புப் பெயர் அமைந்ததென்பர்.[55]

காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடிய பதிற்றுப்பத்தினுள் அடங்கியுள்ள ஆறாம்பத்துப் பாடல்களும், அவற்றிற்கு அமைந்த பதிகமுமே இவ்வேந்தனின் வரலாற்றுச் செய்திகளைக் கூறியுள்ளன. இவனைக் குறித்துப் பாடிய வேறு சங்க இலக்கியப் பாடல்களும் வேறு புலவர்களும் இல்லாமை காணத்தக்கது. இவனுடைய போர்ச் செயல்களைக் காணும் போது தன் முன்னோர் வென்ற நாடுகளையெல்லாம் தானும் வென்றுள்ளதையும் போரில் பல மன்னர்களைத் தோற்றோடும்படி செய்தமையும் அறியமுடிகின்றது.[56] பகைவர்கள் இவனுக்கு அஞ்சி திறை தந்த போது அதனை ஏற்று அவர்களை அழிக்காமல் விட்டதையும் பதிற்றுப்பத்தின் (53 : 10 – 13) வழி உணரமுடிகின்றது.

"பொங்குபிசிர்ப் புணரி மங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையின் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத் தானே"[57]

என்பதனால், பகைநாடுகளை வென்ற பிறகு அலைகளோடும் மேகத்தோடும் கலந்து வருகின்ற கடற்காற்றினால் நடுங்குவதற்கிடமான நறவென்னும் நகரிலே இவன் தங்கியிருந்தமை தெரிகின்றது. "இவ்விடம் துளுநாட்டில் கடற்கரையிலிருந்த துறைமுகப்பட்டினம் என்றும், நறவு என்னும் பெயருடைய இந்த ஊரைத் துவ்வா நறவு என்று தமிழ்ப் புலவர்கள் கூறினார்கள் என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுகின்றார்."[58]

## சேரமான் அந்துவஞ் சேரல் இரும்பொறை

அந்துவனின் மனைவி 'பொறையன் பெருந்தேவி ஒருதந்தை' என்பவரின் மகள், பெருந்தேவி என்னும் வழக்குப் பொதுவாக அரசியை உணர்த்தும். எனவே, இவருடைய பெயர் பொறையனுக்கு மனைவி எனும் பொருள்தரும். பதிற்றுப்பத்து ஏழாம் பதிகம், "பொறையன் பெருந்தேவி ஈன்ற மகன்" (7 : 3) எனச் செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கூறுவதால் செல்வக்கடுங்கோ வாழியாதனின் தந்தை 'அந்துவன்' என்பது புலனாகின்றது. ஆகவே, புறநானூற்றில் (13) குறிப்பிட்டுள்ள சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை இந்த அரசனே ஆவான் எனத் தெரிகின்றது. இவனைப் பற்றி சங்க இலக்கியங்கள் நேர்முறையில் பாடாமை குறிப்பிடத்தக்கது.

## சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன்

அந்துவஞ்சேரல் இரும்பொறையின் புதல்வனாவான். இவன், சிக்கற்பள்ளி என்னும் ஊரில் இறந்தபடியால், "சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதன்" எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றமை தெரிகின்றது. இவனைக் கபிலரும் (புறம், 8, 14), குன்றுகட் பாலியாதனாரும் (புறம், 387) சிறப்பித்துப் பாடியுள்ளனர். இவ்வேந்தன் தொடக்க நிலையில் பூழி நாட்டை ஆண்டு வந்துள்ளான். பூழி நாடு இப்போதைய பழநி மலை வட்டாரம் என்பர்.[59] இவ்வேந்தனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக நேரிமலை, கொடுமணல், பந்தர் ஆகிய இடங்கள் அடங்கி இருந்தமையைப் புறநானூற்றுப் பாடல்வழி (புறம், 387:30 – 36) அறியமுடிகின்றது.

> "வையாங் காவலர் வழிமொழிந் தொழுகப்
> போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது
> இடம்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப
> ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
> கடந்தடு தானைச் சேரலாதன்"[60]

என்ற பாட்டடியால் இவனது போராற்றல் விளங்குகின்றது. ஆனால், இவன் எந்நாட்டோடு, யாரோடு போரிட்டான் என்னும் செய்திகள் பாடல்களில் விரிவாக இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

கபிலர் இவனது படைச்சிறப்பையும் போர் வெற்றிகளையும், கொடைத் தன்மையையும், பண்பு நலன்களையும் சிறப்புப் பெயர்களையும் விரிவாகப் பாடியுள்ளார். தன்னைப் புகழ்ந்து பாடிய கபிலருக்கு இவன் நூறாயிரம் பொற்காசுகளைச் சிறுகொடை கொடுத்துப் பின்னும் 'நன்றா' வென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடுகளையெல்லாம் காட்டிப் பரிசாகக் கொடுத்தானென்று பதிற்றுப்பத்தின் ஏழாம் பதிகத்தால் அறியலாகின்றது. "இந்த நன்றாவென்னும் குன்று இக்காலத்துத் 'தேனன்றா' மலையெனவும் தற்போது இது சேலம் மாவட்டம் ஊற்றங்கரை வட்டத்தின் தென்பகுதியில் மஞ்சவாடிக் கணவாயின் வடபால் உள்ளதெனவும் கூறுவார்"[61] மு. இராகவையங்கார்.

## தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

செல்வக்கடுங்கோ வாழியாதனுக்கும் பழனிமலைப் பகுதியை ஆண்ட பதுமனின் மகளுக்கும் பிறந்த மகன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனப் பதிற்றுப்பத்தின் எட்டாம் பதிகம் குறிப்பிடுகின்றது. இவன், தொடக்க காலத்தில் ஆட்சிபுரிந்த நாடு யாதெனத் தெரியவில்லை. எனினும் பதிற்றுப்பத்து (76 : 12) அந்நாடு பகன்றைப் பூக்களைக் குடிப்பூவாகச் சூடும் உழவர்கள் நிறைந்த நெல் வளமிக்க நாடு என்கின்றது.

'கழுவுள்' என்பான் காமூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்துள்ளான். அவனது கோட்டையை வென்று காமூரைத் தீக்கிரையாக்கியுள்ளான்."[62] மேலும், கழுவுளை வெற்றி கொண்ட பெருஞ்சேரல் இரும்பொறை கொங்கு நாட்டில் ஊடுருவி அதியமானை, கொல்லிமலைப் பகுதியில் உள்ள நீக்கூரில் தாக்கியுள்ளான். வெற்றி பெற்று அவனது தலைநகரான தகடூரையும் தாக்கித் தீக்கிரையாக்கியதைப் பதிற்றுப்பத்தின் எட்டாம் பதிகம்

குறிப்பிட்டுள்ளது. இவ்வெற்றியினாலே இவ்வேந்தன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனக் குறிக்கப்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

ஒருமுறை மோசிகீரனார் எனும் புலவர் இவரைக் காணவந்துள்ளார். வந்தவர் பயணக் களைப்பினால் வெற்றி முரசு வைக்கும் கட்டிலின் மேல் தம்மையறியாது அயர்ந்து உறங்கிவிட்டார். இதனைக் கண்ட அரசன் பெருங்குற்றமாகக் கருதாது புலவர் உறங்க, கவரி வீசி நின்றுள்ளான். இந்நிகழ்வினை மோசிகீரனாரே புறநானூற்றில் (50) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வேந்தனின் படைபலம், கொடைத்தன்மை, நடத்திய வேள்வி, பண்பு நலம் எனப் பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள எட்டாம் பத்தில் அரிசில்கிழார் சித்தரித்துள்ளமை காணத்தக்கது.

## இளஞ்சேரல் இரும்பொறை

பதிற்றுப்பத்து அமைப்பினைப் பார்க்கும் போது இவன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்குப் பின் அரசாண்டவன் எனத் தெரிகின்றது. இவனது தந்தை குட்டுவன் இரும்பொறை, தாய் அந்துவஞ்செள்ளை என்று பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பத்துப் பதிகம் பாடியுள்ளது. இவனைப் பாடிய புலவர் பெருங்குன்றூர் கிழார் ஒருவரே எனத் தெரிகின்றது. "புறநானூற்றில் (210, 211) பெருங்குன்றூர் கிழார் பாடிய சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறையும் இவனே"[63] என்பார் வ. குருநாதன்.

பச்சைமலை என்று இன்று வழங்கும் விச்சிமலைப் பகுதியை 'விச்சிக்கோ' ஆண்டு வந்துள்ளான். இளஞ்சேரல் இரும்பொறை இவனது கோட்டையைத் தாக்கி அழித்துள்ளமை தெரிகின்றது. மேலும், 'பெருஞ்சோழன்' என்ற சோழனையும் 'மாறன்' என்ற பாண்டியனையும் வஞ்சினம் கூறி அழித்துள்ளமையும் பதிற்றுப்பத்தின் வழி அறியக்கிடக்கின்றது.[64] இச்சேர வேந்தருடன் பதிற்றுப்பத்து வாயிலாக அறியலாகும் சேர வேந்தர் மரபு முற்றுப் பெறுகின்றது.

## புறநானூறு கூறும் சேர வேந்தர்கள்

பதிற்றுப்பத்தில் இடம்பெறாத சில சேர வேந்தர்கள் பிற இலக்கியங்களில் இடம் பெறுதல் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் புறநானூற்றில் இடம் பெறும் சேர வேந்தர்கள் : சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரலிரும்பொறை (5, 195), சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ (11), யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (17,20, 22), வானவன் (22,39), சேரமான் கோக்கோதை மார்பன் (48, 49), சேரமான் குட்டுவன் கோதை (54), சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் (62, 63, 368), சேரமான் பெருஞ்சேரலாதன் (65), சேரமான் கணைக்கால் இரும்பொறை (74), மாந்தரஞ்சேரல் இரும்பொறை (53, 125), சேரன் குடக்கோச் சேரல் இரும்பொறை (210, 211), கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை (229), சேரமான் மாவண்கோ (367), சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை (245), சேரமான் வஞ்சன் (398), முதலியோர் அறிய வருகின்றனர்.

இவர்களில் மூவர் வேந்தராக மட்டும் அல்லாது புலவராகவும் விளங்கியுள்ளமை அவர்கள் பாடிய புறநானூற்றுப் பாடல்கள் வழி (74, 245, 282) அறியக்கிடக்கின்றது.

## பாண்டிய வேந்தர்கள்

சேர, சோழரைவிடத் தொன்மையான வரலாறுகளைப் பாண்டியர்கள் பெற்றிருந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பது பாண்டிய மன்னர்கள் தென்மதுரையிலிருந்து ஆட்சிசெய்து முதற்சங்கத்தைத் தோற்றுவித்துள்ளனர் என்றும், வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் கபாடபுரத்திலிருந்து ஆட்சி புரிந்து இடைச் சங்கத்தைத் தோற்றுவித்தனர் என்றும், கடைச் சங்க காலத்துப் பாண்டியர் முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் மதுரையிலிருந்து ஆட்சி

செய்து கடைச் சங்கத்தை தோற்றுவித்தனர் என்றும் இறையனார் அகப்பொருள் உரை கூறுகின்றது.[65] சிலப்பதிகாரத்து வேனிற்காதையில் முதலிரண்டு அடிகளுக்கு அமைந்த அடியார்க்கு நல்லார் உரையினாலும்[66] ரா. இராகவையங்கார்,[67] மு. இராகவையங்கார்[68] கூற்றினாலும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர்களையும் அவர்களின் தொன்மையினையும் அறியமுடிகின்றது.

'சங்கம்' என்ற அமைப்பு இல்லையென்றும், அவ்வாறு உரைப்பது உண்மைக்குப் புறம்பானது என்றும்,[69] புலவர் பலர்கூடி, ஆராயும் சங்கம் என்றோர் அமைப்பு பண்டைக்காலத்தில் இருந்தது என்றும்[70] அறிஞர் பலர் கருத்துரைத்துள்ளமை கவனிக்கத்தக்கது.

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை"[71]

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் உரைப்பதும்; மாங்குடி மருதனார்,

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவி னெடியோன்"[72]

என உரைப்பதும், சங்கம் இருந்ததை ஒருவாறு உணரமுடிகின்றது. மற்றும் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் நல்கிய பனம்பாரனாரும்,

"நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசான்"[73]

எனக் கூறுவதினாலும், பாண்டியர் அவையில் புலவர்கள் கூடித் தமிழாராய்ந்தனர் என்றும், நூல்கள் அரங்கேற்றம் செய்யப்பெற்றன என்றும் அறியமுடிகின்றது.

இச்சிறப்புக் கருதியே சங்க காலப் புலவர்கள் பாண்டியரையும் அவர்கள் தலைநகரான மதுரையையும் தமிழோடு இணைத்தே பாடியுள்ளனர். இதனை,

"தமிழ்கெழு கூடற் றண்கோல் வேந்தே" – எனவும்,

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை" – எனவும்

வரும் பாடலடிகளால்[74] அறியலாகின்றது. இவ்வாறு பாண்டியரையும் தமிழையும், தமிழையும் மதுரையையும் தொடர்புபடுத்தி பழந்தமிழ் இலக்கியங்கள் பகர்வதிலிருந்து சேரருக்கும் சோழருக்கும் இல்லாத தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கு மட்டுமே உண்டு என்பதில் ஐயமில்லை. இத்தகைய பாண்டியர்களின் வரலாறுகளைச் சங்க இலக்கியங்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்விலக்கியங்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தனித்தனிப் பாடல்களாக வேறுபட்ட புலவர்களால் வேறுபட்ட காலங்களில் பாடப்பட்டிருப்பதால் பாண்டியர் வரலாற்றை ஒரே சீரான தொடர்ச்சியான கால வரன்முறையில் கூறுதல் எளிதன்று. எனவே, விரவிக்கிடக்கும் பாடற்செய்திகளைக் கொண்டு பாண்டியர்களின் வரலாறுகளை ஒருவாறு வகைப்படுத்தலாம். "இம்மாதிரியான வகைப்படுத்துதல் வரலாற்றுக்கு ஒவ்வாதெனினும், இம்முறையேயன்றி இச்சான்றுகளைக் கொண்டு கோவையான வரலாறு எழுத இயலாது"[75] என்னும் கருத்து இங்கு எண்ணத்தக்கது.

## நிலந்தரு திருவின் பாண்டியன்

தொல்காப்பியச் சிறப்பு பாயிரத்தால் அறியவரும் இவன் பாண்டிய வேந்தருள் முன்னோனாகக் கருதப்படுகின்றான். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு நிலையாமையை உணர்த்திய மாங்குடி மருதனாரால் சிறப்புற எடுத்துக்காட்டப் பெறுகின்றான்.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
நிலந்தரு திருவின் நெடியோன் போல

வியப்பும் சால்பும் செம்மை சான்றோர்
பலர்வாய்ப் புகரறு சிறப்பின் தோன்றி"[76]

என்பதால், இப்பாண்டியனின் வியக்கத்தக்க மேம்பாடும் சங்கச் சால்பும் பிறவும் நன்கு அறியலாகின்றது.

## பாண்டியன் கருங்கையொள்வாள் பெரும்பெயர் வழுதி

சங்க நூல்களில் காணும் பாண்டிய வேந்தருள் மூத்தவன் இவன் எனப் புலனாகின்றது. புறநானூற்றில் முதல் பாடல் கடவுள் வாழ்த்து. அடுத்து பாட்டுடைத் தலைவர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனைப் பற்றியது. இவன் சேர அரசர்களின் மூத்தவன். மூன்றாம் பாட்டு பாட்டுடைத் தலைவன் பாண்டியன் கருங்கையொள்வாள் பெரும்பெயர் வழுதியைப் பாடுவது. எனவே, இவன் பாண்டிய வேந்தர்களில் வயதில் மூத்தவன் எனத் தெரிகின்றது. இவ்வேந்தன் இரவலர் வறுமையைப் போக்கியதைப் புலவர் இரும்பிடர்த் தலையார் சிறப்பாகப் பாடியுள்ளார்.

"வெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து
மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக்
கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி"[77]

என்று இப்பாட்டடியில் வரும் 'கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதி' என்ற தொடர் பாட்டுடைத் தலைவன் பெயராக வழங்குதல் குறிப்பிடத்தக்கது.

## பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

புறநானூற்றில் மூன்று புலவர்களும்[78] மதுரைக் காஞ்சியில் மாங்குடி மருதனாரும் இவனைப் பாடியுள்ளனர். பல யாகங்களைச் செய்ததால் இவனைப் 'பல்சாலை முது குடுமி' என மதுரைக்காஞ்சி (அடி; 759) கூறுகின்றது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண்சேர்மின்"[79]

என நெட்டிமையார் பாடியுள்ளதால், இவன் அறப்போர் புரிந்தமையை உணர முடிகின்றது. மேலும், வெற்றியால் கிடைத்த பொருள்களைத் தானமாகக் கொடுத்து மகிழ்ந்தான் எனப் புறநானூறு (12) கூறுவதால் இவனுடைய கொடைப் பண்பினையும் அறியலாகின்றது.

## பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

சங்கப் புற இலக்கியங்களில் 'நெடுஞ்செழியன்' என்ற பெயரோடு தெளிவாக அறியவருகின்ற பாண்டிய வேந்தர்கள் இருவர். ஒருவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், மற்றொருவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆவான். இவர்களுள் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் சங்க காலப் பாண்டியர்களுள் தலை சிறந்தவனாகக் கருதப்படுகின்றான். சங்க இலக்கியங்களில் காணும் வேந்தர்களில் அதிக பாடல்களால் பாடப்பெற்றவனும் இவன் ஒருவனே என்பது குறிப்பிடத்தக்கது. பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியும், நெடுநல்வாடையும் நீண்ட நெடிய பாட்டுகளால் இவனைப் பாடியுள்ளது. புறநானூற்றில் 13 பாடல்களும் இடம்பெற்றுள்ளமையைக் காணமுடிகின்றது.[80] இவன் இளம் வயதில் அரியணை ஏறினான் என்பது இவனைப் பற்றிய புறப்பாடலால் (புறம், 72, 77) உணரமுடிகின்றது. இவனை இளையோன் என நினைந்து இருபெரு வேந்தரும், ஐந்து வேளிர்களும் இவ்வேந்தனை முற்றுகையிட்டனர். அவர்களைத் தலையாலங்கானம் என்ற இடத்தில் போரிட்டு வென்றமையை,

"இருபெரு வேந்தரொடு வேளிர் சாயப்
பொருது அவரைச் செருவென்றும்"[81] – என்றும்,

"தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து
மன்னுயிர்ப் பன்மையும் கூற்றத்து ஒருமையும்
நின்னொடு தூக்கிய வென்வேற் செழிய"[82]

என்றும் புலவர்கள் பலரும் பாடியுள்ளமையால் அறியமுடிகின்றது. பாண்டியர்களுள் இவன் ஒருவனை மட்டும் ஆய்வு மேற்கொள்ளும் அளவிற்கு சங்க இலக்கியங்களில் நிரம்ப செய்திகள் இவனைப் பற்றி இடம் பெறுதல் குறிப்பிடத்தக்கது.

### பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி

கடைச்சங்கத்தைப் புரந்த பாண்டிய வேந்தருள் இறுதி வேந்தரென்று இறையனார் களவியல் உரை குறிப்பிடுகின்றது. வேங்கை மார்பன் என்பானுக்குரிய கானப்பேரெயிலை வெற்றி கொண்டதால் உக்கிரப்பெருவழுதியாகிய இவன் 'கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி' எனப் பெயர் பெற்றமை தெரிகின்றது. "கானப்பேரெயில் என்ற இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டத்து காளையார் கோயில்"[83] என்பார் ந.க. மங்களமுருகேசன். இவ்வேந்தனின் வெற்றியை,

> "ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
> பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே"[84]

என ஐயூர் மூலங்கிழார் சிறப்பித்துப் பாடியுள்ளார். மேலும், இவன் ஒற்றுமைப் பண்பிலும் உயர்ந்து விளங்கியமையும் புறப்பாடலால் (புறம், 367) அறியக்கிடக்கின்றது.

### பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி

இவ்வேந்தனைப் பாடிய புலவர்கள் இருவரும் 'வழுதி' என்றே கூறியுள்ளனர். இவன் கூடகாரத்தில் மாண்டதால் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி எனப்பட்டுள்ளான். புலவர் ஐயூர் முடவனாரும், மருதனிள நாகனாரும் வழுதி போரர் புரிய எண்ணினால் அயலார் இரங்கத்தக்கவர் ஆவர் என்று சொல்லி, அவனைப் போரைத் தவிர்க்கும்படி பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நீர்மிகின் சிறையும் இல்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி"[85]

என்பதால், இவனுடைய போராற்றலை உணரமுடிகின்றது. மேலும், இவன் வடநாட்டின் மீது படைமேற்கொண்டு சென்றமையும் புறநானூற்றுப் பாடலால் (52) அறியலாகின்றது.

## பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்

பாண்டிய நாட்டில் அமைந்ததோர் இலவந்திகைப் பள்ளியில் இறந்தமையால் இந்நன்மாறன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் எனக் குறிக்கப் பெற்றுள்ளான். இவனைப் பற்றி ஐந்து புலவர்கள் ஐந்து பாடல்களில் புறநானூற்றில் பாடியுள்ளனர்.[86] இப்பாண்டியன் தன் ஆட்சி காலத்தில் தமிழ் வேந்தர்கள் மூவருள் தானே சிறந்தோனாய் மேம்பட்டு விளங்கியதை,

"ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற"[87]

என்ற, மதுரை மருதனிளநாகனார் பாடலால் அறியமுடிகின்றது. இந்நன்மாறன் தன்னைப் பாடிய பாவலர்க்குப் பரிசில் கொடாத இகழ்ச்சியளானாய்ப் பாடப் பெற்றமையும் புறநானூற்றிலே (196) காணமுடிகின்றது.

## பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்

"வெற்றி வேற்செழியன் என்ற இவனே முடிசூடிய பிறகு நன்மாறன் என்ற வேறு பெயர் பெற்றான்"[88] என்பார் டி.வி. சதாசிவப் பண்டாரத்தார். இந்நன்மாறன் சித்திரமாடத்துத் தங்கியிருந்து துஞ்சினமையால் இவனைச் சித்திரமாடத்துத்

துஞ்சிய நன்மாறன் என்று அழைத்துள்ளனர். மதுரைக் கூல வாணிகன் *சீத்தலைச் சாத்தனாரால்* மட்டும், ஒரே பாடலில் பாடப்பெற்றுள்ளான்.

"------ ------- கடல் ஊர்பு எழுதரும்
ஞாயிறு அனையை நின் பகைவர்க்குத்
திங்கள் அனையை எம்ம னோர்க்கே"[89]

என்ற பாடலடியால் இவ்வேந்தனின் இருவகைப்பட்ட பண்பு நலன்களை உணர முடிகின்றது.

## பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி

சோழ அரசன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனும், இப்பாண்டிய வேந்தனும் ஒருங்கே சேர்ந்திருந்ததை,

"பால்நிற உருவின் பனைக்கொடி யோனும்
நீல்நிற உருவின் நேமியோனும் என்று
இருபெருந் தெய்வமும் உடன்நின் றாஅங்கு
உருகெழு தோற்றமொடு உட்குவர விளங்கி"[90]

எனப் பலராமனும், கண்ணனும் ஆகிய இருதெய்வமும் போல் ஒன்றாக நின்று காட்சியளிப்பதாகப் புறநானூறு சுட்டியுள்ளதைக் காணமுடிகின்றது. "இவ்வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாகக் காண்பார்"[91] சிவராசப்பிள்ளை.

## பாண்டியன் அறிவுடைநம்பி

இவ்வேந்தனின் ஆட்சியில் வரிவசூலிக்கும் முறையில் உள்ள குறையினைப் பிசிராந்தையார் இவனிடம் சுட்டியுள்ளமை நோக்கத்தக்கது. இதனை,

"காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்
------- ------- ------- -------
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு

பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே"[92]

எனவரும் புறப்பாடலால் அறியமுடிகின்றது. இவன் குழந்தைப் பேற்றின் பெருமையினையும், அஃதில்லாதாரின் நிலையினைக் குறித்தும் பாடிய ஒரு பாடல் புறநானூற்றிலே (188) இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாண்டியன் கீரஞ்சாத்தன்

"கீரன்மகன் சாத்தன் என்னும் பெயர் கீரஞ்சாத்தன் என்று அமைந்திருக்கக் கூடும்"[93] என்றும், "இவன் பாண்டியர் மரபில் பிறந்த குறுநில மன்னன்"[94] என்றும் கூறுவர். இவனை ஆவூர் மூலங்கிழார் மட்டும் ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளார். கள்ளுண்ட மயக்கத்தால் கடமையை மறந்த சில போர் வீரர்கள் அஞ்சியிருந்தபோது, எஞ்சிய படை வீரர்களுக்கு ஊக்கமளித்துப் பாதுகாவலனாகப் போரில் முன்னேறிச் சென்றுள்ளான் எனத் தெரிகின்றது.

"உண்ணார் ஆயினும் தன்னொடு சூளுற்று
உண்மென இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்"[95]

என்பதால் இவனது விருந்தோம்பல் பண்பு புலனாகின்றது.

## ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

பூதப் பாண்டியன் என்பதே இவன் பெயர். ஒல்லையூரை வெற்றி கொண்டு பகைவர்களின் பொருள்களைக் கவர்ந்து வந்த சிறப்பினால் ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் என அழைக்கப்பெறுகின்றான். "இவ்வூர் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருமெய்யத்திற்கு அண்மையில் உள்ள ஒலியமங்கலம்"[96] என்பார் வ. குருநாதன். இவ்வேந்தன் தன் பகைவர் குறித்துக்கூறிய வஞ்சின மொழி பாடலொன்று புறநானூற்றிலே இடம் பெற்றுள்ளது.

"மடங்கலிற் சினைஇய மடங்கா வுள்ளத்து
அடங்காத் தானை வேந்தர் உடங்கியைந்து
என்னொடு பொருதும் என்ப"[97]

என்ற இப்பாடலடியால் இவனுடைய வீரமிக்க வஞ்சின மொழிகள் உணரப்படுகின்றது. இப்பாண்டியன் எவ்வாறு இறந்தான் என்பது புனைாகவில்லை. ஆனால், இவன் இறந்தபோது மனைவி பெருங்கோப்பெண்டு உடன்கட்டை ஏறினாள் என்பது புறநானூற்றுப் பாடல் வழி (246, 247) அறியக்கிடக்கின்றது.

## கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

இப்பாண்டியன் கடலில் செல்லும்போது மாண்டதால் 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' என்றழைக்கப்பட்டமை தெரிகின்றது. இவனை எந்த ஒரு புலவரும் சங்க இலக்கியங்களில் பாடப்பெற்றதாக அறிய இயலவில்லை. ஆனால், இவ்வுலகம் நிலைபெற்று இருப்பதற்குக் காரணம், தன் நாட்டில் வாழும் நல்சான்றோரே என இவர் பாடியிருக்கும் புறநானூற்றுப் பாடலால் (182) கவியாக விளங்கினமையும், தன் குடிமக்களைப் பேணிய திறமும் அறியமுடிகின்றது.

## ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

நெடுஞ்செழியன் எனப் பெயர்பெற்ற பாண்டியருள் இவனும் ஒருவன். இந்நெடுஞ்செழியன் சங்கப் புலவர் எவராலும் பாடப்பெறவில்லை. ஆயினும் புலமை வேந்தனாய் விளங்கிய இவன் தானே கல்வியின் சிறப்பைச் சித்தரிப்பதாகப் பாடிய பாடலொன்று புறநானூற்றிலே இடம்பெறுதலால் அறியலாகின்றது.

"வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"[98]

என்பதால், கல்வியின் உயர்வினையும் அக்காலத்தில் நிலவிய நால்வகை வருணவேறுபாடுகள் பற்றியும் அறிதல் குறிப்பிடத்தக்கது.

## இளம் பழையன் மாறன்

இவன் தன் காலத்துச் சோழ வேந்தனான கோப்பெருஞ்சோழனோடு கூடி சேரமான் இளஞ்சேரல் இரும்பொறையுடன் போரிட்டுத் தோல்வி அடைந்ததாகத் தெரிகின்றது. இதனை,

> "பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
> வித்தை யாண்ட இளம்பழையன் மாறனையும்
> வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று"[99]

எனவரும் பதிற்றுப்பத்தின் பதிகயடிகளால் உணரமுடிகின்றது. இவனைப் பற்றிய வேறு செய்திகள் தெளிவாகச் சங்கப்புற இலக்கியங்களில் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

இவ்விளவிற்கே சங்கப்புற இலக்கியங்களில் இடம்பெறும் பாண்டிய வேந்தர்கள் பற்றி அறியக்கிடக்கின்றது. இவர்களில் இருவர் தம் பகைவர்களை வெற்றி கொள்வதாகக் கூறிய வஞ்சினமொழிப் பாடல்கள் புறநானூற்றிலே இடம்பெற்றுள்ளது.[100] ஒருவர் சான்றோரின் சிறப்பையும் (புறம், 182), ஒருவர் கல்வியின் உயர்வினையும் (புறம், 183), மற்றொருவர் மக்கட்பேற்றின் மேன்மையினையும் (புறம், 188), பாடியிருப்பதால் பாண்டிய வேந்தர்களில் ஐவர் ஆட்சியாளர்களாகவும் புலமையாளர்களாகவும் திகழ்ந்தமை விளங்குகின்றது.

## சோழ வேந்தர்கள்

சோழர்கள் தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியை ஆண்டு வந்துள்ளனர். இவர்கள் உலகியல் வாழ்விற்கும் பண்பாட்டுக் கூறுகளின் செழிப்பிற்கும் அயராது பாடுபட்டுள்ளமை தெரிகின்றது. குடிதழீஇக் கோலோச்சும் மன்னர்களாகச் சோழப் பெருவேந்தர்கள் திகழ்ந்துள்ளனர். இச்சோழ வேந்தரின் தோற்றத்தையும், தொன்மையினையும் தெளிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. "நமக்கு கிடைத்துள்ள சங்கச் செய்யுட்களைக் கொண்டு சோழர் அரச மரபினர், மன்னவர் எனக் கூறலாமேயன்றி, இவர்க்குப் பின் இவர் பட்டம்

பெற்றனர் என்று தக்க சான்றுகளுடன் கூறத்தக்க வசதி இல்லை"[101] என்னும் கூற்று இங்கு எண்ணத்தக்கது.

"ஆரியர்க்கு முன் தென்னாட்டில் வாழ்ந்த 'கருப்பு மனிதர்' என்னும் பொருளில் வழங்கும் 'கால அல்லது கோல' என்ற வடமொழிச் சொல்லினின்றும் வந்தது என்பர் சிலர். சோளம் விளையும் நாடு 'சோள நாடு', அது 'சோழ நாடு' என ஆயிற்று என்பர் மற்றும் சிலர்; திருடன் என்ற பொருளில் வழங்கும் 'சோரன்' என்ற சொல்லிலிருந்து சோழன் என்ற சொல் வந்தது என்பர் வேறுசிலர்"[102] எனச் சோழரின் பெயர் விளக்கத்தினைச் சுட்டியுள்ளார் கா. கோவிந்தன்.

புகார், உறையூர், அழுந்தூர், ஆவூர், வெண்ணி, இடையாறு, குடந்தை போன்ற இடங்கள் சோழ நாட்டின் பெருநகரங்களாக விளங்கியதைச் சங்க இலக்கியங்கள் விளம்பியுள்ளன. எனினும் புகாரும் உறையூரும் தலைநகரங்களாகத் திகழ்ந்ததை,

"சோழர் உறந்தை"[103] – எனவும்,
"சோழன் மூதூர்ப் பேராச் சிறப்பின் புகார்"[104]

எனவும் வரும் இலக்கிய அடிகளால் உணரமுடிகின்றது. சோழர்கள் 'கிள்ளி' எனவும் 'சென்னி' எனவும் குடிப்பெயர் கொண்டு இரு பிரிவினராய் இருந்தமையைக் காண முடிகின்றது. சோழ நாட்டின் முக்கிய ஆறு காவிரி. இக்காவிரி பாய்வதால் சோழநாடு வளம் பெற்று விளங்கியதை,

"ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடு"[105] – என்றும்,

"சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு"[106]

என்றும் இடம்பெறும் பட்டினப்பாலை பாடலடிகளால் அறியமுடிகின்றது. இக்காவிரியை மையமாகக் கொண்டு சோழர்களுடைய ஆட்சி விளங்கியமையால்

'காவிரி வளநாடர்' என்றும், 'பொன்னி வளநாடர்' என்றும் அழைக்கப் பெற்றுள்ளனர். "இச்சோழருள் மண்ணாசை கொண்ட ஒருவன் மற்றவரை வென்றடக்க முயற்சித்தான். இதனால் பல காலங்களில் பலவிடங்களில் போர்கள் நிகழ்ந்தன"[107] என்பார் மா. இராசமாணிக்கனார்.

"சங்க காலச் சோழர்களான கரிகாலன் முதலானவர்களைக் குறித்துத் தமிழக வரலாற்று நூல்களில் விரிவாகக் காணலாம். கோச்செங்கனானுக்குப் பின்னர் சோழர் மரபு என்னவாயிற்று என்பது தெரியவில்லை"[108] என்பார் ந.க. மங்களமுருகேசன். அவ்வகையில் சங்கப் புற இலக்கியம் தெளிவாகச் சுட்டிய நிலையினில் சோழ வேந்தர்களை இங்கே அறிவோம்.

## இளஞ்சேட் சென்னி

சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட சோழ வேந்தர்களில் மூத்தவனாகக் கருதப்படுகின்றான். "உருவப் பஃறேர் இளையோன்" (பொருநர், அடி; 130) என்பதால், இவனை அரசுரிமையே எய்தாத இளவரசன் என்பார் உலகநாதப்பிள்ளை.[109]

"செய்திரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்"[110]

என்ற பாடலடியால், இவன் இளவயதில் பகைவரை வென்று தன் பெரும்புகழினை வெகுதூரம் பரப்பியதால் 'இளஞ்சேட் சென்னி' என அழைக்கப்பட்டமை தெரிகின்றது. "இளவயதில் பகைவரை வென்று சோழ நாட்டின் முடிமன்னன் ஆனதாலும் இளவயதில் தன் மகன் கரிகாலன் தாய் வயிற்றில் கருவில் இருந்தபோது இயற்கை எய்தியதாலும் 'இளஞ்சேட்சென்னி' என அழைக்கப்பட்டான்"[111] என்று கூறுவரும் உளர்.

இவ்வேந்தன் பகைவரை வென்று தேரில் வரும் காட்சியினை,

"நீயே அலங்கு உளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி

மாக்கடல் நிவந் தெழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ"[112]

என்று வருணிப்பதால் கடலில் எழுகின்ற ஞாயிற்றோடு ஒப்புமைப்படுத்துதலை அறியலாகின்றது. இவ்வாறு தேர்கள் பலசூழ வந்ததால், வென்வேல் உருவப் பஃறேர் இளையோன் (பொருநர், அடி; 130) என்கின்றார் முடத்தாமக்கண்ணியார். இதனைக் கொண்டு இப்பாட்டுடைத் தலைவனைச் 'சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி' என்றமை புலனாகின்றது.

இளஞ்சேட் சென்னியை வெவ்வேறான அடைமொழிகள் கொண்டு அழைத்தமையைக் காணமுடிகின்றது. ஊன் பொதி பசுங்குடையார் பாடிய புறநானூற்றுப் பாடலில் (10:12) 'நெய்தலங்கானல் நெடியோய்' என்பதால் 'சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி' எனப்பட்டுள்ளான். சேரமான் ஒருவனின் பாமுள்ளூரை அழித்தபோது 'சோழன் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி' (புறம், 203) என்றழைக்கப்பட்டமை தெரிகின்றது. பகைவனின் பாழி நகரை அழித்த போது, 'சோழன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட் சென்னி' (புறம், 370, 373) எனவும் அழைக்கப்பெற்றுள்ளான். புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெறும் இவ்வாறான அடைமொழிகளைக் கொண்டு இவ்வேந்தனின் வெற்றிச் சிறப்பினை அறியமுடிகின்றது.

## கரிகாற் பெருவளத்தான்

சோழன் கரிகாற் பெருவளத்தானின் தந்தை, 'சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னி' எனப் பொருநராற்றுப்படை (அடி; 130) விளம்பியுள்ளது. இவர் அழுந்தூர் வேளிரின் மகளை மணந்தாரென்று அறிவதால்[113] கரிகாலனின் தாய் அழுந்தூர் வேளிரின் மகள் என்பது தெரிகின்றது. கரிகாலனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பொருநராற்றுப்படையும், பட்டினப்பாலையும் காட்சியளிக்கின்றன. மேலும், புறநானூற்றில் நான்கு பாடல்களில் இவன் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

கரிகாலன் தாய் வயிற்றிலிருந்த போதே அரசுரிமை ஏற்றதை, "தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி" (பொருந, அடி; 132) என்ற பாடலடியால் அறியலாகின்து. இவன் அரச பதவியை ஏற்கும் வரை ஆட்சிப் பொறுப்பினை இவனுடைய தாயத்தார் ஏற்றிருந்துள்ளனர். இவ்விடைப்பட்ட காலத்தில் அவனை அழிக்க சிலர் முயற்சித்துள்ளமை தெரிகின்றது. தாயத்தாரின் பகையைவென்று இவன் ஆட்சி பொறுப்பேற்றதாகச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.[114] இதற்கு மாறாக மற்றொரு செய்தியும் வழக்கில் நிலவுகின்றன. "தாயத்தாரின் கலகத்தின்போது தப்பிச் சென்ற இவன் கருவூரிலே அலைந்து திரிந்தானென்றும் இவனுக்குரிய அரசாட்சியைக் கவர்ந்தவர்களிடையே போட்டிகள் ஏற்பட, தீராத நிலையினில் பட்டத்து யானையின் கையில் மாலையைக் கொடுத்தனுப்ப அது கரிகாலனுக்கு மாலையிட்டுக் கொண்டு வந்ததால் இவன் சோழநாட்டின் வேந்தனாகினான்" என்றும், இதற்குப் பழமொழி நானூற்றின் பாடலைச் சான்றாகவும் கூறுகின்றனர்.[115]

சேரர்களில் செங்குட்டுவனைப்போல், பாண்டியர்களில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் போல், சோழர்களில் கரிகாலன் முதன்மையானவனாகக் கருதப்படுகின்றான். இவனுடைய வெண்ணிப்போர், இமயப் படையெடுப்பு என்பவற்றால் வீரமும், "முதியோர் அவைபுகு பொழுதில் தம் பகைமுரண் செலவும்" (பொருந, அடி; 187– 188) என்ற முடத்தாமக் கண்ணியாரின் கூற்றால், குடிகளுக்கு முறை செய்தமையும், "காடுகொன்று நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி" (பட்டின, அடி; 283 – 284) என்பதால் நாட்டின் வளத்தினைப் பெருக்கியதையும் அறியலாகின்றது. இத்தகைய இலக்கியச் சான்றுகளால் கரிகாலனின் ஆட்சி சிறப்பையும் ஆளுமைப் பண்பினையும் காண முடிகின்றது.

## சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்

"கரிகால் சோழனின் மகன் கிள்ளி வளவன்"[116] என்றும், "நலங்கிள்ளியின் மகன் கிள்ளி வளவன்"[117] என்றும் இரு வேறுபட கூறுவர். இவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு புறநானூற்றில் 10 புலவர்கள் 19 பாடல்களில்

பாடியுள்ளமையை அறியலாகின்றது.[118] இவன் சோழநாட்டின் முடிமன்னனாகப் பொறுப்பேற்ற போது சோழர் குலத்தினர் ஒன்பதின்மர் எதிர்த்துள்ளனர். அந்நிலையில் இவனுக்கு மாமன் முறையான சேரன் செங்குட்டுவன் தன் படையுடனே வந்து அவ்வொன்பதின்மரையும் ஒரே பகலில் வென்று இவனது ஆட்சியை நிலை நிறுத்தியுள்ளான். இதனை,

"மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
------ ------- ------ ------
ஒன்பது குடையும் ஒருபகல் ஒழித்தவன்"[119]

என்பதாலும்,

"ஆராச் செருவின் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச் செருவின் ஆற்றலை யறுத்து"[120]

என்ற பதிற்றுப்பத்தின் பதிக அடிகளாலும் அறியக்கிடக்கின்றது.

ஆட்சிப் பொறுப்பேற்ற போது துணைப்படை வேண்டுமளவு பலமற்று இருந்தவன் ஆட்சியில் நிலைபெற்ற பின்பு ஆற்றல் வாய்ந்தவனாய் பகைவர் நாடுகளை வெல்லும் வெற்றி வேந்தனாய் விளங்கியதை,

"காலனும் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத்து அடூஉம் வெல்போர் வேந்தே"[121]

என்ற புறநானூற்றுப் பாடலடி மூலம் உணரமுடிகின்றது. இதன்வழி இவ்வேந்தனின் போராண்மை அறியவருகின்றது.

## சோழன் நலங்கிள்ளி

கரிகாற் பெருவளத்தானுக்குப் பின் அரசாட்சி புரிந்த சோழ வேந்தனாக அறியலாகின்றான். 'பண்டைத் தமிழர் காலமுறை' என்ற ஆங்கில நூலாசிரியர்

சிவராசப்பிள்ளை நலங்கிள்ளியைக் கரிகாலனுக்குப் பின் வந்தவனாகக் காட்டுவதோடு அவன்மகன் என்றும், உருவப்பஃதேர் இளஞ்சேட் சென்னிக்குப் பேரன் என்றும் உறவு முறையைத் தெளிவாகச் சுட்டியுள்ளார்.[122] புறநானூற்றில் நான்கு புலவர்கள் இவனைப் பாடியுள்ளனர்.[123]

வெற்றி வேந்தனான சோழன் நலங்கிள்ளி தன் ஆட்சி காலத்தே தமிழகத்தில் பெரும்வேந்தனாய், ஏனை இருவேந்தரையும் வென்று மேம்பட்டு விளங்கியதை,

"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல
இருகுடை பிற்பட ஓங்கிய ஒருகுடை"[124]

என்று இவனது வெண்கொற்றக் குடையின் உயர்ச்சி மேம்பாட்டைக் கோவூர்கிழார் பாடியுள்ளதன் வழி அறியமுடிகின்றது. சோழன் நலங்கிள்ளி தன் இறுதிக் காலத்தில் இலவந்திகைப் பள்ளி என்னுமிடத்தில் இறந்தமையால், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட் சென்னி எனக் குறிக்கப்பெற்றமை[125] தெரிகின்றது.

## சோழன் நெடுங்கிள்ளி

கரிகாற்பெருவளத்தான் இறந்த பிறகு அரசுரிமை பெறுவதற்காக நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் தாயப்போர் நிகழ்ந்துள்ளது. நெடுங்கிள்ளி முனைந்து ஆவூர் அரணைப் பற்றிக் கொண்டு உள்ளிருக்க, அவன் செயல் கண்டு சினந்து நலங்கிள்ளி வஞ்சினங்கூறி அவனோடு போருக்கெழுந்தமை (புறம், 73) புலனாகின்றது. நெடுங்கிள்ளி கோட்டைக் கதவைத் தாளிட்டு கோட்டைக்குள் ஒளிந்து கொண்டுள்ளான். இவனது செய்கையின் இழி தன்மையினைக் கூறி கோட்டைக் கதவைத் திறக்க கோவூர்கிழர் (புறம், 44) அறவுரை கூறியதன் வழி அறியமுடிகின்றது. மேலும், தன்னிடம் வந்த இளந்தத்தன் என்னும் புலவரை நலங்கிள்ளியின் ஒற்றனெனக் கருதி கொல்ல முற்பட்ட போது, கோவூர்கிழார் நெடுங்கிள்ளியிடம் உண்மையைக் கூறி அவன் செயலினைத் தடுத்து நிறுத்தியதன் மூலம் (புறம், 47) நெடுங்கிள்ளியைப் பற்றி அறியலாகின்றது.

'காரியாறு' என்னுமிடத்தில் இறந்தமையால் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி என்ற அடைமொழி இவன் பெயருடன் இணைந்துள்ளது. "இன்றைய திருச்சிராப்பள்ளி மாவட்டத்து மதுக்கரையருகே ஓடுகின்ற கரைபோத்தனாறு என்ற கருவெட்டாறே காரியாறு என்பார் வெ. இராமலிங்கன்"[126]

## மாவளத்தான்

மாவளத்தான் கரிகால் வளவனின் மகன் என்றும், நலங்கிள்ளியின் உடன்பிறந்தவன் என்றும் கூறுவர்."[127] இவனுடைய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அரசியல் செய்தியேதும் இடம் பெறவில்லை. இவனும் புலவர் தாமப்பல் கண்ணனாரும் ஒரு சமயம் வட்டாடியுள்ளனர். அப்போது வட்டுக்களில் ஒன்று புலவரது கீழே மறைந்துள்ளது. புலவர் அதனை அறியார். வட்டினைக் கண்ட மன்னன், புலவர் மீது சந்தேகம் கொள்ள புலவர் உண்மையைக் கூறியும் ஏற்காது அவர் மீது வட்டினை எறிந்து வெகுண்டுள்ளான். இதனால் அவர், மன்னா! உன் குடிப்பிறந்தார்க்கு இச்செயல் பொருந்துவதன்று. எனவே, நின் பிறப்பில் ஐயம் கொள்கின்றேன் என உரைத்துள்ளார். அதனைக் கேட்ட மன்னன் தன் தவற்றினை உணர்ந்து வருந்தினான் எனத் தெரிகின்றது. பின் அப்புலவரால் புகழ்ந்து வாழ்த்தவும் வெற்றுள்ளதைப் புறநானூற்றுப் பாடல் (43) வழி அறியமுடிகின்றது.

## சோழன் வேற்பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளி

இவ்வேந்தன் 'பெருவிறற்கிள்ளி' அல்லது 'பெருநற்கிள்ளி' என அழைக்கப் பெற்றுள்ளான். தன் தடக்கையில் பல வேல்களை ஏந்திப் போரிட்டதால் சோழன் வேற்பல் தடக்கைப் பெருவிறற்கிள்ளி எனப் பெயர் பெற்றமை புலனாகின்றது. இவன் சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் மீது போர்புரிந்து மாண்டுள்ளான். அந்நிலையில் இவர்களது போர்க்கோலத்தைக் கழாத்தலையாரும் (புறம், 62, 368) பரணரும் (புறம், 63) பாடியுள்ள புறநானூற்றுப் பாடல்களால் இவ்வேந்தனைப் பற்றி உணரமுடிகின்றது.

## சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி

உறையூரை ஆண்ட இப்பெருநற்கிள்ளி, ஒருமுறை தான் ஏறிவந்த யானை மதங்கொண்டு தறிகெட்டுப் பகை நகராகிய கருவூருக்குள் ஓடியுள்ளது. அப்போது அந்நகர் வேண்மாடத்தின் மேலிருந்த சேரமான் அந்துவஞ்சேரல் இரும்பொறை, தன்னுடனிருந்த உறையூர் ஏணிச்சேரி முடிமோசியாரை நோக்கி இவன் யாரென்று கேட்க அவர் இவனை இன்னாரென்று கூறுவதாகப் புறநானூற்றிலே (13) ஒரு பாடல் காணப்படுகின்றது. முடித்தலைக்கோ என்ற பெயரைக் கொண்ட இவனே சோழர் மரபில் முடியணிந்தாண்ட முதல் வேந்தன்[128] என்கிறார் கே. என். சிவராசப்பிள்ளை.

## சோழன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன்

இவ்வேந்தன் உறையூரிலிருந்து சோழநாட்டை ஆண்டு வந்துள்ளான். குராப்பள்ளியில் மாண்டதால் சோழன் குராப்பள்ளி துஞ்சிய பெருந்திருமாவளவன் என்றழைக்கப்பெற்றுள்ளான். இவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் இணை பிரியாத நண்பர்களாக இருந்தமையைப் புறநானூற்றுப் பாடல்வழி (58) அறியலாகின்றது. இச்சோழனின் குடையைப் புகழ்ந்து பாடிய புறப்பாடல் ஒன்று,

> "கழிஉப்பு முகந்து கல்நாடு மடுக்கும்
> ஆரைச் சாகாட்டு ஆழ்ச்சி போக்கும்
> உரனுடை நோன்பகட்டு அன்ன எங்கோன்"[129]

என்பதால், வண்டி பாரத்தைத் தாங்கும் எருதுபோல் இவன் நாட்டைத் தாங்கியமை புலனாகின்றது. இருந்தும் இவன் பரிசு கொடுக்கத் தாமதித்ததால் புலவரின் வசை பாடலுக்கும் (புறம், 197) ஆளாகியுள்ளமை தெரிகின்றது.

## கோப்பெருஞ்சோழன்

உறையூரிலிருந்து சோழ நாட்டில் கோலோச்சியுள்ள இவன் சிறந்த தமிழ்ப்புலவன். தினந்தோறும் புலவர் பொத்தியாருடன் அளவளாவி பேசி

மகிழ்ந்துள்ளான். இவனைப் பற்றி பொத்தியார், பாண்டிய நாட்டில் உள்ள பிசிராந்தையாரிடம் கூற அவரும் தம் அரசனாகக் கோப்பெருஞ்சோழனை எண்ணி வாழ்ந்துள்ளார். கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் நேரில் பார்த்துப் பேசாமலேயே நண்பர்களாக விளங்கியமை புறப்பாடல்கள் (67, 212) வழி அறியலாகின்றது. தம் இருமக்களே தன்னை எதிர்த்துப் போர் புரிய நேர்ந்ததால் கோப்பெருஞ்சோழன் அச்செயலுக்காக வருந்தி வடக்கிருந்துள்ளான். அவனுடன் தேவலோகஞ் செல்ல பல சான்றோர்கள் வடக்கிருந்ததை,

> "உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழல்
> முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
> புலவுதி மாதோ நீயே
> பலரா லத்தைநின் குறியிருந் தோரே"[130]

என்ற பாடலடிகளால் உணரமுடிகின்றது.

பொத்தியார் வடக்கிருப்பதற்காக உடன்வர, அவரிடம் உன் மனைவி குழந்தை பெற்ற பிறகு வா என்று கூறி அனுப்பியமை தெரிகின்றது. பொத்தியாரும் தமக்கு மகன் பிறந்த பிறகு சோழனின் நடுகல்லின் அருகில் வடக்கிருந்து உயிர் துறந்தமையை (புறம், 217, 220, 223) அறியமுடிகின்றது. கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும்போது பிசிராந்தையாரைக் காணவிரும்பியுள்ளார். தனக்குச் செல்வம் இருந்தபோது வராவிட்டாலும், தான் அல்லற்படும் போது வருவார் எனச் சான்றோரிடம் கூறியமை தெரிகின்றது. அவர் கூறியபடியே பிசிராந்தையாரும் உடனிருந்து வடக்கிருந்தமை புறநானூற்றுப் பாடல் (67, 218) வழி அறிவதால் இவர்களது நட்பின் திறத்தை உணரமுடிகின்றது.

## சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி

இச்சோழன் இராசசூயம் யாகஞ் செய்ததால் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனப் பெற்றுள்ளான். இவனைப் புறநானூற்றில் நான்கு புலவர்கள் நான்கு பாடல்களில் பாடியுள்ளனர்.[131] இவனுடைய நண்பர்களாகச் சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதியும்

நிகழ்ந்தமை தெரிகின்றது. இதனை, இம்மூவரும் ஒருங்கிணைந்திருந்த காட்சியினை ஔவையார் பாடிய புறநானூற்றுப் பாடலால் (367) அறியக்கிடக்கின்றது.

"------ ------ வரம்பிற் தானைத்
துணைவேண்டாச் செருவென்றி"[132]

என்பதால், இவன் சிறுபடையைக் கொண்டு மாற்றாரின் பெரும்படையை வென்றமை புலனாகின்றது. மேலும்,

"நாவடன மொழிவோர் அவன்நாவடன மொழிவோர்
வேந்தென மொழிவோர் அவன் வேந்தென மொழிவோர்"[133]

என்பதால் இவ்வேந்தனின் ஆளுமைப் பண்பும், போர் வன்மையும் உணரலாகின்றது.

## சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி

இம்மன்னன் முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனுடன் மல்யுத்தஞ் செய்துள்ளான். அதனை அருகிலிருந்து வியந்து கண்ட புலவர் சாத்தந்தையார் இவனது வெற்றியை மூன்று பாடல்களில் (புறம், 80 - 82) வருணித்துள்ளார். இச்சோழனிடம் காதல் கொண்ட ஒருத்தி பாடியது போல் பெருங்கோழிநாயகன் மகள் நக்கண்ணையாரும் மூன்று பாடல்களில் (புறம், 83 - 85) இவனுடைய போர் நிகழ்ச்சியைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்புறப் பாடல்களின் வழி இச்சோழ வேந்தனைப் பற்றி அறியவருகின்றது.

## பழையன்

'பழையன் மோகூர் அவையகம் விளங்க' (அடி; 508) என்ற மதுரைக்காஞ்சியின் அடிகளால் இவனுடைய ஊர் மோகூர் எனப் புலனாகின்றது. கிள்ளி வளவன் இளவயதில் சோழநாட்டு இளவரசன் ஆனதைப் பொறுக்காமல் ஒன்பது சோழ அரசர்கள் அவனை எதிர்த்துப் போரிட்டுள்ளமை தெரிகின்றது. அவர்களில் படைத் தலைவனாக இவன் இருந்தமையை அறியலாகின்றது.

இந்நேரிவாயில் போரில் செங்குட்டுவன் பழையனின் மோகூரை அழித்து வெற்றி பெற்றுள்ளான். சேரன் பழையனின் வேம்பினை வெட்டி பெண்டிரின் கூந்தலைக் கயிறாகக் திரித்து யானைகளைக் கொண்டு இழுத்துவரச் செய்துள்ளான். மேலும், அம்மரத்தால் வெற்றி முரசு செய்தமையைப் பதிற்றுப்பத்து[134] விளம்புவது குறிப்பிடத்தக்கது.

## பிற சோழ வேந்தர்கள்

பாட்டுடைத் தலைவரின் கீர்த்தியினைப் பாட விழைந்தப் புலவர்கள் பிற வேந்தர்களின் புகழினையும் சேர்த்துப் பாடியுள்ளனர். அதன்வழி குறிப்புகளாகவே மட்டும் இடம் பெறும் சில சோழ வேந்தர்களையும் சங்கப்புற இலக்கியங்களில் காண முடிகின்றது.

“வாயில்கடை மணி நடுநா நடுங்க
ஆவிற் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்”[135]

என்பதாலும்,

“நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை”[136]

என்பதாலும், மனுநீதிச் சோழனையும், சிபிச் சோழனையும் அறியமுடிகின்றது. பரணர் பாடிய பாடல் (புறம், 352) ஒன்றில் ‘தித்தன்’ பற்றிய குறிப்பும், சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடிய பாடலில் (புறம், 74) ‘செங்கணான்’ பற்றியும் இடம் பெறுதலால் இவ்விரு சோழ வேந்தர்கள் அறியவருகின்றனர். மேலும், தன் வாழ்வில் கண்ட உண்மையினை எடுத்துரைக்கும் சோழன் நல்லுருத்திரனையும் புறநானூறு பாடல் (190) வழி காணமுடிகின்றது.

சேர, பாண்டிய வேந்தர்களைப் போல் சோழ வேந்தர்களான நலங்கிள்ளி (73,75), சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் (173), நல்லுருத்திரன் (190), கோப்பெருஞ்சோழன் (214 - 216), போன்றோர் புலமையாளர்களாகவும் விளங்கியமை அவர்கள் இயற்றியுள்ளப் புறப்பாடல்கள் வழி காணலாகின்றது. இவ்வளவிலேயே சங்கப்புற இலக்கியங்களில் தெளிவாகச் சுட்டப்பெற்றுள்ள சோழ வேந்தர்கள் அறியவருகின்றனர்.

## வேளிர்கள்

சங்க இலக்கியங்கள் மூவேந்தர்களை அடுத்து வேளிரைப் பாடியுள்ளது. இதனை,

> "இருபெரு வேந்தரொடு வேளிர்சாய" – என்றும்,
> "பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து" – என்றும்,
> "வெல்போர் வேந்தரும் வேளிரும் ஒன்றுமொழிந்து" – என்றும்,
> "வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய" – என்றும்

வேந்தர்களோடு வேளிர்களைத் தொடர்புப்படுத்தி இலக்கியங்கள் [137] கூறியுள்ளதால் அறியமுடிகின்றது. "நாற்பத்தொன்பது வழிமுறைவந்த வேளிர்" (புறம், 201: 11 – 12) என்பதால் இவர்களது தொன்மை விளங்குகின்றது. "தமிழகத்து வேளிரெல்லோரும் வடநாட்டுத் துவாரகையினின்றும் வந்தேறிய குடியினரென்றும் அவரெல்லாம் நிலங்கடந்த நெடுமுடியண்ணலான கண்ணனின் வழியினரென்றும் யாதவரென்றும் கூறுவார் மு. இராகவையங்கார்."[138]

## நன்னன் சேய் நன்னன்

பத்துப்பாட்டில் மலைபடுகடாமின் பாட்டுடைத் தலைவனாகப் பாடப்பெற்றுள்ளான். இவன் தந்தையின் பெயரும் நன்னனே யென்பது 'நன்னன் சேய் நன்னன்' என்பதால் உணரமுடிகின்றது. தொண்டை நாட்டின் 24 கோட்டங்களுள் ஒன்றாய்த் திகழ்ந்த பண்டைப் பல்குன்றக் கோட்டத்துத் தலைநகரமான செங்கண்மாவிலிருந்து இவன் ஆட்சி புரிந்தமை புலனாகின்றது. 'செங்கண்மா என்ற ஊர் தற்போது திருவண்ணாமலைக்கு மேல் திசையில் உள்ள செங்கமான்' என்பர்.[139]

நன்னனுடைய நாடு பல குன்றுகளை உடைய கோட்டமாக இருந்தமை, "குன்றுசூழ் இருக்கை நாடு கிழவோனே" (மலை, அடி; 583) என நாட்டோடு சேர்த்து இவன் குறிக்கப்பெறுதலால் அறியலாகின்றது.

"நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறம்மறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்குமவன் சுற்றத்து ஒழுக்கமும்"[140]

என்பதால் நன்னனுடைய சுற்றத்தின் தன்மையைக் காணமுடிகின்றது. கொடைக்குணம் கொண்ட இவனிடத்தில் கூத்தரை ஆற்றுப்படுத்தும் முறையில் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடிய கூத்தராற்றுப்படையால் இவனுடைய நாட்டு வளத்தினையும் மக்களின் விருந்தோம்பல் பண்பினையும் அறிய முடிகின்றது. ஆயினும், நன்னனுடைய அரசியல் வரலாற்றைப் பற்றி ஏதும் அறிய இயலவில்லை.

## இளவிச்சிக்கோ

'விச்சி' என்னும் நாட்டின் இளவரசன். ஆதலால் இளவிச்சிக்கோ என்றழைக்கப்பெற்றமை தெரிகின்றது. நன்னனின் உறவினனாகவும் இளங்கண்டீரக்கோவின் நண்பனாகவும் விளங்கியுள்ளான். ஒருமுறை இவனும் இளங்கண்டீரக்கோவும் ஒன்றாய் இருந்துள்ளனர். அங்கு வந்த புலவர் பெருந்தலைச் சாத்தனார் இளங்கண்டீரக்கோவை மட்டும் தழுவிக் கொண்டுள்ளார். விச்சிக்கோ தன்னை ஏன் தழுவவில்லை எனப் புலவரைக் கேட்க அதற்குப் புலவர் சொன்ன பதிலே இவனைப் பற்றிய பாடலாக இடம் பெற்றுள்ளது.

"நன்னன் மருகன் அன்றியும் நீயும்
முயங்கற்கு ஒத்தனை மன்னே வயங்குமொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின் ஆடுமழை
அணங்கு சால் அடுக்கம் பொழியும் நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே"[141]

எனப் பாடியுள்ளதால் புலவர்க்கு இவன் வேண்டிய முறை செய்யாது இருந்தமை புலனாகின்றது.

## வெளிமான் - இளவெளிமான்

இவ்விரு வேளிர்களையும் புலவர் பெருஞ்சித்திரனார் பாடிய புறநானூற்றுப் பாடலால்[142] காணலாகின்றது. வெளிமான் புலவர்களைப் பேணும் பண்பாளன். இவன் நோயுற்றிருந்த போது புலவர் பெருஞ்சித்திரனார் வந்துள்ளார். வெளிமான் தன் தம்பியிடம் புலவர்க்குப் பொருள் கொடுக்கும்படி கூறியுள்ளான். அவனுடைய தம்பி இளவெளிமான் புலவர்க்குச் சிறுபொருள் கொடுத்துள்ளான். ஆனால் புலவர் அதைப் பெற்றுக் கொள்ளாமல்; குமணனிடம் சென்று யானை பெற்று வந்து வெளிமானின் ஊர்க்காவல் மரத்தில் கட்டிவிட்டு அதுதான் பெற்றுவந்த பரிசில் என்று இளவெளிமானிடம் பெருமையுடன் கூறியுள்ளார். இதனை,

"இரவலர் புரவலை நீயும் அல்லை
புரவலர் இரவலர்க்கு இல்லையும் அல்லர்
இரவலர் உண்மையும் காண்இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்இனி நின்ஊர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானைஎம் பரிசில்
கடுமான் தோன்றல் செல்வல் யானே"[143]

என்ற புறப்பாடலால் அறியமுடிகின்றது. வெளிமான் இறந்த பிறகு பெருஞ்சித்திரனார் வருந்திப் பாடியதும் (புறம், 238), இளவெளிமான் சிறிது கொடுத்தப் பொருளைப் பெறாமல் சென்றதும் (புறம், 237) இவ்விருவரின் நிலையினைப் பற்றி அறியவருகின்றது.

## இருங்கோவேள்

பாரி இறந்த பின் அவன் மகளிரை மணம் முடிக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளார் கபிலர். அம்மகளிர் இருவரையும் இருங்கோவேளிடம் அழைத்துச் சென்று மணந்து கொள்ளுமாறு வேண்டியுள்ளார். அவன் மறுக்கவே அவனை வெறுத்துக் கபிலர் பாடியதாக இருபாடல்கள் புறநானூற்றிலே (201, 202) இடம் வெற்றுள்ளன.

"நீயே வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந்து இயற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே"[144]

என்ற பாட்டடிகளால், இருங்கோவேளின் முன்னோன் குடி முதல்வன் வடபால் முனிவனொருவனின் தடவினுள் தோன்றியவன் என்பதும், அவனும் அவன் மரபில் பின்னோரும் துவரையென்னும் நகரை ஆண்டவரென்பதும், அம்மரபிலே இவன் நாற்பத்தொன்பதாவது தலைமுறையினன் என்பதும் புலனாகின்றது.

## வேளெவ்வி

இவன் சோழநாட்டின் கிழக்குக் கடற்கரை சார்ந்த மிழலைக் கூற்றத்தை ஆண்டவன் என்பது,

"ஓம்பா ஈகை மாவேள் எவ்வி
புனலம் புதவின் மிழலை"[145]

என்ற மாங்குடி மருதனார் கூற்றால் அறியலாகின்றது.

"இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்பூண்
போரடு தானை எவ்வி"[146] – எனவும்,

"உலகுபுகத் திறந்த வாயில்
பலரோடு உண்டல் மரீஇ யோனே"[147]

எனவும் வரும் புறநானூற்றுப் பாடலடிகளால் இவனுடைய போர் வன்மையினைக் காணமுடிகின்றது. இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனுடன் போர் புரிந்து விழுப்புண்பட்டு மாண்டான் (புறம், 24) எனத் தெரிகின்றது. இவனது வீழ்ச்சியால் வருந்திய பாணர்களையும் புலவர்களையும் காணும்போது[148] இவனுடைய கொடைத்தன்மையினையும் இவன் அவர்களோடு கொண்டிருந்த உறவுநிலையினையும் அறியமுடிகின்றது.

## அந்துவன் கீரன்

இவன் பொருள் வேட்கை காரணமாக மிக்கப் பொருள் ஈட்டி வந்துள்ளான். நிலையற்ற பொருள் மீது பற்று வைக்காமல் நிலைத்திருக்கக் கூடிய புகழினைப் பெற ஈகை செய்யுமாறு காவட்டனார் அறிவுறுத்துவதாக இவனைப் பற்றிய பாடல் புறநானூற்றிலே (359) இடம் பெற்றுள்ளது. 'பெருநாடுகளை வெற்றி கண்ட முடிவேந்தராயினும் இறுதியில் மரணம் என்பது உறுதி. உனக்கும் அவ்வாறான நிலைவரும். ஒருவன் அடைந்த பழியும் புகழும் நிலைத்து நிற்கும். அதனால் நீ பழியினை நீக்கிப் புகழினைப் பெற விரும்பினால் பொருள் மீதுள்ள பற்றினை நீக்கி இரவலர்க்கு யானையும் தேரும் குதிரையும் கொள்ளெனக் கொடுத்து வழியனுப்பு. அவ்வாறு செய்வாயானால் நீ வானுலகம் சென்ற பிறகும் நின் புகழ் நீண்ட காலம் நிலைத்திருக்கும்' என அறிவுறுத்திப் பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

## சோழிய ஏனாதி திருக்குட்டுவன்

திருக்குட்டுவன் சேரநாட்டின் பகுதியாகிய குட்டநாட்டு அரசர் குடியில் தோன்றியவன் என்பர். இவன் தொடக்கத்தில் சோழ வேந்தனிடம் தானைத் தலைவனாக இருந்துள்ளான். போர்ச் செயல் மாண்பால் சோழிய ஏனாதி எனச் சோழனால் 'மாராயம்' தரப்பட்டுள்ளான். இதனால் சோழிய ஏனாதி திருக்குட்டுவன் என்றழைக்கப்பட்டமை தெரிகின்றது.

ஒருமுறை இவனிடம் 'கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்' சென்றுள்ளார். அவன் புலவரை வரவேற்று வேண்டியன நல்கி மகிழ்ந்திருக்கச் செய்துள்ளான். ஒருநாள் புலவர் விடைபெற அவன் யானை ஒன்றை அலங்கரித்து அதனுடன் நிரம்பப் பொன்னும் பொருளும் சேர்த்துப் புலவருக்குப் பரிசில் அளித்துள்ளான். பல போர் வெற்றியினைக் கண்ட அந்த யானையின் பெருமாண்பினைக் கண்ட புலவர் அதனை நெருங்க அஞ்சித் திருப்பி அனுப்பிவிட்டார். தான் அளித்த யானை திரும்பி வரக்கண்ட திருக்குட்டுவன் தான் தந்த வேழப்பரிசில் சிறியதெனக் கருதி விட்டார் போலும் இச்சான்றோர்.

வரிசையறியும் தரமில்லாது போனேனே என நாணி அவ்வேழத்தோடு பிறிதொரு பெருங்களிறு கொணரச் செய்து அதனையும் முன்னே விடுத்தது போல ஒப்பனை செய்து புலவருக்கு அனுப்பி வைத்துள்ளான். இச்செயலினை அறிந்த குமரனார் பெரு வியப்புக் கொண்டு பாடிய பாடலே (புறம், 394) இவனது கொடைத்தன்மையினை விளக்குவதாக அமைகின்றது.

## சோழநாட்டுப் பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன்

சோழ நாட்டில் உள்ள ஓர் ஊர் பிடவூர் ஆகும். இவ்வூரில் வாழ்ந்த வேளாண் மக்களின் குடி முதல்வன் பிடவூர் கிழானாவான். பெருஞ்சாத்தன் இப்பிடவூர் கிழான் மகனாவான். இவன் 'நெடுங்கை வேண்மான்' எனவும் அழைக்கப்பெற்றுள்ளான். இவனும் இவனைச் சார்ந்தோரும் வேந்தர்க்குத் துணை புரிந்துள்ளனர். மேலும் மூவேந்தர்க்கும் மகட்கொடை நேரும் சிறப்பும் இவர்கட்கு உண்டு[149] எனத் தெரிகின்றது.

ஒருமுறை நக்கீரர், பெருஞ்சாத்தனைக் காணச் சென்றுள்ளார். அவனும் புலவரை இனிது வரவேற்று உபசரித்துப் பெருஞ்செல்வமும் வழங்கிச் சிறப்புச் செய்துள்ளான். மேலும், தன் மனைவியை அழைத்து நக்கீரரைக் காட்டி இவரை என்னைப் போற் போற்றுக என்று பணிந்துள்ளான். இதனைக் கண்ட நக்கீரர் வியந்து பாடிய புறப்பாடலே (395) இவனைப் பற்றி இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வாட்டாற்று எழினியாதன்

எழினியாதன் வாட்டாற்று என்னும் ஊரின் அரசனாவான். இவனிடம் பரிசில் மிக்கப்பெற்ற மாங்குடி மருதனார், இவனை வாழ்த்திப் பாடிய பாடலொன்றால் இவன் அறிய வருகின்றான்.

"நனைக் கள்ளின் மனைக் கோசர்
தீந் தேறல் நறவு மகிழ்ந்து
தீங்குரவைக் கொளைத் தாங்குந்து

------ ------ ------ ------

வளநீர் வாட்டாற்று எழினியாதன்"[150]

என்பதால் எழினியாதன், கோசரோடு தொடர்புறுத்திக் குறிக்கப்பெறுதலை அறியலாம். இவற்றால் இவ்விருவருடைய ஊரின் நெருக்கமும் உறவின் அணுக்கமும் தெரிகின்றது.

"உள்ளிலோர்க்கு வலியாகுவன்
கேளி லோர்க்குக் கேளாகுவன்
கழுமிய வென்வேல் வேளே
வளநீர் வாட்டாற்று எழினியாதன்"[151]

என்ற பாடலடிகளால் இவன் பெருநில வேந்தர்களுக்குப் படைத் துணையாளனாகும் திறம் கொண்டவன் என்பது விளங்குகின்றது.

### பிற வேளிர்கள்

வேளிர்களில் சிலர் பாட்டுடைத் தலைவனாகப் பாடப்பெறாமல் பிற வேந்தர்களைப் பாடும் போது குறிப்புகளாக இடம்பெற்றுள்ளமை அறிய வருகின்றது. வேளிர்களில் சிலர் மன்னர்களோடு மணவுறவு கொண்ட நிலையில் குறிக்கப்பெற்றுள்ளனர். சிலர் வேந்தர்களுக்குத் துணையாகப் படை நடத்திச் சென்றமையும், வேறுசிலர் அரசர்களோடு சேர்ந்து வேந்தர்களுக்கு எதிராக படைமேற்கொண்டமையும் தெரிகின்றது. புறநானூறு சுட்டிய வேளிர்களில் முக்காவல் நாட்டு ஆமூர் மல்லன் (80 – 82), வீரை வேண்மான் வெளியன் தித்தன் (320, 352), நெடுவேளாதன் (338), வெளியன் வேண்மான் ஆய்எயினன் (351), அருவந்தை புல்லி (385) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாய் உள்ளனர். பிற இலக்கியங்கள் சுட்டியவழி நன்னன் வேண்மான், வேளாவிக்கோமான் பதுமன் ஆகியோர்[152] அறியவருகின்றனர்.

இந்நிலையினிலேயே சங்கப்புற இலக்கியங்கள் கூறிய வேளிர்களையும் அவர்களது போர் வன்மையினையும் வேந்தர்களோடு கொண்டிருந்த உறவு நிலைகளையும் கொடைத்தன்மையினையும் உணரலாகின்றது.

## குறுநில மன்னர்கள்

சங்க காலத் தமிழகத்தை நோக்கும்போது வேந்தர்களையும் வேளிர்களையும் அடுத்து குறுநிலங்களை ஆட்சி செய்தவர்களாக இவர்கள் அறிய வருகின்றனர். "வேளிர், மழவர், ஆவியர் என்றாற் போன்ற பல்வேறு குடி வழி வந்தவராய்த் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அரசாண்ட குறுநில மன்னர்கள் பெரும்பாலும் மலையும் மலைசார்ந்த நிலப்பகுதியையும் ஆண்டவர்களாய் உள்ளனர்"[153] என்பார் வெ. மாதையன். இக்குறுநில மன்னர்கள் தத்தம் பகுதிகளுக்கு உள்ளிட்ட பெருநில வேந்தரின் பேராட்சிக்குக் கீழ்ப்பணிந்து ஆண்டு வந்துள்ளனர். வேந்தர்களுக்குத் தேவையானபோது ஆலோசனை வழங்கியதும் போர்க்காலங்களில் படை நடத்திச் சென்றமையும் தெரிகின்றது. இத்தகைய குறுநில மன்னர்களைச் சங்கப் புற இலக்கியம் கூறியவழி அறிவோம்.

## அதியமான் பொகுட்டெழினி

அதியமான் நெடுமானஞ்சிக்குப் பின் அவன் மகன் பொகுட்டெழினி அரசனாகியுள்ளான். அதியமானைப் பாடிய ஔவையாரே இவனையும் மூன்று பாடல்களில் பாடியுள்ளமை[154] அறியலாகின்றது. இவன்தன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் அரசியலில் தந்தைக்குத் துணையாக இருந்ததை,

> "எருதே இளைய நுகம்உண ராவே
> சகடம் பண்டம் பெரிதுபெய் தன்றே
> அவல் இழியினும் மிசை ஏறினும்
> அவணது அறியுநர் யார்என உமணர்
> கீழ்மரத்து யாத்த சேமஅச்சு"[155]

என்பதால் அறியக்கிடக்கின்றது. இவன் அரசனான நிலையில் செய்த போர் நிகழ்ச்சியினையும் ஈகைப் பண்பினையும் ஔவையார் சிறப்பித்துப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**நாஞ்சில் வள்ளுவன்** (நாஞ்சில் பொருநன்)

நாஞ்சில் நாட்டு அரசனாவான். இந்நாடு குமரி முனைக்கும் நாகர்கோயிலுக்கும் இடையில் உள்ளது. இக்காலத்தில் குமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம், தோவாளை ஆகிய இரு வட்டங்களும் சேர்ந்த பகுதி இன்றும் நாஞ்சில் நாடென்றே வழங்கப்படுவதைக் காணமுடிகின்றது. நாஞ்சில் வள்ளுவன் பாண்டியரின் தானைத் தலைவனாக விளங்கியமை, "தென்னவன் வயமறவன்" (புறம், 380: 5) என்பதால் உணரமுடிகின்றது.

> "ஈதல் ஆனான் வேந்தே வேந்தர்க்குச்
> சாதல் அஞ்சாய் நீயே ஆயிடை"[156]

என்று மருதனிள நாகனார் பாடியிருப்பதால், வேந்தன் இவனுக்கு வேண்டியதை நல்குவதும், இவனும் வேந்தனுக்காக உயிரையே கொடுக்கும் நிலையினையும் காணமுடிகின்றது. இவன் மிகச் சிறந்த ஈகை மேம்பாடு உடையான் என்பது இவனைப் பற்றிய புறப்பாடல்களால் (137 – 140, 380) அறியவருகின்றது.

**கொண்கானங்கிழான்**

மோசிக்கீரனார் பாடிய மூன்று புறநானூற்றுப் பாடல்களால் (154 – 156) இக்குறுநில மன்னனைப் பற்றி அறியலாகின்றது.

> "அரசர் உழைய ராகவும் புரைதபு
> வள்ளியோர்ப் படர்குவர் புலவர் அதனால்
> யானும் பெற்றது ஊதியம் பேறியாது என்னேன்
> உற்றனென் ஆதலின் உள்ளிவந் தனெனே"[157]

என்பதனால், இவன் செல்வத்தால் குறைந்தவனாயினும் நல்ல குணம் கொண்டவன் என்பது புலனாகின்றது. புறப்பாடல்கள் மூன்றிலும் இவனுடைய கொடைக் குணமே கூறப்படுதலால் போர் பற்றிய வரலாற்று நிகழ்வுகள் அறிதற்கில்லை.

## குமணன்

பழநிமலைத் தொடர்களில் உள்ள முதிரமலையின் அரசனாவான். இம்முதிரமலை அடிவாரத்தில் 'குமண மங்கலம்' என்ற ஊர் இன்றும் இவன் பெயரால் வழங்கப்பெறுகின்றது. இன்றைய உடுமலைப்பேட்டை நகரைத் தன்னகத்தே கோண்டு அவ்வுடுமலைப் பேட்டை வட்டத்துத் தென்கீழ்ப்பகுதியையும் பழநிவட்டத்துத் தென்பகுதியையும் அடங்கிய குறுநிலமே குமணனது நாடு என்பர்.[158]

"அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண் விளங்கு சிறப்பின் இயல்தேர்க் குமண"[159] –என்றும்,

"நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே"[160] –என்றும்,

"பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன்"[161]

என்றும் இக்குமணன் முதிரமலையின் தலைவனாகச் சிறப்பிக்கப்பெறுகின்றான். கடையேழு வள்ளல்கள் இறந்தபின்னர் புலவரும் பிறருங்கூடிக் குமணனிடம் சென்று தங்களது துன்பத்தைத் தீர்க்கும்படி கூறியுள்ளனர். இதனை,

"எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
பாடிவருநரும் பிறரும் கூடி
இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்திவண்
உள்ளி வந்தனென் யானே"[162]

எனப் பெருஞ்சித்திரனார் பாடியிருப்பதால் அறியமுடிகின்றது. பாரி, ஓரி முதலான வள்ளல்கள் எழுவர்க்குப் பின் கொடைக்குணம் கொண்டவனாக இவன் திகழ்ந்தமை இவனைப் பற்றிய பாடல்களால்[163] தெரியவருகின்றது.

## இளங்குமணன்

குமணனின் தம்பியாக அறியவருகின்றான். இவன் அண்ணனின் நாட்டை எவ்வாறோ அபகரித்துக் கொண்டு ஆண்டுவந்துள்ளான். அந்நிலையில் குமணன் காட்டில் தங்கிஇருந்தமை தெரிகின்றது. அப்போது புலவர் பெருந்தலைச்சாத்தனார்

குமணனைக் கண்டு தன் வறிய நிலையை மொழிந்துள்ளார். அவர்க்குக் கொடுக்க ஒன்றும் இல்லாததால், தனது தலைக்கு விலையறிவித்திருந்த தம்பியிடமாவது பொருள் பெறட்டும் என்ற நோக்கோடு தன் தலையைக் கொண்டு போகச் சொல்லி வாளைக் கொடுத்துள்ளான். புலவர் அவ்வாளைக் கையில் கொண்டவராக இளங்குமணனிடம் சென்றுள்ளார். அவனிடம் யான் உன் தமையனைக் கண்டு பாடினேன். அவன்தான் நாடிழந்தத் துன்பத்தைவிட எனக்குப் பொருள் தராத துன்பத்தைப் பெரிதாக எண்ணி வருந்தினான். தன்னிடம் பொருள் இல்லாததால் தன் தலையைக் கொய்து கொள்ளுமாறு வாளைத் தந்தான். அதனுடன் வந்தேன் பார் என்று கூறியுள்ளார். எனவே, குமணனின் கொடைத் திறனைப் புகழ்வதாக வரும் இப்புறப்பாடலால் (165) இளங்குமணன் பற்றியும் அறிலாகின்றது.

### ஏறைக்கோன்

"பெருங்கல் நாடன் எம் ஏறைக்குத் தகுமே" (புறம், 157:13) என்பாதல், இவன் மலைநாட்டினை உடைய குறவர்களுக்குத் தலைவனாக அறிய வருகின்றான்.

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தான்நா ணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல"[164]

எனத் தன் குலப் பெண் புலவரான குறமகள் இளவெயினி பாடியிருப்பதால் இவனுடைய அரசியற் பண்புகள் புலனாகின்றது.

### பிட்டங்கொற்றன்

"ஊராக் குதிரைக் கிழவ" (புறம், 168 : 14) என்பதால், இவன் குதிரை மலையின் அரசனாக விளங்கியமை தெரிகின்றது. 'அதியமான் மலையும் குதிரை மலை. எனவே, பிட்டங்கொற்றன் அதியமானின் கீழ் குதிரை மலையை ஆண்டிருக்கலாம்'[165] என்பார் க. சண்முகசுந்தரம். இவன் சேரமான் குட்டுவன் கோதையின் கீழ் ஆட்சி புரிந்துள்ளான். இதனை,

"வன்புல நாடன் வயமான் பிட்டன்
ஆரமர் கடக்கும் வேலும் அவனிறை
மாவள் ஈகைக் கோதையும்
மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே"[166]

எனவரும் பாடலடிகளால் அறியமுடிகின்றது. இப்பிட்டங் கொற்றனின் போர் வன்மையும், கொடைச்சிறப்பும் இவனைப் பற்றிய புறநானூற்றுப் பாடல்கள் (168 – 172) புலப்படுத்துகின்றன.

## மலையமான் சோழியஏனாதி திருக்கண்ணன் (ஏனாதி திருக்கிள்ளி)

மலையமான் திருமுடிக்காரியின் வழி வந்தவனாகத் தெரிகின்றான். நாட்டை இழந்த சோழ வேந்தனுக்கு அடைக்கலம் தந்து, மீண்டும் சோழன் அரியணை ஏற உதவி புரிந்துள்ளான். ஆதலால் 'ஏனாதி' என்ற பட்டத்தைச் சோழ வேந்தனால் பெற்றுள்ளான்.

"அணங்குடை அவுணர் கணம்கொண்டு ஒளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவரல் தீரக் கடுந்திறல்
அஞ்சன உருவன் தந்து நிறுத்தாங்கு"[167]

என்ற பாட்டடிகள் இவன் சோழனுக்கு உதவியதை உணர்த்துகின்றன.

## ஆதன் நுங்கன்

திருமால் கோயில் கொண்டுள்ள வேங்கடமலைப் பகுதியை ஆண்ட குறுநில மன்னனாகத் தெரியவருகின்றான். இவனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடிய புறநானூற்றுப் பாடலால் அறியமுடிகின்றது.

புலவர் தமக்கும் ஆதன் நுங்கனுக்கும் உள்ள அன்பை,

"நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே
நின்யான் மறப்பின் மறக்குங் காலை

என்உயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்"[168]

எனப் புலப்படுத்துவதால் இருவரது நட்பையும் உணரலாகின்றது.

## ஒய்மான் நாட்டு நல்லியக்கோடன்

ஒய்மான் நாட்டு அரசன். இவனாட்சிக்கு உட்பட்ட நாடு ஆதலால் ஒய்மானாடு எனப்பட்டது. இக்காலத்துத் திண்டிவனம் வட்டத்தையும் மதுராந்தக வட்டத்தில் தென்பாலையும் உள்ளடக்கியிருந்ததாய் இந்த ஒய்மானாடு கருதப்படுகின்றது.[169] இவன் சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனாகப் பவனி வருபவன். மேலும், புறத்திணை நன்னாகனாரும் புறநானூற்றிலே (176, 376) இருபாடல்களில் இவனைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"தென்மா இலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா இலங்கை மன்ன ருள்ளும்
மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வாள்
உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்
களிற்றுத் தழும்பு இருந்த கழல்தயாங்கு திருந்தடிப்
பிடிக்கணம் சிதறும் பெயல்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை
நல்லியக் கோடன்"[170]

எனச் சிறுபாணாற்றுப்படை சித்தரிப்பதால் இவனது நாடும், குடியும் போர் வன்மையும் கொடைச்சிறப்பும் அறியக்கிடக்கின்றன.

## மல்லிகிழான் காரியாதி

மல்லி என்ற ஊரின் தலைவன் காரியாதி பரிசிலர்க்கு வேண்டியன நல்கும் பண்பாளன் எனத் தெரிகின்றது. இவனது கைவண்மையைக் கண்ட ஆவூர்மூலங்கிழார்,

"தமர்எனின் யாவரும் புகுவ அமர்எனின்
திங்களும் நுழையா"[171]

எனச் சிறப்பித்துப் பாடியிருப்பதைக் காணமுடிகின்றது.

## பாண்டியன் கீரன் சாத்தன்

"இவன் பாண்டிய முடி வேந்தருள் ஒருவன் அல்லன். பாண்டியர்க்குக் கீழ்ப்பட்ட குறுநிலத் தலைவன்"[172] என்பர்.

> "ஈண்டோர் இன்சா யலனே வேண்டார்
> எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்
> ------- ------- ------- ---------
> அஞ்சி நீங்கும் காலை
> ஏம மாகத் தான்முந் துறுமே"[173]

என ஆவூர் மூலங்கிழார் இவனது போர் வன்மையினைப் பாடியுள்ளார். இவனைப் பற்றிய வேறு செய்திகள் சங்கப்புற இலக்கியங்களில் காணப்பெறாமை குறிப்பிடத்தக்கது.

## விச்சிக்கோ

விச்சி என்னும் மலைநாட்டின் அரசன். ஆதலால் விச்சிக்கோ எனப்பட்டுள்ளான். பாரி மூவேந்தரின் சூழ்ச்சியால் இறந்தபின், அவரது மகளிரைத் தக்காருக்கு மணம் முடிக்க எண்ணிய கபிலர் விச்சிக்கோவைக் காணச் சென்றுள்ளார். அவனும் கபிலரை வரவேற்றுச் சிறப்புச் செய்துள்ளான். கபிலர் அப்போது விச்சிக்கோவை நோக்கி தம்முடன் வந்த பாரி மகளிரை மணந்து கொள்ள வேண்டியுள்ளார். அதுவே விச்சிக்கோவைப் பற்றிய செய்தியாகப் புறநானூற்றிலே (200) இடம் பெறுகின்றது.

## கடியநெடுவேட்டுவன்

"வெள்வீ வேலிக் கோடைப் பொருந" (புறம், 205 : 6) என்பதால் இவன் கோடைமலையை ஆண்ட குறுநில மன்னன் என்பது புலனாகும். அம்மலை இக்காலத்துக் கொடைக்கானல் என்பர். இவன் தன்னிடம் வந்த புலவர் பெருந்தலைச் சாத்தனார்க்கு என்ன காரணத்தாலோ பரிசில் கொடாது காலம் நீட்டித்துள்ளான். அவன் கருத்தறியாத சாத்தனார்க்கு வருத்தமுண்டாயிற்று.

"வேட்டுவ நின்பால் வரும் பரிசிலர், கடற்குச் சென்ற முகில் நீரின்றிப் பெயர்ந்து செல்லாதது போலப் பரிசிலின்றிப் போவது கண்டிலேன்; இன்றுயான் பரிசிலின்றி வருந்தி செல்லுமாறு நீட்டித்தாய். யான் வருந்தும் மனத்தோடு செல்கின்றேன். ஆயினும் நீ வருத்தமின்றி வாழ்வாயாக" என்ற பொருள்பட இவனைப் பற்றிப் (புறம், 205) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூவன்

சேர நாட்டின் தென்பால் மேலைக் கடலோரத்துக் குறுநிலமொன்றை ஆண்டிருந்தவனாக அறியவருகின்றான். இவனிடம் புலவர் பெருந்தலைச் சாத்தனார் சென்றுள்ளார். மூவன் புலவரை மதித்து முறை செய்யாது இருந்துள்ளான். எனவே, பெருந்தலைச் சாத்தனார் இவனிடம்,

> "பெருமலை விடரகஞ் சிலம்ப முன்னிப்
> பழனுடைப் பெருமரந் தீர்ந்தெனக் கையற்றுப்
> பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
> நசைதர வந்துநின் னிசைநுவல் பரிசிலேன்
> வறுவியேன் பெயர்கோ வாண்மேம் படுந
> ஈயா யாயினு மிரங்குவே னல்லேன்
> நோயிலை யாகுமதி"[174]

எனத் தன் நிலையினையும் கூறி, வருந்தாது மூவனை வாழ்த்தி வந்தமை தெரிகின்றது.

## நம்பி நெடுஞ்செழியன்

"முடியுடை வேந்தராகிய பாண்டியர்க்கு வினை வேண்டியவிடத்து அறிவும், படை வேண்டுமிடத்துப் படையும் தந்து புகழ் மேம்படு வித்த குறுநிலத் தலைவர் பலருண்டு. அவருள் வினை வகையில் வீறு எய்தியோர்க்குப் பாண்டிய வேந்தர் தம்முடைய பெயர்களையே பட்டமாக வழங்குவர். இவ்வகையில் நம்பி யென்னும் பாண்டிய நாட்டுக் குறுநிலத் தலைவன் அரிய வினையைச் செய்து முடிவேந்தனாகிய பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரைத் தனக்குப் பட்டமாகப் பெற்றான்"[175] என்பார்

ஔவை சு. துரைசாமிப்பிள்ளை. அதனால் இவனைச் சான்றோர் 'நம்பி நெடுஞ்செழியன்' என அழைத்துள்ளமை தெரிகின்றது.

"செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை யுயர்பு கூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தா னிரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை யவையத் தோங்குபுகழ் தோற்றினன்"[176]

எனப் பேரெயில் முறுவலார் பாடியிருப்பதால் இவனது ஆட்சிச் சிறப்பினையும் ஆளுமைப் பண்பினையும் உணரமுடிகின்றது.

## கரும்பனூர் கிழான்

இவன் ஊரில் கரும்பு மிகுதியாக விளைந்ததால் கரும்பனூரன் எனப் பெயர் பெற்றுள்ளான். "இவன் தொன்மா விலங்கையிலிருந்து வந்த தொண்டையர் அரசர்களுள் ஒருவன்"[177] என்பார் க. சண்முகசுந்தரம். இவனைப் பற்றி புறத்திணை நன்னாகனார் பாடிய இரு பாடல்களால் (புறம், 381, 384) அறியலாகின்றது. இப்பாடலால் இவனுடைய நாட்டின் வளத்தினையும், கொடைப் பண்பினையும் காணமுடிகின்றது.

"ஊனு மூனு முனையி னினிதெனப்
பாலிற் பெய்தவும் பாகிற் கொண்டவும்
அளவுபு கலந்து மெல்லிது பருகி
விருந்துறுத் தாற்றி யிருந்தனெ மாகச்
சென்மோ பெருமவெம் விழவுடை நாட்டென"[178]

என்பதால் இவனுடைய விருந்தோம்பல் பண்பு புலனாகின்றது. இவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் சங்கப்புற பாடல்களில் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

## பொறையாற்றுக் கிழான்

சோழநாட்டின் கீழைக்கடற்கரையிலுள்ள பொறையாற்றையும் அதனைச் சார்ந்த குறுநிலத்தையும் ஆண்டிருந்தவன். இவனைக் கண்டு கல்லாடனார் பரிசில் பெற்றுப் பாடிய பாடலொன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளமை காணமுடிகின்றது.

"ததைந்த புன்னைச் செழுநகர் வரைப்பின்
நெஞ்சமர் காதனின்வெய் யோளொ
டின்றுயில் வெறுகதில் நீயே வளஞ்சால்
துளிபத னறிந்து பொழிய
வேலியாயிரம் விளைகநின் வயலே"[179]

என வாழ்த்துவதால் இவனது கொடைப் பண்பினை அறியலாகின்றது.

## தாமான் தோன்றிக்கோன்

தோன்றியென்னும் மலையையும் அதனைச் சார்ந்த பகுதியினையும் ஆட்சி செய்தவனாக அறியவருகின்றான். இவனுடைய இயற்பெயர் தாமன் ஆகும். அது தாமான் என மருவித் 'தாமான் தோன்றிக்கோன்' என்று வழங்குவதாயிற்று. ஐயூர் முடவனார், கிணைவனொருவன் கூற்றாக இவனது விருந்தோம்பல் பண்பினையும் கொடைச்சிறப்பினையும் விரிவாகப் பாடியுள்ளதைக் (புறம், 399) காணமுடிகின்றது.

## தொண்டைமான் இளந்திரையன்

காஞ்சியை ஆண்ட குறுநில மன்னனாகக் கருதப்பெறுகின்றான். "இவனே முதல் பல்லவ மன்னன் ஆவான்"[180] என்பர். தொண்டைமான் இளந்திரையனிடத்துப் பரிசில்பெற்ற பாணன் ஒருவன், தன்னை எதிர்ப்பட்ட பெரும்பாணனை நோக்கி, ஆற்றுப்படுத்தும் முறையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இவனைப் பற்றி பாடியுள்ளார்.

"மலர்தலை உலகத்து மன்உயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரிஅன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்"[181]

என்பதால் இவனது மாண்பு புலனாகின்றது.

"அத்தம் செல்வோர் அலறத் தாக்கிக்
கைப்பொருள் வெளவும் களவுஏர் வாழ்க்கைக்
கொடியோர் இன்று, அவன் கடியுடை வியன்புலம்"[182]

என்பதால் இவனுடைய ஆட்சியின் பாதுகாப்பினை அறியமுடிகின்றது. இவ்வாறு தொண்டைமானின் நாட்டு வளத்தினையும் ஆளுமைப் பண்பினையும், அவனைச் சந்தித்த பாணர்கள் மகிழும் நிலையினையும், அந்நாட்டு மக்களின் விருந்தோம்பல் முறையினையும் பெரும்பாணாற்றுபடை விரிவாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிற குறுநில மன்னர்கள்

சங்கப் புற இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவனாகப் பாடப்பெறாமல் வேந்தர்களுக்கு நண்பர்களாகவோ அல்லது அவர்களால் போரில் வெல்லப்பட்டவர்களாகவோ சில குறுநில மன்னர்கள் அறிய வருகின்றனர். அவ்வகையில், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியால் வெல்லப்பட்டவனாக 'வேங்கை மார்பன்' (புறம், 21) அறியவருகின்றான். சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் வெற்றியினைப் பாடும் போது 'கடலனும்' (புறம், 53), தகடூர் எறிந்த சேரல் இரும்பொறையால் அடக்கப்பட்டவனாக 'கழுவுளும்'[183] இடம்பெற்றுள்ளனர். கடற்பிறக் கோட்டிய செங்குட்டுவனின் நண்பனாக 'அறுகையும்', வெல்லப்பட்டவனாக 'மோகூர் மன்னன் பழையனும்' குறிக்கப்பெற்றுள்ளனர்.[184] மேலும், 'அகுதை' (புறம், 233, 347), 'அவியன்' (புறம், 383) போன்ற குறுநில மன்னர்களும் குறிப்புகளாக இடம்பெற்றுள்ளமை காணக்கிடக்கின்றது.

## சீறூர் மன்னர்கள்

சங்க கால ஆட்சியாளர்களைப் பார்க்கும் போது வேந்தர், வேளிர், குறுநில மன்னர்களை அடுத்து சீறூர் மன்னர்கள் அறியலாகின்றனர். புறநானூறு இவர்களைச் சீறூர் நெடுந்தகை, சீறூர் மதவலி, சீறூர் வன்மையோன், சிறுகுடிக்கிழான் என்றெல்லாம் சிறப்பித்துப் பாடியுள்ளது. அரச நிலையினில் வேந்தர்க்கும் சீறூர் மன்னர்க்கும் உள்ள வேறுபாட்டினைப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று (197) தெளிவாகச் சுட்டியுள்ளதைக் காணமுடிகின்றது.

இச்சீறூர் மன்னர்கள் மறப்பண்பிலே வேந்தரினும் மேம்பட்டு விளங்கியதை,

"பருத்தி வேலிச் சீறூர் மன்னன்
உழுத்ததர் உண்ட ஓய்நடைப் புரவி
கடல்மண்டு தோணியின் படைமுகம் போழ
நெய்ம்மிதி அருந்திய கொய்சுவல் எருத்தின்
தண்ணடை மன்னர் தாருடைப் புரவி
அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிரின் இகழ்ந்துநின் றவ்வே"[185]

என்ற புறப்பாடலால் உணரமுடிகின்றது. இருந்தும் சீறூர் மன்னர்கள் வேந்தர்களுக்குப் பணிந்து ஆண்டுள்ளனர். இவர்கள் வேந்தர்களுக்காகப் போரில் உதவி புரிந்தமையை,

"சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன்"[186]

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இத்தகைய கீர்த்திப்பெற்ற சீறூர் மன்னர்களைச் சங்கப்புற இலக்கியங்கள் தெளிவாகச் சுட்டியவழி காண்போம்.

## சிறுகுடிகிழான் பண்ணன்

சோழ நாட்டின் காவிரியின் வடகரையில் அமைந்துள்ள சிறுகுடி என்னும் ஊரின் அரசன். இவன் ஊரில் நெல்வயலும், தோட்டமும் நிறைந்திருந்ததால்

'பண்ணன்' என அழைக்கப்பெற்றுள்ளான். இச்சிறுகுடி கிழான் பண்ணன் ஈகையால் சிறப்புற்றவன். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனின் நன் மதிப்பைப் பெற்றவன். இவனது கொடைச் செயலைக் கண்டு, "யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய" என வாழ்த்தியும், "பசிப்பிணி மருத்துவன்" எனப் புகழ்ந்தும் முடிவேந்தனான கிள்ளிவளவனே வியந்து பாராட்டியுள்ளதைக் காணும்போது (புறம், 173) இப்பண்ணனின் நன்மதிப்புப் புலனாகின்றது. மேலும், இவன் கொடை மேம்பாட்டினை மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனாரும் சிறப்பித்துப் பாடியுள்ளதைப் புறநானூற்றிலே (388) காண முடிகின்றது.

## நாலை கிழவன் நாகன்

பாண்டிய நாட்டில் நாலையென்ற சீறூரை ஆண்ட மன்னனாக அறிய வருகின்றான். "இவ்வூர் அருப்புக்கோட்டைப் பகுதியில் உள்ளதென்பார் அ. மாணிக்கனார்."[187] இவன் பன்னாடு தந்த பாண்டியனுக்கு அமைச்சனாகவும் படைத் தலைவனாகவும் இருந்துள்ளான். புலவர் வடநெடுந்தத்தனார் இவனைப் பற்றி பாடியுள்ள பாடலால் (புறம், 179) இவனது வள்ளன்மையை அறிய முடிகின்றது. இவனைச் சார்ந்த வேறு செய்திகளோ பாடல்களோ சங்கப்புற இலக்கியங்களில் காணப்படாமை நோக்கத்தக்கது.

## ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன்

இவன் கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனாரால் பாடப்பெற்றவன். ஈர்ந்தூர் கோயமான் எனவும் அழைக்கப்பெற்றுள்ளான்.

> "நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே
> இல்லென மறுக்கும் சிறுமையும் இலனே"[188]

என்பதால் இவனது கொடைக் குணத்தையும்,

> "இறையுறு விழுமம் தாங்கி அமர்அகத்து
> இரும்புசுவைக் கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
> மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
> வடுவின்று வடிந்த யாக்கையன்"[189]

என்பதால் இவனது போர்க்குணத்தையும் அறியமுடிகின்றது.

## வல்லார் கிழான் பண்ணன்

பண்ணன் 'வல்லார்' என்னும் ஊரின் அரசனாவான். இவனது ஊரின் இயல்பினை,

> "மன்ற விளவின் மனைவீழ் வெள்ளில்
> கருங்கண் எயிற்றி காதல் மகனொடு
> கான இரும்பிடிக் கன்றுதலைக் கொள்ளும்"[190]

எனக் கூறுவதால் அறியமுடிகின்றது. இவன் இரவலர் பசிக்குப் பகைவனாவான் எனச் சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார் பாடியுள்ளதன் (புறம், 181) வழி இப்பண்ணனின் ஈகைப் பண்பினை உணரலாகின்றது.

## ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன்

ஒல்லையூர் என்பது புதுக்கோட்டைத் தனியரசின் கீழிருந்த ஊர்களில் ஒன்று. இப்போது அதற்கு ஒலியமங்கலம் என்று பெயர் வழங்கப்படுகின்றது. சோழநட்டிற்கும், பாண்டியநாட்டிற்கும் எல்லையாக ஓடும் தென்வெள்ளாற்றின் தென்கரையின் தென்கோனாட்டின் மேலைப்பகுதி ஒல்லைநாடு என்பார் ஔவை துரைசாமிப் பிள்ளை.[191] இவ்வொல்லையூரை ஆண்ட கிழானொருவனின் மகனாக பெருஞ்சாத்தன் அறியவருகின்றான். இப்பெருஞ்சாத்தன் போராண்மையிலும் தாளாண்மையிலும் சிறந்து விளங்கியதால் சான்றோர் பலர் இவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். இவன் இறந்த பிறகு பிரிவாற்றாது வருந்திய குடவாயில் கீரத்தனார் இரங்கிப் பாடிய பாடல் ஒன்று புறநானூற்றிலே (242) இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தழும்பன்

கடற்கரை பட்டினமான மருங்கூருக்கு அருகில் உள்ள ஊணூரின் அரசனாவான். இவன் தன் பகைவரோடு போர் புரிந்த போது, பெண் யானை மிதித்து விழுப்புண் உண்டாகி அது ஆறிய தழும்பின் காரணமாகத் 'தழும்பன்' என்னும்

பெயரினைப் பெற்றுள்ளான் எனத் தெரிகின்றது. இதனை நக்கீரரின் அகப்பாடல் (அகம், 227) ஒன்றால் அறியமுடிகின்றது.

"வெண்ணெல் லரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீந்தே னிரியக்
கள்ளரிக்குங் குயஞ் சிறுசின்
மீன்சீவும் பாண்சேரி
வாய் மொழித் தழும்பன் ஊர்"[192]

என்ற பாடலடியால் இவன் ஊரின் வளமும், உண்மையினைப் பேசும் வாய்மையாளன் என்பதும் புலனாகின்றது.

## அம்பர் கிழான் அருவந்தை

அருவந்தை என்பது இவனுடைய பெயர். அம்பர் என்னும் ஊரிலிருந்து அரசாண்டதால் அம்பர் கிழான் அருவந்தை எனப்பட்டுள்ளான். இவ்வூர் நாகை மாவட்டம் நன்னிலம் தாலுக்காவில் உள்ள ஓர் ஊராகும்.

"காவிரி யணையும் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர்"[193]

எனக் கல்லாடனார் இவனைக் காவிரியோடு சேர்த்து வாழ்த்திப் பாடியுள்ளார். மேலும், இவனுடைய கொடை நலத்தை விளக்கும் போது,

"வறனியா னீங்கல் வேண்டி யென்னரை
நிலந்தினச் சிதைந்த சிதாஅர் களைந்து
வெளிய துடீஇயென் பசிகளைந் தோனே"[194]

என்று பாடியுள்ளதையும் காணமுடிகின்றது. சங்கப்புற இலக்கியங்கள் தெளிவாகச் சுட்டியுள்ள தரவுகளின்வழி, சிறுகுடிகிழான் பண்ணன் முதலாக அம்பர் கிழான் அருவந்தை இறுதியாக ஏழு சீறூர் மன்னர்கள் அறிய வருகின்றனர். இவர்கள் கொடையிலும் வீரத்திலும் சிறந்து விளங்கியமை தெரிகின்றது. எனினும் வேந்தர்களுக்கு உட்பட்ட நிலப்பரப்பில் அவர்களுக்குப் பணிந்து ஆட்சி செய்தமையை உணரமுடிகின்றது.

## வள்ளல்கள்

வள்ளல்களை முதலேழு, இடையேழு, கடையேழு வள்ளல்கள் என மூன்று தன்மைகளில் அழைக்கின்றனர். இவர்களில் பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி என்ற எழுவரே கடையேழு வள்ளல்களாக அறியவருகின்றனர். ஆட்சியாளர்களாகக் காணும்போது இவர்களை வேளிர் என்றும், குறுநில மன்னர் என்றும் கூறுவர் வரலாற்று ஆய்வாளர்கள். ஆனால், இலக்கியங்கள் கொடைச்சிறப்பால் இவர்களை வள்ளல்கள் எனப் பகர்கின்றன.

புறநானூறு இக்கடையேழு வள்ளல்களை விரிவாகப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும், சிறுபாணாற்றுப்படையும் பாடியுள்ளதைக் காண முடிகின்றது. இவர்கள் இறந்த பிறகு புரவலர்கள் இன்மையால் புலவர்களும் இரவலர்களும் குமணனிடம் சென்றுள்ளனர். இதனை,

> "எழுவர் மாய்ந்த பின்றை அழிவரப்
> பாடி வருநரும் பிறரும் கூடி
> இரந்தோர் அற்றம் தீர்க்கென விரைந்து இவண்
> உள்ளி வந்தனென்"[195]

என்று பெருஞ்சித்திரனார் கூறுவதால் அறியமுடிகின்றது.

> "எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
> விரிகடல் வேலி வியலகம் விளங்க
> ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்"[196]

என நத்தத்தனார் பாடியுள்ளதால் இவர்களின் கொடைத்திறனை உணரமுடிகின்றது. அத்தகைய கடையேழு வள்ளல்களையும் அவர்களது கொடைப் பண்பினையும் சங்கப்புற இலக்கியங்கள் கூறிய வழி காணலாம்.

## அதியமான்

இவன் பெயர் அஞ்சி. 'அதியர்' என்ற குடியினன், அதனால் இவன் அதியன், அதிகன், அதியமான் நெடுமான் அஞ்சி என்றெல்லாம் அழைக்கப்படுகின்றான்.

எழினி என்பது அதியமானுக்கு அமைந்த குடிப்பெயராகும். "இரும்பனம் புடைய லீகை வான்கழல்"[197] என்று பனம்பூ மாலை இவனுக்கு உரிமைப்பட்டு வருதலால் அதியமான் சேரமரபினன் எனத் தெரிகின்றது.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு குதிரைமலை உள்ளிட்ட நாட்டை ஆண்டு வந்துள்ளான். குதிரைமலை என்பது தென் கன்னட மாவட்டத்துக்கும் மைசூர் நாட்டுக்கும் எல்லையாய் நிற்கும் மலைத்தொடரில் உள்ள மலைகளுள் ஒன்று என்பார்[198] ஔவை துரைசாமிப் பிள்ளை.

> "ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
> கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி"[199]

எனப் பெருஞ்சித்திரனாரும்,

> "நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி"[200]

எனப் பரணரும் இக்குதிரை மலையோடு தொடர்புபடுத்தி அதியமானைப் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது. அதியமானின் முன்னோர் வானுலகத்திலிருந்து இந்நிலவுலகிற்குக் கரும்பு கொண்டுவந்து பயிரிட்டதாகக் ஔவையார் கூறுகின்றார். இதனை,

> "அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
> அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
> நீர்அக இருக்கை ஆழி சூட்டிய
> தொன்னிலை மரபின்நின் முன்னோர் போல"[201]

என்ற பாட்டடிகளால் அறியலாகின்றது. வள்ளல்கள் எழுவருள் அதியமானின் கொடைச் சிறப்பாக, இவன் ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்தமை அறியவருகின்றது.

> "போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி
> பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
> நீல மணிமிடற்று ஒருவன் போல
> மன்னுக பெருமநீயே தொன்னிலைப்
> பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
> சிறியிலை நெல்லித் தீங்கினி குறியாது

ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈந்தனையே"[202]

என்பதினால் நெல்லிக்கனியை, தான் உண்ணாது அதன் மகத்துவத்தினையும் கூறாது தன்னிடம் தந்த அதியமானை ஔவையார் வாழ்த்திப் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது.

"―――― ――――― மால்வரைக்
கமழ்பூஞ் சாரல் கவினிய நெல்லி
அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கு ஈந்த"[203]

என இக்கொடைச் சிறப்பினை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியுள்ளதையும் அறியலாகின்றது. மேலும்,

"அலத்தற் காலை யாயினும்
புரத்தல் வல்லன் வாழ்கவன் தாளே"[204]

என்றும்,

"கடவர் மீதும் இரப்போர்க்கு ஈயும்
மடவர் மகிழ்துணை நெடுமான் அஞ்சி"[205]

என்றும் வருகின்ற பாடலடிகளால் இவனது ஈகைப்பண்பினை உணரமுடிகின்றது. அதியமானுடன் நட்பு கொண்ட அவனுடைய அவைக்களப் புலவரான ஔவையார் பாடிய பாடல்கள் வழி[206] இவனை எதிர்நோக்கி இருந்தப் போர்ச் சூழல்களும் அவற்றை எதிர்கொண்ட இவனது தறுகண்மையும் புலனாகின்றது.

**பாரி**

பறம்பு மலையினையும் அதனைச் சார்ந்த முந்நூறு ஊர்களையும் கொண்ட பறம்பு நாட்டை ஆண்டவனாக அறிய வருகின்றான். குமணனின் கொடையினைப் புகழ வந்த பெருஞ்சித்திரனார்,

"முரசுகடிப்பு இகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
கறங்குவெள் அருவி கல்அலைத்து ஒழுகும்
பறம்பின் கோமான் பாரி"[207]

எனப் பாரியின் பறம்பு மலையினைக் கூறிச் சென்றுள்ளதைக் காணமுடிகின்றது. இப்பறம்பு மலையின் சுனைநீர் சுவையானது என்பதை,

"பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்"[208] – என்றும்,

"பாரி பறம்பிற் பனிச்சுனை போலக்
காண்டற் கரியளாகி"[209]

என்றும் வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

பாரி வழங்கிய கொடையினில் முதன்மையானதாகப் பேசப்படுவது, பற்றுதற்கு கொழுகிளையின்றி தவித்த முல்லைக் கொடிக்குத் தன் தேரினையே பந்தலாக நிறுத்தி வந்ததே ஆகும். இதனை,

"------- ------- சுரும்பு உண
நறுவீ உறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரி"[210]

எனச் சிறுபாணாற்றுப்படை விளம்புகின்றது. தன்னை நாடியவர்களுக்கு வேறுபாடு கருதாது வழங்கும் கடமையினைக் கொண்டவன் என்பது,

"பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்"[211]

எனக் கபிலர் சிறப்பித்துக் கூறுவதால் அறியமுடிகின்றது. பாரியின் பறம்பு மலை வளத்தினையும், அவனுடைய போர் வன்மையினையும், கொடைச்சிறப்பினையும் கபிலர் விரிவாகப் பாடியுள்ளதைப் புறநானூற்றுப் பாடல்வழி[212] காணலாகின்றது.

### காரி

மலையமான் திருமுடிக்காரி முள்ளூர் என்ற மலைநாட்டின் மன்னன். இதனை, "முள்ளூர் பொருநன்" (புறம், 126:8) என்றும், "செவ்வேல் மலையன் முள்ளூர்க் கான நாற வந்து" (குறுந், 312: 2 – 3) என்றும் விளிக்கப்பெறுதலால்

அறியமுடிகின்றது. "இம்முள்ளூர் பெண்ணையாற்றின் தென்மேற்கேயும் செங்கண்மா என்ற செங்கம் நகருக்குத் தெற்கேயும் உள்ளதென்பர்."[213] இவனை மலையமான், மலையன், முள்ளூர் மன்னன், கோவற்கோமான் என அழைத்தமை தெரிகின்றது.

காரி தன்னை நாடிய இரவலர்க்கு உலகோர் வியக்கும்படி ஈந்தவன் என்பது,

"------- ------ ------ கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையகம் மருள
ஈர நன்மொழி இரவலர்க்கு ஈந்த
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சுவரு நெடுவேல்
கழல் தொடித் தடக்கைக் காரி"[214]

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. மேலும்,

"காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
மாரி ஈகை மறப்போர் மலையனும்"[215]

என்பதால் இவன் மழைபோல் ஈகை புரிந்தமையும், களத்திலே மறப்போர் புரிந்தமையும் புலனாகின்றது.

இவன் பேராற்றல் மிக்கவன். இதனால், மூவேந்தரும் தத்தமக்குப் படைத்துணை வேண்டுமெனத் தனித்தனியே அமைச்சரை அனுப்ப, அவர்கள் எல்லோரும் இவனிடத்து பொருள்தந்து புகழ்ந்து நின்றதை,

"வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவருள் ஒருவன் துப்பா கியர்என
ஏத்தினர் தரூஉங் கூழே"[216]

என்ற கபிலர் கூற்றுக் காட்டுகின்றது. இந்நிலையினில் காரியின் கொடை சிறப்பினையும், போர் வன்மையினையும் காணமுடிகின்றது.

## ஆய்

இவன் ஆய் அண்டிரன், ஆய் எயினன், வேள் ஆய் எனவும் வழங்கப் பெறுகின்றான்.

"கழல்தொடி ஆஅய் மழைதவழ் பொதியில்"[217] –என்றும்,
"மழைக்கணஞ் சேக்கும் மாமலைக் கிழவன்
வழைப்பூங் கண்ணி வாய்வாள் அண்டிரன்"[218] – என்றும்

வரும் பாடலடிகள் இவன் பொதியமலையின் தலைவன் என்பதையும் சுரபுன்னை மாலையணிந்தவன் என்பதையும் புலப்படுத்துகின்றன. கடையேழு வள்ளல்களில் இவனின் கொடைச் சிறப்பாக அறிவது, நீலநாகம் கொடுத்த கலிங்கத்தைச் சிவனுக்கு மனமுவந்து கொடுத்தது ஆகும். சிறுபாணாற்றுப்படை இதனை,

"------ ------- நிழல் திகழ்
நீல நாகம் நல்கிய கலிங்கம்
ஆலமர் செல்வற்கு அமர்ந்தனன் கொடுத்த
சாவம் தாங்கிய சாந்துபுலர் திணிதோள்
ஆர்வ நன்மொழி ஆயும்"[219]

எனப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

உறையூர் ஏணிச் சேரி முடமோசியார் கானகத்தில் நிறைய யானைகளைக் கண்டுள்ளார். அக்காட்சி அவர்க்கு ஆய் அண்டிரனை நினைவுறுத்தியுள்ளது. இக்காடுகள் ஆய் அண்டிரனைப் பாடினவோ? அதனால் இந்த யானைகளைப் பரிசிலாகப் பெற்றனவோ? என்று வியந்து பாடியதை,

"குன்றம் பாடின கொல்லோ
களிறுமிக உடையஇக் கவின்பெறு காடே"[220]

என்ற புறப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. சூரியன் ஆயைப் போன்று வலிமையுடையது இல்லை என்றும், ஆய் இல்லாவிட்டால் புலவர் இல்லாமற் போவர் என்றும் கூறுவதால்[221] இவனது கொடையின் மேம்பாட்டை அறியலாகின்றது.

## பேகன்

ஆவியர் குடியில் பிறந்தவன். இவனை வையாவிக்கோ என்பதால் இவன் ஆவினங்குடியின் அரசன் எனத் தெரிகின்றது. "அதுமன் எம் பரிசில் ஆவியர்

கோவே" (புறம், 147 : 9) என்ற இப்பாட்டியும் இவன் ஆவியர் குடியில் பிறந்தவன் என்பதை உறுதிப்படுத்துகின்றது. "பெருங்கல் நாடன் பேகன்" எனச் சிறுபாணாற்றுப்படையும், புறநானூறும் விளம்புவதால்[222] பேகன் மலைநாட்டின் அரசன் என்பது அறியக்கிடக்கின்றது.

பேகனின் கொடைச் சிறப்பினில் முதன்மையானதாகப் பேசப்படுவது, இவன் மயிலுக்குத் தன் போர்வையினைப் போர்த்தியது ஆகும். இந்நிகழ்வினை,

> "வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
> கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
> அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
> பெருங்கல் நாடன் பேகனும்"[223]

என்று இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரும்,

> "படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ
> கடாஅ யானைக் கலிமான் பேகன்"[224] – என்றும்,

> "மடத்தகை மாமயில் பனிக்கும் என்று அருளிப்
> படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
> கடாஅ யானைக் கலிமான் பேக"[225]

என்றும் பரணர் பாடியுள்ளதையும் காணமுடிகினறது. மேலும், இவன் கொடையினால் மடமையடைவான் (புறம், 142) எனக் கூறுவதால் இவனின் கொடை மடத்தினை அறியமுடிகின்றது.

பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து நல்லூர்ப் பரத்தையிடம் புற ஒழுக்கம் மேற்கொண்டுள்ளான். கணவனைப் பிரிந்து வாழ்ந்த கண்ணகி இதனால் வருந்தி துயர் உற்றுள்ளாள். கண்ணகியின் துயரினைப் போக்க கபிலர், பரணர், அரிசில்கிழார்,பெருங்குன்றூர் கிழார் போன்றோரால் இவன் அறிவுறுத்தப் பெற்றமை புறநானூற்றுப் பாடல்வழி தெரிகின்றது.[226]

## நள்ளி

கண்டீரம் என்னும் ஊரின் அரசன். அதனால் கண்டீரக்கோப்பெருநள்ளி எனப் பெயர் பெற்றுள்ளான். "இரும்புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி" (புறம், 150 : 25) என்றதனால் இவன் 'தோட்டி' என்ற மலைப்பகுதியை ஆட்சி செய்தமை தெளிவாகின்றது.

நள்ளி காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது புலவர் வன்பரணர் சென்றுள்ளார். இவன் நான்காட்டு நாட்டினன் என்று சொல்லி தன் மார்பில் அணிந்திருந்த மாலையை அளித்துள்ளான். அந்நிகழ்வினை வன்பரணர் பாடிய புறநானூற்றுச் செய்யுளால் (150) அறியமுடிகின்றது. இந்நிகழ்ச்சியால் கற்றோரை ஆதரிக்கும் நள்ளியின் மாண்பு புலனாகின்றது.

"——— ——— ——— ஆர்வமுற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளாது ஈயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி"[227] –எனவும்,

"——— ——— ——— கரவாது
நட்டோர் உவப்ப, நடைப்பரி காரம்
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்
துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாடன் நள்ளி"[228]

எனவும் வரும் பாடலடிகளால் நள்ளி தன்னை விரும்பி வந்தவர் மகிழும் வண்ணம் எதையும் மறைக்காமல் அவர்கள் களைப்புத் தீரக் குறைவின்றி விருந்து உபசரித்ததையும் பின்னர் அவர்கள் மகிழும்படி பரிசளித்துச் சிறப்பித்தமையும் அறியவருகின்றது.

## ஓரி

இவனை 'வல்வில் ஓரி' எனவும், 'ஆதன் ஓரி' எனவும் சிறப்பித்து அழைப்பர்.

"——— ——— பிறங்கு மிசைக்
கொல்லி யாண்ட வல்வில் ஓரி"[229]

என்றதால் உயர்ந்த சிகரங்களையுடைய கொல்லி மலையினையும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியினையும் ஆண்டுள்ளான் என்பது புலனாகின்றது. ஓரி வேட்டையாடும்போது வலிமையான வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு யானையை வீழ்த்திப் புலியின் வாயைப் பிளந்து புள்ளிமானின் உடலை உருட்டிப் பன்றியைக் கொன்று பக்கத்தில் புற்றிலிருந்த உடும்பினைத் தைத்ததாம். இதனை,

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வா யுழுவையைப் பெரும்பிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை யுருட்டி யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத் துடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்"[230]

என வண்பரணர் பாடியுள்ளதால் அறியமுடிகின்றது. இதனால், ஓரியின் வில்லின் வலிமையை உணரலாகின்றது. ஓரியைப் பாடியும் ஆடியும் வருகின்ற இரவலர் கூட்டம் இவனிடம் மிக்கப் பரிசிலைப் பெற்றுப்பசி நீங்கித் தத்தம் தொழிலையே மறந்துள்ளனர் என்பது,

"------- ------- ------- விசிபிணிக்
கூடுகொள் இன்னியம் கறங்க
ஆடலும் ஒல்லார்தம் பாடலும் மறந்தே"[231]

என்ற புறப்பாடலடிகளால் அறியலாகின்றது.

"------- ------- வாழிய ரோரி விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய் நின்னே"[232]

என வரையாது சுரக்கும் வள்ளல் என்று கழைதின் யானையார் பாடியுள்ளதால் ஓரியின் கொடைத்திறனை அறியமுடிகின்றது. சங்கப்புற இலக்கியங்கள் கூறியுள்ளதன் வழி அதியமான் முதலாக ஓரி இறுதியாக உள்ள இக்கடையேழு வள்ளல்களின் கொடைத்திறனையும், நாட்டுவளத்தையும், புரவலர்களைப் போற்றிய மாண்பும் அறியவருகின்றன.

## தொகுப்புரை

இனக்குழு சமுதாய அமைப்புச் சிதைந்து நிலவுடைமை சமுதாயம் தோன்றிய போது ஆட்சியாளர்கள் தோன்றியுள்ளதைப் புலப்படுத்தப்பட்டுள்ளது. இனக்குழு சமுதாயத்தில குறுநிலப் பரப்புகளுக்குத் தலைவர்களாக இருந்தவர்களே நிலவுடைமை சமுதாயத்தின் அரசர்களாகத் திகழ்ந்துள்ளதைத் தெளிவுபடுத்தியுள்ளது. தன் ஆளுகைக்குட்பட்ட பகுதியைப் பாதுகாத்து அரசு புரிந்துள்ளனர். தங்களுக்குப் பாதுகாப்பும் அமைதியும் அளிக்கும் தலைவனையே மக்களும் மன்னர்களாக மதித்து வாழ்ந்துள்ளமையைப் புலப்படுத்தியுள்ளது.

தொடக்க நிலையில் குறுநிலங்களுக்குத் தலைவர்களாகத் திகழ்ந்த இவர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப்பினை விரிவுபடுத்த எண்ணியதையும், அவ்வாறு விரிவுபடுத்த விழையும் போது பிற குறுநிலத் தலைவர்களுடன் போர் செய்து வென்றுள்ளதையும் கூறியுள்ளது. தன்கீழ் வாழும் குடிகளுக்கு உணவு உற்பத்தியின் தேவையினை உணர்ந்து உள் நாட்டு வளத்தினைப் பெருக்கியுள்ளனர். மக்களுக்குப் பாதுகாப்பினையும் ஏற்படுத்தி உள்ளனர். இவ்வாறு ஆட்சி புரிந்த இவர்களின் நிலப்பரப்பின் விரிவு, வீரம், கொடை, மக்களிடம் பெற்ற நன்மதிப்பு இவற்றால் ஆட்சியாளர்களின் நிலை உயர்ந்து மன்னர், வேளிர், வேந்தர் என அழைக்கப்பட்டமையைத் தெளிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாட்டின் எல்லை தெற்கே குமரி முதல் வடக்கே வேங்கடம் வரை விரிந்து பரந்து இருந்ததை அறியமுடிகின்றது. இத்தமிழகத்தின் மேலைக் கடல் சார்ந்த மலைப்பகுதியினைச் சேரரும், கீழைக்கடல் பகுதி சார்ந்த நிலப்பரப்பினைச் சோழரும், தென்குமரி பகுதியினைப் பாண்டியரும் ஆட்சி செய்தமையும், இவர்கள் தங்களுக்குட்பட்ட பகுதியினைக் காலந்தோறும் ஆண்டு வந்துள்ளதையும் சுட்டியுள்ளது. மூவேந்தர்களில் சிலர் வடக்கே படை மேற்கொண்டு இமயம் வரை சென்று தங்கள் புகழ்கொடி நாட்டி வந்ததையும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

பதிற்றுப்பத்தின்வழி சேரர்களையும் அவர்களின் உறவுமுறையினையும் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது. சேரர்களில் செங்குட்டுவன் முதன்மையானவனாகக் கருதப்பட்டமை தெரிகின்றது. மற்ற புற இலக்கியங்களால் சுட்டப்பெற்ற சோழர், பாண்டியர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உண்டு என்பதை உணர்த்தியுள்ளது. இச்சிறப்புப் பெற்ற பாண்டியர்களில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கீர்த்தி பெற்றவனாகத் திகழ்ந்ததைத் தெளியப்படுத்தியுள்ளது. கலைக்கும், பண்பாட்டு வளர்ச்சிக்கும் வித்திட்டவர்கள் சோழர்கள் எனவும், இச்சோழர்களில் கரிகாற் பெருவளத்தான் புகழ் பெற்றவனாகத் திகழ்ந்ததையும் கூறியுள்ளது.

வேந்தர்களுக்கு அடுத்த நிலையினில் வேளிர்கள் திகழ்ந்துள்ளதையும், சங்கப்புற இலக்கியங்கள் சுட்டப்பெற்ற வேளிர்கள் யார், யார் என்பதினையும் அறியப்படுத்தியுள்ளது. வேந்தர்களுக்குக் கீழ்ப் பணிந்து ஆட்சி செய்தவர்களாகக் குறுநிலமன்னர்களும், சீறூர் மன்னர்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். புரவலர்க்குக் கொடுத்த கொடையினால் உயர்ந்தவர்களாக விளங்கும் கடையேழு வள்ளல்களையும் அவர்களின் கொடை மடத்தினையும் இவ்வியல் கோடிட்டுச் சென்றுள்ளது.

# இயல் 3

## சான்றெண் விளக்கம்

1. கம்பர் தனிப்பாடல்கள், தனிப்பாடல்கள் திரட்டு, நோக்கு: துடிசைகிழார்,
   அ. சிதம்பரனார், சேரர் வரலாறு, தோற்றுவாய், பக்.6 – 7
2. வ. குருநாதன், சங்ககால அரச வரலாறு, ப. 26
3. புறம், 2:9 – 11
4. மேலது, 6 : 1 – 10
5. கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், (ஆய்வுக் கட்டுரைகள்), ப. 58
6. மேலது, ப.58
7. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 52
8. க. சண்முகசுந்தரம், சங்க கால வேளிர்கள், ப.1
9. கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம், (ஆய்வுக் கட்டுரைகள்), ப. 58
10. R.P. Sethu Pillai, Words and their Significance& Tamil Literary and Colloguial, P. 74
11. சிலம்பு, 23: 79 – 84
12. புறம், 72 : 11 – 12
13. சி. பாலசுப்ரமணியன், நெஞ்சின் நினைவுகள், பக்.69
14. புறம், 19:3, 165:1
15. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர். ப.26
16. புறம், 299:1, 338:12, 353:11, 299:5, மதுரை, அடி; 776
17. R.P. Sethu Pillai, Words and their Significance& Tamil Literary and Colloguial, P. 65
18. தொல், பொருள், 5:3
19. சிலம்பு, 14 : 94
20. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப. 29
21. களவியல் உரை, பக். 5 – 6 ; சிலம்பு. 11 : 18 – 22
    கா.அப்பாதுரை, குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு, பக். 1 – 3
22. புறம், 35 : 3 – 4
23. பெரும், அடி; 32 – 33
24. தொல், பொருள், 63 : 4 – 5
25. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப. 52
26. சிறு, அடி; 47, 63, 79
27. வ. குருநாதன், சங்க கால அரச வரலாறு, ப. 47
28. கா. கோவிந்தன், சங்க கால அரசர் வரிசை – 1, சேரர், ப. 2., பாண்டியர், பக்.2 – 3

29. C. Balasubramanian, A Study of the Literature of the Cera Country. P.3
30. மு. இராகவையங்கார், சேரன் செங்குட்டுவன், ப.6
31. செந்துறை முத்து, சேரர் இலக்கியச் செல்வம், ப. 8
32. மயிலை சீனி. வேங்கடசாமி, கொங்குநாட்டு வரலாறு, (பழங்காலம் முதல் கி.பி.250 வரையில்), ப. 16
33. Mayilai Seeni. Venkatasamy, Seeran Senguttuvan, Part - I, P. 2
34. புறம், 2:13 – 16
35. முனைவர் ந.க. மங்கள முருகேசன், சேரர் வரலாறு, ப. 65
36. மயிலை சீனி. வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, பகுதி – 1, ப. 202
37. பதிற், பதி. 2: 4, 7
38. மேலது, 2; 1: 12 –16, 7 : 4 – 7, 10 : 2 – 5
39. மயிலை சீனி. வேங்கடசாமி, தொகுப்பு நூல்கள், தொகுதி – 2, ப. 25
40. பதிற், 22:27, 23 : 10, 29:14
41. மேலது, 29 : 13 – 14
42. துடிசைகிழார், அ. சிதம்பரனார், சேரர் வரலாறு, பக். 55 – 57
43. பேரா. ம. பசுவலிங்கம், சங்க கால வஞ்சி, ப. 26
மயிலை சீனி. வேங்கடசாமி,சேரன் செங்குட்டுவன், ப. 20
44. வ. குருநாதன், சங்க கால அரசவரலாறு, ப. 84
45. பதிற், 3, 2 : 26 – 27
46. பேரா சி. பாலசுப்ரமணியன், சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்,பக்.40–41
47. பதிற், 4, 10 : 14 –16
48. மேலது, 41 – 49, பதி, 5
49. மேலது, பதி, 5: 10 – 12
50. மேலது, 5: 18 – 20
51. துடிசைகிழார், அ. சிதம்பரனார், சேரர் வரலாறு, பக். 75 –76
52. கா. அப்பாத்துரை, தென்னாட்டுப் போர்க்களங்கள், பக். 80 – 81
பேரா சி. பாலசுப்பிரமணியன், சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், ப.56
53. சிலம்பு, 24: 152 – 155, 25 : 156 – 164
54. முனைவர் ந.க. மங்கள முருகேசன், சேரர் வரலாறு, ப. 105
55. மு. இராகவையங்கார், சேரன் செங்குட்டுவன், ப. 14
56. பதிற், 53. 12 –13, பதி, 6 : 8
57. மேலது, 60 : 10 – 12
58. மயிலை சீனி. வேங்கடசாமி,கொங்குநாடும் துளுநாடும், ப. 260

59. மயிலை சீனி. வேங்கடசாமி, கொங்குநாட்டு வரலாறு, ப. 77

60. புறம், 8 : 1 – 5

61. மு. இராகவையங்கார், சேரன் செங்குட்டுவன், ப. 16

62. பதிற். 8, 1 : 17

63. வ. குருநாதன், சங்க கால அரச வரலாறு, ப. 128

64. பதிற், பதி, 9 : 6 – 8

65. இறையனார் அகப்பொருள் உரை, பக். 5 – 6

66. சிலம்பு, 8 : 1 – 2, அடியார்க்கு நல்லார் உரை.

67. ரா. இராகவையங்கார், தமிழ்வரலாறு, பக். 31, 49

68. மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, பக். 78 – 96

69. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early of Tamils, PP. 18 - 19

கோ. கேசவன், மண்ணும் மனித உறவுகளும், பக்.95 – 143

70. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, ப. 51

மா. இராச மாணிக்கனார், தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பக். 33 – 44

மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 29

71. புறம், 72 : 13 – 16

72. மதுரை, அடி; 761 – 763

73. தொல், பாயிரம், 9 – 11

74. புறம், 58 : 13, சிறு, அடி; 66 – 67

75. கே.வி. இராமன், பாண்டியர் வரலாறு, பக்.41

76. மதுரை, அடி; 761 – 765

77. புறம், 3 : 11 – 13

78. காரிகிழார், புறம், 6 ; நெட்டிமையார், புறம், 9, 12, 15; நெடும்பல்லியத்தனார், புறம், 64

79. புறம், 9 : 1 – 5

80. மேலது, 18, 19, 23 – 26, 72, 76 – 79, 371, 372

81. மதுரை, அடி; 55 –56

82. புறம், 19: 2 – 4

83. ந.க. மங்கள முருகேசன், பாண்டியர் வரலாறு, ப. 38

84. புறம், 21:10 – 11

85. மேலது, 51 : 1 – 4

86. மேலது, 55 – 57, 196, 198

87. மேலது, 55: 2 – 6

88. T.V. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, பக். 26 – 27

89. புறம், 59 : 5 – 7

90. மேலது, 58: 14 – 17

91. K.N. Sivaraja Pillai, The Chronolog of the Eartly Tamils, PP.131 - 133

92. புறம், 184

93. மயிலை சீனி. வேங்கடசாமி, சங்க காலத் தமிழக வரலாறு, பகுதி – 2, ப. 189

94. க. சண்முகசுந்தரம், சங்ககாலப் பாண்டிய வேந்தர்கள், ப. 151

95. புறம், 178 : 4 – 5

96. வ. குருநாதன், சங்க கால அரச வரலாறு, ப. 160

97. புறம், 71 : 1 – 3

98. மேலது, 183 : 8 – 10

99. பதிற், பதி; 9: 6 – 8

100. புறம், 71. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்,

புறம். 72, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

101. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப.47

102. கா. கோவிந்தன், சங்க கால அரசர் வரிசை – 2, சோழர், ப.2

103. புறம், 69 : 12, பட்டின, அடி; 285

104. சிலம்பு, பதிகம், 12 – 13

105. புறம், 40 : 10 – 11

106. பொருந, அடி; 246 – 248

107. மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ப. 23

108. ந.க. மங்கள முருகேசன், சோழர் வரலாறு, பக். 3 –4

109. உலகநாதப் பிள்ளை, முதலாம் கரிகாலன், பக். 21 – 22

110. புறம், 10 : 11 – 12

111. க. சண்முகசுந்தரம், சங்க காலச் சோழ வேந்தர்கள், பக். 1 – 2

112. புறம், 4 : 13 – 16

113. தொல், அகத், 30. நச்சி உரை

114. பட்டின, அடி; 221 – 228

115. உலகநாதப் பிள்ளை, முதலாம் கரிகாலன், ப. 25

மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ப. 48

116. க. சண்முகசுந்தரம், சங்க காலச் சோழ வேந்தர்கள், ப. 14

117. வ. குருநாதன், சங்க கால அரச வரலாறு, பக். 237 – 238

118. புறம், 34 – 42, 46, 69, 70, 226 – 228, 373, 386, 393, 397

119. சிலம்பு, 27: 118 – 122

120. பதிற், பதி, 5: 18 – 20

121. புறம், 41 : 1 – 3

122. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early of Tamils, PP. 141 - 142

123. புறம், 27 – 33, 44, 45, 47, 61, 68, 225, 382, 400

124. மேலது, 31 : 1 – 3

125. மேலது, 61, அடிக்குறிப்பு

126. புலவர். வெ. இராமலிங்கன், கருவூரே வஞ்சி, ப. 104

127. டாக்டர். பத்மஜா ரமேஷ், வி.பி. புருஷோத்தமன், சங்க கால மன்னர்களின் காலநிலை (தொகுதி – 2) பக். 91 – 92

128. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early of Tamils, P.88

129. புறம், 60 : 7 – 8

130. மேலது, 219

131. மேலது, 16, 125, 367, 377

132. மேலது, 16 : 9 – 10

133. மேலது, 377 : 21 – 22

134. பதிற், 44 : 14 –17, 49 : 1 – 17, பதி,5: 13 – 17

135. சிலம்பு, 20 : 52 – 54

136. புறம், 46 : 1 – 2

137.மதுரை, அடி; 55, பதிற், 30:30, 49:7, 88:13

138. மு. இராகவையங்கார், வேளிர் வரலாறு, பக். 25 – 26

139. ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு (முழுவதும்), தெளிவுரை, ப. 466

140. மலை, அடி; 77 – 80

141. புறம், 151 : 8 – 12

142. மேலது, 162, 207, 237, 238

143. மேலது, 162

144. மேலது, 201 : 8 – 13

145. மேலது, 24 : 18 – 19

146. மேலது, 233 : 5 – 6

147. மேலது, 234 : 5 – 6

148. குறுந், 19 ; புறம், 233, 234

149. தொல், பொருள், 30. நச்சி உரை

150. புறம், 396 : 7 – 13

151. மேலது, 396 : 10 – 13

152. பதிற், பதி, 4, 5, 6, 8; சிலம்பு, 28 : 195 – 198

153. வெ. மாதையன், சங்க கால இனக்குழு சமுதாயமும் அரசு உருவாக்கமும்,ப. 17

154. புறம், 96, 102, 392

155. மேலது, 102: 1 – 5

156. மேலது, 139 : 11 – 12

157. மேலது, 154 : 4 – 7

158. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறம். 158 முன்னுரை

புலவர் கா. கோவிந்தன், சங்க கால அரசர், வரிசை.4, ப.92

159. புறம், 158: 25 – 26

160. மேலது, 160 : 12 – 13

161. மேலது, 163 : 8 – 9

162. மேலது, 158 : 17 – 20

163. மேலது, 158 – 161, 163 – 165

164. மேலது, 157: 1 – 5

165. க. சண்முகசுந்தரம், சங்க கால வேளிர்கள், பக். 172 – 173

166. புறம், 172 : 8 – 11

167. மேலது, 174 : 1 – 5

168. மேலது, 175 : 2 – 5

169. புலவர் கா. கோவிந்தன், சங்க கால அரசர், வரிசை – 5, ப. 81

170. சிறு, அடி; 119 – 126

171. புறம், 177 : 4 – 5

172. புலவர் அ. மாணிக்கனார், புறம். 178 முன்னுரை

173. புறம், 178 : 6 – 11

174. மேலது, 209 : 8 – 14

175. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறம், 239 முன்னுரை

176. புறம், 239 : 4 – 11

177. க. சண்முகசுந்தரம், சங்க கால வேளிர்கள், ப. 156

178. புறம், 381 : 1 – 5

179. மேலது, 391 : 17 – 21

180. க. சண்முகசுந்தரம், சங்க காலச் சோழர்கள், ப. 14

181. பெரும், அடி; 32 – 36

182. மேலது, அடி; 39 – 41

183. பதிற், 71 : 13 – 18, 88 : 7

184. மேலது, 44 : 10 – 17

185. புறம், 299

186. மேலது, 319 : 12 – 13

187. புலவர் அ. மாணிக்கனார், புறம், 179, முன்னுரை

188. புறம், 180 : 1 – 2

189. மேலது, 180 : 3 – 6

190. மேலது, 181 : 1 – 3

191. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, புறம், 242, முன்னுரை

192. புறம், 348 : 1 – 5

193. மேலது, 385 : 8 – 10

194. மேலது, 385 : 5 – 7

195. மேலது, 158 : 17 – 20

196. சிறு, அடி; 113 – 115

197. பதிற், 42 : 1, 57 : 2

198. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பண்டைநாளைச் சேரமன்னர் வரலாறு, ப.15

199. புறம், 158 : 8 – 9

200. அகம், 372 : 9

201. புறம், 99 : 1 – 4

202. மேலது, 91 : 4 – 11

203. சிறு, அடி; 99 – 101

204. புறம், 103 : 11 – 12

205. மேலது, 315 : 2 – 3

206. மேலது, 87 – 95, 97 – 101, 103, 104, 206, 231, 232, 235, 315, 390

207. மேலது, 158 : 1 – 4

208. மேலது, 176 : 9

209. மேலது, 337 : 6 – 7

210. சிறு, அடி; 87 – 91

211. புறம், 107 : 1 – 2

212. மேலது, 105 – 111, 113 – 120, 200 – 202, 236, 237

213. புறம், 121, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை

214. சிறு, அடி; 91 – 95

215. புறம், 158 : 6 – 7

216. மேலது, 122 : 4 – 6

217. மேலது, 128 : 5

218.மேலது, 131 : 1 – 2

219. சிறு, அடி; 95 – 99

220. புறம், 131 : 3 – 4

221. மேலது, 374, 375

222. சிறு, அடி; 87, புறம், 158 : 12

223. மேலது, அடி; 84 – 87

224.புறம், 141: 11 – 12

225. மேலது, 145 : 1 – 3

226. மேலது, 143 – 147

227. மேலது, 158 : 13 – 16

228. சிறு, அடி; 103 – 107

# இயல் - 4

## அரசு - மக்கள் உறவும், வாழ்வியல் நிலையும்

# அரசு - மக்கள் உறவும் வாழ்வியல் நிலையும்

## முன்னுரை

'சங்கப் புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவு நிலைகள்' எனும் இவ்வாய்வேட்டின் இறுதி இயல், இவ்வியல். இலக்கியங்கள் சமூகத்தின் விளக்கங்கள் ஆகும். ஒரு குறிப்பிட்ட காலச்சமூகம் – அதன் வாழ்வியல் பின்புலங்களை இலக்கியங்கள் சித்தரிப்பதால் அவை குறித்த ஆய்வும் முக்கியமாகின்றது. அந்த வகையில் இவ்வியல் சங்கப்புற இலக்கியம் காட்டும் அரசு – மக்கள் இவர்களுக்கிடையேயான உறவுகளையும், வாழ்வியல் நிலைகளையும் இங்கு ஆராய்ந்து புலப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது.

## அரசர் – மக்கள் உறவு நிலை

சங்க கால வேந்தர்கள் சமூகக் குறைபாடுகளைக் கண்டுணர்ந்து அவற்றை அகற்ற வேண்டும் என்பதிலும் நாட்டு மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வேண்டும் என்பதிலும் நாட்டம் மிகுந்தவர்களாக இருந்திருக்கின்றனர். தம் குடைக்கீழ் வாழும் மக்களின் நல்வாழ்வைக் கருதியே நல்லாட்சி நடத்தியமை தெரிகின்றது. மக்களின் நலன்களை நோக்கியே செயல்பட்டுள்ளனர். இதனால் மக்களுக்கும் அரசனுக்கும் நெருங்கிய உறவுநிலை இருந்து வந்தமை புலனாகின்றது.

அரசன் வேலைவிடக் கோலிலேதான் அதிக நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். நாட்டு மக்கள் அல்லற்பட்டு அரசனைத் தூற்றினால் அந்நாடு அழிந்து போகும். அதனால் அரசன் செங்கோலனாக விளங்க வேண்டும். இதனை,

> "வேலன்று வென்றி தருவது மன்னவன்
> கோலதூஉம் கோடா தெனின்" (குறள்.546)

என்ற குறள் வழி உணரமுடிகின்றது. நரிவெரூஉத்தலையார், அரசன் என்பவன் பெற்றதாய் தன்னுடைய குழந்தையைப் பேணிக் காப்பது போல் நாட்டைப்

பாதுகாத்தல் வேண்டும் எனப் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் கூறியதை,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரோடு ஒன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி
அளிதோ தானேஅது பெறல்அருங் குரைத்தே"[1]

என்ற புறப்பாடலடிகள் விளம்புகின்றது.

அக்கால மக்கள் மன்னனைத் தெய்வமாகவும் அவனுடைய இருப்பிடத்தைக் கோயிலாகவும் கொண்டு வாழ்ந்துள்ளனர். இதனால், "இறைவன் என்னும் பெயர் அரசனுக்கும் கடவுளுக்கும் வழங்கப்பட்டது. கோயில் என்னும் பெயர் அரண்மனைக்கும் தெய்வக் கோட்டத்திற்கும் பொதுவாயின" என்பார் ஞா. தேவநேயன்.[2]

மக்கள் வாழ்விற்கு நெல்லும், நீரும் முதன்மையானது. இதனை நாட்டு மக்களுக்கு குறைவில்லாது அளிக்கும் அரசனே மக்கட்கு உயிர் போன்றவன் என்பதை,

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிர்அன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"[3]

என்ற புறநானூறு அடிகள் உணர்த்துகின்றது. எனவே, அக்காலச் சமுதாயம் மன்னனை உயிரெனக் கருதிப் போற்றியமை தெளிவாகின்றது.

தொண்டைமான் இளந்திரையனின் ஆட்சி சிறப்பினைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

"முறைவேண்டு நர்க்கும் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி"[4]

எனப் பாடியுள்ளதால், இளந்திரையனின் நீதி வழங்கும் மாண்பு அறியவருகின்றது. ஆட்சியாளன் முறைவேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் காட்சிக்கு எளியோனாய், இன்சொல் கூறுவோனாய் இருந்தல் வேண்டும். இதனையே,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்" (குறள், 386)

என வள்ளுவர் இயம்பியுள்ளார்.

"அரசே! நின்னுடைய சில செயல்களைக் கேட்பாயாக, உன்னிடம் நீதியைக் கேட்க வேண்டிய காலத்தில் காட்சிக்கு எளியராய் இருந்து நீ வழங்கினால் கேட்பவர் மழை வேண்டிய காலத்தில் மழை பெற்றவர் ஆவர். நின் வானளாவிய வெண்கொற்றக்குடை வெயிலை மறைப்பதற்கன்று. அக்குடை வருந்தி வரும் மக்களின் துன்பத்தைப் போக்குவதற்கு உள்ளதாகும்" எனக் கிள்ளி வளவனிடம் வெள்ளைக்குடி நாகனார் கூறுதல் குறிப்பிடத்தக்கது. இதனை,

"முறைவேண்டு பொழுதின் பதன் எளியோர் ஈண்டு
உறைவேண்டு பொழுதில் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்கும்நின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ"[5]

என்ற செய்யுட் தொடர் விளக்குகின்றது. மேலும்,

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே"[6]

என அதியமானை ஔவையார் பாடியுள்ளதால், காட்சிக்கு எளியோனாய் பழகுதற்கு இனிமையாளனாய் அதியமான் திகழ்ந்தமையைக் காணமுடிகின்றது.

மேற்கண்டவற்றை நோக்க அரசர் தம் குடிமக்களின் குறையினைக் கேட்டு முறை செய்தமையும், மக்களின் உயிராகவும், இறையாகவும் விளங்கியமை தெளிவாகின்றது. மேலும், அரசர் குடிமக்களிடம் கொண்டிருந்த உறவு நிலையினையும் அறியக்கிடக்கின்றது.

## அரசர் – அந்தணர்

சங்க காலச் சமூக அமைப்பில் அந்தணர்கள் மிகவும் உயர்ந்தோர்களாகக் கருதப்பட்டனர். தொல்காப்பியர் அக்காலச் சமூக அமைப்பின் நாற்பெரும் பிரிவினைக் கூறும்போது, "ஆயுங்காலை அந்தணர்க்குரிய"[7] என்று அந்தணரையே முதலில் கூறுவார். இதன்வழி மன்னரினும் அந்தணர்கள் தலைமையிடம் பெற்றிருந்தமை தெரிகின்றது. "அந்தணர் என்பார் மன அமைதி பெற்றவர்களாயும், தந்நலம் துறந்தவர்களாகவும் மன்னன் முதல் மக்கள் வரையுள்ள எல்லோராலும் போற்றி மதிக்கப்படுபவர்களாகவும் உள்ளவர்"[8] என்பார் கூற்று ஏற்கத்தக்கதே.

அந்தணர் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என ஆறு தொழில்களை மேற்கொண்டுள்ளனர்.[9]

> "கேள்வி முற்றிய வேள்வி அந்தணர்"[10] – என்றும்,
> "கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
> வேள்வி ——— ——— ———"[11]

என்றும் இடம்பெறும் பாட்டடிகளால், வேத நூல்களில் விதிக்கப்பட்ட முறைப்படி அந்தணர் வேள்வி செய்தமை புலனாகின்றது.

அரசர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நாட்டு நலன் கருதியும் மக்கள் நலன் கருதியும் பல வேள்விகளும் யாகங்களும் அந்தணர்கள் செய்துள்ளனர். செல்வக்கடுங்கோ வாழியாதன் புகழ்தல் பொருந்திய பெரிய வேள்விகளை இயற்றுவித்துப் பலவான தான தருமங்களைச் செய்துள்ளான். இதனை,

> "ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
> ஆக்கிய பொழுதின் அறத்துறை போகி"[12]

என்ற பாடலடிகளால் உணரமுடிகின்றது.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் வெற்றியினைப் பாடும்போது,

"நசைதர வந்தோர் நசைபிறக்கு ஒழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில்
நற்பனுவல் நால்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ"[13]

என்று வெற்றிகள் பலவோ? அல்லது செய்த வேள்விகள் பலவோ? என நெட்டிமையார் வியந்து பாடியிருப்பது நோக்கத்தக்கது. 'இராசசூயம்' என்னும் வெற்றிப் பெரு வேள்வியைச் சோழன் பெருநற்கிள்ளி வேட்பித்தமையால் அவன் 'இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்றே அழைக்கப்பெறுகின்றான். கரிகாற் பெருவளத்தான் பல வைதீக வேள்விகள் செய்ததைக் கருங்குளவாதனார் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.[14]

இவ்வாறு நாட்டு நலங்கருதி வேள்விகள் இயற்றிய அந்தணர்கள், கவியாகவும் அறிவுரையாளராகவும் தூதுவராகவும் விளங்கியுள்ளனர் என்பது நச்சினார்க்கினியர் கூற்றால் உணரகிடக்கின்றது.[15] எப்பொழுதாகினும் மன்னன் நாட்டை விட்டு வெளியே செல்லுங்கால் மன்னனின் வேண்டுகோளுக்கு ஏற்ப நாடாளும் தொழில் அந்தணர்க்கு உரியதாகும் என்பதை, "அந்தணாளர்க் கரசுவரை வின்றே"[16] என்கின்றார் தொல்காப்பியர்.

"இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே"[17]

என நான்மறையறிந்த துறவியர் முன்னிலையில் நீ கைகூப்பித் தொழ வேண்டும் என்று பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்குக் காரிகிழார் அறிவுரை வழங்குவதிலிருந்தும், அவரே செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பார்ப்பாரல்லது பிறரை வணங்கான்[18] என்று கூறுவதாலும் அரசவையில் அந்தணர் பெற்றிருந்த மதிப்பு நன்கு புலனாகும்.

சமூகத்தில் உயர்வகுப்பிலிருந்த அந்தணர், நாட்டின் நலங்கருதியும் அரசனின் நலங்கருதியும் இயற்றிய வேள்விகளும், யாகங்களும் அறியவருதலாலும் ஆட்சியாளர்களோடு இணைந்து சமூகத்தில் அவர்களுக்குக் கிடைத்த நன்மதிப்பாலும் அரசர் - அந்தணர் உறவுநிலையினை நன்கு அறியலாகின்றது.

## அரசர் - வணிகர்

ஒரு நாட்டின் நல்லாட்சிக்குப் பொருளாதாரம் மையத்தூணாகத் திகழ்கின்றது. அப்பொருளாதார வளர்ச்சிக்கு வாணிபம் முக்கிய பங்களிக்கிறது. இந்நிலையில் சங்க இலக்கியத்தின் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபம் பற்றி அறிய முடிகின்றது. தரைவழி, கடல்வழி என வணிகப் பொருள்கள் ஏற்றிச் செல்லும் போக்குவரத்துச் சாதனங்கள், ஏற்றுமதி, இறக்குமதியாகும் பொருள்கள், துறை முகங்கள், பொருள்கள் விற்பனையாகும் அங்காடிகள் என வாணிபம் தொடர்பான அனைத்துத் தரவுகளையும் இலக்கியங்களில் காணமுடிகின்றது. இத்துடன், இவ்வணிகத்தைச் செவ்வனே செய்த வணிகர்களையும் அறியமுடிகின்றது. அக்கால வணிகர்,

> "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோற் செயின்" (குறள். 120)

என்னும் வள்ளுவரின் நெறியினைக் கடைப்பிடித்து வாழ்ந்துள்ளனர். ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் எனும் ஆறு தொழில்களைப் புரிந்துள்ளனர். "கொள்வதும் மிகை கொளாது கொடுப்பதும் குறைகொடாது பல்பண்டம் பகர்ந்து பொருள் ஈட்டலை இவர்கள்தம் வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தனர்."[19]

இத்தகைய உயர் பண்பினைக் கொண்ட வணிகர்கள் அரசர்களுக்கு இணையாக வளமான வாழ்க்கை பெற்றிருந்தனர். உள்நாட்டு, வெளிநாட்டு

வணிகர்களைக் காணும்போது இவர்களுக்கு அரசர்கள் அளித்த மதிப்புத் தெரியவருகின்றது.

"அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்"[20]

என்பதால் வணிகப் பொருள்களுக்கு அரசர்கள் அளித்த பாதுகாப்பினைக் காண முடிகின்றது. வணிகரில் தலைசிறந்தவர்களுக்கு ஆட்சியாளர்கள் அளித்த 'எட்டி' பட்டத்தினைச் சிலம்பின் வழி அறியக்கிடக்கின்றது.

இவற்றை நோக்க வணிகர் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியும் மன்னர்களின் நன் மதிப்பைப் பெற்றும் வந்தமையால் அரசர் – வணிகர் உறவுநிலைக் கூறாமலேயே விளங்குகின்றது.

## அரசர் – வேளாளர்

பண்டைத் தமிழர் இயற்கையேடு இயைந்த வாழ்வை மேற்கொண்டிருந்தனர். இவற்றைச் சித்தரிக்கும் இலக்கியங்கள் பயிர்த்தொழில் பற்றிய குறிப்புகளை விரிவாகத் தந்துள்ளன. தொல்காப்பியம்,

"வேளாண் மாந்தர்க் குழுதூண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"[21]

என அக்காலத்து 'உழவர்கள்' வேளாண் மாந்தர்கள் என்கிறது. நச்சினார்க்கினியர் இவ்வேளாளரை மேல்நிலை வேளாளர், கீழ்நிலை வேளாளர் என இரு பிரிவினராகக் கூறுவார்.

"சேர, சோழ, பாண்டிய வேந்தர்களும், தமிழக வேளிர்களில் பெரும்பாலானவர்களும் வேளாளர் மரபைச் சேர்ந்தவர்கள்"[22] என்பார் வே.கனகசபை. மேல்நிலை வேளாளர் என்போர் மண்டலத் தலைவர்களாகவும், தானைத் தலைவர்களாகவும் பொறுப்பு வகித்துள்ளனர். இவர்கள் ஆட்சியாளர்களோடு மண உறவும் கொண்டிருந்தமை தெரிகின்றது.[23] சோழன்

உருவப் பல்தேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேளிரின் மகளை மணந்தார் என்றும், கரிகாலன் நாங்கூர் வேளிர் மகளை மணந்தான்[24] என்றும் அறியவருதலால் வேளாளர் வேந்தரொடு கொண்டிருந்த மண உறவு புலனாகின்றது. ஆட்சியாளர்களோடு கொண்டிருந்த மண உறவினால் மிக உயர்ந்த அரச பொறுப்புகளையும் ஏற்றுள்ளனர். சமூக அமைப்பில் உயரிய இடத்தையும் பொருளாதாரத்திலும் தன்னிறைவு அடைந்தும் திகழ்ந்துள்ளனர்.

எனவே, அக்கால வேளாளர் நாட்டின் உணவு உற்பத்தியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றியமை தெரிகின்றது. மேலும், அவர்கள் அரசர்களோடு கொண்டிருந்த மணத்தொடர்பும், பெற்ற சிறப்புப் பட்டங்களும், பதவிகளும் பற்றிச் சங்கப் புற இலக்கியங்கள் கூறுதலால் அரசர் – வேளாளர் உறவு நிலைகள் தெள்ளெனத் தெளிவாகின்றது.

## அரசர் – அரசியல் வினைஞர்

சங்க காலத்தில் மன்னராட்சி நடைபெற்றாலும் மக்களின் துணையோடு நல்லாட்சியே நடைபெற்றுள்ளது. மன்னன் அரசின் தலைவனாக வீற்றிருந்தான். எனினும், நீதியியல் முடிவுகளை எடுப்பதற்கு அமைச்சர், படைத்தலைவர், ஒற்றர், தூதர், மக்களின் பிரதிநிதிகள் போன்ற ஆட்சிக் குழுக்களின் முன்னிலையில் ஆலோசிக்கப்பட்டே நல்லதொரு முறையினை வழங்கியுள்ளான். இக்குழுக்களில் இடம் பெற்றோரைத் தனித்தனியே விரிவாக இலக்கியங்கள் சுட்டப் பெறவில்லையாயினும் இவர்களின் துணையோடு மன்னன் நல்லாட்சி நடத்தியமை திண்ணமே. சங்க இலக்கியங்கள் இக்குழுவினைச் 'சுற்றம்' என்று விளம்புகின்றது. "உரும்பில் சுற்றம்" (அடி; 447) எனப் பெரும்பாணாற்றுப்படையும்,

> "பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
> நாஅல்வேத நெறி திரியினும்
> திரியாச் சுற்றமொடு"[25]

எனப் புறநானூறும் இச்சுற்றத்தைப் பற்றிப் பாடியுள்ளமையைக் காணமுடிகின்றது.

இத்தகைய சுற்றத்தின் நடுவில் வீற்றிருந்த நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார்,

"முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்துஇனிது விளங்கி"[26]

எனக் கடல் நடுவே தோன்றும் ஞாயிற்றுக்கும், பல விண்மீன்களுக்கு நடுவே தோன்றும் நிறை மதிக்கும் உவமிக்கின்றார்.

"பன்மீ னாப்பட் டிங்கள் போலப்
பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை"[27]

எனப் பதிற்றுப்பத்து, சேர வேந்தனைப் புகழ்கின்றது.

இவற்றை நோக்க ஆட்சிக் குழுக்களுடனும், அரசவை அலுவலருடனும் மன்னனுக்கு இணக்கமானதொரு உறவுநிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும். இந்நிலை இருந்தால் ஒழிய சிறந்ததொரு நல்லாட்சி செய்திருக்க முடியாது என்பது தெரிகின்றது.

## அரசர் – புலவர்

பண்டைக் காலத்து புலவர்கள் அரசர்களைப் போற்றி வந்துள்ளனர். அரசர்களுக்கு அமைச்சர்களாகவும், ஆசிரியராகவும் விளங்கியுள்ளனர். இளமை, செல்வம், யாக்கை முதலியவற்றின் நிலையாமையை உணர்த்தியுள்ளனர். புலவர்கள் தங்களின் கூர்ந்த அறிவாற்றலாலும், வருவது உரைக்கும் திறத்தினாலும், உயரிய சிந்தனையினாலும் மன்னரிடமும் மக்களிடமும் பெருமதிப்புப் பெற்றுள்ளனர். "பூர்வீகச் சமுதாயங்களில் புலவர்களே அறிஞர்களாகவும் விளங்குவதால் அவர்க்கும் அவரது வாக்குக்கும் மன்னர்களிடையிலும் மக்களிடையிலும் செல்வாக்குக் காணப்படுவதுண்டு"[28] என ஆ. வேலுப்பிள்ளை கூறுவது குறிப்பிடத்தக்கது.

சங்க கால வேந்தர்கள் புலவர்களைப் பெரும் புலமையாளர்களாகவும் சான்றோராகவும் கருதிப் போற்றி வந்தனர். "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்"[29] எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாலும்,

"செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்"[30]

என்று மாந்தரஞ்சேரல் இரும்பொறையாலும் பாராட்டப்பட்ட சிறப்பினை உடையவர்கள் புலவர்கள். அக்கால அரசர்கள் தங்களைப் புலவர்கள் புகழ்ந்து பாடுவதையும், புலவர்களால் தாங்கள் பாராட்டப்படுதலையும் பெரிதும் விரும்பியுள்ளமை தெரிகின்றது.

கரிகால் வளவன் தன்மீது பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர்க்குப் பதினாறு இலட்சம் பொன் பரிசளித்துள்ளான். இதனைக் கலிங்கத்துப் பரணி,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன்
பத்தொ டாறுநூ றாயிரம் பெறப்
பண்டு பட்டினப்பாலை கொண்டதும்"[31]

எனப் பாடுவதன் மூலம் புலவர்களுக்குப் பழந்தமிழ் ஆட்சியாளர் கொடுத்த மதிப்பு தெரியவருகின்றது.

பழந்தமிழ் மன்னர்கள் தம்மை நாடிவந்த புலவர்களை அன்புடன் வரவேற்று வேண்டியன நல்கி, அவர்களை வழி அனுப்பும் போது அவர்கள் பின்னே ஏழ் அடி தூரம் தாமும் நடந்து சென்று வழி அனுப்பும் உயரிய பண்பினை உடையவர்களாய் இருந்தனர் என்பது,

"காலின் ஏழடிப் பின்சென்று"[32]

எனும் பாடலடியால் அறியலாகின்றது. இத்தகைய பண்புகளை வேந்தர்கள்

பெற்றிருந்தமையால் புலவர்கள் மன்னரைத் தாம் விரும்பிய நேரத்தில் காணவும் பேசவும் உரிமை பெற்றிருந்தனர். இதனால் அவர்களின் நெருக்கமான உறவுகளை அறியமுடிகின்றது.

மோசிகீரன் எனும் புலவர் ஒருமுறை சேரமான் பெருஞ்சேரலிரும் பொறையினைச் சந்திக்கச் செல்கின்றார். அச்சமயம் மன்னரைக் காண இயலாததால், வந்த களைப்பில் அயர்ந்து முரசு கட்டிலில் உறங்கி விடுகிறார். இதனை, அவ்வமயம் அங்கு வந்த சேரமான் பார்த்துச் சினம் கொள்ளாது புலவர்க்குக் கவரி வீசியுள்ளான். இந்நிகழ்வினை,

"அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்நற் றமிழ்முழுது அறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழுவுத்தோள் ஓச்சித் தண்ணென
வீசி யோயே"[33]

என மோசிகீரனாரே பாடியுள்ளதால் அறியமுடிகின்றது.

கன்றைப் பார்த்து இரங்கும் பசுவைப் போல புலவரின் வறுமை நிலையைக் கண்டு வேந்தன் இரங்கியுள்ளான். அவன் கண்களில் புலவர்களின் துன்பங்களைப் போக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்துள்ளது. இதனை,

"தொழுது முன் நிற்குவிராயின் பழுதின்று
ஈற்றுஆ விருப்பின் போற்றுபு நோக்கி"[34]

என்ற அடிகளால் அறியலாம். வியர்வையினால் நனைந்த, ஈரும் பேனும் உலவும் கந்தையைக் களைந்து அழகான பட்டு ஆடையை உடுக்க நல்கியும், அழகுடைய மகளிர் புதுத் தேறலை மழையென வார்க்கும்படிச் செய்துள்ளமையாலும் விருந்தோம்பல் பண்பு தெரியலாகின்றது.[35]

சேர வேந்தர்கள் தம்மை பாடிய புலவர் பெருமக்களுக்கு நல்கிய நாட்டின் பெரும் பகுதியினையும், வழங்கிய பெரும்பொருளையும் பற்றிப் பதிற்றுப்பத்தின் பதிகக் குறிப்புகளில் காணமுடிகின்றது. இதனால் சேரர்கள் புலமையாளர்களுக்கு அளித்த கொடைச் சிறப்பினை அறியக்கிடக்கின்றது.

இவ்வாறு அரசர்கள் தம்மை நாடாள்பவர் என்று கருதாது வறுமையால் வாடிய புலவரை மிகுந்த கனிவான இதயத்தோடு போற்றிப் புரந்து மகிழ்ந்துள்ளதைக் காணமுடிகின்றது.

## புலவர்கள் அரசர்களின் நட்புரிமை

பண்பால் ஒத்த இருவரிடையே நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்படும் போது அன்பு மலர்கின்றது. இவ்வன்பின் அடிப்படையில் நட்பு உண்டாகின்றது. இதனைத்தான்,

> "அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு" (குறள். 74)

என்பார் வள்ளுவர். சமுதாய வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் நட்பு என்னும் பண்பு பெரிதும் வேண்டப்படுகின்றது. பொருளிலக்கண அடிப்படையில் அகம், புறம் எனப் பிரித்து அகவாழ்வில் மலர்ந்த நட்பையும் புற வாழ்வில் பூத்த அருள் நட்பையும் தனித்தனியே பார்க்கும் போது சங்க காலத் தமிழரின் நட்புப் புலப்படுகின்றது. அந்நிலையில் "பழந்தமிழ் வேந்தரிடம் புலமையாளர் கொண்டிருந்த தொடர்பு புரவலர் இரவலர் என்ற நிலையினைக் கடந்து உயர்ந்த உயிர் நட்பாக விளங்கியது"[36] என்பார் அரங்க. இராமலிங்கம்.

சங்க காலத்தில் தோன்றிய புறநானூற்றில் அரசர் – புலவர் நட்புரிமை சிறப்பாகப் பேசப்படுகின்றது. பாரி – கபிலர், அதியமான் – ஔவையார், கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் எனக் காவலரும் பாவலரும் கொண்டிருந்த கேண்மையைப் புறப்பாடற் பகுதிகள் புலப்படுத்துகின்றன.

புலவர் தாமற்பல் கண்ணனாரும் சோழன் மாவளத்தானும் ஒருமுறை வட்டாடியுள்ளனர். அப்பொழுது வட்டுகளில் ஒன்று புலவரது கீழே மறைந்துள்ளது. அதனை புலவரும் அறியார். பின்னர் அவ்வட்டினைக் கண்ட சோழன், புலவர் வேண்டுமென்றே மறைத்தார் எனக் கருதி வெகுண்டு வட்டு ஒன்றினைப் புலவர்மீது வீசியுள்ளான். புலவர் உண்மையனைக் கூறியும் அதை உணராது வெகுண்டுள்ளான். ஆதலால் புலவர், சோழனுடைய பிறப்பில் ஐயம் கொள்வதாகக் கூற மன்னன் தன் தவற்றை உணர்ந்து நாணம் கொண்டான் எனத் தெரிகின்றது. இப்புறப்பாடல் (புறம், 43) செய்தியால் வேந்தரோடு புலவர் அமர்ந்து வட்டாடுகின்ற அளவிற்கு உரிமை பெற்றிருந்தமையும் வேந்தரையே எதிர்த்து இழிவாகப் பேசுமளவுக்கு நெஞ்சுரமும் உரிமையும் பெற்றிருந்தமை தெரிகின்றது.

கோப்பெருஞ்சோழனைக் கண்டு பழகாமலேயே அவனோடு நட்பு கொண்டவர் புலவர் பிசிராந்தையார். தன் மக்களின் செய்கைக்கு நாணி வடக்கிருக்கச் சென்ற மன்னன் தன்னிடம் உள்ளவர்களிடம்,

> "இகழ்வில வினிய வியாத்த நண்பினன்
> புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
> தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
> பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
> காதற் கிழமையு முடைய னதன்றலை
> இன்னதோர் காலை நில்லலன்
> இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே"[37]

என நண்பர் பிசிராந்தையார் தன்னுடன் வடக்கிருக்க வருவார் என்றும், அவருக்கு ஓர் இடம் ஒழித்து வைப்பீராக என்று கூறுவதும் அறியமுடிகின்றது. புலவரும் சோழனின் நிலையைக் கேட்டறிந்து அவருடன் வடக்கிருக்கச் சென்று அவனை அடைந்து தானும் உயிர் துறந்ததை அறியும் போது (புறம்.217) வேந்தனோடு தானும் உயிர் விடும் அளவிற்குப் புலவர்கள் நட்புரிமையோடு திகழ்ந்தார்கள் என்பது புலனாகின்றது.

கோப்பெருஞ்சோழனுடன் அரசவையில் இருந்து நட்பு கொண்டவர் பொத்தியார். சோழனுடன் அவரும் வடக்கிருக்கப் புறப்பட, மன்னன் "கருவுற்றிருக்கும் உன் மனைவிக்குக் குழந்தை பிறந்த பிறகு வா எனக் கூறி விலக்குகின்றார்."[38] அந்நிலையில், மன்னன் வடக்கிருந்து உயிர்விட அதனைக் கண்ட பொத்தியார்,

"பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே"[39]

என அழுதுபுலம்பி அரற்றுவதிலிருந்தும், பின்னர் தானும் தன் மனைவிக்குக் குழந்தைப் பிறந்த பிறகு வடக்கிருக்க விரும்பித் தனக்குரிய இடம் குறித்துக் கேட்க, சோழனும் பொத்தியாரின் மனக்கண்ணில் தோன்றித் தான் வடக்கிருந்த இடத்தருகே காட்டிய இடத்தில் உயிர் துறந்ததிலிருந்தும் (புறம், 223) சோழன், பொத்தியார் மீது கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும் நட்பின் உயர்வையும் உணரமுடிகின்றது.

புறநானூற்றிலே பேசப்படும் மற்றும் ஒரு குறிப்பிடத்தக்க நட்பாக அதியமான் ஔவையார் நட்புப் பேசப்படுகின்றது. அதியமான் தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியைத் தான் உண்ணாது அக்கனியின் மகத்துவத்தினைக் கூறாது ஔவையாருக்கு அளித்துள்ளான். அக்கனியினை உண்ட ஔவையார் அதியமானின் கொடையினை நினைந்து மனம் நெகிழ்ந்து,

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே"[40]

என்று வாழ்த்துகின்றார். இங்கே ஔவைக்குக் கிடைத்த பரிசு தமிழ்ப் புலமைக்குக் கிடைத்த பரிசாகும். மேலும், பெண்ணாகினும் பாவலரிடம் காவலர் கொண்டிருந்த நட்பினை அறியலாகின்றது.

கடையேழு வள்ளல்களில் ஒருவரான பாரி இறந்த பிறகு, அவரது நண்பரான கபிலர் பாரியின் மகளிரைத் திருமணம் செய்விக்க வேண்டி பல அரசர்களிடம் நிற்க, எந்த ஒரு அரசரும் அவர்களை மணம்புரிய விரும்பாமையால் திருக்கோவிலூரில் உள்ள பார்ப்பார் ஒருவரிடம் பாரியின் பெண்களை அடைக்கலப்படுத்திவிட்டு, அங்குள்ள தென்பெண்ணை ஆற்றினருகே பாரியை நினைத்து வடக்கிருந்து உயிர் துறந்ததைப் புறநானூற்றுப் பாடல் (236) வழி உணரலாகின்றது. இதிலிருந்து கபிலர், பாரியிடம் கொண்டிருந்த அன்பின் திறத்தினையும் நட்பின் ஆழத்தினையும் காணமுடிகின்றது.

ஆட்சியாளர்கள் கொடுக்கின்ற பொன்னுக்காகவும் பொருளுக்காகவும் அவரிடம் நட்புப் பாராட்டாமல் உள்மனதில் இருந்து எழுகின்ற உண்மையான அன்பின் அடிப்படையிலேயே புலவர்கள் அரசர்களிடம் நட்புக் கொண்டிருந்தனர் என்பது தெரிகின்றது. இவ்வுறவு நிலையினைக் கூறும் அறிஞர்கள், "புலவர்க்கும் புரவலர்க்கும் இடையே தோன்றிய நெருங்கிய உறவு முற்கால வாழ்க்கை நெறிகளுள் ஒன்றாகவே இருந்தது"[41] என்பர். மேலும், "தென்னகத்து அரசர்களிடம் காணப்பட்ட இத்தகைய பண்பினை வடபுலத்து அரசர்களிடம் காணுதல் அரிது" என்பார் சு. வித்தியானந்தன்.[42]

## பழிகாத்தமை

புலவர்கள், செய்யுள் இயற்றுதலும் பரிசில் பெற வேண்டிப் புரவலரிடம் செல்லுதலுமே தொழிலாகக் கொண்டவர் என்று கருத இயலாது. அவர்கள் அறவழி நிற்பவர். சிறந்த கொள்கையினை உடையவர். முரண்பட்ட இருவருக்காகத் தூதுபோதலும், தன்நிலை அறியாத அரசர்க்கு அறிவுரை வழங்குதலும், ஆட்சியாளர்க்கு நேர இருந்த குலப்பழியைக் காத்தவர்களுமாக அறிய வருகின்றனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், மலையமான் திருமுடிக்காரியுடன் போரிட்டு வென்று, அவன் மக்களை யானைக் காலில் இட்டு கொல்ல முயன்றதைக் கண்ட கோவூர்கிழார்,

"நீயே புறவின் அல்லல் அன்றியும், பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே புலனுழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்"[43]

என வளவனின் குடிச்சிறப்பினையும், சிறுவர்களின் குடிச்சிறப்பினையும் பெருமையினையும் எடுத்துக்கூறி நிகழவிருந்த கொலையினைத் தடுத்து சிறுவர்களைக் காத்துள்ளார். கோவூர்கிழாரின் இச்செயலால் புலவர்களைப் பேணிக்காக்கின்ற வள்ளல்களின் மக்களைக் கொன்ற பழி வேந்தனுக்கு நேராமல் தடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகை உண்டாயிருந்த சமயம், இளந்தத்தன் என்னும் புலவன் நலங்கிள்ளியிடம் சென்று பரிசில்பெற்று, நெடுங்கிள்ளியிடம் பரிசில்பெறச் சென்றுள்ளான். தன்னிடம் வந்த புலவன் நலங்கிள்ளியின் ஒற்றன் எனக் கருதி கொல்ல முயன்ற நெடுங்கிள்ளியிடம்,

"வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை"[44]

என்று இரவலரின் பரிசில் வாழ்க்கை நிலையினைக் கூறிய கோவூர்கிழார் இளந்தத்தன் என்னும் புலவரின் உயிரினைக் காத்துள்ளார். அத்துடன் சோழன் நெடுங்கிள்ளி புலவரைக் கொன்ற பழிக்கு ஆளாகாமல் தடுத்தும் உள்ளார். "இவ்வாறு இப்புலவர் முயன்றது பரிசில் நோக்கியன்று, மெலிந்தார்பால் இரக்கங்கொண்டு அவர்களை உய்விக்க வேண்டி"[45] என்கிறார் ந. சுப்ரமண்யன்.

கோப்பெருஞ்சோழன் உறையூரிலிருந்து ஆட்சிபுரிந்து வருகையில் அவன் மக்கள் சிற்றினச் சேர்க்கையால் அறிவு பேதுற்று அவன்பால் பகைகொண்டு போர்க்கெழுந்தனர். தன் மக்கள் செயல் கோப்பெருஞ்சோழன் உள்ளத்திற் கொதிப்பை உண்டு பண்ணிற்று. அதனால் கோப்பெருஞ்சோழன் போருக்கெழுந்துள்ளான். இதனையறிந்த புல்லாற்றூர் எயிற்றியனார்,

"வெண்குடை விளக்கும் விறல்கெழு வேந்தே
------- ------- ------- -------
எண்ணில் காட்சி யிளையோர் தோற்பின்
நின்பெருஞ் செல்வம் யார்க்கெஞ் சுவையே
அமர்வெஞ் செல்வ நீயவர்க் குலையின்
இகழுந ருவப்பப் பழியெஞ் சுவையே
அதனால், ஒழிகதி லத்தைநின் மறனே"[46]

எனக் கூறி நிகழவிருந்த போரைத் தடுத்துள்ளார். சோழர் குலத்தின் குடிப்பெருமையினைக் காத்து நேரவிருந்த பெரும்பழியைத் தவிர்த்துள்ளார். இந்நிகழ்வினைக் கூறும், மு. வரதராசனார் "தமிழ்நாட்டு வேந்தர்களின் குடும்பங்களில் தலைகாட்டாத குறை, எவ்வாறோ இச்சோழனின் குடும்பத்தில் புகுந்தது" என்பார்.[47]

பாண்டிய வேந்தருள் ஒருவன் அறிவுடைநம்பி, இவன் சிறந்த கல்வி அறிவும் நற்குணமும் கொண்டவனாகத் திகழ்ந்துள்ளான். ஆனால், குடிமக்களிடம் வரிவாங்கும் முறையில் நெறி அறிந்து நடவாதவன். இதனை உணர்ந்த பிசிராந்தையார், இவன் வரி வாங்கும் முறையின் குறையினைச் சுட்டிக் காட்டி, அதனால் ஏற்படும் விளைவினையும் கூறியுள்ளதைப் புறப்பாடல் (184) வழி அறியலாகின்றது. நாடாள்பவன் முறை தவறி நடக்கும் போது குடிகளின் பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும். அந்நிலை பாண்டிய வேந்தனுக்கு நேராமல் காத்து நல்வழிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகின்றது.

மேற்கண்ட செய்திகளிலிருந்து புலவர்கள், வேந்தர்கள் தன்நிலை இழுந்து தவறு செய்ய நேரிடும் போது, அவர்களது தவற்றினை உணர்த்தி, அதனால் அவர்களுக்கு நேரவிருந்த பழியிலிருந்து காத்துள்ளமை தெரியவருகின்றது.

## தூது போதல்

புலவர்க்கும் புரவலர்க்கும் ஈதல், ஏற்றல் என்னும் நிலையே அன்றி, புரவலர்க்காகப் புலவர்கள் தூது சென்றமையையும் அறியமுடிகின்றது. தொண்டைமான் தன்னிடம் படைக்கலம் மிகுந்திருந்த செறுக்கால் அதியமானோடு போரிட எண்ணினான். அதியமானோ போரின் கொடுமையினையும் அதனால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நேரிடும் இன்னலையும் நினைத்துப் போரினைத் தவிர்க்க நினைத்துள்ளான். இதனால், ஔவையாரிடம் கூறி தொண்டைமானிடத்துத் தூது அனுப்பியுள்ளான். தூது சென்ற ஔவையாரிடம் தொண்டைமான் தன் படைப்பெருமையை விளக்கப் படைக்கலக் கொட்டிலைக் காட்டினான். அவனது படைக்கலக் கொட்டிலைப் பார்த்த ஔவையார்,

> "இவ்வே பீலி அணிந்து மாலைசூட்டிக்
> கண்திரள் நோன்காழ் திருத்திநெய் அணிந்து
> ------ ------ ------ ------
> இல்லோர் ஒக்கல் தலைவன்
> அண்ணல்எம் கோமான் வைந்நுதி வேலே"[48]

எனத் தொண்டைமானைப் புகழ்வது போலப் பழித்தும், அதியமானை இகழ்வது போலப் புகழ்ந்தும் பாடியுள்ளதைக் காணமுடிகின்றது.

பேகன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து நல்லூர்ப் பரத்தையிடம் புற ஒழுக்கம் மேற்கொண்டிருந்தான். கண்ணகியோ தன் கணவன் வருவான் என எதிர்பார்த்து அவனுக்காக வருந்தி காத்திருந்தாள். இதனைக் கண்ட கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய புலவர்கள் நால்வரும் பேகனிடம் சென்று அவன் மனைவியை அழைத்து வரும்படி பாடியுள்ளனர்.[49] இந்நிகழ்வுகளைக் காணும்போது புலவர்கள் நாடாளும் மன்னனுக்காகத் தூது சென்றமை தெரியவருகின்றது.

## சந்து செய்வித்தல்

கருத்தால் வேறுபட்டாரையோ அல்லது போரால் முரண்பட்டாரையோ சந்து செய்வித்தலும் சில புலவர்களின் இயல்பாக இருந்துள்ளது. சோழன் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் நெடுநாள் உட்பூசல் நிகழ்ந்துள்ளது. அந்நிலையில் நெடுங்கிள்ளி அரணுக்குள் அடைந்திருந்தான். நலங்கிள்ளி அரணை முற்றுகையிட்டுள்ளான். இதனை அறிந்தப் புலவர் கோவூர்கிழார்,

"பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே அதனால்
குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும்இவ் இகலே"[50]

என்று இருவரின் குடிப்பெருமையினையும் போரின் முடிவினையும் கூறி போரைத் தவிர்க்க வேண்டும் எனப் பாடியுள்ளதால் கருத்து வேறுபட்ட வேந்தரைச் சந்து செய்விக்கப் புலவர் பெருமுயற்சி மேற்கொண்டமை தெரிகின்றது.

சங்கப் புற இலக்கியங்களில் காணலாகும் மேற்கண்ட தரவுகளின் வழி ஆட்சியாளர்கள் புலவர்களோடு கொண்டிருந்த உறவுநிலைகள் கூறாமலேயே அறியவருகின்றது.

## ஆற்றுப்படைக் கலைஞர்கள்

பண்டைய தமிழ் இலக்கியப் பொருள் வகையில் ஆற்றுப்படை என்பது ஒன்று. பசியால் வாடும் கலைஞரையும் அவரது சுற்றத்தையும் வரையறை இல்லாது வழங்கும் வள்ளல்களிடம் போகச் சொல்லி வழிகாட்டுவதாக அமைவன ஆற்றுப்படை நூல்கள் ஆகும். இவ்வாறு வழிகாட்டுவதற்கு உரியவர்களாகக் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் திகழ்ந்ததை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"[51]

எனத் தொல்காப்பியம் வரையறை செய்கின்றது. கூத்தரைக் கூத்தரும், பாணரைப் பாணரும், பொருநரைப் பொருநரும், விறலியரை விறலியரும் ஆற்றுப்படுத்துவது வழக்கமாக இருந்துள்ளது. சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படை பொருளில் அமைந்த ஐந்து நூல்கள் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் சில பாடல்கள் காணப்படுகின்றன. ஆற்றுப்படைக் கலைஞர்கள் வாழ்க்கை முறையில் வேறுபட்டாலும் கலையினைத் தம் தொழிலாகக் கொண்டதில் ஒன்றுபட்டவர்களாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

## கூத்தர்

சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தில் பல்வேறு கலைஞர்கள் இசை, கூத்து, பாட்டு, நடனம் எனப் பல கலைகளைப் போற்றி வளர்த்துள்ளனர். இக்கலையை வளர்த்த கலைஞர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்போர் ஆவர். இவர்களில் 'கூத்துக்கலை' ஒன்றையே தங்களது தொழிலாகக் கொண்டு கூத்தினை நிகழ்த்தி வந்தோர் 'கூத்தர்' எனத் தெரிகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களிலும் அவ்வந்நிலத்திற்குரிய கூத்தர்கள் இருந்தமை இலக்கியங்கள் வழி அறியக்கிடக்கின்றது. கூத்தர்கள் தமக்கென ஓர் ஊர் இல்லாமலும் நாள்தோறும் கூத்தாடி அதில் வரும் எளிய உணவினை உண்டனர்[52] என்றும் கூறுவார் வி.சி. சசிவல்லி. சங்கப்புற இலக்கியங்கள் இக்கூத்தர்கள் பற்றியும் அவர்களை ஆதரித்த வள்ளல்களைப் பற்றியும் பாடியுள்ளமையைக் காணலாகின்றது.

திருவிழா நாளில் மன்றத்தில் கூத்தினை நிகழ்த்தியுள்ளனர். இக்கூத்தினை மக்கள் திரளாக வந்து கண்டு சென்றதைக் குறள்வழி ( 322 )உணரகிடக்கின்றது. கூத்துக் கலையில் வல்லுநர்களை 'முதுவாய் கோடியர்' என்றழைத்தமையை,

"குறும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த"[53] – என்றும்,
"பல்லியக் கோடியர் புரவலன்"[54] – என்றும்,
"முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த"[55]

என்றும் இடம்பெறும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

மூங்கில் மீது நின்று ஆடுவோரைக் 'கழைக்கூத்தர்' என்றழைத்தமைத் தெரிகின்றது. இவர்கள் ஆடுமிடம் 'ஆடுகளம்' எனப்பட்டுள்ளது. ஆடும் பொழுது பறை முழங்கியதும் இடையிடையே தங்கள் வித்தைச் சிறப்பைக் கூறுங்கால் பறை முழக்கம் விட்டு விட்டு முழங்கியமையும் புலனாகின்றது. இதனை,

"வாடல் உழுஞ்சில் விளைநெற்று அந்துணர்
ஆடுகளப் பறையின் அரிப்பன ஒலிப்ப"[56]

என வரும் அகப்பாட்டடியால் உணரலாகின்றது. கழைக் கூத்தர் பிள்ளைகள் மூங்கில்மீது நின்று ஆடியதை,

"கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர் கடுவன் உகளினும்"[57]

எனப் பாடியுள்ளது மலைபடுகடாம்.

இக்கூத்தர்களின் வாழ்க்கைச் சித்தரிப்புகளைக் கூத்தராற்றுப்படை திறம்படக் கூறியிருப்பதால், கூத்தர்கள் குறித்தும் இவர்கள் நிகழ்த்திய கூத்துக்கள் குறித்தும் அறியக்கிடக்கின்றது.

## பாணர்

பண் என்றால் இசை. இசை பாடுவோர் 'பாணர்' என அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பாடுவதிலும் இசைக்கருவிகள் இசைப்பதிலும் கூத்துக்கலையிலும் ஈடுபாடு கொண்டு அவற்றின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றி வந்துள்ளனர். இப்பாணர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என மூவகைப்படுத்துவார் நச்சினார்க்கினியர்.[58] வாய்ப்பாட்டுப் பாடிப் பிழைப்பவர்

இசைப்பாணர், யாழ்மீட்டி வாழ்பவர் யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் பிச்சை ஏற்றுப் பிழைப்பவர் என்பர்.[59] "நாட்டுப்பாடல்களைப் பாடிக்கொண்டும் அரசர்கள் புகழைப் போற்றிக் கொண்டும் ஆங்காங்குத் திரிந்த ஒரு கூட்டத்தினரே பாணர்"[60] என்றழைக்கப்பட்டதாகக் கூறுவர் ந. சுப்ரமண்யன்.

இசை பாடுவது பாண்மகன் தொழிலாகவும், விறல்பெற ஆடுவது பாண்மகள் தொழிலாகவும் இருந்துள்ளது. "அக்காலத்தில் பாணரும் பாடினியரும் நாளும் இன்னிசையால் நற்றமிழ் இலக்கியத்தைப் போற்றி வாழ்ந்தனர்"[61] என்பர். இப்பாணர்கள் மிகவும் தாழ்ந்த குலத்தினர் என்கின்றார் வே. கனகசபை.[62]

சங்க இலக்கியங்களை நோக்க இப்பாணர்கள் வறுமையில் உழல்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களின் வறுமை நிலையினை,

"கையது கடன்நிறை யாழே மெய்யது
புரவலர் இன்மையின் பசியே அரையது
வேற்று இழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி உடுத்த உயவல் பாண"[63]

என ஆலத்தூர் கிழார் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கலைத் துறையில் ஈடுபட்ட இவர்களை மன்னர்களும் வள்ளல்களும் ஆதரித்து வந்தமை தெரிகின்றது. தினந்தோறும் காலையில் மன்னர்களைத் துயில் எழுப்புவோர் பாணர்களில் ஒரு சாரார் ஆகிய சூதர் என்பதைத்,

"தாவின் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"[64]

என்ற இத்தொல்காப்பிய நூற்பா உணர்த்துகின்றது.

இப்பாணர்களில் சிறிய யாழினைக் கொண்டவர்கள் 'சிறுபாணர்கள்' என்றும், பெரிய யாழினைக் கொண்டவர்கள் 'பெரும்பாணர்கள்' என்றும் அழைத்தமை புலனாகின்றது. சிறுபாணாற்றுப்படை,

"பொன்வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்
இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ"[65]

எனச் சிறுபாணனை ஆற்றுப்படுத்துவதாகவும், பெரும்பாணாற்றுப்படையில்,

"இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி"[66]

எனப் பெரும்பாணனைக் குறித்தும் வருதலால், இவ்விருபாணர்களைப் பற்றியும் அறியக்கிடக்கின்றது.

இப்பாணர்கள் கலைப்பணி அன்றியும் சமூகத்தில் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெற உதவியமையும் அறியலாகின்றது. தலைவனுக்காகத் தலைவியிடம் தூது போவதும், வினைமேற்கொண்டுச் சென்ற தலைவனை வினை முடிந்து விரைந்து வருமாறு வற்புறுத்துவதும் உண்டு எனத் தெரிகின்றது. பாசறையில் தங்கி இருக்கும் தலைவனிடம் விரைந்து வருமாறு சொல்வது பாணரின் பணியாக இருந்தமை,

"நிலம்பெயர்ந் துரைத்தல் அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய"[67]

என்பதால் உணரலாகின்றது. போர்க்களத்தில் வீரர்கள் விழுப்புண்பட்டுக் கிடக்கும் போது அவர்களைப் பறவைகளும் நரிகளும் நெருங்காத நிலையில் வீரர்களைக் காப்பாற்ற பாணர்கள் இன்னிசை இசைத்துள்ளதை நெடுங்களத்துப் பரணர் பாடிய புறப்பாடலால் (291) அறியலாகின்றது. அக்காலச் சமூகத்தில் தலைவன் தலைவியின் ஊடலைத் தீர்த்து இல்லற வாழ்வு செம்மையாக நடைபெற இவர்கள் பங்கு கொண்டதால், "பழந்தமிழ் நாட்டில் பாணர்களே பொதுமக்களுக்குப் பண்பாடு கற்பிக்கும் நெறியாளராக இருந்தனர்"[68] என்கின்றார் ஆரோக்கியசாமி.

இப்பாணர்களின் வாழ்வியல் நிலையினை ஆற்றுப்படை நூல்கள் விரிவாகச் சித்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பொருநர்

பொருநர் என்போர் ஒருவரைப் போல ஒப்பக் கோலம் புனைந்து திறம்பட பாடி நடிப்பவர்கள். தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளை இசைத்துப் பாடியுள்ளனர். "ஒரு கையில் அடிக்கும் கிணை அல்லது தடாரிப் பறையை முழக்குபவர்கள், ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என்ற பிரிவுடையவர்கள், கோலம் புனைந்து வருபவர்கள் ஆகியோரைப் பொருநர் என்கின்றார்"[69] கி.வா. ஜகந்நாதன்.

"பொருநர் என்பவர் ஏர்க்களத்தேனும், போர்க்களத்தேனும் சென்று பாடும் கூத்தர்"[70] என்பார் மா. இராசமாணிக்கனார். இவர்கள் போர்க்களம் சென்று வீரர்களுக்கு உற்சாகம் ஊட்டி, முரசு கொட்டி வஞ்சி பாடியதை,

> "ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றிப்
> பாடிமிழ் முரசி னியறேர்த் தந்தை
> வாடா வஞ்சி பாடினெ னாக"[71]

எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது. இவர்களின் வாழ்வியல் நிலையினைக் கூறும்போது,

> "முழா அரைப் போந்தை யரவாய் மாமடல்
> நாரும் போழுங் கிணையோடு சுருக்கி
> ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
> ஊழிரந் துண்ணும் உயவல் வாழ்க்கை"[72]

எனப் புறநானூறு பொருநரின் இரந்துண்ணும் வாழ்வைச் சித்தரிக்கின்றது. மேலும், இவர்கள் பேரூர்களில் விழவுக் களந்தோறும் சென்று பாடுதலும், அவ்வூர் மக்களாற் போற்றி உண்டி முதலிய வழங்கப்படுதலும் உடையார் என்பதும், விழவுக் களங்களில் விரும்புதற்குரிய சுவையினையுடைய சோறு கிடைக்கப்பெறினும், அதனால் தன்பால் நிலையுற்ற வறுமை அகற்றப்படாமையின் வறுமை முற்றிலும் ஒழியக் கருதி வள்ளலை நாடி வேறு இடம் நோக்கிச் சென்றதை,

"அறாஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது
வேறுபுலம் முன்னிய விரகறி பொருந"[73]

என்று முடத்தாமக் கண்ணியார் பாடியுள்ளதால் இவர்கள்தம் வாழ்வியல் நிலையினை அறியலாகின்றது.

## விறலியர்

கூத்தர், பொருநர் வகுப்பினைச் சார்ந்த பெண்களே விறலியர் ஆவர். இவர்கள்தம் உள்ளக்குறிப்புப் புறத்தே வெளிப்படுமாறு திறமையுடன் ஆடும் ஆற்றல் பெற்றவர்கள். "நால்வகை நிலங்களிலும் இருந்த வள்ளல்களிடத்தும் மன்னர்களிடத்தும் சென்று தன்னுடைய ஆடல்புலமை தோன்றவும், உள்ளக் குறிப்புத் தோன்ற மெய்ப்பாட்டோடும் ஆடும் மங்கையாகிய நடனமகள் விறலியர்"[74] என்கின்றார் ஞானசேகரன்.

விறலியர் ஆடல், பாடல், அழகு என்ற மூன்று கலைகளிலும் சிறந்து விளங்கியுள்ளனர். இவ்விறலியரின் அழகினைப் பதிற்றுப்பத்து,

"ஏந்தெழில் மழைக்கண் வனைந்துவர லிளமுலைப்
பூந்துகி லல்குற் றேம்பாய் கூந்தல்
மின்னிழை விறலியர்"[75]

எனப் பாடுகின்றது. சிறுபாணாற்றுப்படை,

"மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில்மயிற் குளிக்கும் சாயல்; சாஅய்
உயங்குநாய் நாவின் நல்எழில் அசைஇ"[76]

என விறலயரின் அழகுமிகுத் தோற்றத்தை வருணித்துள்ளது.

விறலியர்கள் கூத்தருடனும், பொருநருடனும் சென்று வள்ளல்களிடமும், மன்னர்களிடமும் நடனமாடிப் பரிசில் பெற்றுவந்துள்ளனர். இவர்களின் ஆடல் பாடல்களைப் பாராட்டி மன்னர்கள் பொன்னாலான மாலைகளையும், சிறந்த

அணிகலன்களையும் பரிசளித்துள்ளமை தெரிகின்றது. இவ்விறலியர்க்குச் சோழன் நலங்கிள்ளி மாடமதுரை அல்லது வஞ்சி மாநகரமே வேண்டுமாயினும் தரவல்லான் என்பதை,

"பூவா வஞ்சியுந் தருகுவன் ———
——— ——— ——— ———
ஒண்ணுதல் விறலியர் பூவிலை பெறுகென
மாட மதுரையுந் தருகுவன்"[77]

எனக் கோவூர்கிழார் பாடுதலால் அறியமுடிகின்றது.

யாழ் நரம்பின் இசையுடன் ஒன்றாய் இயைந்து செல்லும் இனிய மிடற்றால் பாடும் விறலியர்க்குப் பெண் யானைகள் பரிசளிக்கப்பட்டதை,

"ஆடுசிறை யறுத்த நரம்புசேர் இன்குரல்
பாடு விறலியர் பல்பிடி பெறுக"[78]

எனவரும் பதிற்றுப்பத்து அடிகளால் உணரலாகின்றது. இவர்கள் பாடி ஆடத் தொடங்குமுன் கடவுளை வாழ்த்துதல் மரபாகக் கொண்டிருந்ததை மலைபடுகடாம் (அடி;532 – 539) கூறுகின்றது. சங்கப்புற இலக்கியங்களில் இடம்பெறும் மேற்கண்ட செய்திகளால் விறலியரின் அழகினையும் அவர்களது கலைத்திறனையும் புரவலர்களிடம் பெற்ற பரிசில் பாங்கினையும் அறியலாகின்றது.

### பாடினி

ஆடற்கலையில் வல்லவராய்த் திகழ்ந்த விறலியரைப் போல், இனிய இசைபாடுவதில், வல்லவராயிருந்த பாண்குல மகளிர் 'பாடினி' என்றழைக்கப்பட்டுள்ளார். இம்மகளிர் போர்க்களத்தில் வெற்றி வாகை சூடிவரும் வேந்தனின் வெற்றியைப் பாடிப் புகழ்ந்துள்ளனர். அரசன் படை மேற்கொண்டு செல்லும் போது படையெடுப்பைப் பாடுவதும் உண்டு. போர்க்களத்திற்குச் சென்று புண்பட்டுத் துன்புறும் வீரர்களுக்கு இசைபாடி அத்துன்பத்தை மறக்கச் செய்தமையும் தெரிகின்றது. இதனை,

"உரவுக் களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவி னன்ன வெள்வேல் பாடினி
முழவின் போக்கிய வெண்கை"[79]

எனவரும் பதிற்றுப்பத்து அடிகளால் உணரக்கிடக்கின்றது. பொருநராற்றுப்படை (அடி; 25 – 47) இப்பாடினியை முடி முதல் அடி வரை வருணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆற்றுப்படைச் சித்தரிப்புகள்

கூத்தன் ஒருவன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவதாக அமைவது 'கூத்தராற்றுப்படை' எனவும், பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைவது 'பாணாற்றுப்படை' எனவும், பொருநன் ஒருவன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துதல் 'பொருநராற்றுப்படை' எனவும் அழைக்கப்படுகின்றது. விறலி ஒருத்தி மற்றொரு விறலியை ஆற்றுப்படுத்துதல் 'விறலியாற்றுப்படை' எனப்படும். செய்யுளில் ஆற்றுப்படுத்தப்படுபவரது பெயரைக் கொண்டே அது இன்ன ஆற்றுப்படை என்பதை அறிந்துகொள்ள இயலும்.

எட்டுத்தொகை நூல்களில் புறநானூற்றிலும், பதிற்றுப்பத்திலும் ஆற்றுப்படையில் அமைந்த பாடல்கள் சில காணப்படுகின்றன. இவை 5 அடி முதல் 31 அடிகள் வரையில் அமைந்தவையாகும். பத்துப்பாட்டில் காணப்பெறும் ஐந்து ஆற்றப்படை நூல்களும் பல நூறு அடிகள் கொண்டவைகளாக உள்ளன. இவ்வாற்றுப்படை நூல்களில் வள்ளல்களின் போர்ச்சிறப்பு, கொடைச்சிறப்பு, அவன் மனைவியர் சிறப்பு, அவனது நாட்டுச்சிறப்பு, ஊர்ச்சிறப்பு, கூத்தர், பாணர், பொருநர் அல்லது விறலியர் வறுமைநிலை, அவர்தம் இசைக்கருவிகள் ஆகியவை குறிக்கப்பெற்றுள்ளன. முக்கியமாக வள்ளல்களின் கொடைச்சிறப்பும், 'இன்ன வள்ளலிடம் செல்க' என்பதும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எட்டுத்தொகையில் ஆற்றுப்படைச் சித்தரிப்புகள்

கோவூர்கிழார், சோழன் நலங்கிள்ளியின் கொடைத் தன்மையைக் கூறி அவனிடம் ஒரு பாணனை ஆற்றுப்படுத்தியுள்ளார். இச்செய்யுளில்,

"உடும்புஉரித்து அன்ன என்புஎழு மருங்கின்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சில்செவித்து ஆகிய கேள்வி நொந்து நொந்து
ஈங்கு எவன் செய்தியோ பாண"[80]

எனப் பாணனின் வறுமை நிலையினைச் சித்தரித்துள்ளார். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை ஆலத்தூர்கிழார் பாடும் போது,

"புரவலர் இன்மையின் பசியே அரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த வுயவற் பாண"[81]

என்று குறிப்பிடுவதிலிருந்தும், மருதன் இளநாகனார், நாஞ்சில் வள்ளுவனிடம் பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தும்போது,

"ஆனினம் கலித்த அதர்பல கடந்து
------ ------ ------ ------
சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண"[82]

எனப் பாணன் கடந்த வந்த வழியின் இயல்பைக் கூறுவதிலிருந்தும்,

"காஎரன் ஒக்கல் கடும்பசி இரவல
வென்வேல் அண்ணல் காணா ஊங்கே
நின்னினும் புல்லியேம் மன்னே"[83]

எனப் பரணர் பாணனின் வறிய நிலையினை விளம்புவதிலிருந்தும் மோசிகீரனார், கொண்கானங்கிழானிடம் பாணன் ஒருவனை ஆற்றுப்படுத்தும்போது,

"வணர்கோட்டுச் சீறியாழ் வாடுபுடைத் தழீஇ
உணர்வோர் யார்என் இடும்பை தீர்க்கஎனக்
கிளக்கும் பாண"[84]

என்றும் பாணனின் நிலையினைக் கூறுவதால் பாணர்களின் வறுமையான வாழ்க்கைச் சூழலைப் புறநானூற்றுப் பாடல்வழி கண்டு கொள்ளமுடிகின்றது.

விறலியர் என்போர் தன் தலைவனுடன் வள்ளல்களை நாடிச் சென்று பரிசுபெறும் பாங்குடையவர்கள். இவ்விறலியரின் வறிய நிலையினை விறலியாற்றுப்படை விரிவாகச் சித்தரிக்கின்றது. ஔவையார், அதியமானிடம் விறலி ஒருத்தியை ஆற்றுப்படுத்தும்போது,

"ஒருதலைப் பதலை தூங்க ஒருதலைத்
தூம்புஅகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்எனச்
சுரன்முதல் இருந்த சில்வளை விறலி"[85]

என விறலியின் வறிய நிலையினைச் சித்தரிக்கின்றார்.

"சேயிழை பெறுகுவை வாள்நுதல் விறலி
------- ------- ------- -------
பாரி வேள்பால் பாடினை செலினே"[86]

என்று விறலியின் தோற்றத்தையும், இயல்பினையும் கபிலர் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்திலே காணும்போது, புலவர் காப்பியாற்றுக் காப்பியனார், களங்காய்க் கண்ணிநார்முடிச் சேரலிடம் விறலி ஒருத்தியை ஆற்றுப்படுத்திப் பாடியுள்ளார்(40). பரணர் செங்குட்டுவனிடம் விறலியை ஆற்றுப்படுத்திக் கூறியுள்ளார் (49). ஆடுகோட்பாட்டுச் சேரலாதனிடம் விறலியை ஆற்றுப்படுத்துவதாகக் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார் பாடியுள்ளார் (57, 60). அரிசிற்கிழார் பெருஞ்சேரல் இரும்பொறையிடம் விறலியை ஆற்றுப்படுத்தியும் (78), பெருங்குன்றூர் கிழார் இளஞ்சேரல் இரும்பொறையிடம் விறலி ஒருத்தியை ஆற்றுப்படுத்தியும் (87) பாடியுள்ளனர். இவற்றை நோக்க விறலியர்களின் அழகுடன் அவர்களது வறுமையான வாழ்வியல் நிலைகளும் நன்கு புலனாகின்றது.

எட்டுத்தொகையில் பாணரையும், விறலியரையும் ஆற்றுப்படுத்துவதாகவே பாடல்கள் இடம்பெறுகின்றன. பொருநரையும், கூத்தரையும் ஆற்றுப்படுத்தும் விதமாக பாடல்கள் இடம்பெறாமை குறிப்பிடத்தக்கது.

## பத்துப்பாட்டில் ஆற்றுப்படைச் சித்தரிப்புகள்

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை என ஐந்து ஆற்றுப்படை நூல்கள் இடம்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படையைப் 'புலவராற்றுப்படை' எனவும் வழங்கப்பெறுதல் குறிப்பிடத்தக்கது. இந்நூல் முருகன் அருள் பெற்ற ஒருவன், அவ்வருளைப் பெற விழையும் புலவன் ஒருவனை அம்முருகனிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

பொருநராற்றுப்படை, கரிகால் வளவனிடம் பரிசில் பெற்று மீண்டு வரும் பொருநன் ஒருவன், வள்ளலை நாடிச் செல்லும் வறிய பொருநனை வழியில் கண்டு, அவனைக் கரிகாலனிடம் ஆற்றுப்படுத்துவதாக முடத்தாமக்கண்ணியார் பாடியுள்ளார்.

பொருநரும், அவரது சுற்றத்தாரும் மிகுந்த பசியோடு திகழ்பவர்கள் என்பதை, வளம்பல பெற்ற பொருநன் ஒருவன்,

> "ஆடுபசி உழுந்தநின் இரும்பேர் ஒக்கலொடு
> நீடுபசி ஒராஅல் வேண்டின், நீடுஇன்று
> எழுமதி"[87]

என்று வறுமையில் உழலும் பொருநனிடம் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

> "------- ------- என் இடும்பை தீர
> எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகி"[88]

என்று குறிப்பிடுவதால் பொருநரின் வறிய நிலையும், பசியால் இளைத்த உடம்பினன் என்பதும் தெரிகின்றது. மேலும்,

"ஈரும் பேனும் இருந்துஇறை கூடி
வேரொடு நனைந்து வேற்றுஇழை நுழைந்த
துன்னற் சிதாஅர்"[89]

என்பதால் ஈரும் பேனும் உள்ள கந்தல் ஆடையினை உடுத்தியிருந்தமை புலனாகின்றது. இவ்வாறான தரவுகளின்வழி பொருநரின் வறுமை நிலையினை உணரலாகின்றது.

ஓய்மானாட்டு நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீண்ட சிறுபாணன் ஒருவன், வறுமை நிலையில் உள்ள மற்றொரு சிறுபாணனை அவ்வள்ளல்பால் செல்ல வேண்டி ஆற்றுப்படுத்துவதாக, இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனாரால் பாடப்பெற்றது சிறுபாணாற்றுப்படையாகும். அக்காலச் சமூகத்தில் சிறுபாணர்களிடையே நிலவிய வறுமை வாழ்க்கையை வெளிக்கொணர்வதாக இந்நூல் அமைந்துள்ளது. சான்றாக,

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை
கறவாப் பால்முலை கவர்தல் நோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூழி பூத்த புழல்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்"[90]

என்பதால், கண்திறவாத தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்க இயலாத நாய் அடுக்களையில் படுத்திருப்பதும், வீட்டில் மேற்கூரையின் கழிகள் சரிந்து சுவரில் கிடப்பதும், அவற்றைக் கரையான் அரித்துள்ளதும், கரையான்புற்றின் மண்ணில் காளான்கள் பூத்திருப்பதும் என வீட்டின் வறுமை நிலையினையும், சமைப்பதற்கு அரிசி இல்லாததால் குப்பையில் முளைத்திருந்த வேளைக்கீரையை உப்பில்லாமல் வேகவைத்து, மற்றவர் பார்த்தால் புறங்கூறி நகைப்பார்களே என முன்வாயில்

கதவை அடைத்துத் தம் சுற்றத்தாருடன் உண்ணும் கிணைமகளையும் படம் பிடித்துக் காட்டுதலை அறியமுடிகின்றது.

பெரும்பாணாற்றுப்படை, வறுமையால் வாடிப் பிறகு தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெற்ற பெரும்பாணன் ஒருவன், வறிய நிலையில் இருக்கும் பெரும்பாணனை அவ்வள்ளலிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

> "வெந்தெறற் கனலியொடு மதிவலம் திரிதரும்
> தண்கடல் வரைப்பில், தாங்குநர்ப் பெறாது
> பொழிமழை துறந்த புகைவேய் குன்றத்துப்
> பழுமரம் தேரும் பறவை போலக்
> கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
> புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!"[91]

எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுவதால் பெரும்பாணர்கள் வறுமை நிலையினை உணரலாகின்றது. மேலும், "பழும்பசி கூர்ந்த எம் இரும்பேர் ஒக்கலொடு"(அடி; 25) என்பதால் வறுமையால் நீண்ட நாள் உண்ணாமல் பசியோடு இருந்தமை புலனாகின்றது.

கூத்தராற்றுப்படை என்ற மலைபடுகடாம், நன்னன் சேய் நன்னனிடம் பரிசில் பெற்ற கூத்தன், வறிய கூத்தனை வழியிற் கண்டு அவனை அவ்வள்ளல்பால் செல்க என ஆற்றுப்படுத்துவதாகப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பாடியது. வள்ளல்களை நாடிச் செல்லும் கூத்தர்களின் வழி இயல்பினையும் துயரினையும்,

> "துறைபல முற்றிய பைதீர் பாணரொடு
> உயர்ந்துஓங்கு பெருமலை ஊறுஇன்று ஏறலின்
> மதந்தபு ஞமலி நாவின் அன்ன
> துளங்கியல் மெலிந்த கல்பொரு சீறடிக்
> ------ ------ ------ ------
> புலம்புவிட்டு இருந்த புனிறுஇல் காட்சிக்
> கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ!"[92]

என மலைபடுகடாம் சித்தரிப்பதால், இடர்மிகுந்த இந்நிலவழியே செல்லும் கூத்தர் தலைவன் தன் வறிய நிலை தீரும் என்பதை உணர்ந்தே செல்கின்றான் என்பது உணரகிடக்கின்றது.

சங்கப்புற இலக்கியங்களில் காணப்பெறும் இத்தகைய சான்றுகள் வழி, ஆற்றுப்படைக் கலைஞர்கள் வறுமையில் உழல்பவர்களாகவே சித்தரிக்கப் பெற்றுள்ளமை புலனாகின்றது.

## அரசர் – ஆற்றுப்படைக் கலைஞர்கள்

ஆட்சியாளர்கள் கலைஞர்களை மிகுந்த அன்போடு வரவேற்று உபசரித்துள்ளனர். வறுமையால் வாடிய கலைஞர்களைக் கண்டவுடனே ஆட்சியாளர்கள் அவர்களை நயந்து, உவந்து, இனிது நோக்கி அன்புடன் உபசரித்தனர் என்பது,

> "ஈற்றா விருப்பின் போற்றுபு நோக்கி"[93]

என்றும்,

> "—— —— —— ஒன்றிய
> கேளிர் போலக் கேள்கொளல் வேண்டி,
> வேளாண் வாயில் வேட்பக் கூறிக்
> கண்ணில் காண நண்ணுவழி இரீஇ
> பருகு அன்ன அருகா நோக்கமோடு
> உருகு பவைபோல் என்பு, குளிர்கொளீஇ"[94]

என்றும் கூறும் முடத்தாமக்கண்ணியார் கூற்றால் உணரலாகின்றது. மேலும்,

> "நயந்தனிர் சென்ற நும்மினும் தான்பெரிது
> உவந்த உள்ளமோடு அமர்ந்தினிது நோக்கி"[95]

எனப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் நன்னன்சேய் நன்னனின் விருந்தோம்பல் பண்பைப் பாடுவதாலும் அறியமுடிகின்றது.

ஆட்சியாளர்கள் கலைஞர்களைத் தாமே எதிர்கொண்டு வரவேற்றுத் தமது மேற்பார்வையில் மிகுந்த அன்புடன் உண்ணச் செய்துள்ளனர். கரிகாலன் ஆற்றுப்படைக் கலைஞர்களை உபசரித்தமையை,

"------ ------ ------ பதன் அறிந்து
துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்
பராஅரை வேவை பருகுஎனத் தண்டி
காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி
------ ------ ------ ------
ஒண்நுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம்"[96]

எனவும், பல நாள்கள் இவ்வாறான அசைவ உணவு உண்டதால் பற்கள் எல்லாம் கொல்லையை உழுத கலப்பைக் கொழுவைப் போன்று மழுங்கிவிட்டன என்பதை, "கொல்லை உழுகொழு ஏய்ப்ப பல்லே" (அடி; 117) எனவும் பொருநராற்றுப்படை விளம்புவதால் உணரமுடிகின்றது.

ஒய்மாநாட்டு நல்லியக்கோடன் பரிசிலரை உண்பிக்கும் சிறப்பினை,

"விளங்குபொன் கலத்தில் விரும்புவன பேணி
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி"[97]

எனச் சிறுபாணாற்றுப்படை பாடியுள்ளதால் நல்லியக்கோடனே அருகிலிருந்து கலைஞர்களை உபசரித்தமை தெரியவருகின்றது. தொண்டைமான் இளந்திரையனைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்,

"மகமுறை மகமுறை நோக்கி, முகன் அமர்ந்து
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி"[98]

என்பதால், பாணர்களைத் தாமே எதிர்நின்று வரவேற்று உபசரித்த இளந்திரையனின் விருந்தோம்பல் பண்பு புலனாகின்றது.

ஆட்சியாளர்கள் தங்களை நாடிவந்த கலைஞர்களுக்கு, அவர்கள் வறுமைக்கு அடையாளமாகத் திகழும் கந்தல் ஆடையினை நீக்கி, நல்ல அழகான பட்டுடையினை அளித்துள்ளனர். இதனை,

"ஈரும் பேனும் இருந்துஇறை கூடி
வேரொடு நனைந்து, வேற்றுஇழை நுழைந்த
துன்னற் சிதாஅர் துவர நீக்கி
நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து
அரவுஉரி அன்ன, அறுவை நல்கி"[99]

என்றும்,

"பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கி"[100]

என்றும்,

"நீசில மொழியா அளவை மாசுஇல்
காம்புசொலித் தன்ன அறுவை உடீஇ"[101]

என்றும்,

"—— —— —— நின்அரைப்
பாசிஅன்ன சிதர்வை நீக்கி
ஆவிஅன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ"[102]

என்றும்,

"இழைமருங்கு அறியா நுழைநூல் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ"[103]

என்றும், ஆற்றுப்படை இலக்கியங்கள் கூறியுள்ளதன் வழி கண்டு கொள்ள முடிகின்றது.

ஆட்சியாளர்கள் தம்மை நாடிய கலைஞர்களை வரவேற்று உபசரித்து

அவர்கள் மனங்குளிரச் செய்துள்ளனர். பின்னர் அவர்கள் நிகழ்த்திய கலைகளைக் கண்டு மகிழ்ந்துள்ளனர். அதோடு நில்லாமல் கலைஞர்கள் வியக்கும்படி அவர்களது வறுமைதீர பல பரிசுப் பொருள்களை நல்கியுள்ளமையும் தெரிகின்றது. இதனை,

"துடிஅடி அன்ன தூங்குநடைக் குழவியொடு,
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க! எனத்
தன் அறி அளவையின் தரத்தர யானும்
என் அறி அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
இன்மைதீர வந்தனென்"[104]

என்ற பொருநனின் கூற்றாலும்,

"கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்
வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
அன்றே விடுக்கும் அவன் பரிசில்"[105]

என்ற சிறுபாணனது கூற்றாலும்,

"மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்
ஆடுவண்டு இமிரா அழல்அவிர் தாமரை
நீடுஇரும் பித்தை பொலியச் சூட்டி
------ ------ ------ ------
அன்றே விடுக்கும் அவன் பரிசில்"[106]

என்ற பெரும்பாணனின் கூற்றாலும் அறியமுடிகின்றது.

பரிசில் பெற்ற கலைஞர்கள் உடன் நீங்க விரும்பினால் ஆட்சியாளர்களால் பொறுக்க இயலாது என்பதனை,

"செலவுகடைக் கூட்டுதிர் ஆயின் பலபுலந்து
நில்லா உலகத்து நிலைமை தூக்கி
செல்கஎன விடுக்குவன் அல்லன்"[107]

என்ற பாடலடியால் உணரமுடிகின்றது.

புரவலர்களுக்கும் கலைஞர்களுக்குமிடையே உள்ள நட்பு மேன்மேலும் வளருமே தவிர குறையாது என்பதை,

"தலைநாள் அன்ன புகலொடு வழிசிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர்"[108]

என்பதாலும்,

"பழுமரம் உள்ளிய பறவையின் யானும், அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்"[109]

என்பதாலும்,

"வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த"[110]

என்பதாலும் அறியலாகின்றது. இவற்றால், கலைஞர்களுக்காகக் கோட்டை வாயில் தடையின்றி திறந்திருப்பதும், பரிசில்பெற்ற கலைஞர்கள் ஆட்சியாளர்களை வாழ்த்துதலும் தெரிகின்றது. இதனால் இருவரது நட்பு தொடருமே தவிர குறையாது என்பது புலனாகின்றது.

"கலைஞரின் மானத்தை மதித்துப் போற்றும் பண்பாடு வள்ளல்களிடம் அமைந்திருந்தது. ஆற்றுப்படைகளைப் படிக்கும் போது கலைஞரின் மானவுணர்வு மிகுதியா அல்லது அவர்களின் மானத்தைக் காப்பதில் வள்ளல்களுக்கு இருந்த கடமை உணர்வு மிகுதியா என்பது தெரியவில்லை"[111] என்பார் மு. வரதராசனார்.

அந்த அளவிற்கு ஆட்சியாளர்கள் கலைஞர்களின் உறவுநிலை பின்னிப்பிணைந்திருந்துள்ளது.

ஒரு நாட்டின் மனித வளத்துக்கு மொழிவளமும், கலைவளமும் வேண்டப்படுகின்றன. இம்மொழி வளமும், கலை வளமும் கலைஞர்களின் வாழ்வுச் செழுமையில்தான் இருக்கின்றது. கலைஞர்கள் வாழ்ந்தால் கலைகள் வாழும், இனம் வாழும் என்றே சங்க கால ஆட்சியாளர்கள், மனித விழுமியத்தின் உரைக்கற்களாகக் கலைஞர்களை மதித்துப் போற்றி அவர்கள் வாழ்வில் தமது வாழ்வை இணைத்து அடையாளப்படுத்தியிருப்பதைச் சங்க இலக்கியத்தின் ஆற்றுப்படைப் பாடல்கள் வெளிக்காட்டியுள்ளன எனலாம்.

## மக்களின் வாழ்வியல் நிலைகள்

சங்க காலத் தமிழகத்தில் நில அமைப்பிற்கேற்ப மக்கள் காடு, மலை, வயல், கடற்கரை என இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தமை புலனாகின்றது. ஐவகை நிலங்களிலும் சிற்றூர்களிலும் பேரூர்களிலும் வாழ்ந்த மக்களின் இல்லங்களின் அமைப்பு எவ்வாறு அமைந்திருந்தன என்பதை சங்க இலக்கியங்கள் கொண்டு ஒருவாறு அறியமுடிகின்றது.

## பொது மக்கள் இல்லங்களின் அமைப்புகள்

ஏழை எளிய வகுப்பினரின் வீடுகள் எளிமையாக அமைக்கப்பட்டிருந்தன. சுவர்கள் களிமண்ணால் வைக்கப்பட்டும், மேற்கூரைகள் தென்னை, பனை ஓலைக் கொண்டு வேய்ந்தும் இருந்தமை தெரிகின்றது. சில வீட்டின் கூரைகள் கம்பு, தினை, சோளம் போன்றவற்றின் தட்டைகளைக் கொண்டும் புல்லினைக் கொண்டும் வேய்ந்திருந்தமை அறியவருகின்றது.

குறிஞ்சி நிலமக்கள் கழிகளை நட்டுப் புல்லால் வேய்ந்த குடில்களில் வாழ்ந்ததை, "கழிமிடைந்து இயற்றிய புல்வேய் குரம்பை" (மலை, அடி; 438, 439) என்பதினாலும், தினைத்தாளால் வேய்ந்த கட்டையான கால்களையுடைய குடிலில்

வசித்ததை, "இருவி வேய்ந்த குறுங்கால் குரம்பை" (குறிஞ்சி,அடி; 153) என்பதினாலும் அறியமுடிகின்றது.

ஆயர்கள் வாழ்ந்த குடில்கள் வரகு தட்டையால் வேயப்பட்டிருந்தன. அக்குடிலின் கால்களில் ஆட்டுக் குட்டிகள் தின்பதற்காகத் தழைகள் கட்டப்பட்டிருந்தன. குடில்களின் கதவுகள் கழிகளால் கட்டப்பட்டும், வாயில்கள் சிறியனவாகவும் இருந்தன என்பதை,

"——— ——— ——— மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயில் செறிகழிக் கதவின்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்"[112]

எனப் பெரும்பாணாற்றுப்படை சித்தரிப்பதால் உணரமுடிகின்றது.

மருதநிலங்களில் வாழ்ந்த உழவர்கள், வயல்வரப்பில் தங்கி பயிர்களைக் காவல் காப்பதற்காகப் புதிய வைக்கோலால் வேய்ந்த குடிலை அமைத்திருந்தனர் என்பதை, "வரம்பில் புதுவை வேய்ந்த கவிகுடில்" (பெரும்,அடி; 224 – 5) எனவும், தோப்புகளுக்கிடையே தென்னை ஓலையால் அமைத்திருந்த குடிலைக்,

"——— ——— ——— கறை அடிக்
குன்றுஉறழ் யானை மருங்குல் ஏய்க்கும்
வண்தோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சள் முன்றில், மணம்நாறு படப்பைத்
தண்டலை உழவர் தனிமனை"[113]

எனவும் பெரும்பாணாற்றுப்படை விளக்குகின்றது.

நெய்தல் நிலமக்கள், வஞ்சி மரக்கிளைகளையும், வெண்காஞ்சி மரக் கிளைகளையும் சேர்த்துத் தாழை நாரால் கட்டப்பட்ட ஒழுங்கான குடிசைகளில் தருப்பைப் புல்லினை வேய்ந்திருந்தனர். அக்குடிலில் சுரை முதலிய கொடிகள் தவழ்ந்திருந்ததை,

"வேழம்நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றில்,
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித்து இயற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்தர்"[114]

எனக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் வருணிப்பதால் உணரமுடிகின்றது.

எயினரின் குடில்கள், வேலின் முனையை ஒத்த கூர்மையான முனையினை உடைய ஈந்தின் இலையால் வேயப்பட்டிருந்தன. அதனால் இக்கூரை முள்ளம் பன்றியின் முதுகு போன்று இருந்துள்ளமை தெரிகின்றது. இவற்றால் இக்கூரையின் மேல் அணில்களும் எலிகளும் செல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை,

"நீள் அரை இலவத்து அலங்குசினை பயந்த
பூளைஅம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணிலொடு கருப்பை ஆடாது
யாற்று அறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேல்தலை அன்ன வைந்நுதி நெடுந்தகர்
ஈத்துஇலை வேய்ந்த எய்ப்புறக் குரம்பை"[115]

எனப் பெரும்பாணற்றுப்படை நவில்வதால் அறியலாகின்றது.

## மேல்தட்டு மக்களின் இல்லங்கள்

நகரங்களில் வசித்த மேற்குடி வகுப்பினரின் வீடுகள் பெரும்பாலும் செங்கல்லால் கட்டப்பட்டு ஓடு வேயப்பட்டிருந்தன. சுவர்களில் சுண்ணாம்பு பூசப்பட்டிருந்தமை தெரிகின்றது. அனைத்து வசதிகளுடன் கூடிய வளமான மனைகளாக இருந்துள்ளன.

சங்க காலத்தில் தொண்டை நாட்டின் துறைமுகப்பட்டினம் நீர்ப்பெயற்று என்னும் பேரூரின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. இது வணிகத் தலமாய் விளங்கியதால், செல்வச் செழுமையோடிருந்தமை தெரிகின்றது. இவ்வீதிகளில் அமைந்த வீடுகள் தேவர் உலகத்தைத் தீண்டும் அளவிற்கு உயர்ந்த மாடங்கள்

கொண்டிருந்துள்ளன. இம்மாடங்களில், மலைச் சாரலில் மகிழ்ந்து நடக்கும் மயில் போன்று பெண்கள் நடந்துள்ளனர். அவர்கள் பந்து விளையாடியும், களைக்கும் போது கழங்காடி மகிழ்ந்ததையும்,

"மால்வரைச் சிலம்பில் மகிழ்சிறந்து ஆலும்
பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம்பு ஒலிப்ப உயர்நிலை
வான்தோய் மாடத்து, வரிப்பந்து அசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்"[116]

எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பாண்டியரின் தலைநகரான மதுரையில் இருந்த சில இல்லங்கள் பல அடுக்குகளைக் கொண்டு வானளாவி உயர்ந்து நின்றுள்ளன. இவ்வில்லங்களில் தென்றற்காற்று வீச பல சாளரங்கள் அமைக்கப்பட்டிருந்ததை,

"வகைபெற எழுந்து வானம் மூழ்கி
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்லில்"[117]

என்ற மதுரைக்காஞ்சியின் அடிகளால் உணரமுடிகின்றது. மற்றும் உயர்ந்த மாடங்களின் நிலா முற்றத்தில் வீற்றிருந்த பெண்கள் அங்கிருந்தே திருவிழாக் காட்சியினைக் கண்டுகளித்ததை,

"நிரைநிலை மாடத்து அரமியம் தோறும்
மழைமாய் மதியின் தோன்றுபு மறைய"[118]

என்ற பாட்டடிகள் உணர்த்துகின்றன. இம்மாடங்களுக்குச் செல்ல ஏணிகள் அமைக்கப்பட்டிருந்தை, "குறுந்தொடை நெடும் படிக்கால்" (பட்டின, அடி; 142) என்பதினால் அறியக்கிடக்கின்றது.

"வான்உற நிவந்த மேல்நிலை மருங்கின்
வேனிற் பள்ளி தென்வளி தரூஉம்"[119]

என்பதால் மேல்தட்டு மக்களின் இல்லங்கள் வேனிற் காலத்திற்கு என்றும் மழைக்காலத்திற்கென்றும் வெவ்வேறு தனிப் படுக்கை அறைகள் கொண்டு விளங்கியமை புலனாகின்றது.

## இல்வாழ்க்கை

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" என்பது குறள் (எண். 45)

திருமணம் முற்றுப்பெற்ற ஆணும் பெண்ணும் இல்லற வாழ்க்கை இனிதே நடத்தியுள்ளனர். மனைவி சமூகத்தின் அச்சாணியாகத் திகழ்ந்ததை, "மனைக்கு விளக்காகிய வாணுதல்" எனப் புறநானூறு (314 : 1) குறிப்பிடுகின்றது. இத்தகைய இல்லாளைப் பெற்ற தமிழன் மகிழ்ந்து மனையறம் மேற்கொண்டமை தெரிகின்றது.

## அரசர்தம் இல்வாழ்க்கை

அரசர்கள் பல பெண்களை மணம் செய்தமை புலனாகின்றது. கரிகாலன் இறந்தபோது அவன் பெண்டிர் இழை களைந்தனர் எனப் புறநானூறு (224) கூறுவதாலும், "ஆய்தொடி மகளிர் நறுந்தோள் புணர்ந்து" (மதுரை, அடி; 712) எனப் பாண்டிய நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் கூறுவதாலும் இவர்கள் பல பெண்களை மணம் புரிந்து வாழ்ந்தமை தெரிகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து, நீராடி இறைவழிபாடு செய்ததையும், மனைவியர் உடனிருந்து உதவ ஆடையணிகளன்கள் அணிந்து நாளோலக்கம் சென்றதையும் மதுரைக்காஞ்சி (அடி; 702 – 724) விளம்புவதால் பாண்டியனுக்குத் துணை நின்ற அவன்தன் மனைவியரின் இல்லற மாண்பு அறிய வருகின்றது.

மன்னன் போர் முதலியவற்றிற்காகத் தன்னைப் பிரிந்து சென்ற போது அரசமாதேவி அவன் பிரிவால் உண்டான துயரை அடக்கிக் கொண்டு அரண்மனையுள் இருந்தல் 'முல்லை ஒழுக்கம்' எனப்பட்டது.

பாண்டிய நெடுஞ்செழியனின் மனைவி, கணவன் அருகில் இருந்தபோது பூத்தொழில் அமைந்த துகிலை உடுத்தியிருந்தாள். பிரிந்து சென்ற போது ஏற்பட்ட கவலையால் நூலாற் நெய்த புடவை அணிந்து, நகைகள் அணியாமல் தோழியர் ஆறுதல் கூறவும் பெருமூச்சுவிட்டுக் கணவனை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் என நெடுநல்வாடையும்,[120] போருக்குச் சென்ற கணவன் பிரிவால் துன்புற்று வாடிய தலைவி துயில் துறந்தாள், துயர் உழந்தாள், அம்புபட்ட மயில் போல நடுங்கினாள், எழுநிலை மாடத்தில் கணவன் வரவை நோக்கி வாடியிருந்தாள் என முல்லைப் பாட்டும்[121] சித்தரிக்கின்றன.

இத்தகைய அரசமாதேவியார் தம் கணவன் மீது கொண்ட அன்பை மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் உணர்த்தி நிற்கின்றன. இவர்களைப் போல அம்மன்னர்களும் தங்கள் மனைவியரை மிக விரும்பியதாலேதான் போர் முடிந்ததும் அவர்களை நோக்கி விரைந்துள்ளனர்.

கரிகாலன் மார்பின் மீது அவனுடைய பிள்ளைகள் விளையாடி மார்பில் பூசியிருந்த சந்தனத்தைக் களைத்தனவாம். அவன் மனைவியர் தழுவியதாலும் சந்தனம் அழிந்து விட்டனவாம். இதனை,

> "பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்
> முற்றுஇழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
> செஞ்சாந்து சிதைந்த மார்பின்"[122]

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் வருணிந்துள்ளார். இவ்விரு நிகழ்வுகளாலும் கரிகாலனது இல்வாழ்க்கைச் சிறப்பினை உணரமுடிகின்றது.

## அந்தணர் இல்வாழ்க்கை

பெரும்பாணாற்றுப்படை (அடி; 297 – 301) இவர்களின் குடியிருப்பையும் அங்குப் பெறும் உணவு வகைகளையும் சுட்டியுள்ளது. அவற்றால் இவர்களின் இல்வாழ்வை ஓரளவு உணரலாகின்றது. அந்தணர் இல்லங்கள் சாணத்தால் மெழுகி தூய்மையாக இருந்துள்ளன. வளையல் அணிந்த நல்ல தோற்றத்தையுடைய அந்தணப் பெண்கள் கணவர்மார் ஆகுதி செய்வதற்குரிய 'இராசான்னம்' என்பதை தயாரித்துள்ளனர். தமக்கென்று தயாரித்த உணவு பொருள்களைப் பாணர் முதலிய விருந்தினர்களுக்கும் உவப்போடு படைத்துள்ளனர். மேலும்,

> "பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
> சிறுமீன் புரையும் கற்பின்"[123]

என்பதால், 'அருந்ததியன்ன கற்பினள்' எனத் தெரிகின்றது. இவற்றின்வழி அந்தணர்களது இல்லறச் சிறப்பினை எளிதில் காணக்கிடக்கின்றது.

## வணிகர் இல்வாழ்க்கை

உப்பு வணிகர் தம் மனைவி குழந்தைகளுடன் உப்பு வண்டிகளிற்சென்று உப்பு வணிகம் செய்துள்ளனர். வணிகனின் மனைவியே உப்பு வண்டியினை ஓட்டிச் சென்றாள் எனத் தெரிகின்றது. வணிகன் துணை எருதுகளை ஓட்டிச் கொண்டு வண்டிக்குப் பின் சென்றான் எனப் பெரும்பாணாற்றுப்படை (அடி; 58 – 65) நவில்வதால், பயண வாழ்விலும் இவர்கள் இல்லறம் சிறந்திருந்ததை மனைவி வண்டி ஓட்டினாள் என்பதிலிருந்தே அறியலாகின்றது.

## வேளாளர் இல்வாழ்க்கை

காவேரிப்பூம்பட்டினத்து வேளாளர்களின் வாழ்க்கைப் பண்பைக் கூறவந்த கடியலூர் உருத்திரங் கண்ணனார்,

"கொலை கடிந்தும் களவு நீக்கியும்
அமரர்ப் பேணியும் ஆவுதி அருத்தியும்
நல் ஆனொடு பகடு ஓம்பியும்
நான்மறை யோர் புகழ் பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்
புண்ணியம் முட்டாத் தண்நிழல் வாழ்க்கை
கொடு மேழி நசை உழவர்"[124]

எனப் பட்டினப்பாலையில் விளக்கியுள்ளார். இவ்வடிகள் வேளாளரின் இல்வாழ்க்கைச் சிறப்பை நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

## கலைஞர்களின் இல்வாழ்க்கை

பாணன் இசைக் கருவிகளை இசைத்துப் பாடுபவன். அவன் மனைவியானவள் விறலி ஆடல், பாடல்களில் சிறந்தவள். அழகு மிகுந்தவள், தன் கற்பு வழுவாமல் தம்மையும் காத்துத் தம் கணவனையும் பேணிக் காத்துப் புகழைச் சேர்க்க வல்லவள் என்பதை, "முல்லை சான்ற கற்பின் மெல்லியல்" (சிறு, அடி; 30) என்ற அடியால் உணரலாகின்றது.

தன் கணவனுடன் காடும் மலையும் கடந்து சென்று வள்ளல்களிடமும் திருவிழாக்களிலும் தன் கலைத்திறனைக் காட்டிப் பொருள் பெறுவதை,

"அறாஅ யாணர் அகன்தலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாள்"[125]

என்ற பொருநராற்றுப்படை வழி அறியலாகின்றது. இவற்றால் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்த கலைஞர் தம் இல்வாழ்க்கைச் சிறப்பைக் காணமுடிகின்றது.

மேலும், இவர்கள் மிக வறுமையில் வாடித் தம் இனத்தவரால் ஆற்றுப்படுத்தப்பட்டு, வள்ளல்களை நாடித் தம் கலைத் திறனைக் காட்டி மிகுந்த பொன்னும் பொருளும் பெற்று வருவதாகவே ஆற்றுப்படைப் பாடல்கள் சித்தரிக்கின்றன.

## விருந்தோம்பல்

இல்வாழ்க்கை நடத்தும் கணவனும் மனைவியும் தாம் உற்றார் உறவினரைக் காக்கக் கடமைப்பட்டவர்கள். அவருடன் இல்லாது தம் இல்லம் நாடி வரும் பிறரையும் உண்டியாலும் உரையாலும் உபசரித்தல் அவர்தம் கடமை என்று அற நூல்கள் கூறுகின்றன.

> "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
> மெல்இயல் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"[126]

என்று தலைமகளின் குணங்களை அடுக்கிக்கொண்டே செல்கின்றது தொல்காப்பியம். விருந்தினர்களைப் பேணாது விடுத்த குடும்பத்தலைவி ஒழுக்க நெறி இழந்தவளாகக் கருதப்பட்டாள்.

தனிமனித வாழ்வு சமூக வாழ்வாக மாறுவது விருந்து புறந்தந்து வாழும் வாழ்வில்தான் உள்ளது. சங்க இலக்கியங்களின் வழியே திருக்குறள் விருந்தினரைப் பேணும் வாழ்வை உயர்ந்ததாகச் சித்தரிக்கின்றது. 'விருந்து' என்று ஓர் அதிகாரத்தை திருவள்ளுவர் படைத்துள்ளார். வள்ளுவருக்குப் பின் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழும் விருந்தோம்பலை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்திலும், கம்பர் தமது கம்பராமாயணத்திலும் தமிழரின் உயிர்ப் பண்பாய்ச் சித்தரிக்கின்றனர். மனித உறவுகளின் ஆழத்தை அன்புடைமையும் விருந்தோம்பலும் புலப்படுத்துகின்றன.

> "------ ------ ------ பதன் அறிந்து
> துராஅய் துற்றிய துருவைஅம் புழுக்கின்
> பராஅரை வேவை பருகுஎனத் தண்டி
> காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை
> ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி
> அவையவை முனிகுவம் எனினே, சுவைய
> வேறுபல் உருவின் விரகுதந்து இரீஇ"[127]

என்று கரிகாலன் விருந்தோம்பலைப் பொருநராற்றுப்படை விளக்குகின்றது.

ஆற்றுப்படைக் கலைஞர்களை வரவேற்று உண்டியும் உறையுளும் தந்து உபசரித்தலைச் சங்ககாலத் தமிழ் மக்கள் சிறந்த கடமையாகக் கொண்டனர் என்பதை ஆற்றுப்படை நூல்கள் மெய்ப்பிக்கின்றன. ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த எளியவரும், செல்வரும், பேரூர் மக்களும், சிற்றரசரும், பேரரசரும் பாணர் முதலியோரை இன்முகத்துடன் வரவேற்று உண்டியும் உறையுளும் வழங்கியுள்ளனர். மலையைக் காவல்காத்த வீரர்கள், கரும்பு ஆலையில் பணிபுரிந்தவர்கள், நெற்களங்களில் வேலை செய்த உழவர்கள் எனத் தங்கள் வாழ்ந்த பகுதிகளிலும் தொழில்புரிந்த இடங்களிலும் கிடைத்த உணவினைக் கொண்டு விருந்தினரை மனமுவந்து போற்றிய சிறப்பினை ஆற்றுப்படை நூல்கள் வழிக் காணமுடிகின்றது.[128]

## சமயக் கோட்பாடுகளும் வழிபாட்டு முறைகளும்

சங்க இலக்கியங்களிலிருந்து தமிழ் மக்களின் பண்டைய சமய வாழ்க்கையின் இயல்பை நன்கு அறியமுடிகின்றது. தென்னாட்டில் நிலவிய சமய வாழ்க்கை பழங்காலத்தில் ஒரு தனிமையான பண்போடு இருந்ததாகத் தெரிகின்றது. பிற்காலத்தில் ஆரியர் சமயக் கொள்கைகளும் வழிபாட்டு முறைகளும் அவர்தம் சமய வாழ்வில் புகத் தொடங்கியுள்ளன. எனினும் பல காலமாகத் தமிழர் சமயம் தமக்குரிய சிறப்பு இயல்புகளை உடையதாகவே இருந்து வந்துள்ளது எனலாம்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் திருமால், இந்திரன் முதலிய தெய்வங்கள் இடைஇடையே கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதனால் தமிழ்நாட்டில் ஆரியர் சமய வாழ்க்கைப் பண்பே சிறந்து இருந்தது என்று கூறுதல் இயலாது. நில இயற்கைக்கு ஏற்ப அமைந்த முருகன், கொற்றவை போன்ற திராவிடத் தெய்வங்களே மிகவும் சிறப்புடன் வணங்கப்பட்டு வந்தன என்பதையும் அவ்விலக்கியங்களிலிருந்து உணரமுடிகின்றது. மேலும், தமிழர்களுக்கு உரிய வழிபாட்டு முறைகளையும் அந்நூல்களில் காணலாகின்றது.

## வெறியாட்டு

தமிழருடைய வழிபாட்டிலே 'வெறியாட்டு' முக்கிய இடம்பெற்றிருந்தமை தெரிகின்றது. முருக வழிபாடு கூறப்படும் இடங்களிற் எல்லாம் வேலன் வெறியாட்டு வருணிக்கப்பட்டுள்ளது. அக்காலத்திற் பெருவழக்காயிருந்த இவ்வெறியாட்டை,

> "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
> வெறியாட் டயர்ந்த காந்தளும்"[129]

என்கின்றார் தொல்காப்பியர்,

இவ்வழிபாட்டு முறைகளில் பூசாரிகள் கூறப்படவில்லை. வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடியுள்ளனர். குறமகள் கோடும் மணியும் ஒலிக்க யாவரும் அஞ்சத்தக்க முறையில் இசைக்கு ஏற்ப ஆடுதல் பல இடங்ளில் கூறப்பட்டுள்ளது. இவ்வாட்டத்தில் கையில் வேலைக் கொண்டு கூத்தாடுவதினால் வேலனெனப் பெயர் பெற்ற ஒருவன் முருகனை வாழ்த்திக் கூறுவான். துன்பம் யாவற்றிற்கும் முருகனே காவலாக உள்ளவன் என்று கூறி அவனை வழிபட்டு வேண்டி நிற்பான். இம்மரபை மதுரைக் காஞ்சி,

> "அருங்கடி வேலன் முருகொடு வளைஇ
> அரிக்கூ டின்னியங் கறங்கநேர் நிறுத்துக்
> கார்மலர்க் குறிஞ்சி சூடிக் கடம்பின்
> சீர்மிகு நெடுவேள் பேணித் தழூஉப் பிணையூஉ
> மன்றுதொறும் நின்ற குரவை"[130]

என வருணித்துள்ளது. வெறியாட்டுக் களத்தில் சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியை அறுத்து வழிப்பட்டமையை, "சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து" எனத் திருமுருகாற்றுப்படை (அடி; 218) பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வெறியாட்டில் தெய்வம் ஏறியதனால் அசைகின்ற அசைவு, உலாவி அசைந்து ஆடுகின்ற மடப்பத்தினையுடைய விறலியின் ஆட்டத்திற்கும், அரிய மணியையுடைய பாம்பின் ஆட்டத்திற்கும் ஒப்பிடப்பட்டதை,

"இயலினை ளொல்கின ளாடு மடமகள்
வெறியுறு நுடக்கம் போலத் தோன்றிப்
பெருமலை வயின்வயின் விலங்கு மருமணி
அரவழுங்கும்"[131]

எனப் பதிற்றுப்பத்து விளம்பியுள்ளது. தலைமகளின் பொலிவற்ற நிலைக்குக் காரணம் யாது என அறிய வேலன் வெறியாட்டு நிகழ்த்தியதை சங்க இலக்கியத்தின் அகப் பாடல்கள் நிரம்ப இடங்களில் சுட்டியுள்ளதைக் காணமுடிகின்றது.

## நடுகல் வழிபாடு

"நடுகல் என்பது வீரர்களுக்கும் அரசர்களுக்கும் நடப்படுவன. போர்க்களத்தில் அல்லது நாட்டுக்கு நன்மை செய்யும் நேரத்தில் இறப்பு நேரிடுகையில் அவர்களின் நினைவால் நடப்படுபவையே நடுகல். மனிதனுடைய வடிவைக் கல்லில் செதுக்கி அவ்வடிவை வழிபடும் வழக்கம் சங்க காலத்தில் பரவியிருந்தது. மக்களின் பொதுத்தன்மைக்கு மேல் சிறப்புத் தன்மை வாய்ந்த மனிதரைப் பெருமைப்படுத்துவதற்காக அவர் வடிவைக் கல்லில் செதுக்கி வைத்ததோடு நில்லாமல் வழிபாடும் செய்து வந்தனர்"[132] என்கின்றார் அ.கி. நாயுடு.

அக்காலத்தில் போரில் வீரமரணம் அடைந்த வீரனது உடலைப் புதைத்த அல்லது எரித்த இடத்தில் ஒரு கல்லை நட்டுள்ளனர். அக்கல்லில் அவனது உருவத்தையும் பெயரையும் இன்ன போரில் இவ்வாறு போர் புரிந்து மாண்டான் என்ற விரைத்தையும் பொறித்துள்ளனர். அக்கல் நடுகல் எனப்பட்டுள்ளது. நடுகல் அமைத்தல் அக்காலத்தில் பெருவழக்கில் இருந்தமையால் அவற்றை அமைப்பதற்குரிய முறையை,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தலென்று
இரு மூன்று வகையிற் கல்லொடு"[133]

எனத் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

வீரரது பெயரினையும் சிறப்பினையும் பொறித்து வழிதோறும் மயிற்தோகை அணிந்து விளங்கும் நடுகற்களைப்,

"பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்
தினிநட் டனரே கல்லும்"[134]

எனப் புறநானூறு சுட்டியுள்ளது. இறந்த வீரனின் நடுகல்லின் அருகில் அவ்வீரனின் கேடயமும் ஈட்டிகளும் வைக்கப்பட்டிருந்ததை,

"கிடுகு நிரைத்து எஃகு ஊன்றி
நடுகல்லின் அரண்போல"[135]

எனப் பட்டினப் பாலையும், அக்கல்லைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டதைப்,

"------ ------ பெயர்மருங்கு அறிமார்
கல் லெறிந்து எழுதிய நல்லரை மராஅத்த
கடவுள்"[136]

என மலைபடுகடாமும் பாடியுள்ளன.

நடுகற்களுக்கு மலரும், மதுவும், சோறும் படைக்கப்பட்டன என்பதை,

"நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ?"[137]

என்ற புறநானூற்றுப் பாடலடி உணர்த்துகின்றது. போரிலே தோற்றபோது வெற்றி ஆரவாரத்தினைக் கேட்டு வெட்கப்பட்ட வீரர்கள் மறுபடியும் போர் செய்து தம் உயிரைக் கொடுத்துப் புகழைப் பெற்று நடுகல்லாய் நின்றதை,

"நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட,
கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே"[138]

என்ற பாடலடிகள் உணர்த்தி நிற்கின்றன. இதன்வழி போரிலே புறமுதுகிட்டு உயிர் வாழ்வோர் இதனைக் கண்டு நாணமடைவர் என்பது புலனாகின்றது.

"இன்று தாழ்ந்தப்பட்ட சாதியினர் எனக் கருதப்படுவோர் வணங்கும் தெய்வங்களான மதுரைவீரன், இருளன், கறுப்பன், நொண்டி முதலியன நடுகல் வகுப்பைச் சேர்ந்தவையாகக் கருதலாம்"[139] என்பார் சு. வித்தியானந்தன். மேற்கண்ட இலக்கியச் சான்றுகள் மூலம், போரிலே விழுப்புண் பட்டு மாண்ட வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தியமை தெரிகின்றது. நடுகல் வழிபாடு தமிழர்க்கு வீரத்தையும் நாட்டுப்பற்றையும் ஊட்டி வந்தன எனலாம்.

## கற்களில் உறையும் தெய்வங்கள்

சங்க காலத்தில் உருவ வழிபாடு இருந்ததாகத் தெளிவாக அறிய இயலவில்லை. எனினும் மன்றங்களில் மக்கள் வழிபடுவதற்காகக் கற்கள் நிறுவப்பட்டிருந்தமை தெரிகின்றது. இதனை,

"கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலர்அணி மெழுக்கம் ஏறிப் பலர்தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்"[140]

எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. இவற்றால் 'கொண்டி மகளிர்' என்ற பெண்கள் நீர் உண் துறையில் நீராடி, மன்றத்தினை மெழுகி, மாலை நேரத்தில் மலர் தூவி அணையா விளக்கேற்றி வழிபட்டமை புலனாகின்றது.

தெய்வங்கள் தாம் உறைந்த கற்களை விடுத்து நீங்கப்பெற்ற அம்பலத்தை,

"கலிகெழு கடவுள் கந்தம் கைவிடப்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்"[141]

என மருதன் இளநாகனார் சுட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்கப்புற இலக்கியங்கள் சுட்டியவழி, அக்காலத் தமிழர்களுடைய வழிபாட்டு முறைகளாக வெறியாட்டும், நடுகல் வழிபாடும், கற்களில் உறைந்த தெய்வங்களை வழிபட்டமையும் அறியவருகின்றது.

## நம்பிக்கைகள்

### கனவு

பண்டையத் தமிழர்கள் கனவுகளை நம்பியுள்ளனர். கனவு நிகழ்ந்த நேரத்தைப் பொறுத்து அது பலிக்கும் காலத்தையும் கணக்கிட்டுள்ளனர். கண்ட கனவால் நற்பலன் விளையுமா? அல்லது தீயபலன் விளையுமா? என்பதையும் பண்டைய தமிழர்கள் உணர்ந்திருந்தனர். இதனை,

> "திசைஇரு நான்கும் உற்கம் உற்கவும்
> பெருமரத்து இலையில் நெடுங்கோடு வற்றல் பற்றவும்
> வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
> அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்
> எயிறுநிலத்து வீழவும் எண்ணெய் ஆடவும்
> களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்
> வெள்ளி நோன்படை கட்டிலொடு கவிழவும்
> கனவின் அரியன காணா"[142]

என்ற கோவூர்கிழார் கூற்றால் அறியமுடிகின்றது.

அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை முற்றத்தினை, ஆர்வலர் சேர இயலுமேயன்றி, அவனைப் பகைத்த காவலரோ கனவிலும் அடைதல் அரிது என ஔவையார் கனவு பற்றிக் குறிப்பிட்டுள்ளதை,

> "ஆர்வலர் குறுகி னல்லது காவலர்
> கனவினும் குறுகாக் கடியுடை வியனகர்"[143]

என்ற புறப்பாடலடியால் அறியலாகின்றது. இவற்றால் நிகழாதவையும் கனவில் நிகழலாம் என்னும் செய்தி இங்கு அறியப்படுகின்றது. மன்னரின் வாய்மையையும், தூய்மையையும், வீரச் செறிவையும் கூறும் பதிற்றுப்பத்து,

"பொய்ப்ப றியலனே கனவினும்"[144] – எனவும்,

"------ ------ ------ கனவினும்

களைகென அறியாக் கசடின் நெஞ்சம்"[145]

எனவும் கனவு பற்றி பல இடங்களில் கோடிட்டுக் காட்டியுள்ளது. மேலும் பொருநராற்றுப்படையும்,

"கண்டோர் மருளும் வண்டுசூழ் நிலையும்

கனவென மருண்டவென் நெஞ்சு ஏமாப்ப"[146]

எனக் குறிப்பிடுவதால், இக்கனவு வியப்பிற்குரியனவாக அமைந்துள்ளதைக் காணலாகின்றது.

பண்டைத் தமிழர்கள் கனவின் வாயிலாக முன் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையோ அல்லது பின்னர் நிகழப்போகும் நிகழ்வுகளையோ வைத்துக் கொண்டு பல செயல்களில் நம்பிக்கை கொண்டிருந்தமை புலனாகின்றது. இக்கனவினைப் பற்றி ச.வே. சுப்பிரமணியன் கூறுகையில், "பெரும்பாலானவை பின் வரக்கூடிய நிகழ்வுகளை முன்கூட்டியே உணர்த்தப்படுகின்றன"[147] என்கின்றார்.

"கனவு உடல் உள்ளத்தைச் சார்ந்து எழவல்லது என்னும் கருத்தும் காமவேட்கை வழியிலும் வேறுவகை விருப்பத்து அடிப்படையிலும் கனா முளைக்கும்"[148] என்பார் இரா. குழந்தைவேலு. இவ்வறிஞர்களின் கருத்துப் பழந்தமிழரின் கருத்தையொட்டி அமைந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றது.

## பேய்மகள்

இறந்தவர்களின் புலாலைச் சுடுகாட்டிலும் போர்க்களத்திலும் தின்னும் பேய்மகளிரைச் சங்கப்புற இலக்கியங்கள் பல இடங்களில் சுட்டியுள்ளன. இவற்றால், அக்காலத்தில் மனிதரின் புலாலை உண்ணும் ஒரு மக்கட் கூட்டத்தினர் வாழ்ந்திருந்ததை மக்கள் நம்பினர் என்பதை அறிந்துகொள்ள இயலுகின்றது.

போர்க்களத்திற் வீழ்ந்த வீரரது புண்ணைத் தோண்டி அவ்வுதிரம் தோய்ந்த சிவந்த கையால் தமது முடியைக் கோதி, நிறம்மிக்க வடிவையுடைய பேய்மகளிர், மேன்மேலும் கொட்டும் மந்தமான ஓசையை உடைய பறையினது தாளத்திற்கேற்ப ஆடியதை,

"பொருதாண் டொழிந்த மைந்தர் புண்தொட்டுக்
குருதிச் செங்கை கூந்த நீட்டி
நிறங்கிளர் உருவிற் பேஎய்ப் பெண்டிர்
எடுத்தெறி யனந்தற் பறைச்சீர் தூங்க"[149]

எனவும்,

கள்ளி மிகுந்த சுடுகாட்டிலே பகற் காலத்திலும் கூகைகள் கூவவும், பிணஞ்சுடு தீ கொழுந்து விட்டு எரியவும், அகன்ற வாயையுடைய பேய் மகளிர் காண்போர்க்கு அச்சத்தை உண்டாக்கும் நிலையில் இயங்கியதை,

"களரி பரந்து கள்ளி போகிப்
பகலுங் கூவுங் கூகையொடு பேழ்வாய்
ஈம விளக்கிற் பேஎய் மகளிரொ
டஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு முதுகாடு"[150]

எனவும்,

பெரிய தலைகள் வெட்டப்பட்டு, மூளையும் நிணமும் கூழ் போலச் சிந்தியுள்ள போர்க்களத்திற் பேய்மகளிர் பிணக் குவியலைச் சூழ்ந்து மொய்த்து நின்றதை,

"விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்
பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு"[151]

எனவும், போர்க்களத்திலும், இடுகாட்டிலும் இயங்கிய பேய்மகளிரின் நிகழ்வுகளைப் பல இடங்களில் புறநானூறு சித்தரித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

போர்க்களத்திலே, பிதுங்கிய கண்ணையுடைய கோட்டான்கள் குழறும் குரலாகிய தாள இசைக்கு ஏற்பக் கொடிய கண்களையுடைய பேய்மகள் ஆடியதைப் பதிற்றுப்பத்து,

"கழல்கட் கூகை குழறுகுரற் பாணிக்
கருங்கட் பேய்மகள் வழங்கும்"[152]

என வருணித்துள்ளது. சான்றோர் இருந்த பெரிய அம்பலங்களிலே இரட்டையான அடிகளையும் கடிய பார்வையினையும் உடைய பேய்மகளிர் உலாவியதை,

"அவை யிருந்த பெரும் பொதியிற்
கவையடிக் கடுநோக்கத்துப்
பேய்மகளிர் பெயர்பு ஆட"[153]

என மதுரைக்காஞ்சி விளம்பியுள்ளது.

"எரிமறிந் தன்ன நாவி னிலங் கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மகள்
நிணனுண்டு சிரித்த தோற்றம் போல"[154]

எனச் சிறுபாணாற்றுப்படை, மேனோக்கி எரியும் நெருப்புச் சாய்ந்தாலொத்த நாவினையும், வெள்யாட்டு மறிகளை அணிந்த காதினையும், கவைத்த அடியினையும் உடைய பேய்மகள் நிணத்தைத் தின்று சிரித்து விளங்கும் பல்லினை உடையவள் என்று பேய்மகளிரின் தோற்றத்தைச் சித்தரித்துள்ளமை காணத்தக்கது.

## பேய்கள்

பண்டைத் தமிழ் மக்கள் பேய்களுக்குப் பயந்து வாழ்ந்துள்ளமை தெரிகின்றது. பேய்கள் மரங்களிலும் சுடுகாட்டிலும் வாழ்வதாக நம்பியுள்ளனர். இறந்த கணவனின் உடலைப் பேய்கள் தீண்டாதவாறு மனைவி காத்துக் கொள்ளுதல் உண்டு. இது புறப் பொருள் இலக்கணத்தில், "தொடாக் காஞ்சி" என்னும் துறையில் அடங்கும்.

இடுகாட்டில் பிணமிட்டுப் புதைக்கப்பட்ட கவிந்த தாழிகளின் அருகே, சிவந்த செவியினையுடைய கழுகின் சேவலும் பொகுவல் என்னும் பறவையும் அஞ்சாது

என்றும், வாய்வலிய காக்கையுடனும் கோட்டானுடனும் பேயினத்துடனும் கூடித் தாம் விரும்பியவாறு இயங்குமென்றும் புறநானூறு கூறுகின்றது. இதனை,

"கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு"[155]

என்ற பாட்டடிகளால் உணரமுடிகின்றது. தன்னாற் பற்றப்பட்டாரது உயிரைக் கொள்ளாமல் தனக்கு இடப்பட்ட பலியை மட்டும் ஏற்று நீங்கும் பேயைப் பற்றிப் "பலிகொண்டு பெயரும் பாசம் போல" (71 : 23) எனப் பதிற்றுப்பத்து சுட்டியுள்ளது.

"பானாட் கொண்ட கங்கு லிடையது
பேயு மணங்கு முருவு கொண் டாய்கோற்
கூற்றக் கொஃ றேர் கழுதொடு கொட்ப"[156]

என்ற மதுரைக்காஞ்சி அடிகளால், நள்ளிரவில் பேய்களும், வருத்தும் தெய்வங்களும் நகரில் திரிந்தமையை அறியக்கிடக்கின்றது. இத்தகைய இலக்கியச் சான்றுகள் அக்கால மக்களிடம் பேய்கள் பற்றிய நம்பிக்கைகள் இருந்தனவற்றை உறுதிப்படுத்துகின்றன.

## நிமித்தம்

நாம் ஒரு செயலைச் செய்ய முற்படும் போது அச்செயல் தடையின்றி இனிதே நடைபெற நல்ல நாள், நேரம் பார்ப்பது வழக்கம். இவ்வாறு நல்ல நேரத்தைப் பார்ப்பதை "நிமித்தம்" என்கின்றனர். நல்ல நிமித்தம் பார்த்து எச்செயலையும் தொடங்குவது பழந்தமிழரின் வழக்கமாக இருந்திருக்கின்றது. நிமித்தக் குறிகள் சமுதாய நம்பிக்கைகளை வெளிப்படுத்தப் படைக்கப்படுவதோடு பின்னிகழ்வை முன்சுட்டும் உத்தியாகவும் ஆளப்படுவன[157] என்பர்.

பறவைகள் பறக்கும் திசையைக் கொண்டும், பறவைகளின் குரல் ஓசையினைக் கொண்டும் நிமித்தம் பார்த்துள்ளனர். இதனைப் "புள் நிமித்தம்" எனச் சங்க இலக்கியங்கள் பகர்கின்றன. அக்கால மக்கள் புள், நாள், விலங்கு, மரம் போன்றவற்றால் நிமித்தம் கண்டுள்ளனர். பழந்தமிழரது நம்பிக்கைகளில் நிமித்தம் பார்ப்பது மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. நிமித்தம் என்பது "பின்னர் நிகழும் நன்மை தீமைகளை முன்னரே அறிவிக்கும் குறி"[158] என்பார் சுசிலா கோபாலகிருஷ்ணன்.

மலைபடுகடாமில் புலவனைப் புரலவனிடம் ஆற்றுப்படுத்தும் பாணன், "பரிசில் விரும்பினையாயின் இன்றே அவனிடம் செல்வாயாக, பெரும் பரிசிலைப் பெறுவது நோக்கமாயின் இதுவே நல்ல நிமித்தமாகும்" என்கின்றான். இதனை,

"நன்னன்சேய் நன்னன் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறிர் ஆயின் பொழுதுஎதிர்ந்த
புள்ளினர் மன்ற"[159]

என்ற பாட்டடிகள் உணர்த்துகின்றன. மேலும், "நொய்ய மரமாகிய விறகாலாக்கிய நெருப்பிலே பனி விட்டு நீங்கும்படி இனிதாகத் தூங்கி, விடியற்காலத்தில் நல்ல வேளையில் நிமித்தம் பார்த்துப் போவாயாக" என அவன் மீண்டும் கூறுவதை,

"நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசே ணீங்க வினிதுடன் துஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்"[160]

என்ற பாடலடிகளால் உணரமுடிகின்றது.

தாம் பரிசில் பெறக் கருதிச் செல்லும்போது பரிசில் ஈயாது விட்டாலும் புலவர் புரவலரைப் பழித்துப் பேச மாட்டார். தாம் புறப்பட்டு வந்த நேரத்தையும், வழியிடத்தே உண்டான புள் நிமித்தத்தையுமே பழித்துள்ளனர். புறநானூறு இதனை,

"புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்"[161]

எனப் பாடியுள்ளது.

ஒரு நாட்டிற்கு வரும் நன்மையினையும் தீமையினையும் அந்நாட்டிற்குப் புது வரவாய் வரும் புதுப் புள்ளினைக் கொண்டும், பழம்புள் போவதைக் கொண்டும் அறிந்துள்ளனர். இதனை,

"புதுப்புள் வரினும் பழம்புள் போகினும்
விதுப்புற அறியா ஏமக் காப்பினை"[162]

என்று குறுங்கோழியூர் கிழார் பாடியுள்ளதால் அறியலாகின்றது.

போருக்குச் செல்லும் வீரர்கள் புள் நிமித்தம் பார்த்துச் சென்றுள்ளனர். சோழன் நலங்கிள்ளியின் வீரர்கள் பகைவந்த போது புள் நிமித்தம் தீமையாக இருப்பின் சாவோம் யாம் எனக் கருதியதை,

"உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்கு
ஏவான் ஆகலின் சாவேம் யாம்என"[163]

என்ற புறப்பாடலடியால் உணரமுடிகின்றது.

இன்று நிமித்தம் என்ற சொல்லைச் சகுனம் என்று வழங்கி வருகின்றோம். சகுனம் பார்த்து ஒரு செயலைச் செய்யும் பழக்கம் சங்க காலம் முதல் இக்காலம் வரை நம்மிடையே இருந்து வருகின்றது. சமுதாயத்தில் உள்ள மக்கள் சகுனம் பார்ப்பதை நம்பிக்கைக்குரிய காரியமாகக் கருதுகின்றனர். சகுனம் என்ற சொல் சங்கப்புற இலக்கியங்களில் எங்கும் இடம்பெறவில்லை. நிமித்தம் என்ற சொல்லையே சகுனம் எனக் கருதியுள்ளனர். பழந்தமிழர் ஒரு செயலை நல்ல நாள் பார்த்து மேற்கொண்டதை,

"கடுங்கண் கேழல் உழுத பூமி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பரூஉக்குரல் சிறுதினை"[164]

என்னும் புறப்பாடலடியில் காணமுடிகின்றது.

புறப்பொருள் வெண்பாமாலை விரிச்சி என்னும் சொல்லுக்குச் சகுனம் பார்த்தல் என்ற பொருளில் விளக்கம் தந்துள்ளதை,

"ஆடமைத் தோளி விரிச்சியும் சொகினமும்"[165]

என்பதினால் அறியமுடிகின்றது. "ஒருவன் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் நல்ல நாளும் பொழுதும் நன்னிமித்தமும் பார்த்துத் தொடங்குவது தமிழ் மக்களிடம் தொன்று தொட்டு இருந்துவரும் ஒரு வழக்கமாகும்"[166] என்று கி.ர. அனுமந்தன் குறிப்பிடுகின்றார். இவற்றால் சகுனம் என்பதையே நிமித்தமாக அவர்கள் கருதியதை உணரலாகின்றது.

சங்க கால மக்கள் புள் நிமித்தமின்றி மரங்களின் தோற்றத்தினைக் கொண்டும் நிமித்தம் பார்த்தமை தெரிகின்றது. உன்னமரம், வேங்கைமரம் இவற்றைக் கொண்டு பூக்கள் மலர்வதையும் உதிர்வதையும் நிமித்தமாகக் கொண்டுள்ளனர். சேரமன்னன் தோல்வியடையப் போவதை, உன்ன மரம் முன்னமே நிமித்தமாகக் குறிப்பிட்டதை,

"புன்கால் உன்னம் சாய்த்து எண்கண்"[167]

என்ற பாடலடி கூறுகின்றது. உன்ன மரம் நன்கு தழைத்திருந்தால் வேந்தனுக்கு நன்மை விளையும் என்றும், கேடுவிளையுமானால் அம்மரம் கரிந்து காட்டும் என்றும் நம்பியுள்ளனர். இதனைத்தான் கே.கே. பிள்ளையும், "பெரிய மரம் இலை உதிர்ந்து அதன் நெடுங்கோடு தீப்பற்றி எரிவது அந்நாட்டுக்கு வரவிருக்கும் தீமையைக் காட்டுவதாகும்"[168] எனக் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியமோ,

"உடல் வேந்தடுக்கிய உன்னநிலை"[169]

எனக் குறிப்பிட்டுள்ளது. உன்ன மரம் போர் மேற்கொள்வோர் நிமித்தம் பார்ப்பதற்குரிய ஒரு வகை மரமாகக் கருதப்பட்டுள்ளது. செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பொன்னைப் போன்ற நிறத்தை உடைய பூவினையும் சிறிய

இலைகளையும் பொலிவிழந்த அடிமரத்தையும் உடைய உன்ன மரத்திற்குப் பகைவனாகிய அரசன் எனக் கபிலர் பாராட்டியுள்ளார். இதனை,

"பொன்னி அன்ன பூவிற் சிறியிலைப்
புன்கால் உன்னத்துப் பகைவன் என்கோ"[170]

என்பதினால் அறியலாகின்றது.

பண்டைய மக்கள் புள், மரம் நிமித்தமின்றி எரி நட்சத்திரத்தைக் கொண்டும் நிமித்தம் கண்டுள்ளனர். வானத்தில் இருந்து ஒரு எரி நட்சத்திரம் எரிந்து கீழே விழுந்தால் ஏழாவது நாளில் உலகை ஆளும் வேந்தனின் உயிர் பிரியும் எனக் கருதியுள்ளனர். இதனை,

"கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பி னானே
------ ------ ------ ------
அஞ்சின மெழுநாள் வந்தன் றின்றே
------ ------ ------ ------
மேலோ ருலக மெய்தினன்"[171]

எனக் கூடலூர்கிழார் குறிப்பிடுகின்றார். மேலும், நடுப்பகலில் தும்பி பறப்பதும் இரவில் விளக்கு எரியாது நின்று போவதும், கூகையும் தன் குழறு குரலையும் ஒலியாது நிற்றலும் பெருந்தூக்கம் வருவதும் கெட்ட நிமித்தங்களாகக் கருதப்பட்டதை,

"நடுநாள் வந்து தும்பியும் துவைக்கும்
நெடுநகர் வரைப்பின் விளக்கு நில்லா
துஞ்சாக் கண்ணே துயிலும் வேட்கும்"[172]

எனவரும் புறப்பாடலடிகளால் உணரமுடிகின்றது.

## விரிச்சி

நற்சொல் கேட்டல் விரிச்சி எனப்படும். "இச்சொல் விரி என்னும் சொல்லுடன் தொடர்புடையதாக இருக்கலாம். எனவே, வருங்காரியத்தை விரிவாய் முன்னே

தெரிவிப்பது என்று இச்சொல்லிற்குப் பொருள் கொள்ளலாம்"[173] என்பார் சு. வித்தியானந்தன். ஒரு செயலைத் தொடங்கும் முன் அருகில் உள்ளோர் பேசும் பேச்சினைக் கொண்டு நற்பலனை அறிந்து கொள்ளுதல் இயல்பான ஒன்றாகும். இதனைத்தான் "விரிச்சி கேட்டல்" என்பர். விரிச்சி கேட்டலாவது வாய்ச் சொல் கேட்டல் என்றும் அறிகின்றோம்.

"போர் புரிய விரும்பிய வேந்தன் முதலில் பகைவரின் ஆநிரைகளைக் கவரச் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும் போது வெற்றி கிட்டுமா என்பதனைக் கண்டறிய மக்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்களை அறியாமலேயே வந்த வாய்ச்சொற்களைக் கேட்டறிவான். இதனைப் பாக்கத்து விரிச்சி என்பார் நச்சினார்க்கினியர்."[174] வாய்ச் சொல் கேட்டலை விரிச்சி எனக் கொள்வார் இளம்பூரனார்.

பிரிந்த தலைவனின் வருகையை விரிச்சி பார்த்து நின்றறியும் மரபை முல்லைப்பாட்டு[175] விரிவாக வருணித்துள்ளது. நெல்லும் நீரும் சொரிந்து விரிச்சி கேட்கும் முதுபெண்டிரைப் பற்றிப் புறநானூறு,

> "நெல் நீர் எரிந்து விரிச்சி யோர்க்கும்
> செம்முது பெண்டின் சொல்லும்"[176]

எனச் சுட்டியுள்ளது. இவற்றால் பழந்தமிழ் மக்களிடம் விரிச்சி கேட்கும் வழக்கம் பண்டே நிலவியிருந்தமை அறியவருகின்றது.

## பழக்க வழக்கங்கள்

அக்கால மக்கள் விருந்தினரை உபசரிக்கும் வழக்கம் கொண்டமை தெரிகின்றது. விழாக்காலங்களில் ஏழைகளுக்கு உணவு அளித்துள்ளனர். விருந்தினரை இனிதே வரவேற்று அவர்களை நன்கு உபசரித்து வழி அனுப்பும் போது தாமும் பின்சென்று வழி அனுப்பும் பழக்கம் இருந்தமை, "காலின் ஏழடிப் பின் சென்று" (பொருந, அடி; 166) என்னும் அடியால் விளங்குகின்றது.

பண்டிகை நாட்களிலோ, நோன்பு தினங்களிலோ உணவு அருந்துவதற்கு முன் காக்கைக்குச் சோறிடும் பழக்கம் இன்றும் தமிழ் மக்களிடையே இருந்து வருகின்றது. இவ்வாறு உணவு உண்பதற்கு முன் உண்ணும் உணவிலே சிறிது காகத்திற்கு எடுத்து வைக்கும் வழக்கம் அக்கால மக்களிடையே இருந்தமையை,

"தாழ் தாழைத் தண்தண்டலைக்
கூடுகெழீஇய, குடிவயினான்
செஞ்சோற்ற பலிமாந்திய
கருங்காக்கை"[177]

என்ற பொருநராற்றுப்படை பாடலடி வழி காணமுடிகின்றது. மேலும், அக்கால மக்களிடையே தவம் செய்யும் வழக்கம் இருந்தமையை,

"தவஞ்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயன் எய்திய அளவை மான"[178]

எனப் பொருநராற்றுப்படை நவில்வதும் குறிப்பிடத்தக்கது.

தாம் கூறும் வாக்குறுதியை நம்பாத போது சூள் செய்யும் வழக்கம் இருந்தமையை, "ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி"[179] என்ற பாடலடி உணர்த்துகின்றது. மக்களின் சமயப் பழக்கவழக்கங்களில் நோன்பு முக்கியமானதாகும். உணவு அருந்தாமல் இருத்தல் ஒருவகை நோன்பாகும்.

"------ ------ ------ நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர்"[180]

என்ற திருமுருகாற்றுப்படை பாடலடியால் அக்கால மக்களின் நோன்பு இருக்கும் வழக்கம் அறியவருகின்றது.

மது அருந்தும் வழக்கம் அக்கால மக்களிடையே பரவி இருந்திருக்கின்றது. அரசன் முதல் ஆண்டி வரை மது அருந்தியுள்ளனர். பலவகைப்பட்ட மதுவினையும் அது தயாரிக்கும் முறையினையும் சங்க இலக்கியங்கள் நவில்வதால் மதுப்பற்றி அறிய முடிகின்றது. முக்கியமாக ஆற்றுப்படைக் கலைஞர்களைப் புரவலர்கள் உபசரிக்கும் போது மது தந்து அவர்களை மகிழ்வித்துள்ளனர். போர் வீரர்கள் மது

அருந்தியதையும் காணமுடிகின்றது. திருவள்ளுவர், கள்ளுண்ணாமை பற்றி கூறும் அளவிற்கு அக்கால மக்களிடையே மது அருந்தும் பழக்கம் இருந்தமை அறியவருகின்றது.

பொழுதை அறிவதற்கு அவர்கள் பல வழிகளைக் கையாண்டுள்ளனர். சூரியன் இருக்கும் திசை, மலர்கள் மலரும் நேரம், தவறாது கூவும் சேவல் போன்ற பிற பறவைகளின் குரலோசை என இவற்றைக் கொண்டு நாழிகையைக் கணக்கிடும் பழக்கம் இருந்துள்ளது.

"நள்இருள் விடியல் புள்ளெழுப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி"[181]

என்னும் பெரும்பாணாற்றுப்படை பாடலடியால் முல்லை நிலப் பெண்கள், பறவையின் குரலோசைக் கேட்டு எழுந்து தயிர் கடையும் பணியினை மேற்கொண்டமை தெரிகின்றது.

நீண்ட வழிச் செல்வோர் எதிரே விரித்த தலைமயிருடன் ஒருத்தி முற்பட வந்தால் அதனைத் தீய நிமித்தமாகக் கருதி இறைவனை வணங்கிச் செல்லும் வழக்கம் அக்காலத்தே இருந்தமை தெரிகின்றது. இதனை,

"------- ------- தலைஇ மனையோள்
உளருங் கூந்த னோக்கிக் களர
கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி"[182]

எனவரும் வடமோதங்கிழார் பாடலடியால் உணரமுடிகின்றது. இன்றும் நீண்ட பயணம் மேற்கொள்ளும் போது எதிரே விதவை, விறகு சுமந்து வருவோர் என இவர்களைக் கண்டால் தீயச் சகுனமாகக் கருதி வீட்டில் சிறிது நேரம் தங்கி, நீர் அருந்தி, இறைவனை வணங்கிச் செல்லும் வழக்கம் இருந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

மனைவியின் பூப்பிற்குப் பின் பதினைந்து நாட்கள் கணவன் அவளை விட்டு நீங்காது இருந்தமை தெரிகின்றது. அம்மூன்று நாட்களும் சுவப்பிடு தூரத்திற்கும் அவளை அணுகாது இருந்த பழக்கமும்,[183] அவர்கள் வீட்டுப் பாத்திரங்களைத் தொடாது இருந்த வழக்கமும்,[184] அக்கால மக்களிடையே பண்டே இருந்தமை அறியவருகின்றது.

முதிர்ந்த வயதாகியும் தனது முடி நரையாது இருந்ததற்குக் காரணம் சிறந்த குணமும் செயலும் உடைய என் மனைவியும், என் சொல்லுக்கு மாறு கூறாமல் இருக்கும் பிள்ளைகளுமே என்று உரைக்கின்றார் பிசிராந்தையார்.[185] இவற்றால் கணவனைத் தெய்வதாக மதித்து வாழ்ந்த மனைவியைப் பற்றி அறியமுடிகின்றது. இப்பழக்கத்தாலேயே வள்ளுவரும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்.55)

என்கின்றார். "மனைவியர்க்கு மட்டும் அவர்கள் கணவரைத் தவிர வழிபடு கடவுள் பிறர் இலர்"[186] என்பார் ந. சுப்ரமண்யன். இத்தரவுகளின் வழி கணவனைத் தெய்வமாக வணங்கும் பழக்கம் அக்காலப் பெண்களிடையே இருந்தமை புலனாகின்றது.

## திருவிழாக்கள்

விழாக்கள் மாதத்திற்கு ஒருமுறையோ, வருடத்திற்கு ஒருமுறையோ, சில குறிப்பிட்ட நட்சத்திரங்களிலோ, பண்டிகை அல்லது பருவ காலங்களிலோ நடைபெற்றுள்ளன. அவ்வாறு நடைபெறும் காலத்தில் பல இடத்து மக்கள் ஒன்று கூடுவர். இதனால் கலாச்சாரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. பல சமயவாதிகள் கூடுதலால் சமயக் கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்பார் சுவாமிநாதன்.[187]

திருவிழாவின் தொடக்கம் பறையறைந்து மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை,

"மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை அறைவனர் நுவல"[188]

எனவரும் மதுரைக்காஞ்சியின் தொடரால் அறியமுடிகின்றது. விழா தொடங்கும் சடங்கு கால்கோள் எனப்படும். கால்கொண்ட ஏழாம் நாள் அந்தியில் கடவுள் உருவம் நீர்ப்படுத்தப்பட்டமை,

"கழுநீர் கொண்ட எழுநாள் அந்தி
ஆடுதுவன்று விழவின் நாடு"[189]

என்கின்றது மதுரைக்காஞ்சி. இவற்றால் கோயில் விழாவில் ஏழாம் நாள் சிறப்பாக கொண்டாடப்பெற்றமை அறியவருகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் முருகனுக்கும் பிற கடவுளருக்கும் கோயில்கள் இருந்துள்ளன. இக்கோயில்களில் விழா நடைபெற்றபோது, நகரமக்கள் வழிபாட்டிலும் திருவிழாவிலும் கலந்து கொண்டுள்ளனர்.[190]

நகரங்களான மதுரையிலும், புகாரிலும், வஞ்சியிலும், காஞ்சியிலும் பல விழாக்கள் கொண்டாடப்பெற்றமையால் இவ்வூர் 'விழவு மலி மூதூர்' எனப் பெயர்பெற்றமை தெரிகின்றது. ஒய்மான் நல்லியக்கோடனது தலைநகரான 'கிடங்கில்' என்ற நகரம், 'சாறயர் மூதூர்' எனப்பட்டது.[191] இத்தொடருக்கு விழா நடக்கின்ற பழைய ஊர் எனப் பொருள் தருவர் உரையாசிரியர்கள்.

"------ ------ பலர்தொழ
விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்"[192]

எனக் காஞ்சி மாநகரத்தின் சிறப்பினை நவில்கின்றது பெரும்பாணாற்றுப்படை. இவ்வடிக்கு உரை நல்கிய நச்சினார்க்கினியர், 'பல சமயத்தாரும் தொழும்படி எடுத்த விழாக்களால் ஏனைய நகர்களின் மேலான வெற்றியையுடைய பழைய ஊர்' என்கின்றார்.

ஊர்த் திருவிழாவில் மகளிர் பாடி, ஆடி மகிழ்ந்துள்ளனர். முழுவு கண்ணுறக்கமின்றி முழங்கிக் கொண்டிருந்துள்ளது. இதனை,

"குரூஉக்கண் பிணையல் கோதை மகளிர்
முழவுத்துயில் அறியா வியலுள் ஆங்கண்
விழவின் அற்று அவன் வியன்கண் வெற்பே"[193]

என மலைபடுகடாம் பாடியுள்ளது. விழாக்காலங்களில் அயலூராருக்கும், பொருநர், பாணர் முதலியோர்க்கும் பேரூர்களில் உணவு வழங்கப்பட்டதைப் பொருநராற்றுப்படை[194] கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்காணும் இலக்கியத் தரவுகளால் அக்காலத்தில் கோயில்களில் திருவிழாக்கள் நடைபெற்றமை புலனாகின்றது. மேலும், ஆற்றுப்படை வழி கலைஞர்கள் விழாக்களில் தங்கள் கலைத்திறனைக் காட்டிப் பொருள் பெற்றமை அறிதலால் விழாக்கள் கலைகளின் வளர்ச்சிக்கும், பண்பாட்டின் செழிப்பிற்கும் வித்திட்டமையை உணரமுடிகின்றது.

## தொகுப்புரை

ஒரு சமூகத்தின் முக்கிய கூறுகளான அரசு, அது கொண்டிருந்த மக்கள், அரசுக்கும் மக்களுக்கும் இருந்த உறவு நிலைகள் சங்கப்புற இலக்கியம் புலப்படுத்தும் வகையில் இதில் ஆராயப்பெற்றுள்ளன.

முடி ஆட்சி நிலவினாலும் அது குடிகளின் ஆட்சியாகவே விளங்கியதை அரசர் – மக்களிடையே கொண்டிருந்த உறவு நிலைகளைக் கொண்டு வெளிக்காட்டியுள்ளது. ஜனநாயக ஆட்சி மலர்வதற்கு அரசர்கள் தம் அரசியல் சுற்றத்தினருடனும் ஆட்சிக்குழுக்களுடனும் கலந்தே ஆட்சி செய்தமையால் ஆட்சியாளர்கள் குடிமக்களோடு கொண்டிருந்த நல்லுறவு நிலைகளைப் புலப்படுத்தியுள்ளது.

அரசர்க்கும் – அந்தணர்க்கும், அரசர்க்கும் – வணிகர்க்கும், அரசர்க்கும் – வேளாளர்க்கும், அரசர்க்கும் – அரசியல் வினைஞர்களுக்கும் இருந்த அரிய உறவு நிலைகளை இந்த இயல் வெளிப்படுத்தியுள்ளது.

கன்றினைப் பார்க்கும் தாய்ப்பசுவின் பாசப்பார்வையை அரசர்கள் வறுமை நிலையில் இருந்த புலவர்களைப் பார்க்கும் போது கொண்டிருந்ததைச் சங்க இலக்கியம் சுட்டியுள்ளது.

"ஈற்றா விருப்பின் போற்றுபு நோக்கிய"

அந்தப் பார்வையும் உறவும் மனித குலத்துக்கு எப்போதும் வேண்டும் உறவாகும்.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபோது பிசிராந்தையாரும் வருவார், வடக்கிருப்பார்; உயிர் விடுவார் என்று கொண்டிருந்த காணாமலேயே பழகிய பாச உறவைச் சங்க இலக்கியம் வடித்துள்ளது. பாரி – கபிலர் உறவு, அதியன் – ஔவை ஆகியோரின் உறவுகள் இத்தகைய மனித உறவுகளின் சித்திரங்களாகும்.

ஆட்சியாளர்களுக்கு நேரவிருந்த குலப்பழியைக் காத்தமையும் அவர்களுக்காகத் தூது போனமையும், சந்து செய்வித்தமையும் அரசர் – புலவர்களுக்குள் இருந்த பெட்மையும் நட்பையும் காட்டுகின்றன.

ஆட்சியாளர்கள் கலைஞர்களுடன் கொண்டிருந்த உறவை,

"மகமுறை மகமுறை நோக்கி
முகன் அமர்ந்து ஊட்டிய"

காட்சிகள் சங்க இலக்கியத்தில் தீட்டப்பெற்றுள்ளன. கலைஞர்களை மதிக்கின்ற ஒரு நல்ல நாட்டை இதன் மூலம் காணமுடிகின்றது

ஒரு நாட்டின் மொழிவளமும் கலைவளமும் கலைஞர்களின் வாழ்வுச் செழுமையில் இருப்பதை உணர்ந்த ஆட்சியாளர்கள், கலைஞர்களைத் தாமே எதிர்நின்று வரவேற்று விருந்தோம்பிய பண்பினை, ஆற்றுப்படைப் பாடல்கள் கோடிட்டுச் சென்றுள்ளன.

மக்களின் வாழ்வியற் செய்திகளைச் சங்க இலக்கியத்தின் ஆற்றுப்படை நூல்கள் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளன. அரசர்கள் முதல் ஏழைகள் வரை நிலவிய இல்வாழ்க்கைச் செய்திகள் மனையறப் பண்புகள் ஆகியவற்றைப் புனைந்துள்ளன.

மக்களின் வழிபாட்டு முறைகளையும், அவர்களின் நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும், அவர்கள் நடத்திய திருவிழாக்களையும் சங்கப்புற இலக்கியம் சுட்டிய வழி இவ்வியல் எடுத்துக்காட்டி நன்கு ஆராய்ந்துள்ளது.

# இயல் 4

## சான்றெண் விளக்கம்

1. புறம், 5 : 5 – 8
2. ஞா. தேவநேயன், பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், ப. 99
3. புறம், 186 : 1 – 2
4. பெரும், அடி; 443, 444
5. புறம், 35 : 15 – 21
6. மேலது, 94 : 1 – 3
7. தொல், பொருள், மரபியல், 71 : 2
8. டாக்டர். வி.சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 165
9. பதிற், 24 : 6 – 8
10. புறம், 361 : 4
11. பெரும், அடி; 315, 316
12. பதிற், பதி, 7 : 6 – 7
13. புறம், 15 : 15 – 22
14. மேலது, 224: 4 – 9
15. தொல், பொருள், அகத், 28, நச்சி உரை
16. தொல், பொருள், மரபியல், 83
17. புறம், 6 : 19 – 20
18. பதிற், 63 : 1
19. பட்டின, அடி, 210, 211
20. பெரும், அடி; 80, 81
21. தொல், பொருள், மரபியல், 81
22. வே. கனகசபை, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப.197
23. புறம், 395, முன்னுரை, ஔவை. துரைசாமிப்பிள்ளை
24. தொல், பொருள், அகத், 30, நச்சி உரை
25. புறம், 2 : 17 – 19
26. மதுரை, அடி; 768 – 770
27. பதிற், 90 : 17 – 18
28. டாக்டர். ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.30
29. புறம், 72 : 13 – 14
30. மேலது, 53 : 12 – 13
31. கலிங்கத்துப்பரணி, கண்ணி, 198

32.பொருந, அடி; 166

33. புறம், 50 : 8 – 13

34. பொருந, அடி; 150 – 151

35. மேலது, அடி; 79 – 87

36. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், ப. 79

37. புறம், 216 : 6 – 12

38. மேலது, 222

39. மேலது, 220

40. மேலது, 91 : 5 – 11

41. ந. சுப்ரமண்யன், தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், ப. 10

42. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, பக். 57 – 58

43. புறம், 46 : 1 – 4

44. மேலது, 47 : 1 – 6

45. ந. சுப்ரமண்யன், தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள், ப. 24

46. புறம், 213 : 2 – 19

47. மு. வரதராசன், புலவர் கண்ணீர், ப.80

48. புறம், 95

49. மேலது, 143 – 147

50. மேலது, 45 : 4 – 9

51. தொல், பொருள், புறத், 30: 3 – 6

52. டாக்டர். வி.சி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 280

53. சிறு, அடி, 109

54. மேலது, அடி; 125

55. பட்டின, அடி; 252

56. அகம், 45 : 1 – 2

57. மலை, அடி; 236 – 237

58. தொல், பொருள், 91, நச்சி. உரை

59. மு.ரா. கந்தசாமி கவிராயர், பெரும்பாணாற்றுப்படை, பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், ப.122

60. ந. சுப்ரமண்யன், சங்ககால வாழ்வியல், பக். 308 – 309

61. க.த. திருநாவுக்கரசு, திருக்குறள் நீதி இலக்கியம், ப.127

62. வே. கனகசபை, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், ப.230

63. புறம், 69 : 1 – 4

64. தொல், பொருள், புறத், 30 : 1 – 2

65. சிறு, அடி; 34 – 35

66.பெரும், அடி; 462

67.தொல், பொருள், கற்பியல், 28

68. M. Arokiya samy, The Classical Age of the Tamils, P. 111

69.கி.வா. ஜகந்நாதன், வீரர் உலகம், ப. 138

70. டாக்டர். மா. இராசமாணிக்கனார், பாத்துப்பாட்டு ஆராய்ச்சி, ப. 612

71. புறம், 394 : 7 – 9

72. மேலது, 375 : 4 – 7

73. பொருந, அடி; 1 – 3

74. நாரா. ஞானசேகரன், இருபது நூற்றாண்டுகளில் தமிழ் நாடகக்கலை, ப.10

75. பதிற், 54 : 4 – 6

76. சிறு, அடி; 15 – 17

77. புறம், 32 : 2 – 5

78. பதிற், 43 : 21 – 22

79. மேலது, 61 : 15 – 17

80. புறம், 68 : 1 – 4

81. மேலது, 69 : 2 – 4

82. மேலது, 138 : 1 – 5

83. மேலது, 141 : 6 – 8

84. மேலது, 155 : 1 – 3

85. மேலது, 103 : 1 – 4

86. மேலது, 105

87. பொருந, அடி; 61 – 63

88.மேலது, அடி; 67 – 68

89. மேலது, அடி; 79 – 81

90. சிறு, அடி; 130 – 139

91. பெரும், அடி; 17 – 22

92. மலை, அடி; 40 – 50

93. பொருந,அடி; 151

94. மேலது, அடி; 73 – 78

95. மலை, அடி; 559 – 560

96. பொருந, அடி; 102 – 111

97. சிறு, அடி; 244 – 245

98. பெரும், அடி; 478 – 479

99. பொருந, அடி; 79 – 83

100. மேலது, அடி; 153 – 155

101. சிறு, அடி; 235 – 236

102. பெரும், அடி; 467 – 470

103. மலை, அடி; 561 – 562

104. பொருந, அடி; 125 – 129

105. சிறு, அடி; 257 – 261

106. பெரும், அடி; 480 – 493

107. பொருந, அடி; 175 – 177

108. மலை, அடி; 565 – 566

109. பொருந, அடி; 64 – 66

110. சிறு, அடி; 217 – 218

111. மு. வரதராசன், பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள், ப. 10

112. பெரும், அடி; 147 – 150

113. மேலது, அடி; 351 – 355

114. மேலது, அடி; 263 – 267

115. மேலது, அடி; 83 – 88

116. மேலது, அடி; 330 – 335

117. மதுரை, அடி; 357 – 358

118. மேலது, அடி; 451 – 452

119. நெடுநல், அடி; 60 – 61

120. மேலது, அடி; 145 – 163

121. முல்லை, அடி; 80 – 88

122. பட்டின, அடி; 295 – 297

123. பெரும், அடி; 302 – 303

124. பட்டின, அடி; 199 – 205

125. பொருந, அடி; 1 – 2

126. தொல்,பொருள், கற்பியல், 11 : 1 – 4

127. பொருந, அடி; 102 –108

128. சிறு, அடி; 158 – 163, 175 – 177, 190 – 195;
பெரும், அடி; 95 – 100, 130 – 133, 166 – 186, 254 – 256, 261 – 262, 280 – 282, 305 – 310, 343 – 345, 356 – 362,
மலை, அடி; 152 – 157, 167 – 169, 178 – 185, 282 – 283, 409 – 417, 434 – 443, 455 – 459, 463 – 464.

129. தொல், பொருள், புறத், 5 : 1 – 2

130. மதுரை, அடி; 611 – 615

131. பதிற், 51 : 10 – 13

132. அ.கி. நாயுடு, தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், ப. 208

133. தொல்,பொருள், புறத், 5 : 19 – 21

134. புறம், 264 : 1 – 4

135. பட்டின, அடி; 78 – 79

136. மலை, அடி; 394 – 396

137. புறம், 232 : 3 – 4

138. மலை, அடி; 387 – 389

139. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, ப. 125

140. பட்டின, அடி; 246 – 249

141. புறம், 52 : 12 – 13

142. புறம், 41 : 4 – 11

143. மேலது, 390 : 5 – 6

144. பதிற், 20 : 9 – 10

145. மேலது, 44 : 5 – 6

146. பொருந, அடி; 97 – 98

147. ச.வே. சுப்பிரமணியன், காப்பியப் புனை திறன், பக். 125 – 126

148. இரா. குழந்தைவேலு, பழந்தமிழர் காட்டும் கனாத்திறன், 4ஆவது கருத்தரங்க மலர், ப. 35

149. புறம், 62 : 2 – 5

150. மேலது, 356 : 1 – 4

151. மேலது, 369 : 14 – 15

152. பதிற், 22 : 36 – 37

153. மதுரை, அடி; 161 – 163

154. சிறு, அடி; 196 – 198

155. புறம், 238 : 1 – 5

156. மதுரை, அடி; 631 – 633

157. இரா. காசிநாதன், தமிழ் இலக்கியக் கொள்கை – 6, ப. 77

158. சுசிலா கோபாலகிருஷ்ணன், சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள், ப. 2

159. மலை, அடி; 64 – 66

160. மேலது, அடி; 446 – 448

161. புறம், 204 : 10 – 11

162. மேலது, 20 : 18 – 19

163. மேலது, 68 : 11 – 12

164. மேலது, 168 : 4 – 6

165. புறப்பொருள் வெண்பாமலை, 264

166. கி.ர. அனுமந்தன், பண்டைக்கால நாகரிகங்களின் வரலாறு, ப. 333

167. பதிற், 40 : 17

168. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப. 173

169. தொல், பொருள், புறத், 5: 8

170. பதிற், 61 : 5 – 6

171. புறம், 229 : 11 – 22

172. மேலது, 280 : 2 – 4

173. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, பக். 195 – 196

174. தொல், பொருள், புறத், 3 : 1, நச்சி உரை

175. முல்லை, அடி; 9 – 20

176. புறம், 280 : 6 – 7

177. பொருந, அடி; 181– 184

178. மேலது, அடி; 91 – 92

179. குறிஞ்சி, அடி; 210

180. முருகு, அடி; 130 – 131

181. பெரும், அடி; 155 – 156

182. புறம், 260 : 3 – 5

183. தொல், பொருள், 187

184. புறம், 299 : 7

185. மேலது, 191

186. ந. சுப்ரமண்யன், சங்க கால வாழ்வியல், ப. 386

187. A. சுவாமிநாதன், தமிழக வரலாறு, ப. 95

188. மதுரை, அடி; 361 – 362

189. மேலது, அடி; 427 – 428

190. பட்டின, அடி; 145 – 158

191. சிறு, அடி; 201

192. பெரும், அடி; 410 – 411

193. மலை, அடி; 349 – 351

194. பொருந, அடி; 1 – 3

# முடிவுரை

# முடிவுரை

சமூக ஆய்வு எனும் நோக்கில் சங்கப்புற இலக்கியங்கள் சுட்டிய அக்காலத்தமிழகத்தின் எல்லையினையும், நிலப்பாகுபாட்டினையும் இவ்வாய்வு நன்கு சுட்டியுள்ளது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைக் கேற்பத் தமிழ்நாட்டில் வாழ்ந்த மக்களையும், அவர்களுடைய தொழில் முறையினையும் இவ்வாய்வு விளக்கியுள்ளது.

நானிலங்களுக்குப் பொதுவானவர்களாகப் பரிசில் வாழ்க்கை வாழ்ந்த புலவர்களையும், ஆற்றுப்படைக் கலைஞர்களையும் குறித்துச் சிறப்புற நோக்கியுள்ளது.

திணைநில மக்களாய் வாழ்ந்தவர்களிடம் தொழில் அமைப்புகள் பெருகிய பிறகு, தொழில் சார்ந்த மக்கட் பிரிவு சாதிப் பிரிவுகளாய்ப் பிறகு மாறியதை நன்கு எடுத்துக்காட்டியுள்ளது.

பண்டைச் சமூகத்தில் தாம் மேற்கொண்ட தொழிலால் நால்வகை வருணத்தார் உயர்நிலையினராக மாறியதையும் உழவர், தச்சர், குயவர் எனக் கைத்தொழில் புரிந்த வினைஞர்கள் உயர்நிலை அல்லாத நிலையினராய்க் கருதப்பெற்றதையும் புலப்படுத்தியுள்ளது.

அக்கால அரசியலை நோக்கும் போது ஆட்சியாளர்களாக மூவேந்தர்களும், வேளிர்களும், குறுநிலமன்னர்களும், சீறூர் மன்னர்களும், வள்ளல்களும் வீற்றிருந்ததைக் கூறியுள்ளது.

சங்க காலப் பொருளாதார நிலையினைக் காணும் போது பயிர்த்தொழில், கைத்தொழில், வாணிபம் ஆகிய இம் மூன்றும் திறம்படச் செயல்பட்டுள்ளமையை விளக்கியுள்ளது.

இயற்கையையும், திணைநிலத் தெய்வங்களையும் வணங்கிய அக்கால மக்கள் சமய வழிபாட்டு முறைகளை மேற்கொண்டதையும் அதன் விளைவாகப் பல சமய நிலைகள் தமிழகத்தில் நிலை கொள்ளத் தொடங்கியதையும் நன்கு சுட்டியுள்ளது.

சங்க கலத் தமிழக்தில் திணைக்குழு மக்களாய் வாழ்ந்தவர்களிடம் பாதுகாப்பிற்காக உருவான தலைமைப் பண்பு நாளடைவில் அரசுருவாக்கமாக பரிணமித்ததை எடுத்துரைத்துள்ளது.

"தாயம்" என்ற சொல் அரசுரிமையைக் குறித்ததைச் சுட்டியும் மன்னன், மன்னனின் கடமைகள், தகுதிகள் எனச் சங்கப் புற இலக்கியம் விளக்கியவற்றையும் தெளிவுறுத்தியுள்ளது.

ஆட்சியாளர்களின் பெயர்களும் அவர்கள் பெற்ற பட்டங்களும் கூறப்பட்டுள்ளன.

முடியாட்சி நிலவினாலும் அது குடிகளின் ஆட்சியாகவே நடைபெற, மன்னர்கள் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்ற ஆட்சிக்குழுக்களை நியமித்து மக்கள் ஆட்சிக்கு வித்திடப்பட்ட வரலாற்றை விளம்பியுள்ளது.

அமைச்சர், ஒற்றர், தூதர் என அரசியற் பணி மேற்கொண்டோரையும், அரசச் சுற்றத்தாரையும், கோடிட்டுக் காட்டியுள்ளது.

ஓர் அரசமைப்பின் செயற்பாட்டுக்கு அது கொண்டுள்ள பொருளாதார நிலை முக்கியமானது. அந்த வகையில் அரசின் வரவு, செலவு பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்களின் முக்கியப் பணிகளில் ஒன்று தன் குடிகளையும், நாட்டினையும் பாதுகாத்தல் அவ்வகையில் ஆட்சியாளர்களிடையே இருந்த படைப் பிரிவுகளையும், பாதுகாப்பு முறையினையும் விரிவாகச் சுட்டியுள்ளது.

அரசர்களின் வீரத்திற்குப் பறைசாற்றும் போரினையும், போருக்கான காரணங்களையும், போர் நிகழ்வுகளையும் கூறியதுடன் அக்காலத் தமிழர்கள் புரிந்த போர்களில் போர் அறம் கடைபிடிக்கப்பட்டதைச் சிறப்பாக விளக்கியுள்ளது.

"முறை வேண்டுநர்க்கு முறையும் குறை வேண்டுநர்க்கு குறையும்" என இலக்கியங்கள் சுட்டிய நிலையில் ஆட்சியாளர்களின் நீதி முறைகள் நிகழ்ந்தமையை ஆய்ந்து விளக்கியுள்ளது.

நீதி வழங்கும் இடமாக ஊரவை, அறங்கூறவையம், நாளவை விளங்கியமையை எடுத்துக்காட்டியுள்ளது.

குற்றமும் தண்டனையும் எனக் குற்றவகையினையும், தண்டனை முறையினையும் சங்கப்புற இலக்கியங்கள் கூறிய வழி விளக்கியுள்ளது.

இனக்குழு சமுதாய அமைப்பு சிதையும் நிலையில் சீறூர் தலைவர்களாய் இருந்தவர்கள் தம் எல்லையினை விரிவுபடுத்தியுள்ளனர். அத்தகைய தலைவர்கள் தங்களது வீரத்தாலும் ஆளுமைப் பண்புகளாலும், மக்களிடம் பெற்ற நன்மதிப்பாலும் ஆட்சியாளர்களாய்ப் பரிணமித்துள்ளனர்.

இத்தகைய ஆட்சியாளர்கள் சீறூர்த் தலைவர், குறுநில மன்னர், வேளிர், வேந்தர் என அழைக்கப்பெற்றதையும், இவர்களின் செயற்பாடுகள் அறிஞர்களின் கூற்றாலும் இலக்கியத்தரவுகளாலும் நிறுவப்பட்டுள்ளன.

பதிற்றுப்பத்து கூறியதன்வழி சேர வேந்தர்களையும் அவர்களது உறவு முறையினையும், மேற்கொண்ட போரினையும் விளக்கியுள்ளது. மற்றும் புறநானூறு கூறிய சேரர்களையும், அவர்களில் மூவர் புலவர்களாக விளங்கியதையும் புலப்படுத்தியுள்ளது.

சங்கப்புற இலக்கியங்களில் புறநானூறு சுட்டிய பாண்டிய வேந்தர்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் வேந்தராக மட்டுமல்லாது புலவராகவும் திகழ்ந்த பாண்டியர்களைச் சுட்டியுள்ளது.

சங்கப்புற இலக்கியங்கள் தெளிவாகச் சுட்டிய சோழ வேந்தர்களைக் கூறியுள்ளது. சோழர்களில் கரிகாலன் முதன்மையானவனாக ஆட்சிபுரிந்ததையும் விளக்கிச் சென்றுள்ளது.

மூவேந்தர்களை அடுத்துச் சங்கப்புற இலக்கியங்கள் விளம்பிய வேளிர்களையும், குறுநில மன்னர்களையும், சீறூர் மன்னர்களையும் குறிப்பிட்டுள்ளது.

ஆட்சியாளர்களாகத் திகழ்ந்தாலும் தாம் கொடுத்த கொடையால் உயர்ந்த பாரி, ஓரி, காரி போன்ற கடையேழு வள்ளல்களையும் அவர்களது கொடைப் பண்புகளையும் சிறப்பாகக் கூறியுள்ளது.

அரசு – மக்கள் உறவுநிலைகள் எனும் பகுதியில் இவ்விருவரிடையே நிலவிய நட்புறவுநிலைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் நடத்திய வேள்விகள், யாகங்கள் கொண்டும் சமூகத்தில் அந்தணர்களுக்கு கிடைத்த நன் மதிப்பினைக் கொண்டும் அரசர் – அந்தணர்களுக்கிடையே உள்ள நட்புறவு நிலைகள் புலப்படுத்தப்பட்டுள்ளன.

அக்காலப் பொருளாதாரத்திற்கு வித்திட்ட வணிகத்திணையும், அவ்வணிகத் தொழிலினை மேற்கொண்ட வணிகர்களுக்கு அரசர்கள் அளித்த பாதுகாப்பினையும், பட்டங்களையும் கூறி அரசர்க்கும் வணிகர்க்கும் இடையே திகழ்ந்த உறவு நிலைகள் விளக்கப்பட்டுள்ளன.

உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்த வேளாண்மைக்கு அளித்த முக்கியத்துவத்தினையும், அத்தொழிலினை மேற்கெண்ட வேளாளர்களோடு ஆட்சியாளர்கள் கொண்டிருந்த மண உறவு முறையினைக் கொண்டும் அரசர்க்கும் வேளாளர்க்கும் இடையே நிலவிய நட்புறவு நிலைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

"கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்ற வாக்கிற்கேற்பச் சென்றவிடங்களில் எல்லாம் தம் ஆளுமைத் தன்மையினைப் பதித்த புலவருடன் அரசர்கள் கொண்டிருந்த நட்புறவு நிலைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

அரசர்கள் புலவருடன் சேர்ந்து வட்டாடியதும், முரசுக்கட்டிலில் உறங்கிய புலவர்க்குக் கவரி வீசி நின்றதும், தன்னை நாடிய புலவர்க்குப் பரிசு கொடுக்க இயலாத நிலையில் தன் தலையையே கொடுக்க முன் வந்ததும், புலவரைப் பார்க்காமலேயே நட்புக் கொண்டதும், தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியைப் புலவர்க்குக் கொடுத்ததும் எனப் பல இலக்கியத் தரவுகளைச் சங்கப்புற இலக்கியம் தந்துள்ளது.

ஆட்சியாளர்கள் நெறிதவறி நடக்கும் போது அவர்களின் தவற்றினைச் சுட்டிக் காட்டித் திருத்தியும், அரசர்களின் குலப்பழியைக் காத்தும், அவர்களுக்காகத் தூது சென்ற புலவர்களை ஆய்ந்தும் இனங்கண்டுள்ளது.

ஆற்றுப்படை நூல்களின் வழி ஆற்றுப்படைக் கலைஞர்களின் வாழ்வியலைச் சுட்டியுள்ளது.

ஆற்றுப்படைக் கலைஞர்களை 'மகமுறை மகமுறை நோக்கித் தானமர்ந்து இனிதூட்டிய' அரசர்களின் விருந்தோம்பல் பண்பினையும் கூறியுள்ளது. அவர்களின் வறுமை நிலைகளைத் தீர்த்து வழியனுப்பும் போது தாமும் ஏழடிப்பின் சென்று வழியனுப்பிய காட்சிகளையும் ஆய்ந்து அரசர் – ஆற்றுப்படைக் கலைஞர்களின் நட்புறவு நிலைகளைப் புலப்படுத்தியுள்ளது.

பண்டை மக்களின் இல்வாழ்க்கை நிகழ்வுகளையும், மனையறப் பண்புகளையும் ஆய்ந்து இனங்கண்டுள்ளது.

வெறியாட்டு, நடுகல் வழிபாடு என அக்கால வழிபாட்டு முறைகளை ஆய்ந்துள்ளது.

சங்க கால மக்களின் நம்பிக்கைகளாக விளங்கிய கனவு, பேய்மகள், பேய்கள், கண்ணூறு, நிமித்தம், விரிச்சி என்பன பற்றிய செய்திகள் குறித்தும் விளக்கியுள்ளது.

இறுதியாக அக்கால மக்கள் கொண்டாடிய சமய நல்லிணக்கத்திற்கு வித்திட்ட திருவிழாக்களையும் ஆய்ந்துள்ளது.

சமூக உறவுகளைப் புலப்படுத்தும் நோக்கில் 'சங்கப்புற இலக்கியங்களில் அரசு – மக்கள் உறவு நிலைகள்' என்று ஆய்ந்திருக்கும் இவ்வாய்வு, இந்த ஆய்வேட்டின் இயல்களில் கண்டு தெளியப்பெற்றவற்றை முக்கிய முடிவுகளாக முடிவுரை எனும் இப்பகுதி தொகுத்துத் தந்திருக்கிறது.

இத்தகைய சமூக உறவுகள் குறித்து ஆய்ந்த ஆய்வு முன்னோடிகளின் வழியில் இவ்வாய்வு ஒரு வழி ஆய்வு; தொடர் ஆய்வு; சங்கிலி ஆய்வு. சமூக உறவுகள் பற்றிய ஆய்வுகட்கு எல்லையும் முடிவுகளும் இல்லை. எதிர்காலத்தில் மலரும் சமூக உறவுகள் குறித்த ஆய்வுகளுக்கு இவ்வாய்வு உறவுச் சங்கிலி அமைத்துக் களம் கண்டுள்ளது என்பதைச் சுட்டி, இம்முடிவுரை ஆய்வேட்டின் நிறைவுப் பகுதியாக விளங்குகிறது.



# துணைநூற் பட்டியல்

# துணை நூற்பட்டியல்

## முதன்மை நூல்கள்


1. அகநானூறு – வேங்கட விளக்க உரை, பாகனேரி, தமிழ்ச்சங்க வெளியீடு, கழகம், சென்னை – 1, பதிப்பு. 1961.

2. இறையனார் அகப்பொருள் உரை – கோவிந்தராஜ முதலியார் பதிப்பு, சென்னை, 1939.

3. கலிங்கத்துப்பரணி – ஆ. வீ. கன்னையநாயுடு உரை, பாரதி அச்சுக் கூடம், சென்னை, மூ.ப. 1949.

4. கலித்தொகை – நச்சினார்க்கினியர் உரை, இ.வை. அனந்தராமையர் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

5. குறுந்தொகை – உ.வே.சாமிநாதையர் பதிப்பு, சென்னை, 1937.

6. சங்க இலக்கியம் – பேரா. ச. வையாபுரிப்பிள்ளை பதிப்பு, பாரி நிலையம், சென்னை – 1, இ.ப. 1967.

7. சங்க இலக்கியம் (தொகுதி – 1) – ச.வே. சுப்பிரமணியன் உரை, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108, மு.ப. 2010.

8. சங்க இலக்கியம் (தொகுதி – 2) – ச.வே. சுப்பிரமணியன் உரை, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை – 600108, மு.ப. 2010.

9. சங்க இலக்கியம், பதிற்றுப்பத்து – அ. ஆலிஸ் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41. பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98 மு.ப. 2004.

10. சங்க இலக்கியம், புறநானூறு 1 – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41. பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 98
மு.ப. 2004.

11. சங்க இலக்கியம், புறநானூறு 2 – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41. பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை – 98
மு.ப. 2004.

12. சிலப்பதிகாரம் – அடியார்க்கு நல்லார் உரை,
உ.வே. சாமிநாதையர் பதிப்பு,
சென்னை, மு.ப. 1927.

13. சிறுபாணாற்றுப்படை – பொ.வே. சோமசுந்தரனார் உரை,
கழக வெளியீடு, மு. ப. 1959.

14. திருக்குறள் – பரிமேலழகர் உரை,
கழக வெளியீடு,
சென்னை, 11ம் பதிப்பு. 1976.

15. திருமுருகாற்றுப்படை – பேரா. கே.டி. நீலகண்டன் உரை,
சிவசக்தி நிலையம்,
காமராசர் நகர், ஆவடி,
சென்னை, மு.ப. 2000.

16. திருமுருகாற்றுப்படை – மு.வெ. சத்தியவேல் முருகனார் உரை,
சகுந்தலை நிலையம்,
மண்ணடி, சென்னை – 1,
மு.ப. 2004.

17. தொல்காப்பியம் – சொல்லதிகாரம்,
நச்சினார்க்கினியர் உரை,
திரு.இராம.கோவிந்தசாமி பிள்ளை (ப.ஆ)
வெற்றிவேல் அச்சகம்,
தஞ்சாவூர், பதிப்பு. 1962.

18. தொல்காப்பியம் – பொருளதிகாரம்,
இளம்பூரணர் உரை,
கழக வெளியீடு, சென்னை,
இ.ப. 1956.

19. தொல்காப்பியம் – பொருளதிகாரம்,
அகத்திணையியல், புறத்திணையியல்,
நச்சினார்க்கினியர் உரை,
கழக வெளியீடு, சென்னை,
இ.ப. 1955.

20. தொல்காப்பியம் – பொருளதிகாரம்,
களவியல், கற்பியல், பொருளியல்,
நச்சினார்க்கினியர் உரை,
கழக வெளியீடு, சென்னை,
இ.ப. 1958.

21. தொல்காப்பியம் – பொருளதிகாரம்,
(6 முதல் 9 இயல்கள்),
பேராசிரியர் உரை,
கழக வெளியீடு, சென்னை.
5 ஆம் பதிப்பு. 1975.

22. பத்துப்பாட்டு – நச்சினார்க்கினியர் உரை,
உ.வே. சாமிநாதையர் பதிப்பு,
சென்னை. மூ.ப. 1931.

23. பத்துப்பாட்டு – 1 – பொ.வே. சோமசுந்தரனார் உரை,
கழக வெளியீடு,
பிராட்வே, சென்னை – 1,
ம.ப. 1966.

24. பத்துப்பாட்டு – முதல் பாகம் – எம். நாராயண வேலுப்பிள்ளை உரை,
முல்லை நிலையம்,
தி. நகர், சென்னை – 17,
ம.ப. 1999.

25. பத்துப்பாட்டு – முதல் பாகம் – அ. மாணிக்கனார்,
வர்த்தமானன் பதிப்பகம்,
தி. நகர், சென்னை – 17,
மு. ப. 1999.

26. பத்துப்பாட்டு – 2ஆம் பாகம் – அ. மாணிக்கனார்,
வர்த்தமானன் பதிப்பகம்,
தி. நகர், சென்னை – 17,
மு. ப. 1999.

27. பத்துப்பாட்டு – 1 – முனைவர் இரா. மோகன் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41. பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98, மு.ப. 2004.

28. பத்துப்பாட்டு – 2 – முனைவர் வி. நாகராசன் உரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41. பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98, மு.ப. 2004.

29. பத்துப்பாட்டு – ச.வே. சுப்பிரமணியன் உரை, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை – 600 108, மு.ப. 2010.

30. பதிற்றுப்பத்து – பழைய உரையும் சாமிநாதையர் குறிப்புரையும், எஸ். கலியாணசுந்தரையர் பதிப்பு, 5ஆம் பதிப்பு. 1949.

31. பதிற்றுப்பத்து – ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை – 18, ம.ப. 1995.

32. பதிற்றுப்பத்து – முனைவர் அ.மா. பரிமணம், கோவிலூர் மடாலயம், கோவிலூர் – 630 307, மு.ப. 2004.

33. பரிபாடல் – பரிமேலழகர் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, இ.ப.1935.

34. புறநானூறு, முதலாம் பாகம் – ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை – 1, ம.ப. 1952.

35. புறநானூறு, 2ஆம் பாகம் – ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, கழக வெளியீடு, சென்னை – 1, ம.ப. 1951.

36. புறநானூறு, முதல் பகுதி – புலவர்.அ. மாணிக்கனார் உரை, வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, மு.ப. 1990.

37. புறநானூறு, 2ஆம் பகுதி – புலவர்.அ. மாணிக்கனார் உரை, வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, மு.ப. 1990.

38. புறநானூறு – உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, மு.ப. 1935.

39. புறநானூறு – தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், பதிப்பு. 1985.

40. புறநானூறு – த.வ. இராமசுப்பிரமணியம் உரை, திருமகள் நிலையம், 54. வெங்கட் நாராயணசாலை, சென்னை, மு.ப. 1999.

41. புறநானூறு – புலவர். இரா. இளங்குமரன் உரை, கோவிலூர் மடாலயம், கோவிலூர் – 630 307, மு.ப. 2004.

42. புறநானூறு – புலவர். கோ. இளைய பெருமாள் உரை, மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு, பாரி முனை, சென்னை – 600 108, மு.ப. 2006.

43. பெரும்பாணாற்றுப்படை – பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை – 1, 5ஆம் பதிப்பு. 1973.

44. பொருநராற்றுப்படை – அ. மாணிக்கனார் உரை, வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, மு.ப. 1999.

45. பொருநராற்றுப்படை – பேரா. கே.டி. நீலகண்டன் உரை, சிவசக்தி நிலையம், காமராசர் நகர், ஆவடி, சென்னை, மு.ப. 2000.

46. மணிமேகலை – மூலமும் குறிப்புரையும், உ.வே.சா, தியாகராசவிலாச வெளியீடு, சென்னை, 6ஆம் பதிப்பு – 1965.

47. மதுரைக்காஞ்சி – பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை – 1 மு.ப. 1956.

48. மதுரைக்காஞ்சி – நா. இராமையா பிள்ளை உரை, வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, மு.ப. 1999.

49. மதுரைக்காஞ்சி – பேரா. கே.டி. நீலகண்டன் உரை, சிவசக்தி நிலையம், காமராசர் நகர், ஆவடி, சென்னை, மு.ப. 2000.

50. மலைபடுகடாம் – பொ.வே. சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு, சென்னை – 1, ம.ப. 1956.

## துணைமை நூல்கள்

51. அதியமான்.ந., ஜெயக்குமார். பா., – **தமிழகக் கடல்சார் வரலாறு அண்மைக்கால ஆய்வுகள்,** தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 5, மு.ப. 2006.

52. அப்துல் மஜீத்.அ., – ஆய்வுக் கொத்து ஆராய்ச்சிப் பேரவை, சென்னை – 29, பதிப்பு. 1973.

53. அப்பாத்துரை. கா., – **தென்னாட்டுப் போர்க்களங்கள்,** அலமேலு நிலையம், சென்னை – 18, மு.ப. 1971.

54. அனுமந்தன். கி.ர., – **பண்டைக்கால நாகரிகங்களின் வரலாறு,** கழக வெளியீடு, சென்னை – 1, மு.ப. 1982.

55. இராகவையங்கார். மு., – **சேரன் செங்குட்டுவன்,** உரிமைப் பதிவு, 4ஆம் பதிப்பு. 1937.

56. இராகவையங்கார். ரா., – **தமிழ் வரலாறு,**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர், மு.ப. 1979.

57. இராகவையங்கார். மு., – ஆராய்ச்சித் தொகுதி,
பாரி நிலையம்,
சென்னை, மு.ப. 1964.

58. இராசமாணிக்கனார்.மா., – **பத்துப்பாட்டு ஆராய்ச்சி,**
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை, மு.ப. 1970.

59. இராசமாணிக்கனார். மா., – **சோழர் வரலாறு,**
எடுகேசனல் பப்ளிசிங் கம்பெனி,
நுங்கம்பாக்கம், சென்னை,
பதிப்பு – 1957.

60. இராசமாணிக்கனார். மா., – **தமிழக ஆட்சி,**
பாரி நிலையம்,
59. பிராட்வே, சென்னை – 1,
இ.ப. 1972.

61. இராமலிங்கம். அரங்க., – **சங்க இலக்கியத்தில் வேந்தர்,**
பாரதி புத்தகாலயம்,
7/40, கிழக்குச் செட்டித் தெரு,
பரங்கிமலை, சென்னை – 16.
பதிப்பு. டிசம்பர்–2006.

62. இராமலிங்கன்.வெ.,புலவர்., – **கருவூரே வஞ்சி,**
அசோகன் பதிப்பகம்,
தி. நகர், சென்னை – 17,
மு.ப. 1977.

63. உலகநாதப்பிள்ளை – **முதலாம் கரிகாலன்,**
விவேகபோதினி காரியாலயம்,
மயிலாப்பூர், சென்னை,
பதிப்பு – ஆண்டு இல்லை.

64. எங்கெல்ஸ் – **குடும்பம் தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்,**
முன்னேற்றப் பதிப்பகம்,
மாஸ்கோ, பதிப்பு.1978.

65. கந்தையா. ந.சி., – **தமிழர் சரித்திரம் (திரட்டு – 14),**
அமிழ்தம் பதிப்பகம்,
தி.நகர், சென்னை – 17, மு.ப. 2003.

66. கந்தையா. ந.சி., – **சிந்துவெளித் தமிழர்,**
அமிழ்தம் பதிப்பகம்,
பி.11 குல்மோகர் குடியிருப்பு,
15. தெற்கு போக்கு சாலை,
தி.நகர், சென்னை – 17,
மு.ப. 2003.

67. கனகசபை. வே., – **ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்,**
கா.அப்பாதுரை (மொ.பெ.),
கழக வெளியீடு, சென்னை,
மு.ப. 1973.

68. காசிநாதன். இரா., – **தமிழ் இலக்கியக் கொள்கை – 6,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 1983.

69. குருநாதன். வ., – **சங்க கால அரச வரலாறு,**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 5,
மு.ப. 2001.

70. கேசவன். கோ., – **மண்ணும் மனித உறவுகளும்,**
சென்னை புக் ஹவுஸ்,
சென்னை, பதிப்பு.1979.

71. கோமதிநாயகம்.பி., – **தென்னிந்திய வரலாறு,**
மணிவாசகர் பதிப்பகம்,
31. சிங்கர் தெரு, பாரி முனை,
சென்னை – 600 108, மு.ப. 2003.

72. கோவிந்தன். கா., – சங்க கால அரசர் வரிசை – 1, சேரர்,
கழகம், சென்னை, 1954.

73. கோவிந்தன். கா., – சங்க கால அரசர் வரிசை – 2, சோழர்,
கழகம், சென்னை, 1954.

74. கோவிந்தன். கா., – சங்க கால அரசர் வரிசை – 3, பாண்டியர்,
கழகம், சென்னை, 1954.

75. சசிவல்லி. வி.சி., டாக்டர்., – **பண்டைத் தமிழர் தொழில்கள்,**
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ. அஞ்சல், தரமணி,
சென்னை – 600 113, மு.ப. 1989.

76. சண்முகசுப்பிரமணியம். மா., – **குறள் கூறும் சட்ட நெறி,**
தமிழக வெளியீடு, ம.ப. 1987.

77. சண்முகசுந்தரம்.க., – **சங்க கால வேளிர்கள்,**
பெ. கந்தசாமி நாயகர் கல்வி
அறக்கட்டளை (வெளியீடு),
62. வினைத்தீர்த்த விநாயகர் கோயில் தெரு,
குயப்பேட்டை, சென்னை – 12,
மு.ப. 1997.

78. சண்முகசுந்தரம்.க., – **சங்க காலப் பாண்டிய வேந்தர்கள்,**
பெ. கந்தசாமி நாயகர் கல்வி
அறக்கட்டளை (வெளியீடு) ,
62. வினைத்தீர்த்த விநாயகர் கோயில் தெரு,
குயப்பேட்டை, சென்னை – 12,
மு.ப. 1997.

79. சண்முகசுந்தரம்.க., – **சங்க கால சோழ வேந்தர்கள்,**
பெ. கந்தசாமி நாயகர் கல்வி
அறக்கட்டளை (வெளியீடு) ,
62. வினைத்தீர்த்த விநாயகர் கோயில் தெரு,
குயப்பேட்டை, சென்னை – 12,
மு.ப. 1997.

80. சண்முகம் பிள்ளை. மு.,பேரா.,– **சங்கத்தமிழரின் வழிபாடும் சடங்குகளும்,**
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி டி டி ஐ அஞ்சல், தரமணி,
சென்னை – 113,
மு.ப. 1996.

81. சதாசிவப் பண்டாரத்தார். T.V., – **பாண்டியர் வரலாறு,**
மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை,
சென்னை – 600 108.
மு.ப. 1998.

82. சிதம்பரனார். சாமி., – **பழந்தமிழர் அரசியல்,**
இலக்கிய நிலையம்,
9. சௌராட்டிரா நகர், சென்னை – 24

83. சிதம்பரனார். சாமி., – **பத்துப்பாட்டும் பண்டைத் தமிழர் வாழ்வும்,**
சிவகாமி சிதம்பரனார் இலக்கிய நிலையம்,
சென்னை, பதிப்பு. 1956.

84. சிதம்பரனார், துடிசைகிழார். அ., – **சேரர் வரலாறு,**
கழக வெளியீடு, சென்னை,
பதிப்பு. 1972.

85. சுசிலா கோபாலகிருஷ்ணன், பேரா,– **சங்க இலக்கியத்தில் நிமித்தங்கள்,**
பாலாஜி பதிப்பகம்,
5. கக்கன் தெரு, ஷெனாய் நகர், மதுரை,
மு.ப. 1987.

86. சுப்புரெட்டியார்.ந., – **தமிழ் இலக்கியங்களில் அறம் நீதி முறை,**
ஐந்திணைப் பதிப்பகம், சென்னை,
மு.ப.1988.

87. சுப்பிரமணியன்.கா., – **சங்க காலச் சமுதாயம்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
சென்னை, இ.ப. 1987.

88. சுப்பிரமணியன்.ச.வே., – **காப்பியப் புனைதிறன்,**
தமிழ்ப் பதிப்பகம்,
சென்னை, பதிப்பு – 1979.

89. சுப்ரமண்யன்.ந., – **சங்க கால வாழ்வியல்,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
சென்னை – 98, மு.ப.1986.

90. சுப்ரமண்யன்.ந., – **தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்,**
45. சிவலிங்கம் பிள்ளை லே அவுட்,
உடுமலைப் பேட்டை,
மு.ப. மார்ச். 1994.

91. சுவாமிநாதன். A., டாக்டர். – **தமிழக வரலாறு 1987 வரை,**
தீபா பதிப்பகம்,
சென்னை – 96, 15ஆம் பதிப்பு. 1998.

92. சேதுப்பிள்ளை. ரா.பி., – **தமிழின்பம்,**
பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14,
15ஆம் பதிப்பு. 2007.

93. சேதுப்பிள்ளை. ரா.பி., – **தமிழகம் ஊரும் பேரும்,**
பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14,
8ஆம் பதிப்பு. 2008.

94. ஞானசேகரன். நாரா., – **இருபது நூற்றாண்டுகளில் தமிழ் நாடகக் கலை,**
அபிராமி பதிப்பகம், மயிலாடுதுறை,
மு.ப. 1991.

95. திருநாவுக்கரசு.க.த., – **திருக்குறள் நீதி இலக்கியம்,**
சென்னை பல்கலைக்கழகம்,
சென்னை – 13, மு.ப. 1971.

96. துரைசாமிப்பிள்ளை. சு.,ஔவை – **பண்டை நாளைச் சேர மன்னர் வரலாறு,**
திருவளர் பதிப்பகம்,
தூத்துக்குடி, 4ஆம் பதிப்பு. 1968.

97. துரைசாமிப் பிள்ளை. ஞா.சா., – **தமிழ் இலக்கியம் (சங்க காலம்),**
தமிழர் உரிமை நூற்றொடர் வெளியீடு,
கல்கத்தா, பதிப்பு. 1923.

98. தேவநேயன். ஞா., – **பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்,**
நேசமணி பதிப்பகம்,
வடாற்காடு மாவட்டம்,
மு.ப. 1960.

99. தேவநேயன். ஞா., – **பழந்தமிழராட்சி,**
கழக வெளியீடு, பிராட்வே,
சென்னை – 1,
ம.ப. 1972.

100. தேவநேயப் பாவாணர். ஞா., – **தமிழர் வரலாறு,**
கழக வெளியீடு, சென்னை – 18,
இ.ப. 1991.

101. தேவநேயப் பாவாணர். ஞா., – **பண்டைத் தமிழக நகரிகமும் பண்பாடும்,**
தமிழ்மண் பதிப்பகம், சென்னை – 14
மு.ப. 1966.

102. தேவநேயப் பாவாணர். ஞா., – **தமிழ் இலக்கிய வரலாறு,**
பூம்புகார்ப் பதிப்பகம், சென்னை – 108
இ.ப. 2009.

103. தேவநேயப் பாவாணர். ஞா., – **தமிழர் திருமணம்,**
தமிழ் மண் பதிப்பகம், சென்னை – 14.

104. நாயுடு. அ.கி., – **தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம்,**
முப்பால் நிலையம், பூளைமேடு,
கோவை – 4, மு.ப. 1962.

105. பசுவலிங்கம். ம., பேரா., – **சங்க கால வஞ்சி,**
சேகர் பதிப்பகம், சென்னை – 78,
மு.ப. 1984.

106. பத்மஜா ரமேஷ்.டாக்டர்.,
புருஷோத்தமன்.வி.பி.,– **சங்க கால மன்னர்களின் காலநிலை,**
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113,
மு.ப. 2000.

107. பாலசுப்பிரமணியன்.சி., – **சேர நாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்,**
நறுமலர்ப் பதிப்பகம், சென்னை – 29,
மு.ப. 1985.

108. பிள்ளை. கே.கே., – **தென்னிந்திய வரலாறு – 1,**
பழனியப்பா பிரதர்ஸ்,
சென்னை – 14, 7ஆம் பதிப்பு. 2006.

109. பிள்ளை. கே.கே., – **தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்,**
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 113, பதிப்பு. 2007.

110. பெருமாள்.வ., – **இலக்கியமும் வாழ்க்கையும்,**
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,
4ம் பதிப்பு. 1983.

111. மங்கள முருகேசன்.ந.க., – **சோழர் வரலாறு,**
பாரி நிலையம், சென்னை – 108,
மு.ப. 1985.

112. மங்கள முருகேசன்.ந.க., – **பாண்டியர் வரலாறு,**
முல்லை நிலையம்,
தி. நகர், சென்னை – 17,
மு.ப. 1998

113. மங்கள முருகேசன்.ந.க., – **சேரர் வரலாறு,**
முல்லை நிலையம்,
தி. நகர், சென்னை – 17,
மு.ப. 1997.

114.மறைமலை அடிகளார் – **வேளாளர் நாகரிகம்,**
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை, பதிப்பு – 1963.

115.மாணிக்கம். வ.சுப., – **சங்க நெறி,**
மணிவாசகர் பதிப்பகம்,
சிதம்பரம், மு.ப. 1987.

116. மாதையன். பெ., – **சங்க கால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்,**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை – 14, மு.ப. 2004.

117. முத்தையா.கே., – **தமிழ் இலக்கியங்கள் கூறும் வர்க்க சமுதாயம்,**
சிகரம் வெளியீடு,
சென்னை, இ.ப. 1981.

118. மௌனகுரு.சி., – **பண்டைத் தமிழர் வரலாறு இலக்கியமும்,**
அலைகள் வெளியீட்டகம்,
சென்னை – 24,
மு.ப. 2006.

119. ராசு குமார். மே.து.,
வசந்தா.ரா., (பதிப்பாசிரியர்கள்) – **மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள், தொகுதி – 2,**
மக்கள் வெளியீடு, சென்னை,
மு.ப. 2003.

120. ராசு குமார். மே.து.,
வசந்தா.ரா., (பதிப்பாசிரியர்கள்) – **மயிலை சீனி. வேங்கடசாமி தொகுப்பு நூல்கள், தொகுதி – 3,**
மக்கள் வெளியீடு, சென்னை,
மு.ப. 2003.

121. வரதராசனார். மு., – **பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்,**
கழக வெளியீடு, சென்னை – 1.

122. வரதராசன். மு., – **புலவர் கண்ணீர்,**
சென்னை, இ.ப. 1963.

123. வித்தியானந்தன். சு., – **தமிழர் சால்பு (சங்க காலம்),**
பாரி புத்தகப் பண்ணை,
சென்னை – 5, மு.ப. 1985.

124. வேங்கடாசலம். தண்.கி., – **பாட்டுக்கொரு புலவன்,**
தண்டலை இல்லம், பெங்களூர் – 5,
மு.ப. 1964.

125. வேங்கடசாமி. மயிலை சீனி., – **சமணமும் தமிழும்,**
கழக வெளியீடு, சென்னை,
ம.ப. 1980.

126. வேங்கடசாமி. மயிலை சீனி., – **சங்க காலத் தமிழக வரலாறு, பகுதி – 1,**
எம். வெற்றியரசி,
ஆதம்பாக்கம், சென்னை – 88,
மு.ப. 2003.

127. வேங்கடசாமி. மயிலை சீனி., – **சங்க காலத் தமிழக வரலாறு, பகுதி – 2,**
எம். வெற்றியரசி,
ஆதம்பாக்கம், சென்னை – 88,
மு.ப. 2003.

128. வேங்கடசாமி. மயிலை சீனி., – **சேரன் செங்குட்டுவன்,**
வ.உ.சி. நூலகம்,
பதிப்பாளர் மற்றும் நூல் விற்பனையாளர்கள்,
இராயப்பேட்டை, சென்னை – 14,
மு.ப. 2005.

129.வேங்கடசாமி. மயிலை சீனி., – **கொங்குநாட்டு வரலாறு,**
பூம்புகார் பதிப்பகம்,
சென்னை – 108, மு.ப. 2006.

130. வேங்கடசாமி. மயிலை சீனி.,– **கொங்குநாடும் துளு நாடும்,**
வசந்தா பதிப்பகம்,
ஆதம்பாக்கம், சென்னை – 88.

131. வேங்கடசாமி. மயிலை சீனி., – **பழந்தமிழர் வாணிகம்,**
எம்.ஏழுமலை (ப.ஆ),
பல்லாவரம், சென்னை – 43.

132. வேலுப்பிள்ளை. ஆ., – **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்,**
பாரி புத்தகப் பண்ணை,
சென்னை, மு.ப. 1985.

133. ஜகந்நாதன்.கி.வா., – **வீரர் உலகம்,**
மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம், மு.ப. 1981.

## பார்வை நூல்கள்

134.அப்பாதுரை.கா., – **குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு,**
கழக வெளியீடு,
சென்னை, மு.ப. 1961.

135. அறவாணன்.க.ப., – **தமிழ் மக்கள் வரலாறு,**
தமிழ்க் கோட்டம், அமைந்தகரை,
சென்னை – 29, மு.ப. 2005.

136. ஆறுமுகம். அ., – **சங்க இலக்கியத்தில் குடும்பம், உடைமை, அரசு,**
பாவேந்தர் பதிப்பகம்,
அரியலூர், திருச்சி,
மு.ப. 1994.

137. இரத்தினசாமி.சு., – **பண்டைத்தமிழர் வரலாறும் பண்பாடும்,**
ஸ்ரீ வேலன் பதிப்பகம்,
சிதம்பரம் – 608 001,
மு.ப. 2000.

138. இரத்தினசாமி.சு., – **சங்க கால அரசர்கள்,**
மணிவாசகர் பதிப்பகம்,
பாரிமுனை, சென்னை, மு.ப. 1995.

139. இராகவையங்கார். மு., – **வேளிர் வரலாறு,**
வள்ளுவர் பண்ணை,
சென்னை, மூ.ப. 1964.

140. இராகவையங்கார். மு., – **சேர வேந்தர் செய்யுட் கோவை**
(முதற் தொகுதி),
திருவாங்கூர்ச் சர்வகலா சாலைத்
தமிழ்ப் பதிப்புத் தொடர் – க,
திருவனந்தபுரம், 1947.

141. இராசரெத்தினம். கு., – **சங்க இலக்கியத்தில் பொது மக்கள்,**
குகன் பதிப்பகம்,
மு.ப. 2004.

142. இராமன். கே.வி., – **பாண்டியர் வரலாறு,**
தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை, 1977.

143. இராமகிருட்டினன். ஆ., – **தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும்,**
சர்வோதய இலக்கியப் பண்ணை,
மதுரை – 1, பதிப்பு. 2007.

144. இராமச்சந்திரன்.சி.ஈ., – **சங்க கால வரலாறு,**
தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை, 1977.

145. இராமநாதன்.பி., – **தமிழர் வரலாறு,**
தமிழ்மண் பதிப்பகம்,
சென்னை – 17,
மு.ப.2008.

146. இராமநாதன் செட்டியார்.லெ.ப. கரு.,– **சோழ வேந்தர் மூவர்,**
முத்தையா நிலையம்,
பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை,
இ.ப., 1978.

147. இராமநாதன் செட்டியார்.லெ.ப. கரு., – **பத்துப்பாட்டு வளம்,**
முத்தையா நிலைய வெளியீடு,
மு.ப. 1968.

148. இராமநாதன் செட்டியார்.லெ.ப. கரு., – **சங்ககாலத் தமிழர் வாழ்வு,**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், பதிப்பு. 1964.

149. கணபதி. அன்பு., – **பாவலரும் காவலரும்,**
அன்பு மனை, சென்னை,
இ.ப.1953.

150. கந்தையா பிள்ளை. ந.சி., – **வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பழந்தமிழர்,**
புரொகிரெசிங் அச்சகம், மு.ப. 1957.

151. கனகராஜையர். நா., – **சோழ மன்னர்** (இரண்டாம் பாகம்),
இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை, 1931.

152. கனகராஜையர். நா., – **பாண்டிய மன்னர்,**
இ.மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
மதுரை, 1930.

153. குருசாமி. ம.ரா.போ., – **சங்க காலம்,**
குரு அச்சகம், சென்னை,
இ.ப. 1874.

154. கோசாம்பி, டி.டி., (மூ.ஆ)
சத்யா.எஸ்.ஆர். என்., (மொ.ஆ)– **பண்டைய இந்தியா அதன் பண்பாடும் நாகரிகமும் பற்றிய வரலாறு,**
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்.,
சென்னை, பதிப்பு. 1986.

155. கோவிந்தராசனார்.சி., – **தமிழக வரலாற்றுச் செய்திகள்,**
சாந்தி நூலகம், சென்னை, பதிப்பு. 1962.

156. கோவிந்தராசனார்.சி., – **சோழ மன்னர் வரலாறு,**
செம்பியன் ஆன்சாம்பில் பப்ளிஷர்ஸ்,
திருச்சிராப்பள்ளி, இ.ப. 1971.

157. கைலாசபதி.க., – **பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்,**
மக்கள் வெளியீடு, சென்னை,
பதிப்பு. 1966.

158. சாலினி இளந்திரையன் – **சங்கத் தமிழரின் மனிதநேய மனிநெறிகள்,**
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை, இ.ப. 2004.

159. சிவசாமி. வி., – **தமிழும் தமிழரும்,**
குமரன் வெளியீடு, வடபழனி,
சென்னை – 26, மு.ப. 1998.

160. சிவசாமி.ச., – **தமிழர் வாழ்வியல்,**
மாதவி பதிப்பகம், சென்னை – 14,
மு.ப. 1998.

161. சுப்பிரமணியன். மா., – **சோழர்களின் அரசியல் கலாச்சார வரலாறு** (பாகம் – 1),
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை, 1978.

162. சுப்பிரமணியன். ந., – **பண்டைய இந்திய அரசியல் ஆட்சி நிலையங்கள்,**
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்,
சென்னை, 1973.

163. சுவாமிநாதன். A., – **தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டு வரலாறு (முதல் பாகம்),** தீபா பதிப்பகம், பெருங்குடி, சென்னை – 96, மு.ப. 2004.

164. செந்துறை முத்து., – **சேரர் இலக்கியச் செல்வம்,** வானதி பதிப்பகம், சென்னை, 1961.

165. தட்சிணாமூர்த்தி. அ., – **தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** யாழ் வெளியீடு, சென்னை – 40 ம.ப. 2005.

166. தேசிய விநாயகம். வெ., – **தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த மன்னர்கள்,** நீலா நூலகம், திருவல்லிக்கேணி, சென்னை – 5, மு.ப. 1999.

167. நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ., – **சோழர்கள்,** புத்தகம் – 2 இந்தியன் கவுன்ஸில் ஆப் ஹிஸ்டாரிகல் ரிசர்ச், நியூடெல்லி, அண்ட் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, மு.ப. 1989.

168. பத்மாவதி.ஆ., – **சோழர்கள் ஆட்சியில் அரசும் மதமும்,** பாரி நிலையம், பிராட்வே, சென்னை, மு.ப. 1998.

169. பாலசுப்பிரமணியன்.கு.வே., – **சங்க இலக்கியத்தில் புறப்பொருள்,** மீரா பதிப்பகம், புதுக்கோட்டை – 1, மு.ப. 1986.

170. பாலுசாமி. நா., – **தமிழக வேந்தர்,** ஏ.டி.என் நாகலிங்கம் & கம்பெனி, மதுரை, இ.ப. 1959.

171. மங்கள முருகேசன். ந.க., – **தமிழக ஆட்சி முறை,** சவுடல் பப்ளிஷர்ஸ், மதுரை, 1979.

172. மயிலைத் தொண்டன் – **தமிழகம் கண்ட மாமன்னர்கள்,** வாரிசம் பதிப்பகம், சூளைமேடு, சென்னை – 94, மு.ப. 2007.

173. மாதையன். பெ., - **சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98, மு.ப.2004.

174. முத்துலட்சுமி.வே., - **பண்டைய தமிழரின் அறநெறிகள்,** அனிதா பதிப்பகம், திருச்சி, மு.ப. 1984.

175. ராமகிருஷ்ணன். எஸ். - **தமிழர் அரசியல்,** திலகம் பதிப்பகம், மதுரை, 1956.

176. வரதராசன். மு., - **தமிழ் இலக்கிய வரலாறு,** சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, நான்காம் பதிப்பு. 1980.

177. வள்ளி மணாளன். இரா., - **புறநானூற்றுப் பூம்புகார் சோழர் வரலாறு,** பரதம் பதிப்பகம், தி. நகர், சென்னை – 17, பதிப்பு. 2003.

178. வானமாமலை.நா., - **தமிழர் வரலாறும் பண்பாடும்,** நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை – 98, 4ஆம் பதிப்பு. 1997.

**ஆங்கில நூல்கள்**

179. Aroklya samy.M., - **Classical age of the Tamils,** University of Madras, Madras, 1967.

180. Kanakasabhai. V., - **The Tamils Eighteen Hundred years ago,** S.I.S.S.W. publishing Society, Madras - 1, Edition - 1966.

181. Nilakanta Sastri, K.A., - **History of South India,** Oxford University Press, London, 1955.

182. Nilakanta Sastri, K.A., - **The Colas,**
Madras, Edition.1955.

183. Ramachandra Dikshithar, V.R., - **Studies in Tamil Literature and History,**
University of Madras,
Madras, 1936.

184. Ramachandra Dikshithar, V.R., - **War in Ancient India,**
Macmillan and co, Madras.
1944.

185. Sesha Aiyar. K.G., - **Cera Kings of the Sangam Period,**
Trivendrum, Author,
Edition.1937.

186. Sivaraja pillai. K.N., - **The Chronology of the Early Tamils,**
Asian Educational Services,
New Delhi, 1984.

187. Smith, V.A., - **Early History of India,**
Claredon Press,
London, 3rd Edition - 1914.

188. Srinivasa Iyengar, P.T., - **History of the Tamils,**
C. Coomaraswamy Naidu & Sons,
Madras, 1929.

189. Subramanian.N., - **Sangam Polity,**
Asia Publishing House,
Bombay, Edition.1976.

190. Venkatasamy, Mayilai Seeni,. - **Seran Senguttuvan,**
Annala of Oriental Research,
University of Madras, Vol-xxi, Part - I,
Madras, 1966.

191. .......... - The Encyclopaedia Brittanica, Vol. I, II, IX,

192. .......... - The New Caton Encyclopaedia, Vol. II

## அகராதிகள்

193. செந்தமிழ் அகராதி - ந.சி. கந்தையாப்பிள்ளை,
ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
53 – 56 பவழக்காரத் தெரு,
சென்னை, பதிப்பு. 1950.

194. தமிழ்மொழி அகராதி - நா. கதிரைவேல் பிள்ளை,
ஆசியன் எசிகேஷனல் சர்வீஸ்,
புது தில்லி,
6ஆம் பதிப்பு .1981.

195. தற்காலத் தமிழ்ச்சொல் அகராதி - ச. பவானந்தம் பிள்ளை,
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை, பதிப்பு . 1954.

196. English Tamil Dictonary - A. Chidambaranatha Chettiar,
University of Madras,
Madras, 1992.

197. Tamil Lexicon - University of Madras,
Madras, 1982.

## களஞ்சியங்கள்

198. ........ - தமிழ் கலைக் களஞ்சியம்,
தொகுதி – 4,
தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை,
பதிப்பு. 1961

199. சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், (தொகுதி – 1,2)- இரா. சாரங்கபாணி,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர், 1986.

200. சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், (தொகுதி – 3,4) - சி. சுப்பிரமணியன்,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர், 2006.

## *ஆய்வுக் கோவைகள் / இதழ்கள்*

201. இராகவையங்கார். இரா., – **செந்தமிழ்ச் செல்வி,**
29ம் சிலம்பு, பரல்.8,
பதிப்பு. 1955.

202. குழந்தைவேலு.இரா., – **பழந்தமிழ் காட்டும் கணத்திறன்**
நான்காவது கருத்தரங்கு மலர்,
இந்தியப் பல்கலைக் கழகத்
தமிழாசிரியர் மன்றம்.

203. .......... – சங்க இலக்கியக் கட்டுரைகள்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர். 1994.

204. .......... – கல்வெட்டு (காலாண்டு இதழ்),
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
சென்னை, 2006.

205. .......... – உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு,
கோவை – சிறப்பு மலர்,
தமிழ்நாடு அரசு, 2010.

## *ஆய்வேடுகள்*

206. சுவாமிநாதன். சா., – **சங்கப் புறப் பாடல்களில் வாழ்வியல்,**
(முனைவர் பட்ட ஆய்வேடு),
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம், 2003.

207. தமிழ்வேலு.சு., – **சங்க இலக்கியத்தில் சமூக மதிப்புகள்,**
(முனைவர் பட்ட ஆய்வேடு),
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி, 2008.

208. பூங்குன்றன். ர., – **பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம்,**
(முனைவர் பட்ட ஆய்வேடு),
கல்வெட்டியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், 1999.

# பின்னிணைப்புகள்

# பின்னிணைப்பு

## அ. பத்துப்பாட்டில் ஆட்சியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருநராற்றுப்படை | – | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| | பாடியவர் | – | முடத்தாமக்கண்ணியார் |
| 2. | சிறுபாணாற்றுப்படை | – | ஒய்மானாட்டு நல்லியக்கோடன் |
| | பாடியவர் | – | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் |
| 3. | பெரும்பாணாற்றுப்படை | – | தொண்டைமான் இளந்திரையன் |
| | பாடியவர் | – | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| 4. | மதுரைக்காஞ்சி | – | பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் |
| | பாடியவர் | – | மாங்குடி மருதனார் |
| 5. | பட்டினப் பாலை | – | சோழன் கரிகாற் பெருவளத்தான் |
| | பாடியவர் | – | கடியலூர் உருத்திரங்கண்ணனார் |
| 6. | மலைபடுகடாம் | – | நன்னன் சேய் நன்னன் |
| | பாடியவர் | – | பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் |

## ஆ. பதிற்றுப்பத்து சுட்டும் சேரவேந்தர்கள்

| பாடல் வரிசை | பாடப் பெற்ற சேரர் | பாடிய புலவர் |
|---|---|---|
| முதல் பத்து | கிடைக்கவில்லை | – |
| இரண்டாம் பத்து (11 – 20) | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | குமட்டூர்க் கண்ணனார் |
| மூன்றாம் பத்து (21 – 30) | பல்யானைச் செல்கெழுகுட்டுவன் | பாலைக் கௌதமனார் |
| நான்காம் பத்து (31 – 40) | களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் | காப்பியாற்றுக் காப்பினார் |
| ஐந்தாம் பத்து (41 – 50) | கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் | பரணர் |
| ஆறாம் பத்து (51 – 60) | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் |
| ஏழாம் பத்து (61 – 70) | செல்வக் கடுங்கோ வாழியாதன் | கபிலர் |
| எட்டாம் பத்து (71 – 80) | தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை | அரிசில் கிழார் |
| ஒன்பதாம் பத்து (81 – 90) | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை | பெருங்குன்றூர்க்கிழார் |
| பத்தாம் பத்து | கிடைக்கப்பெறவில்லை | – |

## இ. புறநானூறு குறிப்பிடும் ஆட்சியாளர்கள்

### 1.சேர வேந்தர்கள்

1. சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன், புறம்.2

2. சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை, புறம். 5

3. சேரமான் கடுங்கோ வாழியாதன், புறம்.8

4. சேரமான் பாலை பாடிய பெருங்கடுங்கோ, புறம். 11, 282

5. சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், புறம். 14

6. சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, புறம். 17, 20, 22

7. சேரமான் கோக்கோதை மார்பன், புறம். 48, 49

8. சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, புறம்.50

9. சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, புறம். 53

10. சேரமான் குட்டுவன் கோதை, புறம். 54

11. சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன், புறம். 62, 63, 368

12. சேரமான் பெருஞ்சேரலாதன், புறம். 65

13. சேரமான் கணைக்கால் இரும்பொறை, புறம். 74

14. சேரமான் குடக்கோச் சேரலிரும்பொறை, புறம். 210, 211

15. கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறை, புறம். 229

16. சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, புறம். 245

17.சேரமான் மாவண்கோ, புறம். 367

18. சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன், புறம். 369

19. சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன், புறம். 387

20. சேரமான் வஞ்சன், புறம்.398

## 2. சோழ வேந்தர்கள்

1. சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, புறம். 4, 266

2. சோழன் கரிகாற் பெருவளத்தான், புறம். 7, 66, 224

3. சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி, புறம். 10

4. சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி, புறம். 13

5.சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, புறம். 16, 367, 377

6. சோழன் நலங்கிள்ளி, புறம். 27 – 33,68,73,75,225,382,400

7. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், புறம். 34 – 41, 46, 52, 69,70, 226,227,228, 373,386,393, 397

8. சோழன் மாவளத்தான், புறம். 43

9. சோழன் நெடுங்கிள்ளி, புறம். 44,45,47

10. சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன், புறம். 58, 60, 197

11. சோழன் இளவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி, புறம். 61

12. சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளி, புறம். 62, 63

13. கோப்பெருஞ்சோழன், புறம். 67, 91, 212 – 216, 219 – 223

14. சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி, புறம். 80 – 85

15. சோழன் நல்லுருத்திரன், புறம். 190

16. சோழன் பாமுளூரெறிந் நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி, புறம். 203

17. சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி, புறம். 370, 378

## 3. பாண்டிய வேந்தர்கள்

1. கருங்கை யொள்வாட் பெரும்பெயர் வழுதி, புறம். 3
2. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, புறம். 6,9,12,15,64
3. பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், புறம். 18,19, 23 – 26,72,76 – 79, 371,372
4. கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி, புறம். 21, 367
5. பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி, புறம். 51,52
6. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன், புறம். 55 – 57
7.பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி, புறம். 58
8. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன், புறம். 59
9. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், புறம். 71
10. பாண்டியன் கீரஞ்சாத்தன், புறம். 178
11. கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, புறம். 182
12. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன், புறம். 183
13. பாண்டியன் அறிவுடை நம்பி, புறம். 184

## 4. வேளிர்கள்

1. இளவிச்சிக்கோ, புறம். 151
2. இளவெளிமான், புறம். 162, 207,237
3. இருங்கோவேள், புறம். 201,202
4. வேள் எவ்வி, புறம். 233,234
5. வெளிமான், புறம். 238
6. அத்துவன் கீரன், புறம். 359
7. தந்துமாறன், புறம்.360
8. சோழிய ஏனாதி திருக்குட்டுவன், புறம். 394
9. வாட்டாற்று எழினியாதன், புறம். 396

## 5. குறுநில மன்னர்கள்

1. அதியமான் பொகுட்டெழினி, புறம். 96, 102, 392,
2. நாஞ்சில் வள்ளுவன், புறம். 137 – 140,380
3. கொண்கானங்கிழான், புறம். 154 – 156
4. ஏறைக்கோன், புறம். 157
5. குமணன், புறம். 158 – 161,163,164
6. இளங்குமணன், புறம். 165
7. ஏனாதி திருக்கிள்ளி, புறம். 167
8. பிட்டங்கொற்றன், புறம். 168 – 172
9. மலையமான் சோழிய ஏனாதி திருக்கண்ணன், புறம். 174
10. ஆதனுங்கன், புறம். 175
11. ஒய்மான் நாட்டு நல்லியக்கோடன், புறம். 176, 376,
12. மல்லிகிழான் காரியாதி, புறம். 177
13. பாண்டியன் கீரன் சாத்தன், புறம். 178
14. தொண்டைமான் இளந்திரையன், புறம். 185
15. விச்சிக்கோ, புறம். 200
16. கடிய நெடுவேட்டுவன், புறம். 205
17. மூவன், புறம். 209
18. அதியமான் எழினி, புறம். 230
19. நம்பி நெடுஞ்செழியன், புறம். 239
20. ஒய்மான் வில்லியாதன், புறம். 379
21. கரும்பனூர் கிழான், புறம். 381, 384
22. அவியன், புறம். 383
23. நல்லோர் முதியன், புறம். 389
24. பொறையாற்றுக் கிழான், புறம். 391
25. தாமான் தோன்றிக் கோன், புறம். 399

## 6. சீறூர் மன்னர்கள்

1. சிறுகுடிக் கிழான் பண்ணன், புறம். 173, 388
2. நாலைக் கிழவன் நாகன், புறம். 179
3. ஈர்ந்தூர் கிழான் தோயன்மாறன், புறம். 180
4. வல்லார் கிழான் பண்ணன், புறம். 181
5. ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன், புறம். 242,243
6. அம்பர்கிழான் அருவந்தை, புறம். 385

## 7. வள்ளல்கள்

1. அதியமான் நெடுமான் அஞ்சி, புறம். 87 – 95, 97 – 101, 103, 104, 206, 231, 232, 235, 315, 390.
2. பரம்பிற் கோமான் பாரி, புறம். 105 – 120, 236
3. மலையமான் திருமுடிக்காரி, புறம். 121 – 126
4. வேள்ஆய் அண்டிரன், புறம். 127 – 136,240,241
5. வையாவிக் கோப்பெரும் பேகன், புறம். 141 – 147
6. கண்டீரக் கோப்பெரு நள்ளி, புறம். 148 – 150
7. வல்வில் ஓரி, புறம். 152,153,204

## புறநானூற்றில் பாட்டுடைத் தலைவர்களாகப் பாடப்பெற்றுள்ள ஆட்சியாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. சேர வேந்தர்கள் | – | 20 |
| 2. சோழ வேந்தர்கள் | – | 17 |
| 3. பாண்டிய வேந்தர்கள் | – | 13 |
| 4. வேளிர்கள் | – | 10 |
| 5. குறுநில மன்னர்கள் | – | 25 |
| 6. சீறூர் மன்னர்கள் | – | 06 |
| 7. வள்ளல்கள் | – | 07 |

## புலவர்களால் அதிகமாகப் பாடப்பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| சேரர் | – | சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை – 03 பாடல்கள் |
| | – | சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் – 03 பாடல்கள் |
| சோழர் | – | சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் – 19 பாடல்கள் |
| பாண்டியர் | – | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் – 13 பாடல்கள் |
| வேளிர் | – | இளவெளிமான் – 03 பாடல்கள் |
| குறுநில மன்னர் | – | குமணன் – 06 பாடல்கள் |
| சீறூர் மன்னர் | – | சிறுகுடி கிழான் பண்ணன் – 02 பாடல்கள் |
| | | ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் – 02 பாடல்கள் |
| வள்ளல் | – | அதியமான் நெடுமான் அஞ்சி – 22 பாடல்கள் |

குறிப்பு: மூவேந்தர்களை விட வள்ளல்கள் அதிகமாகப் பாடப்பெற்றுள்ளனர்.

இவ்வட்டவணை உ.வே.சாமிநாதையர், ஔவை சு. துரைசாமிப்பிள்ளை இருவரின் புறநானூற்றுப் பதிப்பின் அடிப்படையிலும், 'சங்க கால அரச வரலாறு,' வ. குருநாதன் அவர்கள் நூலின் உதவி கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

## ஈ. புலவராக விளங்கிய வேந்தர்கள்

| | | |
|---|---|---|
| 1. சேரர் | – | கணைக்கால் இரும்பொறை, புறம். 74 |
| | – | சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை, புறம். 245 |
| | – | சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ, புறம். 282 |
| 2. சோழர் | – | சோழன் நலங்கிள்ளி, புறம். 73, 75 |
| | – | சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவன்,புறம். 173 |
| | – | சோழன் நல்லுருத்திரன், புறம். 190 |
| | – | கோப்பெருஞ்சோழன், புறம். 214 – 216 |
| 3. பாண்டியர் | – | ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், புறம். 71 |
| | – | தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், புறம். 72 |
| | – | கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி, புறம். 182 |
| | – | பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன், புறம். 183 |
| | – | பாண்டியன் அறிவுடைநம்பி, புறம். 188 |

வேந்தர்களில் அதிகப் பாடல்கள் பாடியவராக கோப்பெருஞ்சோழன் விளங்குகின்றார்.